# ஆவிக்குரிய தலைவன்



சகரியா பூனன்

# ஆவிக்குரிய தலைவன்

சகரியா பூணன்

“நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள்”
என **உத்திரவாதமளிக்கும் தலைவர்கள்** எழும்புவார்களாக!

**A Spiritual Leader - Tamil**
**Zac Poonen**

© Zac Poonen, 1999

tamil.cfcindia.com

5 7 9 11 12 10 8 6

Paperback ISBN : 978-81-943760-1-9

"Scripture Quotations are from The Holy Bible, BSI-Tamil O.V
Published by: The Bible Society India.
Used by Permission. All rights reserved".

**This book has been copyrighted to prevent misuse.**

**No part of this work may be reproduced or transmitted in any form or by any means - for example, electronic or mechanical, including photocopying and recording without the prior written permission of the publisher.**

For further details please contact:

Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149
Karnataka
India
email: cfc@cfcindia.com

## *முன்னோடி பாதையில் . . .*


1. "தேவனால் அழைக்கப்பட்டவன்" . . . . . . . . . . . . . . . . . . . . . . 5

2. "தேவனை அறிந்தவன்" . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 12

3. "தேவனுக்குப் பயந்தவன்" . . . . . . . . . . . . . . . . . . . . . . . 19

4. "தேவனை கவனித்து கேட்பவன்" . . . . . . . . . . . . . . . . . . . . . 23

5. "கிறிஸ்துவின் சரீரத்தில் சமநிலை கற்றவன்" . . . . . . . . . . . . . 32

6. "அடங்கியிருந்து நொறுங்கியவன்" . . . . . . . . . . . . . . . . . . . 39

7. "பிறர்மீது பொறுப்பாயிருப்பவன்" . . . . . . . . . . . . . . . . . . . 49

8. "ஜீவியத்திலிருந்து ஊழியம் செய்பவன்" . . . . . . . . . . . . . . . . 55

9. "தேவ வல்லமையினால் ஊழியம் செய்பவன்" . . . . . . . . . . . . . . . 64

10. "ஆவிக்குரிய அதிகாரத்தை பிரயோகிப்பவன்" . . . . . . . . . . . . . 71

11. "சகல பயத்திலிருந்தும் விடுதலை பெற்றவன்" . . . . . . . . . . . . . 79

12. "பிறரை பயத்திலிருந்து விடுவிப்பவன்" . . . . . . . . . . . . . . . . 92

13. "தன்னைத்தானே தாழ்த்துபவன்" . . . . . . . . . . . . . . . . . . . 100

14. "மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் பெற்றவன்" . . . . . . . . . . 110

15. "மாதிரியாய் திகழ்பவன்" . . . . . . . . . . . . . . . . . . . . . . . 117

*கிறிஸ்துவுக்குள் உடன் ஊழியர்களே,*

இன்று நம் இந்திய சபைகளுக்குத் தேவையாய் இருப்பதெல்லாம் "ஆவிக்குரிய" தலைமையேயாகும்!

வெவ்வேறு கிறிஸ்தவ ஊழியர்களின் குழுக்களுக்கும், வேதாகம கல்லூரி ஆசிரியர்களுக்கும், சபைகளின் பாஸ்டர்களுக்கும்..... நான் பேசிய செய்திகளின் தொகுப்பே இந்தப் புத்தகம்!

நீங்கள் இலகுவாய் வாசிப்பதற்காக, இப்புத்தகத்தைப் 'பேச்சு நடையில்' வடிவமைத்துள்ளேன்.

இன்றைய இளைய சமுதாயத்திற்கு நீங்களே ஒரு உள்ளம் கவர்ந்த பாத்திரமாகவும், மாதிரியாய் திகழும் தேவ ஊழியனாகவும், ஓர் மெய்யான ஆவிக்குரிய தலைவனாகவும் திகழும்படி இப்புத்தகத்தின் மூலமாய் ஆண்டவர் உங்கள் இருதயத்தில் பேசி...... உங்களை 'அறைகூவி' நடத்துவாராக!!

***கிறிஸ்துவின் அடிமை***

# 1

## “தேவனால் அழைக்கப்பட்டவன்”

**ஒ**ரு ஆவிக்குரிய தலைவன், தேவனிடமிருந்து அழைப்பை பெறுவதையே தன்னுடைய முதலும் பிரதானமுமான பங்காய் கொண்டிருப்பான்! அவன் பணியாற்றும் ஊழியம் அவனுக்குத் தொழிலாயிராமல் .... அது, அவனுடைய அழைப்பாகவே இருக்கும்!

எந்த ஒரு மனிதனும் தன்னை ஒரு ஆவிக்குரிய தலைவனாய் “தனக்குத்தானே” நியமித்துக் கொள்ள முடியாது. “இந்த கனமான ஊழியத்திற்கு ஒருவன் **தேவனால்** அழைக்கப்பட்டிருக்க வேண்டும்!” (எபிரெயர் 5:4 - Living மொழிபெயர்ப்பு). கர்த்தருடைய ஊழியத்தைக் குறித்த இந்த அடிப்படை நியமனத்தை நாம் ஒருக்காலும் மாற்றிடவே முடியாது! இதற்கு அடுத்த வசனம் “கிறிஸ்துவும்கூட **தன்னைத்தானே** பிரதான ஆசாரியனாக நியமித்துக் கொள்ளவில்லை” எனக் கூறுவதை நாம் காண்கிறோமே! ஆம், அவரைப் பிதா நியமனம் செய்தார்! இயேசுவுக்கே காரியம் இவ்வாறென்றால், நம்மைக் குறித்த ‘அழைப்பிற்கு’ இந்த விஷயம் எவ்வளவு முக்கியம் என்பதை எண்ணிப் பாருங்கள்.

ஆனால், இன்றைய துயரம் யாதெனில் இந்தியாவில் உள்ள அதிக பட்சமான ஊழியர்கள் “**தங்கள் பிழைப்பிற்காகவே**” ஊழியம் செய்கிறார்கள். கிறிஸ்தவ ஊழியம் அவர்களுக்கு “ஒரு தொழிலாக” இருக்கிறதேயல்லாமல்.... அவர்கள், தேவனால் அழைக்கப்படவேயில்லை!?

“தொழில்” என்பதற்கும் “அழைப்பு” என்பதற்கும் இடையில் ஏராளமான வித்தியாசங்கள் உண்டு. இதை நீங்கள் தெளிவாய் அறிந்து கொள்ளும்படி சற்று விளக்கிக்கூற விரும்புகிறேன். உதாரணமாய், மருத்துவமனையில் சுகவீனமாய் இருக்கும் ஒரு குழந்தையை ஒரு நர்ஸ் தன்னுடைய “கடமை - முறைமையின்படி (Shift - duty)” 8-மணி நேரம் கவனித்து பராமரிப்பாள். பின்பு அந்த **நர்ஸ்** தன் வீட்டிற்குச் சென்றவுடன், அந்தக் குழந்தையை முற்றிலும் மறந்துவிடுவாள். அவள் அந்தக் குழந்தையின்மீது காட்டிய கரிசனையெல்லாம் 8-மணி நேரங்கள் மாத்திரமே! இப்பொழுது அவள் சினிமா பார்க்கச் செல்லவோ, டெலிவிஷன் முன் அமரவோ அல்லது வேறு ஏதாவது

காரியங்களைச் செய்யவோ முற்படுவாள். ஆம், அடுத்தநாள் மருத்துவ மனை செல்லும்வரை அந்தக் குழந்தையைப் பற்றி அந்த நர்ஸ் யாதொன்றும் சிந்திக்கத் தேவையே இல்லை. ஆனால், அந்தக் குழந்தையின் தாய், 8-மணி நேர கடமை முறையில் பணியாற்று வாளோ? தன் குழந்தை வியாதிப்படுக்கையில் இருக்கும்போது அவள் எப்படி சினிமா பார்க்கச் செல்லுவாள்? இதுவே "ஒரு தொழிலுக்கும்" "ஒரு அழைப்புக்கும்" உள்ள வித்தியாசமாகும்.

மேற்கண்ட உதாரணத்தைக் கொண்டு, உங்கள் சபையில் உள்ள விசுவாசிகள்மீது நீங்கள் எவ்வித கரிசனை கொண்டிருக்கிறீர்கள் என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால்.... நீங்கள் ஒரு நர்ஸா? அல்லது ஒரு பொறுப்புள்ள தாயா? என்பதை நீங்களே கண்டுபிடித்துவிடுவீர்கள்!

இதை பவுல் தன்னுடைய ஊழியத்திற்கு ஒப்பிட்டுக் கூறும்போது, "உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுவதுபோல, நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாய் இருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமான வர்களானபடியினாலே, **எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்?**" என்றே கூறினார் (1தெச.2:7,8).

பார்த்தீர்களா, பவுல் சுவிசேஷத்தை தெசலோனிக்கேய கிறிஸ்த வர்களுக்கு கொடுத்ததுமல்லாமல் தன் ஜீவனையும் கொடுத்ததாக கூறுகிறாரே! இதே உன்னத வழியில் செய்யப்படாத எந்த ஊழியமும், ஓர் மெய்யான கிறிஸ்தவ ஊழியம் அல்லவே அல்ல! இம்மாசற்ற வழியில் சென்று பவுல் தேவனுக்கு ஊழியம் செய்ய முடிந்ததற்கு காரணம், அந்த ஊழியத்திற்காக **அவர் பெற்ற** அழைப்பேயாகும். ஆம், ஊழியம் ஒன்றும், "ஒரு தொழிலாய்" அவருக்கு இருக்கவில்லை!

கர்த்தருக்கு ஊழியம் செய்வது போன்ற பாக்கியம் இவ்வுலகில் வேறு எதுவுமே இல்லை.....

> **இந்த உலகத்தின் எந்தப் பணியைக் காட்டிலும் இதுவே மாபெரும் பணியாகும்! இந்த பூமியில், இந்தப் பணிக்கு ஒப்பிட்டு எதையும் கூறிவிட முடியாது! ஆனால்.... நீங்கள் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்! அது ஓர், சீரழிந்த "தொழிலாய்" ஒருக்காலும் மாறிடவே கூடாது!**

நான் இந்திய கடற்படையில் ஓர் அதிகாரியாய் பணியாற்றிய சமயம், தேவன் என்னை அவருக்கு முழு நேரமாய் ஊழியம் செய்யும்படி 1964-ம் வருடம் மே 6-ந் தேதி அழைத்தார்! நான் **உடனே** என்னுடைய இராஜினாமா கடிதத்தை கப்பற்படை தலைமைக்கு அனுப்பினேன். ஆனால் என்னுடைய விண்ணப்பம், மோசே பார்வோனிடத்தில் சென்று, இஸ்ரவேலர்களைப் போகவிடும்படி கேட்டுக் கொண்ட

விண்ணப்பமாய் மாறியது! ஆம், கடற்படை என்னைப் பணியிலிருந்து விடுவிக்க மறுத்து விட்டது. நான் திரும்பத்திரும்ப விண்ணப்பித்து முடிவில் இரண்டு வருடங்களுக்குப் பிறகுதான் “தேவனுடைய சம்பூரணமான நேரத்தில்” ஆச்சரியப்படத்தக்க வகையில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டேன்.

இவ்வாறு **தேவனால் அழைக்கப்பட்டது** எத்தனை பெரிய வித்தியாசத்தை என் வாழ்க்கையில் கொண்டுவந்துவிட்டது!

முதலாவதாக, என்னையோ அல்லது என்னுடைய ஊழியத்தைக் குறித்தோ, ஜனங்கள் என்ன எண்ணுகிறார்கள்? என்பது ஒரு பொருட்டாய் எனக்கு இப்போது தோன்றவில்லை! ஏனெனில் இப்போது **என்னுடைய எஜமான் “வேறொருவர்”**.... நான் அவருக்கு மாத்திரமே இப்போது பதில் சொல்ல வேண்டும்!

இரண்டாவதாக, என்னுடைய ஊழியத்தில் நான் எப்போதெல்லாம் உபத்திரவங்களை அல்லது எதிர்ப்புகளை சந்திக்கிறேனோ (இன்றும் இதுபோன்ற துன்பங்கள் அடிக்கடி எனக்கு சம்பவித்துக் கொண்டுதான் இருக்கிறது!) அப்போதெல்லாம் தேவன் என் பட்சத்திலிருந்து **தன்னுடைய கிருபையை எனக்கு நிச்சயம் தருவார்** என, இப்போது நான் தேவனை நம்பியிருக்க முடியும்!

மூன்றாவதாக, இனி எனக்கு பணம் வருகிறதோ வரவில்லையோ அல்லது புசிப்பதற்கு சாப்பாடு கிடைக்கிறதோ அல்லது கிடைக்கவில்லையோ என்பதைக் குறித்து எந்தக் கவலையும் எனக்கு இல்லை! எனக்கு உணவும், பணமும் கிடைத்தால் நல்லதுதான் .... எந்த உணவும் அல்லது பணமும் கிடைக்காவிட்டாலும் எனக்கு நல்லதுதான்!

> **இவ்வாறு பணமோ அல்லது உணவோ கிடைக்காததினிமித்தம், நான் ஆண்டவருக்கு ஊழியம் செய்வதை என்னால் நிறுத்திவிட முடியாது.... ஏனெனில், தேவன் என்னை அழைத்துவிட்டார்!**

என் அழைப்பை, என்னைவிட்டு ஒருபோதும் நான் பிரித்து வைத்துவிட ஒருக்காலும் முடியாது! நான் மாத சம்பளம் வாங்கும் ஊழியனாக இருந்தால், எனக்குரிய சம்பளம் வராதபோதோ அல்லது தேவையான சாப்பாடு கிடைக்காத போதோ அந்த வேலையை நான் விட்டுவிட முடியும்! ஆனால் இப்போது நான் பெற்ற ஊழியமோ, ஒரு தாய்க்கும் அவளுடைய பிள்ளைக்குமுரிய உறவைப்போல் ஆகும். ஒரு மாதத்தில் தன்னுடைய சம்பளம் வராததினிமித்தம், ஒரு **நர்ஸ்** தன் பணியிலிருந்து நின்றுவிட முடியும். ஆனால், ஒரு **தாய்** ஒருபோதும் தன் பணியை அவ்வாறு நிறுத்திவிட முடியாதே! ஒரு தாயினுடைய பணிக்கு யாரும் சம்பளம் தருவதேயில்லை. அவ்வாறு உணவோ அல்லது பணமோ தனக்கு கிடைக்காதிருந்தும், அந்த தாய் தன் பிள்ளையைப் பேணி பராமரிப்பாள்!

இவ்வாறு தேவனால் அழைக்கப்படுவதுதான் எத்தனை மகிமையான காரியமாயிருக்கிறது!

நீங்கள் கர்த்தருடைய **ஊழியத்தை "ஒரு தொழிலாக"** செய்ய முற்பட்டால் "நீங்கள் எவ்வாறு ஊழியம் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ" அவ்விதமாய் ஊழியம் செய்திட உங்களால் ஒருபோதும் முடியாது!

**எனவே, தேவன் விரும்பும் ஊழியம் "ஓர் அழைப்பில்தான்" இருக்கிறது.... அதற்கு இணையானது வேறு எதுவுமே கிடையாது.**

இவ்வுலகில் உள்ள எந்த வேலையையும் ஓர் தொழிலாகச் செய்து விடலாம். ஆனால் ஒரு தாயின் பணியோ! அல்லது ஒரு தந்தையின் பணியோ! அல்லது ஒரு கர்த்தருடைய ஊழியனின் பணியோ! அவ்வாறு ஒருக்காலும் செய்திடவே முடியாது. இவையாவும் ஓர் அழைப்பிலிருந்து விளைந்திடும் கனிகளாகும். இதைப் பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்குக் குறிப்பிடும்போது, "உங்களுக்குப் பதினாயிரம் உபாத்தியாயர்கள் (Teachers) இருந்தாலும், **தகப்பன்மாரோ** ஒருவர் மாத்திரமே இருக்கிறார்" என பொருள்பட குறிப்பிட்டார் (1கொரி.4:15). பவுலோ, தன் மந்தைக்கு ஓர் ஆவிக்குரிய தகப்பனாகவும், ஒரு தாயாகவும் விளங்கினார்! இது அவருடைய அழைப்பே யல்லாமல், ஓர் 'தொழில்' நிச்சயமாய் அல்ல!

தமது ஊழியத்தை கர்த்தர் எனக்குத் தந்தபோது, "நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை எனக்கு வளர்த்திடு, **நான் உனக்கு** சம்பளம் கொடுக்கிறேன்" என்றே என்னிடம் கூறினார் (யாத்.2:9). முதலில் 'சரீரப்பிரகாரமாக' எனக்குச் சொந்தமாய் பிள்ளைகளைத் தேவன் தந்தபோதும் இந்த வசனத்தைத்தான் கூறினார். 'ஆவிக்குரிய பிரகாரமான' பிள்ளைகளுக்கு ஊழியம் செய்யத் தொடங்கியபோதும், இதே வசனத்தைத்தான் தேவன் எனக்குத் தந்து பேசினார். தேவனுடைய பிள்ளைகளை நாம் காத்து பராமரிக்கும் போது, அதற்குரிய சம்பளத்தை மனுஷன் அல்ல, அதைத் தேவனே தருவதற்கு பொறுப்பாளியாய் இருக்கிறார்! நாம் மனுஷருக்கு ஊழியம் செய்தால், அந்த மனுஷர்கள் தந்திடும் சம்பளத்தை எதிர்பார்ப்பது சரிதான்! ஆனால் நாம் கர்த்தருக்கே ஊழியம் செய்தால், நம் ஒவ்வொரு தேவைகளையும் 'அவர் தீர்மானிக்கிற விதமாய்' தரும்படி **அவரை மாத்திரமே** நாம் நோக்கிப் பார்த்திட வேண்டும். ஒவ்வொரு மாதமும் நான் எவ்வளவு பெறவேண்டும் என்பதையும் அவர்தான் தீர்மானிக்க வேண்டும்! இதுவே ஓர் உண்மையான கர்த்தருடைய ஊழியனுக்குரிய "அந்தஸ்தாய்" இருக்கிறது!

இருப்பினும், நீங்களோ ஒரு மூப்பனாய் இருந்துகொண்டு உங்கள்

சபையில் உள்ள ஜனங்கள்மீது “யாதொரு பொறுப்புள்ள உணர்வும்” இல்லாதவர்களாயும் இருந்துவிட முடியும். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நீங்கள் வேதபோதகம் செய்வதில் மாத்திரமே திருப்தி கொண்டவர்களாய் இருந்துவிட முடியும். இவ்வாறாக உங்கள் நிலைமை இருந்தால், இயேசு திரும்ப வரும்போது உங்கள் ஊழியங் களை அவர் மதிப்பீடு செய்து, அவையாவும் எரிந்து போவதற்கு ஏதுவான மண்ணும், மரமும், புல்லும், வைக்கோலுமாய் இருப்பதைக் கண்டு நீங்கள் அதிர்ச்சியடைய வேண்டியிருக்கும் (1கொரி.3:12,13). இவ்விதமாய் சம்பவித்துவிட்டால், அது எத்தனை சொல்லிமுடியாத துயரம் என்பதை சிந்தித்துப் பாருங்கள்! இந்த எச்சரிப்பில் நீங்கள் இப்போதே கவனம் செலுத்திவிட்டால், கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக ஏற்படப்போகும் அதிர்ச்சியை நீங்கள் குறைத்துக்கொள்ள முடியுமே!

கிறிஸ்து திரும்ப வரும்போது, நாம் வாழ்ந்த விதத்தைக் குறித்தும், அவருக்கு ஊழியம் செய்த விதத்தைக் குறித்தும் “அடடே, இவ்வாறு இருந்துவிட்டோமே!” என்ற மனவருத்தம் நம் எல்லோருக்கும் ஏற்படத்தான் போகிறது. ஆனால், நம்முடைய வழிகளை இப்போதே சோதித்துப் பார்த்து அவைகளை நியாயந்தீர்த்துக்கொண்டால், அந்த மனவருத்தத்தின் அழுத்தம் குறைந்திட முடியுமே!

**நம் ஊழியம் “அந்த நாளின் வெளிச்சத்தில்” எவ்வாறு காணப்படும்? என்பதை நாம் இப்போதே மதிப்பிட்டுப் பார்க்கிறவர்களாய் இருந்திடக்கடவோம்.**

“நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை எனக்கு வளர்த்திடு, நான் உனக்கு **சம்பளம்** கொடுக்கிறேன்” என ஆண்டவர் குறிப்பிடும் சம்பளம், ‘பிரதானமாய்’ பணத்தின் அடிப்படையில் கொண்டதல்ல! நம்முடைய **பூமிக்குரிய தேவைகள் அனைத்தையும்** ஆண்டவர் பொறுப்பெடுத்துக் கொள்வார் என்பதே, நான் அனுபவமாய் கண்ட உண்மை! ஏனெனில், அன்றன்றுள்ள அப்பத்திற்கு ஜெபம்பண்ணும்படி அவரே கூறியிருப்பது மாத்திரமல்லாமல்.... சுவிசேஷ ஊழியம் செய்கிறவனுக்கு அந்த சுவிசேஷத்தினால் அவனுக்கு “**பிழைப்பு உண்டாகும்**” என்றும் ஆண்டவர் கூறியிருக்கிறாரே! ஆகவே, நம் எல்லா பூமிக்குரிய தேவைகளையும் அவர் நிச்சயமாய் பொறுப் பெடுத்துக் கொள்வார்... ஆகிலும், இதைக் காட்டிலும் மாபெரும் **‘ஆவிக்குரிய பிரதிபலனை’** நமக்கு அவர் தருவார் என்பதே அவர் தரும் மேன்மையான சம்பளமாகும்!

தெசலோனிக்கேயா கிறிஸ்தவர்களுக்குப் பவுல் நிருபம் எழுதிய போது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து திரும்ப வரும்போது “அவர்களே தனக்கு மகிழ்ச்சியும், கிரீடமுமாய் இருப்பார்கள்” எனக் கூறினார்!(1தெச.2:19).

பார்த்தீர்களா, ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைகளிடத்தில் மகிழ்ச்சி காண்பதுபோலவே, அவர்கள் நிமித்தமாய் பவுல் பெருமகிழ்ச்சி அடைந்தார்! ஒரு காலத்தில் சபைக்கு சாதாரணமாய் வந்த விசுவாசிகள், இப்போது "தேவ மனிதர்களாய்" மாறியதை, அவர்களின் ஆவிக்குரிய தகப்பனாயிருக்கும் மூப்பன் காணும்போது, அவன் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது! இது எதற்கு ஒப்பாய் இருக்கிறதென்றால், எந்த வடிவமும் இல்லாத ஒரு பாறையை **மானிடரூபமாய் செதுக்கிய ஒரு சிற்பியின் மகிழ்ச்சிக்கு** ஒப்பானதாகும்! அந்த மானிட ரூபம் முழுமையாய் தோன்றும்வரை, அந்த சிற்பி அந்தப் பாறையை பல மாதங்களாய்..... பல வருடங்களாய் செதுக்கி இருப்பான்! நாம் செய்யும்படி தேவன் நமக்குத் தந்த பணியும், இதேபோன்ற பணியேயாகும்!

**நாம் ஜனங்களுக்குச் சரியாகப் போதித்துவிட்டோம் என்பதில் நாம் ஒருபோதும் திருப்தி கொள்ளவே கூடாது! அவர்களுடைய ஜீவியத்தில், "கிறிஸ்துவின் சாயல்" தோன்றாத பட்சத்தில், நாம் எதுவுமே சாதிக்கவில்லை என்றே கூற வேண்டும்!**

பூமிக்குரிய ஓர் தகப்பன், தன் பிள்ளைகள் தங்கள் சொந்தக் காலில் நிற்கத் துவங்கியதைக் கண்டவுடன் மிகுந்த மகிழ்ச்சி அடைவான். ஆம், தன் பிள்ளைகள் தன்னைத் தொடர்ச்சியாய் சார்ந்து வாழ்வதை அவன் விரும்புவதில்லை. இந்த தகப்பனைப் போலவே, ஓர் உண்மையான ஆவிக்குரிய தகப்பனும் இருப்பான்! தன்னுடைய ஆவிக்குரிய பிள்ளைகள் வளர்ந்து முதிர்ச்சியடையும் சமயத்தில், "அட, நீங்கள்தான் என்னைவிட சமத்து!" எனக்கூறி, தன்னுடைய தேவை இப்போது அவர்களுக்கு அற்பமானதைப் போலவே காட்டிட முயல்வான்!

12 குழந்தைகள் கொண்ட ஒரு குடும்பத்தை சற்று மனதில் நிறுத்திப் பாருங்கள். உங்கள் மனைவி 2 குழந்தைகளை வளர்ப்பதற்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க, இங்கே ஒரு தாய் 12 குழந்தைகளை வைத்து எவ்வாறு சமாளித்திட கூடும் என்றே நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள்! ஆனால், இங்கு காத்திருக்கும் ஆச்சரியமான வியப்பு என்னவெனில், நாட்கள் செல்லச் செல்ல இரண்டு குழந்தைகளின் தாய் செய்திட வேண்டிய வேலையைவிட, பன்னிரண்டு குழந்தைகளின் தாயின் வேலை பளு வெகுவாய் குறைந்துவிடும் என்பதுதான்! எப்படியென்றால், பன்னிரண்டு குழந்தைகளின் தாய், தன் மூத்த குழந்தைகளை வீட்டிலுள்ள வேலைகளைச் செய்வதற்குப் **பழக்கியிருந்தாள்** என்பதே காரணமாகும். படிப்படியாய், இந்தப் பிள்ளைகளே எல்லா வேலைகளையும் செய்து முடித்துவிட, இந்த தாயோ வேலையிலிருந்து முற்றிலும் விடுதலை பெற்றுவிட்டாள்! நம் சபைகளில் மேய்ப்பனாய் இருக்கும் நம்முடைய கடமையும் அந்த

தாயைப்போல், “**நியமனம் கொண்டவர்களை**” (Delegates) எழுப்புவது தான்!

ஆனால், நம்முடைய சபைகளில் அதிகபட்சமாய் நாம் காண்பதென்ன? எல்லா பொறுப்புகளையும் தாங்கள் மாத்திரமே செய்து கொண்டிருக்கும் பாஸ்டர்கள், தங்கள் வேலை பளுவினால் பித்துப் பிடித்தவர்களைப்போல் அல்லவா இருக்கிறார்கள்! (12 குழந்தைகளுக்குத் தாயானவள்.... தானே இன்னமும் எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருந்தால், அவளும் பித்துப்பிடித்தவளைப் போல்தான் மாறுவாள்!). இன்று அநேக சபைகள் “அனாதை விடுதியைப் போல் தான் இருக்கிறது. அங்கு, நூற்றுக்கணக்கான குழந்தைகள் பாயில் படுத்துக்கொண்டு, காலை உதறிக்கொண்டு, வீல் என்று கத்திக்கொண்டு ... தங்கள் பால் புட்டியை சப்பிக்கொண்டும் இருக்கிறார்கள்!?” ஒற்றை-மனிதனின் ஊழிய நர்த்தனத்தின் விளைவு இதுதான்! அங்குள்ள விசுவாசிகளுக்கு எந்தப் பொறுப்பும் கொடுக்கப்படாதபடியால், அந்த விசுவாசிகள் எந்த வளர்ச்சியும் அடையாமலே இருக்கிறார்கள்! கிறிஸ்துவின் சரீரத்திலோ, ஒவ்வொரு அவயவத்திற்கும் அவர்கள் நிறைவேற்றுவதற்குரிய பணி நிச்சயமாய் இருக்கிறது!

இயேசு, பன்னிரண்டு பேரை மாத்திரமே சீஷர்களாய் உருவாக்கினார்! அப்படியிருக்க, பன்னிரண்டு பேருக்கு மேலாக சீஷர்களை உருவாக்கும் வல்லமையான பணியை எந்த மனிதனும் செய்திட முடியாது என்றே நான் எண்ணுகிறேன்! இந்த மதிப்பீட்டின் படி, ஒரு சபையில் 120 பேர் இருந்தால், அந்த மந்தையை விசாரிப்பதற்கு குறைந்தது பத்து பாஸ்டர்கள் அல்லது ‘மேய்ப்பர்கள்’ வேண்டும். “பாஸ்டர்கள்” என இங்கு நான் கூறுவது முழுநேர ஊழியர்கள் அல்லவே அல்ல! மாறாக, உலக அலுவலில் ஈடுபட்டிருந்தாலும், “மேய்ப்பனுடைய இருதயத்தின் வரத்தைப் பெற்று, மந்தையின் ஆடுகளைப் பராமரித்து ஊக்குவிப்பவர்களையே” இங்கு நான் குறிப்பிடுகிறேன்.

இன்று, அறுவடை ஏராளம் இருக்கிறது! ஆனால், உத்தமமான மேய்ப்பர்களோ மிகவும் கொஞ்சம்! நீங்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்வதாக இருந்தால், அவ்வாறு சேவிக்க “**தேவன் உங்களை அழைத்தார்**” என்ற உயர்ந்த தார்மீகத்தின் அடிப்படையில்தான் இருக்க வேண்டும்! இதற்கு மாறாக, உங்கள் பிழைப்பிற்கு பணம் சம்பாதிக்க வேண்டுமென்பதற்காகவோ அல்லது மனுஷனுடைய கனத்திற்காகவோ ஒருக்காலும் ஊழியம் செய்திடக்கூடாது!

# 2

## “தேவனை அறிந்தவன்”

**ஒ**ரு ஆவிக்குரிய தலைவன், தேவனை ‘தனிப்பட்ட விதத்தில்’ நேரடியாக அறிந்திருக்கிற தகுதியின்படியே, மற்றவர்களைத் **தேவனுடைய வழியில்** நடத்துவதற்குரிய திராணி பெற்றவனாய் இருப்பான்.

இந்த கடைசி நாட்களில் இரண்டுவிதமான பிரசங்கிகள் காணப் படுவார்கள் என தானியேல் 11:32,33-ம் வசனங்கள் கூறுகின்றன. இவர்களில், ஜனங்களை அவபக்தியான கள்ளமார்க்கத்திற்குள் நடத்தும்படி “இச்சகமாய் பேசும்” பிரசங்கிகளே ஏராளமாய் இருந்தார்கள். இதற்கு நேர்மாறாக, வெகு சிலராய் இருக்கும் பிரசங்கிகள் மாத்திரமே, தேவனை அறிந்திருந்தபடியால், ஜனங்களின் உள்ளான ஆத்தும வாழ்விற்கு வெளிச்சத்தைத் தந்து, அவர்களைத் தேவனுக்கென்று கொள்ளைப் (PRECIOUS) பொருளாய் சம்பாதித்தார்கள்! என காண்கிறோம்.

இன்று கிறிஸ்தவத்திலும் இதுபோலவே இரண்டு வகை பிரசங்கிகள் காணப்படுகிறார்கள்! தங்கள் பிரசங்கத்தை கேட்பவர்களைப் பிரியப்படுத்தும்படி “இச்சகமான வார்த்தைகளைப்” பிரசங்கிப்பவர்களே **இன்றும்** ஏராளமாய் இருக்கிறார்கள்!

**ஆனால் “தேவனை அறிந்த” ஊழியர்களோ, தங்கள் செய்தியை கேட்பவர்கள் அதை மகிழ்ச்சியாய் ஏற்றுக்கொண்டாலும் அல்லது அதனிமித்தம் மனம் புண்பட்டாலும் ‘சத்தியத்தையே’ எப்போதும் பேசுவார்கள்!**

இதுபோன்ற ‘சிலராய்’ நிற்கும் ஊழியர்களுக்கு, தங்களின் புகழ்ச்சியோ அல்லது இகழ்ச்சியோ.... எதுவும் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல!

மானிடர்களாகிய நாம் ‘ஆடுகளைப்போலவே’ இருக்கிறோம். தாங்கள் தனியே நின்றுவிட அஞ்சி, இந்த ஆடுகள் எப்போதும் கூட்டமான மந்தையைப் பின்பற்றுவதற்கே இயல்பாகவே தூண்டப் படுகின்றன! ஆனால், அந்த “மந்தை” தவறான திசைக்குச் செல்லும் போது, இந்த ஆடுகளும் வழிதப்பிச் சென்றுவிடுவார்கள்! நாம் வாழும் இன்றைய சூழ்நிலையும் இவ்வாறாகவே இருக்கிறது. ஆகவே, தனக்கு

*முன் உத்தமமாய் நின்று,* **அவருடைய வழியில்** *ஜனங்களை நடத்திடக் கூடிய சிலரைக் காணும்படியே தேவன் கூர்ந்து நோக்கி தேடிக் கொண்டிருக்கிறார்! இருப்பினும், இவ்வாறெல்லாம் “மந்தையோடு சேர்ந்துவிடாதபடி” தனித்து நிற்கக்கூடிய தைரியத்தை நாம் பெற வேண்டுமென்றால், நாம் தேவனையும்! அவருடைய மனதையும்! அவருடைய சிந்தையையும்! அவருடைய வழிகளையும்! நாம் நிச்சயமாய் அறிந்திருக்க வேண்டும்.*

*கடந்த 40 ஆண்டுகளில் இந்திய தேசத்தில் நான் சந்தித்த பெரும் பாலான கிறிஸ்தவத் தலைவர்கள், தேவனையும் அவருடைய சிந்தை யையும் தனிப்பட்ட விதத்தில் அறிந்தவர்களாய் இல்லை. மேற்கத்திய நாட்டுப் பத்திரிக்கைகளிலும் அல்லது புத்தகங்களிலும் படித்தவை களையே இவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்தந்த காலத்தில் “சில குறிப்பிட்ட காரியங்களை முக்கியப்படுத்தி” இந்த அமெரிக்க கிறிஸ்தவத் தலைவர்கள் பேசுவார்கள். 1980-ம் வருடங்களில் ஒன்றை முக்கியப்படுத்தினால்.... 1990-ம் வருடங்களில் வேறொன்றை முக்கியப்படுத்தி பேசுவார்கள்! மலைப்பாங்கான பகுதிகளில் தொனிக்கும் எதிரொலிகளைப்போல,*

**இந்த அமெரிக்கர்கள் வலியுறுத்தும் முக்கியத்துவ செய்திகள் “பணத்துக்கு முகஸ்துதி செய்யும்” இந்தியாவிலும், மூன்றாம் நிலை உலக நாடுகளிலும் மிகுந்த உண்மையோடு எதிரொலிக்கப்படுகின்றன!**

*குறிப்பாக, சுவிசேஷ மாநாட்டு கூட்டங்களில் “உபதேச கட்டுரைகள்” சமர்ப்பிக்கும் போது, தங்கள் ‘முகஸ்துதி எதிரொலிப்பை’ உத்தமமாய் சமர்ப்பித்துவிடுகிறார்கள்! இந்த அமெரிக்க தலைவர்கள் “சபையின் வளர்ச்சி” எனப் பேசி, எழுதத் தொடங்கிவிட்டால், இந்த இந்திய கிறிஸ்தவ தலைவர்களும் “சபையின் வளர்ச்சியே” தங்கள் தலையாய செய்தியாய் மிகுந்த உத்தமத்தோடு எதிரொலித்து விடுவார்கள்! இந்த அமெரிக்கர்கள் “10 X 40 அளவான ஜன்னல்” என பேசிவிட்டால், இந்த இந்திய பிரசங்கிகளும் என்ன ஏது என்று விளங் காமலே “10 X 40 அளவான ஜன்னல்” என உத்தமமாய் எதிரொலிப் பார்கள்!? இந்த அயல்நாட்டு மேற்கத்திய கிறிஸ்தவர்கள் “உபத்திரவத் திற்குமுன் சபை எடுத்துக்கொள்ளப்படும்” என போதித்தால், அதே போதகத்தை இங்குள்ள இந்திய வேதகலாச்சாலை போதகர்களும் போதிப்பார்கள்! பார்த்தீர்களா, நம் இந்தியர்கள் மேற்கத்திய கிறிஸ்த வர்களை எக்காலத்தும் எதிர்த்து கேள்வி கேட்க ஒருபோதும் துணிவு கொண்டதே இல்லை!*

*அப்படியென்ன, இந்தியாவில் உள்ள ஒருவரிடத்தில்கூட தேவன் நேரடியாய் பேசுவதில்லையா? “வெள்ளையின மக்களோடுதான்” தேவன் பேசுவாரா?*

இதுபோன்ற "ஒத்ததாளத்திற்கெல்லாம்" காரணம், இன்றைய மூன்றாம் ரக - உலகத்தில் உள்ள கிறிஸ்தவர்களின் "அடிமை-மனப் பாங்கே" ஆகும்! இந்தியர்களாகிய நாம் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் சுமார் 200 ஆண்டுகளுக்கு மேலாய், அவர்களால் ஆண்டு ஆட்சி செய்யப்பட்டோம். இந்த "அடிமை மனப்போங்கிலிருந்து" விடுதலை ஆவதற்கு இன்றும் நமக்கு கடினமாகவே இருக்கிறது! இந்த வெள்ளை மனிதர்கள் வலிமையாய் வற்புறுத்தி சாதித்துப் பேசுகிறவர்களாயும், ஆட்டிப்படைக்கும் மமதை கொண்டவர்களாயும், ஏராளமான பணமுடையவர்களாயும் இருக்கிறபடியால்.... அவர்கள் தங்களைக் காட்டிலும் மேலானவர்களும், "அதிகமான ஆவிக்குரியவர்கள்" என்றும்.... கிட்டத்தட்ட நம் எல்லா இந்திய கிறிஸ்தவர்களுமே எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்!

ஒரு 'கருப்பு அமெரிக்க சகோதரன்' என்னிடம் ஒரு சமயம் பேசும் போது, "அமெரிக்காவில் உள்ள கருப்பு ஜனங்கள் அடிமைத்தனத்தி லிருந்து 100 ஆண்டுகளுக்கு முன்பே விடுவிக்கப்பட்டிருந்தாலும் **'அந்த அடிமைத்தன ஆவியோ'** எங்கள் இன மக்கள் அனேகரிடம் இன்னமும் இருக்கத்தான் செய்கிறது" என கூறினார். ஒரு வெள்ளை மனிதனைப் பார்க்கும்போதெல்லாம், அவனைவிட தாங்கள் தாழ்வானவர்கள் என்றே இவர்களின் உணர்வு தேங்கி உறைந்திருக்கிறது. இதே மனப்பான்மைதான் இன்று எல்லா இந்திய கிறிஸ்தவர்களிடமும் காணப்படுகிறது!

**இந்தியாவுக்கு வந்த மேற்கத்திய பிரசங்கிகளில் நான் சந்தித்த பெரும்பாலான பிரசங்கிகளைக் குறித்து என்னுடைய நேர்மையான அறிக்கை என்ன வென்றால்: "ஆவிக்குரிய ரீதியில் அவர்கள் ஆழமற்றதான பொக்குத் தன்மையும், லௌகீகமும்" கொண்டவர்களே ஆவார்கள். ஆம், அவர்கள் தேவனை அறிந்ததேயில்லை!**

இருப்பினும், அவர்களிடம் வாரி இறைக்க ஏராளம் பணம் இருக்கிற படியால், அவர்கள் போகுமிடமெல்லாம் கீர்த்தி பெற்றவர்களாய் மாறுகிறார்கள். இந்தியாவில் நடைபெறும் கிறிஸ்தவ மாநாடுகளின் விளம்பர சுவரொட்டிகளைச் சற்றுப் பாருங்கள்! அக்கூட்டங்களுக்கு அதிகபட்சமாய் காணப்படும் முக்கிய பிரசங்கியார் ஒரு ஆங்கில "மேற்கத்திய பிரசங்கியாகவே" இருப்பார். நம் தேசத்தில் உள்ள கிறிஸ்தவம் சென்று கொண்டிருக்கும் துயரமான நிலையை உங்களால் காண முடிகின்றதா? இந்த நிலை "பெயர் கிறிஸ்தவர்களிடம்" மாத்திரமே காணப்பட்டால் அதை நாம் சகித்துக் கொள்ளலாம். ஆனால் "மறுபடியும் பிறந்த" அனுபவமும், "ஆவியின் அபிஷேக" அனுபவமும் பெற்றதாகக் கூறிக்கொள்வோர் கூட்டத்திலும் இன்று

*இதே நிலைதான் காணப்படுகிறது .... ஆ, இது வேதனை!*

*இந்த கேவலமான “அடிமை மனப்பான்மையை” நாம் உடைத் தெறிந்து வெளியே வரவேண்டும். காரியம் இவ்வாறிருக்க, நீங்களோ சில வெள்ளை மனிதர்களிடமிருந்து இன்னமும் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தால், அவர்களின் கட்டுகளை உடைத்து வெளியே வருவது உங்களுக்கு அதிக கஷ்டமேயாகும்! இந்த இக்கட்டான நிலையில், “மனிதர்களுக்கு ஊழியம் செய்வதை நிறுத்தி விட்டு ஆண்டவருக்கே ஊழியம் செய்வதா? வேண்டாமா?” என்பதை நீங்கள்தான் உறுதியான தீர்மானம் எடுக்கவேண்டும்! ஆம், நீங்கள் யாருக்கு ஊழியக்காரராய் இருக்கப்போகிறீர்கள்? நாம் கிரயத்திற்கு கொள்ளப்பட்டபடியால், “மனுஷர்களுக்கு அடிமையாய் இருக்கக்கூடாது” என்றல்லவா வேதம் ஆணித்தரமாய் கூறுகிறது! (1கொரி.7:23).*

*ஆகவே, தேவனை உங்கள் தனிப்பட்ட அனுபவத்தில் அறிந்து கொள்வதே உங்கள் தீராத வேட்கையாய் மாறுவதாக! அவ்வாறு நீங்கள் மாறிவிட்டால், இனி நீங்கள் ஒருபோதும் சில மேற்கத்திய தலைவர் களின் “எதிரொலியாகவோ” அல்லது ஒரு இந்திய தலைவனின் “எதிரொலியாகவோ” கூட நீங்கள் இருந்துவிட மாட்டீர்கள். ஆம், நீங்கள் ஒருவருக்கும் அடிமையாய் இருக்கமாட்டீர்கள்... நீங்களோ இப்போது தேவமனுஷனாய் திகழ்வீர்கள்!*

**இவ்வாறு தேவனை தனிப்பட்ட விதத்தில் அறிந்துகொள்ளும் அறிவின் மூலமாக மாத்திரமே ஒருவன் “ஆவிக்குரிய அதிகாரத்தையும்” பெற்றிட முடியும்.**

*ஆகவே சகோதரர்களே, நீங்கள் யாவரும் தேவனை அறிந்த புருஷர்களாய் மாறும்படியே நான் உங்களைத் துரிதப்படுத்துகிறேன்! அதுவே உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை மகிமையுள்ளதும், உங்கள் ஊழியத்தை அதிகாரம் உடையதாகவும் மாற்றும்! இதுவே நம் தேசத்திற்கு வேறு எதைக்காட்டிலும்* **இன்று** *அவசரத் தேவையாய் இருக்கிறது!*

தேவனை அறிந்துகொள்வதைக் காட்டிலும் வேதாகமத்தை அறிந்து கொள்வது மிகவும் இலகுவேயாகும். ஏனென்றால், வேதாகமத்தை அறிந்து கொள்ள எந்தக் கிரயமும் நீங்கள் செலுத்த வேண்டியதேயில்லை, நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அதை உட்கார்ந்து படிக்கவேண்டும், *அவ்வளவுதான்!*

உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் வேசித்தனம் செய்து கொண்டும், உங்கள் சிந்தை வாழ்க்கையில் அசுத்தமாய் இருந்து கொண்டும்... இன்னமும் தொடர்ந்து வேதத்தை நன்கு அறிந்தவர்களாய் இருந்திட முடியும்! ஓர் புகழ்பெற்ற பிரசங்கியாய் இருக்கும் அதே

*வேளையில், நீங்கள் பணத்தை இச்சிப்பவர்களாயும் இருந்திட முடியும்! ஆனால்.... உங்கள் வாழ்க்கையில் வேசித்தனம் செய்துகொண்டே "தேவனையும் தொடர்ந்து அறிந்திருப்பது" ஒருக்காலும் முடியாது! நீங்கள் பண ஆசை கொண்டவர்களாய் வாழ்ந்து கொண்டே "தேவனையும் தொடர்ந்து அறிந்திருப்பது" ஒருக்காலும் முடியாது... முடியவே முடியாது! ஆகவேதான், இன்றைய பெரும்பாலான பிரசங்கிமார்கள் தேவனை அறிவதைக் காட்டிலும், இலகுவான பாதையாகிய வேதாகமத்தை அறிவதையே தங்களுக்கென தெரிந்து கொள்கிறார்கள்!*

**சகோதரர்களாகிய உங்கள் யாவரையும் பார்த்து நான் மிகுந்த பரிவுடன் கேட்கிறேன்: நீங்கள் வேதாகமத்தை மாத்திரம் அறிந்திருப்பதில் மகிழ்ச்சியாய் இருக்கிறீர்களா? அல்லது, ஆண்டவரை அறியவேண்டும் என்ற தீராத பசி உங்கள் இருதயங்களில் இருக்கிறதா?**

*"தான் ஆண்டவரை அறிந்துகொள்ள வேண்டியவிதமாய் அறிந்து கொள்வதே" தன்னுடைய தீராத வாஞ்சையென பிலிப்பியர் 3:8-10 வசனங்களில் பவுல் கூறினார். இவ்வாறு கர்த்தரை அறிந்து கொள்வதை ஒப்பிடும்போது, மற்ற அனைத்தையும் "குப்பையாகவே" அவர் கருதினார். "இந்த ஒரு விலையேறப்பெற்ற முத்தை" வாங்குவதற்கு பவுல் தனது எல்லா முத்துக்களையும் விற்றுப்போட்டார்! பவுலுடைய ஊழிய ரகசியம், கமாலியேலின் வேதாகமக் கல்லூரியில் எத்தனை வருடங்கள் வேதத்தை கற்றார் என்பதாயிராமல், அவர் ஆண்டவரைத் தனிப்பட்ட விதத்தில் அறிந்துகொண்ட ஜீவியத்திலேயே அடங்கியிருக்கிறது!*

*உங்கள் தனிப்பட்ட ஜீவியத்தில் "தேவனையும், இயேசுகிறிஸ்து வையும் அறிந்துகொள்வதே" நித்தியஜீவன்! (யோ.17:3). பரலோகத்தில் "நித்திய காலமாய்" வாழ்வதே நித்திய ஜீவன் என நாம் விளங்கி யிருக்கக்கூடும். ஆனால் இயேசுவோ அவ்வித விளக்கத்தை ஒருபோதும் தரவேயில்லை. பரலோகத்திற்கு போவதோ அல்லது நரகத்திற்கு தப்பு வதோ 'நித்தியஜீவனுக்கு' அடுத்த காரியத்திற்கு யாதொரு சம்பந்தமு மில்லை!* **ஆம், "ஆண்டவரை சொந்தமாய் அறிந்து கொள்வதே" நித்திய ஜீவனாகும்.** *தேவனை நெருங்கி, அவரை தனிப்பட்ட விதத்தில் சொந்த மாய் அறிந்துகொள்வது ஒன்றே என் வாழ்க்கையில் நான் கொண்ட தாகமும், இருதயத்தின் பாரமுமாய் இருக்கிறது! எந்த அளவிற்கு* **நான் தேவனை என் சொந்தமாய் அறிந்திருக்கிறேனோ,** *அந்த அளவிற்குத் தான் என் ஊழியத்தில் பரத்தின் அதிகாரத்தைப் பெற்றிருக்க முடியும் என்பதை நான் அறிந்திருக்கிறேன். எனவேதான், நான் ஊழியம் செய்யும் எங்களுடைய எல்லா சபைகளிலும், ஜனங்கள் "தேவனை அறிந்து கொள்ளும்படி நடத்துவதற்கே" நான் பாடுபட்டிருக்கிறேன்.*

சரித்திரத்தில் எப்போதும் இல்லாத அளவிற்கு, இக்காலத்தில்தான் வேத அறிவு ஏராளமாய் பெருகியிருக்கிறது! அன்று பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு சுமார் 1500 வருடங்களாகியும்கூட அச்சடிக்கப்பட்ட வேத புத்தகங்கள் உலகில் எங்கும் இல்லாமல்தான் இருந்தது. இந்த கடைசி இரண்டு நூற்றாண்டுகளில்தான், வேதப்புத்தகம் தாராளமாய் நமக்குக் கிடைக்கிறது. இன்றோ, பல்வேறு மொழிபெயர்ப்புகளும், ஒத்தவாக்கியங்களும், வேதபாட விளக்கங்களும் ஏராளமாய் வந்து விட்டன.

இவ்வித வேத அறிவின் பெருக்கம், “பரிசுத்தமிக்க கிறிஸ்தவர்களை” ஏராளமாய் உருவாக்கிவிட்டதென நீங்கள் எண்ணுகிறீர்களா? இல்லவேயில்லை! வேத அறிவு பரிசுத்தத்தை உருவாக்க முடியுமென்றால், சரித்திரத்தில் **இன்று** வாழும் நாம்தான் அதிக தேவ பக்தியான ஜனங்களை கொண்டிருக்க வேண்டும்! ஆனால் காரியம் அவ்வாறு இல்லையே!?

**வேத அறிவுதான் பரிசுத்தத்தை உருவாக்க முடியுமென்றால், நம் யாரைக் காட்டிலும் அதிகமாய் வேதாகமத்தை அறிந்திருக்கும் “சாத்தான்” பரிசுத்தமானவனாய் மாறியிருப்பான்!**

இன்று ஏராளமான வேத கலாச்சாலைகள், ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு வேதாகமத்தை போதிக்கின்றனவே! ஆனால், “உலகத்தின் சீரிய தெய்வபக்தியானவர்கள்” இந்த வேதகலாச்சாலையிலா இருக்கிறார்கள்? இல்லை! இன்னும் சொல்லவேண்டுமென்றால், இன்றுள்ள வேதகலாச்சாலை பட்டதாரிகள் அஞ்ஞானிகளை விட மோசமாய்தான் இருக்கிறார்கள்!

சில வருடங்களுக்கு முன்பு, இந்தியாவில் உள்ள ஓர் உயர்ந்த சுவிசேஷ வேத கலாச்சாலையில் **முதல் மதிப்பெண்** பெற்று பட்டம் வாங்கிய மாணவனை நான் சந்தித்தேன். அந்த மாணவன், தான் வேத கலாச்சாலையில் சேரும்போது இருந்த ஆவிக்குரிய நிலையைவிட, வேத கலாச்சாலையின் மூன்று ஆண்டு படிப்பிற்குப் பிறகு உள்ள தன் ஆவிக்குரிய நிலை மோசமாய் மாறிவிட்டது என வருத்தத்துடன் கூறினார்! அப்படியானால், இந்த வேதாகமக் கல்லூரி இந்த மாணவனுக்கு என்னத்தைப் போதித்தது? ஆம், வேதாகமத்தைப் “பற்றியும்” கிறிஸ்தவத்தைப் “பற்றியுமான” போதகங்களையே போதித்திருக்கிறது. இதுபோன்ற வேதாகாமக் கல்லூரிகளில் நிச்சயமாய் சாத்தான் முதல் மார்க் வாங்குவான் என்பதில் சந்தேகமேயில்லை!

ஒருவன் கோபத்தையும், கசப்பையும், இச்சையான சிந்தைகளையும், பண ஆசையையும் ஜெயம் பெறாமல், “வியாக்கியான அகராதியையும்” “எதிர்மறை வல்லுனர்கள் கூறியிருப்பவை என்ன?”

*என்பதையும், ஒரு வசனத்தின் "மூல கிரேக்க பதத்தில் உள்ள அர்த்தம்" என்ன? என்பதையும் அறிந்து கொள்வதில் என்ன பிரயோஜனம்? இவன் பெற்ற வேத கலாசாலைச் சான்றுகளை வைத்து, ஒரு சபையில் ஒரு பாஸ்டராய் வேண்டுமானால் நியமனம் பெறலாம்! ஆனால், தன்னுடைய சபையில் உள்ள ஜனங்களுக்கு இவர் என்னத்தைப் போதிப்பார்? இன்று ஜனங்களுக்கு "ஒழுக்க-நெறியில்" ஏராளமான பிரச்சனைகள் இருக்கிறதேயல்லாமல் "வேத சாஸ்திரத்தில்" இவர்களுக்கு என்ன பிரச்சனை இருக்கிறது? இந்த மக்களுக்கு இவர்கள் என்ன உதவியைச் செய்திட முடியும்? பாருங்கள், இப்படித் தான் இன்று தேவனுடைய பணி நம் இந்தியாவில் சீரழிந்து கொண்டிருக்கிறது!*

*நீங்கள் முதலாவது தேவனை அறிந்திருந்தால் மாத்திரமே, உங்கள் மந்தையும் தேவனை அறிந்து கொள்ளும்படி நீங்கள் நடத்திட முடியும்! உங்கள் சொந்த வாழ்க்கையில் பாவத்தை ஜெயித்திருந்தால், உங்கள் மந்தையும் பாவத்தை ஜெயித்து வாழ நீங்கள் நடத்திட முடியும்! அவ்வாறு இருந்தால் மாத்திரமே,* **அவர்களும் ஆயத்தப்படுத்தப்பட்டு** *"வல்லமையையும் அதிகாரத்தையும் பெற்றவர்களாய்" கர்த்தருக்கு ஊழியம் செய்ய புறப்பட்டுச் சென்றிடவும் முடியும்!*

> **ஒருவன் வேத அறிவையும் அல்லது வேத-கலைப் பட்டங்களையும் பெற்றதினிமித்தம் சாத்தான் அதிர்ச்சி அடைந்துவிட்டான் என எண்ணுகிறீர்களா? ஒருக்காலும் இல்லை! தேவனை அறிந்து... பரிசுத்தமும், தாழ்மையும் கொண்ட புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்குமே சாத்தான் அஞ்சி நடுங்குகிறான்! அதிர்ச்சியும் அடைகிறான்!**

இவ்வாறு, நம்முடைய இளைய சகோதரர்களும், சகோதரிகளும் தேவனை அறிவதற்கு நடத்தும்படி, ஆண்டவர் நமக்கு உதவி செய்வாராக!

# 3

## “தேவனுக்குப் பயந்தவன்”

ஒரு ஆவிக்குரிய தலைவன், தேவனிடத்தில் அதிக பயம் கொண்டிருப்பான்!

நாம் எவ்வளவு அதிகமாய் தேவனை அறிந்திருக்கிறோமோ, அவ்வளவு அதிகமாய் தேவனுக்குப் பயந்திருப்போம்! தேவனிடத்தில் நாம் கொண்டிருக்கும் பயம் ஓர் மெய்யான “பயபக்தியாய்” இருக்குமே யல்லாமல், ஓர் பீதி நிறைந்த “அச்சமாய்” ஒருபோதும் இருப்பதில்லை!

“பிள்ளைகளே வந்து எனக்கு செவிகொடுங்கள்; **கர்த்தருக்குப் பயப்படுதலை** உங்களுக்குப் போதிப்பேன்” என தாவீது நம் எல்லோருக்கும் அழைப்பு விடுப்பதைப் பாருங்கள் (சங்கீதம் 34:11).

ஆம், ஜனங்களுக்கு “தெய்வ பயத்தை” போதிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல! அதைவிட ரோமர், எபேசியர் நிருபங்களை எவ்வாறு ஆராய்வதென போதிப்பது மிக எளிதான செயலேயாகும்! நாம் பிறருக்கு தெய்வ பயத்தைப் போதிக்க வேண்டுமென்றால், **நாம் முதலாவது** அவருக்குப் பயந்து வாழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில், கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பமாகும். வேதாகமத்தை மாத்திரம் முற்றிலும் அறிந்து கொண்ட ஒரு மனிதனைக் காட்டிலும், தேவனுக்குப் பயந்து வாழும் ஒரு மனிதன், தன்னுடைய மந்தைக்கு அதிகமான நன்மைகளைப் போதித்திட முடியும். தேவனுக்குப் பயந்து வாழாதவன் “அறிவைப்” போதிக்க முடியுமேயல்லாமல், “ஞானத்தை” ஒருக்காலும் போதித்திடவே முடியாது! அறிவு ஒருவனை இறுமாப் படையவே செய்யும் (1கொரி.8:1). ஆனால் ஞானம் ஒரு மனிதனை முதிர்ச்சிக்குள் நடத்தி, அன்றாட ஜீவியத்தில் உள்ள பிரச்சனைகளுக்கு அவனிடம் உள்ள அறிவை எவ்வாறு செயல்படுத்த வேண்டுமென்றும் போதிக்கும்! இவ்வாறு ஞானத்தைப் பெற்றிருக்கும் புருஷர்கள் மாத்திரமே இயேசுகிறிஸ்துவின் சபையை கட்டி எழுப்பிட முடியும்!

“கர்த்தருக்குப் பயப்படுதலே” கிறிஸ்தவ வாழ்க்கையின் ABC - அகர வரிசையாகும்.

**உங்கள் மந்தைக்கு நீங்கள் முதலாவது கர்த்தருக்குப் பயப்படுதலை போதித்திருக்கவில்லையென்றால், நீங்கள் எவ்வளவுதான் மற்ற சத்தியங்களை விரிவாய் போதித்திருந்தாலும்... நீங்களோ, உங்கள் பிரதான பணியில் தோல்வி யடைந்துவிட்டீர்கள் என்பதுதான் உண்மை!**

வாசிக்கவே தெரியாத மாணவர்கள் இருக்கும்போது, அவர்களுக்குப் போய் பூகோளத்தையும், சரித்திரத்தையும் போதிக்க முயற்சிக்கும் ஆசிரியராகவே நீங்கள் இருப்பீர்கள்! இந்த உலகத்தில் உள்ள ஒரு ஆசிரியர்கூட இதுபோன்ற தவறை செய்வதில்லையே!

நாம் கர்த்தருக்குப் பயப்படுதலைக் கற்றுக்கொள்வது "எப்படி வாசிக்க வேண்டும்" என கற்றுக்கொள்வதற்கு ஒப்பானதேயாகும்! ஆனால், துரதிருஷ்டவசமாய் சபையில் உள்ள அனேக மூப்பர்கள் தங்கள் மந்தைக்கு கர்த்தருக்குப் பயப்படுதலை **முதலாவதாய்** போதிப்பதே இல்லை. இதுவே, "இன்று ஏன் ஒளியின் பிள்ளைகளைவிட இந்த உலகத்தின் பிள்ளைகள் அதிக ஞானம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள்?" என்பதற்குரிய விடையாய் இருக்கிறது!

வேதகலாச்சாலையிலிருந்து பட்டம் பெற்று வந்தவர்களைப் பார்த்து நான் ஒரே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்: "அங்கு நீங்கள் **கர்த்தருக்குப் பயப்படுதலைக்** கற்றுக்கொண்டீர்களா? அல்லது வெறும் வேத-கலை சான்றிதழை மாத்திரம் பெற்று வந்தீர்களா?".

இப்போது இரண்டாவது கேள்வியையும் நான் கேட்கிறேன்: "நீங்கள் எதற்காக வேதாகமக் கல்லூரியில் சேர்ந்தீர்கள்? ஒரு உத்தி யோகத்தைப் பெறுவதற்காகவா அல்லது தேவனுக்குப் பயப்படுதலைக் கற்றுக்கொள்வதற்காகவா? வேறொரு வேதகலை செமினரியைவிட, இந்த செமினரியை (Seminary) நீங்கள் எதற்காக தெரிந்து கொண்டீர்கள்? **இது ஓர் புகழ்பெற்ற செமினரி** என்பதற்காகத் தானே? உபதேச ரீதியில் இந்த செமினரி சுவிசேஷ அடிப்படையில்லாதது என தெரிந்திருந்தும் கூட 'சுயாதீன அடிப்படை' கொண்ட இந்த செமினரி பிரஸ்தாபம் மிக்கது என எண்ணித்தானே இதில் சேர்ந்தீர்கள்? தன்னுடைய ஊழியத்திற்காக இதுபோன்ற செமினரிகளுக்கு இயேசு தன் சீஷர்களை அனுப்பியிருப்பா ரென உங்களால் கற்பனையாகிலும் செய்து பார்க்க முடிகிறதா? அல்ல.... அல்ல, நாங்கள் மெய்யாகவே தெய்வபயத்தைக் கற்றுக் கொள்வதற்காகத்தான் இந்த செமினரியை தெரிந்து கொண்டோம் என உங்களில் எத்தனைபேர் நெஞ்சில் கை வைத்து நேர்மையாய் பதில் சொல்ல முடியும்?" இதுபோன்ற கேள்விகளுக்கு நேர்மையாய் பதில் கூறிட இன்று ஒருவரும் இல்லையே .... இது மிகுந்த துயரம் அல்லவா?

இன்று இந்தியாவிலுள்ள வேதாகமக் கல்லூரியில் சேர்பவர்களின் நோக்கமெல்லாம் "அமெரிக்காவுக்குச் சென்று பணம் சம்பாதிக்க

*எடுத்துவைக்கும் முதலடியாகவே” பிரவேசிக்கிறார்கள்! இன்னும் சிலர் அமெரிக்காவிலேயே குடியமர்ந்துவிடும் பொருட்டு, அமெரிக்க வேத கலாச்சாலைக்கே நேரடியாகச் சேர முயற்சிக்கிறார்கள்! இதுபோன்ற ஜனங்கள் எவ்வாறு கர்த்தருக்கு ஊழியம் செய்திட முடியும்?*

*இதுபோன்ற தவறான நோக்கத்துடன்தான் வேதாகமக் கல்லூரியில் சேர்ந்தீர்கள் என்பதை உங்களால் ஒத்துக்கொள்ள முடிகிறதா? இந்தக் கேள்விக்கு நீங்கள்* **நேர்மையாய்** *நின்றுவிட ஆயத்தமாகிவிட்டால், உங்களுக்கு இன்னமும் மிகுந்த நம்பிக்கை இருக்கிறது.... ஏனெனில்* **தேவன் நேர்மையுள்ள ஜனங்களை நேசிக்கிறார்!** *இப்போது நீங்கள் செய்யவேண்டியதெல்லாம், நீங்கள் செய்த அதே “பைபிள்-ஸ்கூல் தவற்றை” மற்றவர்களும் செய்யாதபடி அவர்களை எச்சரிக்கத் தீர்மானிப்பதுதான்! உங்கள் மந்தையினருக்கு,* **கர்த்தருக்குப் பயப்படுதலையே முதலாவதாய் போதியுங்கள்!** *நம்முடைய பிள்ளைகளாவது, நாம் செய்த தவற்றைச் செய்துவிடாமல் காக்கப்படட்டும்!*

*“ஒரு* **வீடு** *ஞானத்தினால் கட்டப்பட்டு .... அறிவினாலே அதன் அறைகளில் சகலவித* **பொருட்களும்** *நிறைந்திருக்கும்” என நீதி.24:3,4-ம் வசனங்கள் கூறுகிறது. இங்கே ஞானத்திற்கும், அறிவுக்குமுரிய வித்தியாசத்தைக் கவனித்தீர்களா! இவ்வாறெல்லாம் கூறி “வேத அறிவை” குறைத்து மதிப்பிட நான் முயற்சிப்பதாக நீங்கள் எண்ண வேண்டாம்.... அவ்வித நோக்கம் ஒரு துளிகூட எனக்கில்லை! என்னுடைய வாழ்க்கையில் 50-வருடங்கள் வேதாகமத்தைக் கருத்துடன் கற்றிருக்கிறேன். வேறு யாரைக்காட்டிலும் எனக்கு வேத அறிவு அதிகம் இருக்கிறது என்றுகூட என்னால் சொல்லமுடியும். ஆனால், எல்லாவற்றையும் காட்டிலும் ஞானத்தையே நான் அதிகமாய் தேடுகிறேன்!*

**இவ்வுலகத்தில் தெய்வசுபாவமாகிய “திவ்விய அன்பே” எல்லாவற்றிற்கும் மிகப் பெரியதாயிருக்கிறது. ஆகிலும் இந்த திவ்விய அன்போ, எக்காலத்திலும் திவ்விய ஞானத்தினால் மாத்திரமே வழிநடத்தப்பட முடியும்! ஆம், ஞானம் இல்லாத அன்பு ஆபத்து கொண்டதேயாகும்!**

*அன்பை, ஒரு பஸ்ஸின் டேங்கிலுள்ள பெட்ரோலுக்கு ஒப்பிட முடியுமென்றால், ஞானத்தை அந்தப் பஸ்ஸின் டிரைவருக்கு ஒப்பிட முடியும்! உங்கள் மந்தையை முன்னேற்றப் பாதையில் நடத்துவதற்கு “திவ்விய அன்புதான்” நிச்சயம் தேவைப்படுகிறது. ஆனால், நீங்கள் அவர்களை எந்த வழியில் எப்படி நடத்தவேண்டும் என தீர்மானிப்பதற்கு ஞானமே மிகுந்த அவசியமாய் இருக்கிறது!*

*ஞானமே எல்லாவற்றிற்கும் அடிப்படை ஆதாரம் என்றுகூட கூறமுடியும். தன் வேதஅறிவில் 100% மதிப்பெண்கள் வாங்கியவர்,*

*ஞானத்தில் 0% வாங்கிடும் சாத்தியம் இருக்கத்தான் செய்கிறது. அது எப்படியெனில், ஒரு மாணவன் உடற்பயிற்சி வகுப்பில் 100% வாங்கி விட்டு, கணக்குப் பாடத்தில் 0% வாங்குவதற்கு ஒப்பாகும். இதற்கு பதிலாய், அந்த மாணவன் கணக்கில் 100% வாங்கி விட்டு உடற்பயிற்சியில் 0% வாங்குவது எவ்வளவோ பரவாயில்லை எனக் கூறலாம்! ஏனென்றால், ஓர் நீண்டகால ஜீவியத்திற்கு உடற்பயிற்சியைக் காட்டிலும், கணக்கு மிக அதிக முக்கியமாய் இருப்பதை நாம் அறிகிறோம். இதைப்போலவே ஓர் நீண்டகால அனுபவத்திற்கு* **ஞானமே** *அறிவைக்காட்டிலும் அதிக முக்கியமாகும்!!*

*தன் அறையை பொருட்களால் நிறைப்பதற்கு ஒப்பானதே "அறிவு" என வாசித்தோம். அதாவது சேர், டேபிள், படுக்கைகள் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களே அறிவுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. எனவே உங்களிடம் ஞானமில்லாமல் அறிவு மாத்திரமே இருக்குமென்றால், ஒரு மனிதன் தன் காலி நிலத்தில் தன்னுடைய விலையுயர்ந்த வீட்டுப் பொருட்களை வைத்ததற்கே ஒப்பாகும்! அங்கு விலையேறப்பெற்ற சோபாக்களும், டேபிள்களும், இருக்கத்தான் செய்கிறது.... அங்கு இல்லாதிருக்கும் ஒன்றேயொன்று "வீடு" மாத்திரமே! இதுபோன்ற ஒரு மனிதன் நகைப்பிற்குரியவன் என, நாம் எல்லோருமே கருதினால் அது மிகையாகாது! ஆனால் அந்த நிலைதானே இன்றைய கிறிஸ்தவத்தி லுள்ள பெரும்பாலான தலைவர்களிடமும், பிரசங்கிகளிடமும் காணப்படுகிறது! இவர்களிடத்தில் "அறிவு" உள்ளது, ஆனால், "ஞானம்" இல்லை.... ஏனெனில், இவர்கள் தேவனுக்குப் பயப்படுவதே யில்லை! அவ்வளவுதான்.*

*இன்று "*__கர்த்தருக்குப் பயப்படுவதை__*" பிரசங்கிக்கும் பிரசங்கிமாரை காண்பது மெய்யாகவே மிக மிக அரிதாகிவிட்டதே! ஆகவேதான் இன்றைய திரளான விசுவாசிகளிடம் "ஞானம்" இல்லை! அதனிமித்த மாய் ஏதேதோ குறித்த எண்ணற்ற "*__வேறு பயங்கள்__*" அவர்களை ஆட்கொண்டு ஆட்டிப்படைக்கிறது!*

# 4

## “தேவனை கவனித்து கேட்பவன்”

ஒரு ஆவிக்குரிய தலைவன், தேவன் சொல்வதை செவிசாய்த்துக் கேட்டிட ஒவ்வொரு நாளும் தனிமையில் நேரம் செலவழிப்பான். வேதாகமத்தின் முதல் அதிகாரத்தில் திரும்பத் திரும்ப கூறப்பட்ட வாசகம்: “அப்பொழுது தேவன் சொன்னார் - Then God Said” என்பது தான். ஒழுங்கின்மையான பூமியை மீண்டுமாய் தேவன் சிருஷ்டித்த போது, அந்த முதல் ஆறு நாட்களில் ஒவ்வொரு நாளும் தேவன் ஏதாகிலும் ஒன்றைச் சொன்னார்! இவ்வாறு தேவன் பேசிய ஒவ்வொரு சமயத்திலும், பூமியானது ஓர் சிறந்த ஸ்தலமாய் ‘உருமாற்றம்’ அடைந்தது!

ஆகவே, வேதாகமத்தின் முதல் பக்கத்திலேயே ஓர் முக்கியமான சத்தியத்தை நாம் கற்றுக்கொள்ள முடிகிறது. அது என்னவெனில், “தேவன் நம்மோடு என்ன பேசுகிறார் என்பதை **ஒவ்வொரு நாளும் கவனித்துக் கேட்க வேண்டும்**” என்பதுதான். இவ்வாறு ஒவ்வொரு நாளும் தேவன் நம்மோடு பேசுகிறவைகளுக்கு மிகுந்த கவனமாய் நாம் கீழ்ப்படிந்துவிட்டால், நாம் ஓர் சிறந்த ‘பயனுள்ள’ கிறிஸ்தவர்களாய் மறுரூபமடைந்துவிடுவோம்!

தேவன் நம்மோடு பேசுவதைக் கேட்பதற்கும் (hearing), வேதாகமத்தை வழக்கமாய் வாசிப்பதற்கும் (reading) இடையில் ஏராளமான வித்தியாசம் உண்டு. ஆண்டவரை சிலுவையில் அறைந்தவர்கள் யார் தெரியுமா? தங்கள் வேதத்தை நாள்தோறும் வாசித்த ஜனங்களே அப்படிச் செய்தார்கள் என்பதை நாம் மனதில் கொள்ளக்கடவோம். வேதாகமத்தை அவர்கள் கற்றார்கள்... ஆனால், அவர்களுடைய **இருதயத்தில் தேவன் பேசியதையோ** அவர்கள் ஒரு சமயங் கூட கேட்கவேயில்லை (அப்.13:27). இதே சுபாவம் நமக்கும் இருக்கிறதே! இந்த அபாயத்திற்குள் நாம் விழுந்துவிட்டால் அன்றிருந்த ஜனங்களைப்போலவே நாமும் ஆவிக்குரிய குருடர்களாய் மாறி விடுவோம்!

ஆதியாகமம் முதலாம் அதிகாரத்திலிருந்தே “நம்மிடம் தேவன்

**ஒவ்வொரு நாளும்** பேச விரும்புகிறார்" என்ற உண்மை போதிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் "கிறிஸ்தவ தலைவர்களில்" பெரும்பாலோர் தேவன் சொல்வதைக் கேட்கும்படி அவரிடத்தில் ஒவ்வொருநாளும் செல்வதில்லை! அதற்குப் பதிலாய் மனிதர்கள் எழுதிய புத்தகங்களை மாத்திரமே வாசிக்கிறார்கள்!

இவ்வாறு நீங்கள் "மற்ற **மனுஷர்கள் பேசுவதை** மாத்திரமே கேட்டு" பிரசங்கிப்பது மிகுந்த துயரமேயாகும்! ஏனெனில் "வெறும் மனுஷனுடைய வார்த்தைகள்" ஒருபோதும் நித்தியமான யாதொன் றையும் நமக்குத் தர முடிவதேயில்லை. மாறாக, ஏசாயா 55:11-ம் வசனம் கூறுகிறபடி **தேவன் பேசுகிற** அவருடைய வார்த்தை மாத்திரமே, அவர் விரும்புகிறதை நமக்குள் கிரியை நடப்பித்து நித்திய பலனைத் தந்திடவும் முடியும்.

தேவன் எப்போதெல்லாம் பேசினாரோ, அப்போதெல்லாம் "இயற்கைக்கு அப்பாற்பட்ட" சம்பவங்கள் நடந்தன என்பதை ஆதியாகமம் 1-ம் அதிகாரம் தெளிவாய் காட்டுகிறது. இதைப் போலவே, நம் இருதயங்களில் தேவன் பிரதானமாய் பேசுவதையே நாம் பிரசங்கிப்பவர்களாக இருந்தால், நம்முடைய ஊழியத்திலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட பலத்த கிரியைகள் நிச்சயமாய் சம்பவிக்கும்!

பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும்போது "நீ உபதேசிப்பதற்கு முன்பாக **உன் ஜீவியத்தைக்** குறித்து எச்சரிக்கையாய் இரு" என்றார். ஏனென்றால், "அப்போதுதான் அந்த உபதேசத்தின் மூலமாய் நீயும், உன் உபதேசத்தைக் கேட்பவர்களும் இரட்சிக்கப்படுவார்கள்" என வலியுறுத்திக் கூறினார் (1தீமோ.4:16). நம்மை நாமே வஞ்சித்துக் கொள்வதிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள ஒரே வழி "தேவன் என்னோடு என்ன பேச விரும்புகிறார்?" என்பதை கவனித்துக் கேட்பதேயாகும்!

இதற்கு மாறாக, தேவன் பேச விரும்புவதை நீங்கள் கவனித்திட அக்கறை அற்றவர்களாய் மாறிவிட்டால்.... இனி அடுத்து, கீழ்காணும் மூன்று தவறான வழிகளில் நீங்கள் பிரசங்கிக்கத் தொடங்குவீர்கள்:

1. இக்காலத்தில் "மாபெரும் கிறிஸ்தவ பிரசங்கிகள்" என்ன பிரசங்கிக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து, அதையே நீங்களும் பிரசங்கிக்கத் தொடங்குவீர்கள்! இதுபோன்ற வெவ்வேறு கவர்ச்சியான உபதேசங்கள் குறிப்பாய் அமெரிக்காவில் இருந்தே வருகிறது... கிறிஸ்தவ ஊழியங்களுக்கான பெரும்பாலான பணமும் இந்த அமெரிக்காவில் இருந்துதானே வருகிறது! மனுஷர்களின் கண்களுக்கு "மாபெரும்" மதிப்பு கொண்ட இந்தப் பிரசங்கிகள், தேவனுடைய பார்வையிலோ "மாபெரும்" மதிப்பைப் பெற்றவர்கள் அல்லவே அல்ல! நீங்கள் வேண்டுமானால் அவர்கள் புத்தகங்களை வாசித்துவிட்டு "கிளிப்பிள்ளையைப் போல்" மீண்டும்

அதைப் பிரசங்கிக்கலாம். அதுவும், இப்போது பிரசங்கிக்கும் ‘குறிப்பிட்ட உபதேசம்’ கிறிஸ்தவ உலகில் வரவேற்புக்குரியதாய் கண்டால், நீங்கள் இன்னமும் அதை அதிகமாய் பேசிடவும் தீர்மானிப்பீர்கள்! யாதொன்றையும் பகுத்தறியத் தெரியாத உங்கள் மந்தையினரோ உங்கள் பிரசங்கத்தினால் கவரப்பட்டு... உங்களை, மாபெரும் கல்விமான்! ஆவிக்குரிய மனது கொண்ட தலைசிறந்த பக்தன்! என்றும் போற்றுவார்கள்!?

*அல்லது,*

2. இன்று கல்லூரிகளில் இரசாயன பாடம் போதிக்கும் விரிவுரையாளர், அதற்குரிய குறிப்புகளைக் கற்று வந்து பேசுவதைப் போல்... நீங்களும், வேதாகமத்தில் உள்ள குறிப்புகளைக் கற்று வந்து போதிப்பீர்கள்! ஒருவன் இரசாயன பாடத்தில் “டாக்டர் பட்டம்” பெறுவதைவிட வேத ஆராய்ச்சியில் “டாக்டர் பட்டம்” பெறுவது மிகவும் எளிது! இன்று, மூன்றாம் தரத்திற்கும் கீழான வேதாகமக் கல்லூரிகள் “பட்டத்தில் பசி–வெறி கொண்ட” பிரசங்கிகளுக்கும், பாஸ்டர்களுக்கும், ஒவ்வொரு பட்டத்திற்கும் சில நூறு ரூபாய்களை வாங்கிக் கொண்டு டாக்டர் பட்டங்களை அவர்களுக்குத் தந்து விடுகிறார்கள்! உங்களுக்கு எத்தனை டாக்டர் பட்டம் வேண்டுமோ உங்கள் விருப்பப்படி அத்தனையும் இன்று நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்! இந்த போலியை விட்டுத் தள்ளுங்கள்.... ஓர் முதல் தரமான வேத கலாச் சாலையில் பாடுபட்டு படித்து டாக்டர் பட்டம் பெற்றிருந்தால்கூட, நீங்கள் ஓர் “சாமர்த்தியசாலி” என்பதை மாத்திரமே அது நிரூபித்திட முடியும்! இருப்பினும், இன்னமும் நீங்கள் தேவனையும் அல்லது அவருடைய வார்த்தைகளையும் “அறியாத வர்களாகவே” இருந்திட முடியும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

*அல்லது,*

3. நீங்கள் ஓர் பிரபல்யவானாய் மாற விரும்புவதால்... உங்கள் மந்தையில் உள்ள வர்களுக்கு மிகவும் பிடித்தமானவைகள் என்ன என்பதை அறிந்திட முயற்சிப்பீர்கள். அதுஎப்படியெனில், இன்று வியாபாரிகள் மார்க்கெட் – சர்வே மூலம், பெரும்பாலான மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பதைக் கணக்கெடுப்பதற்கு ஒப்பானதேயாகும்! இவ்வாறாகத்தான் இன்று ஏராளமான பாஸ்டர்கள் பிரசங்கிக்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் உள்ள கள்ளதீர்க்கதரிசிகளும் இவ்விதமே பிரசங்கித்து ஜனங்களிட மிருந்து பிரபல்யத்தைப் பெற்றார்கள். இந்தக் கள்ளதீர்க்கதரிசிகளில் ஒருவர் பாக்கி இல்லாமல், இஸ்ரேல் தேசத்து மக்கள் எதைக் கேட்க விரும்புகிறார்கள் என்பதைக் கண்டறிந்து ‘அதையே’ அவர்கள் பிரசங்கித்தார்கள்! இந்த கள்ளதீர்க்கதரிசிகள் ஜனங்களிடம் பிரபல்யம் பெற்றது மாத்திரம் அல்லாமல், ஏராளமான பணத்தையும் பெற்றார்கள்! இதேபோன்ற கள்ளதீர்க்கதரிசிகள் இன்றைய கிறிஸ்தவத்திலும் ஏராளம் ஏராளமாக இருக்கிறார்கள்!

**இதற்கு நேர்மாறாக, அன்று இஸ்ரவேல் தேசத்தில் இருந்த ஒவ்வொரு உண்மையான தீர்க்கதரிசியும் யாதொரு பிரபல்யத்தையும் பெறாதவர்க ளாகவே இருந்தார்கள். அதற்கு ஒரே காரணம், அந்த யூத மக்கள் எதை கேட்க**

**விரும்புகிறார்கள் (WANTED) என்பதின்படி அல்லாமல்... அவர்கள் எதைக் கேட்டிட தேவையானவைகளோ (NEEDED) அவைகளைப் பிரசங்கித்ததே யாகும்!**

இவ்வாறு *மரியாளைப்போல்* இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவர் **சொல்வதைக்** கேட்காமல், மற்ற பல காரியங்களில் தன்னை அலட்டிக்கொண்ட *மார்த்தாளை* இயேசு வெகுவாய் கடிந்து கொண்டார். இந்த *மரியாள்* செய்ததை இயேசு மெச்சிக் கொள்ளும் போது, ஜீவியத்திற்கு "**தேவையான – ஒன்றை மாத்திரமே**" அவள் பற்றிக் கொண்டாள் எனக்கூறினார் (லூக்கா 10:42). அன்று சாமுவேல் கூறியதுபோல "கர்த்தாவே சொல்லும், **உமது அடியான் கேட்கிறேன்**" என்ற மனப்பான்மையே இன்று நாம் யாவரும் பெற்றிருக்க வேண்டும்.

வேதாகமத்தின் முதல் பக்கத்தில் நாம் காண்பது என்ன? தேவன் பேசியபோதெல்லாம் ஏதாவது ஒரு செயல் நிறைவேறியதைக் காண்கிறோம்... ஒளி உண்டாயிற்று! ஜலத்திலிருந்து பூமி பிரிக்கப் பட்டது! மரங்களும், மீன்களும், மிருகங்களும் சிருஷ்டிக்கப் பட்டது...!!

**ஆம், ஏசாயா 55:10,11-ம் வசனங்கள் கூறுவதைப்போல் அவருடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள், தேவன் விரும்பியதை "நிறை வேற்றாமல்" வெறுமையாய் திரும்பியதில்லை!**

எதற்காக பேசினாரோ அதற்கான "காரியம் வாய்க்காமல்" இருந்ததும் இல்லை! என்றே காண்கிறோம். இந்த வசனத்தில் **1) நிறை வேற்றுவது** (accomplishing) **2)காரியம் வாய்ப்பது** (succeeding) என கூறப்பட்ட வார்த்தைகள், இவ்வுலகத்தில் உள்ள எல்லா ஜனங்களாலும் அதிகம் மதிப்பிடப்படும் வார்த்தைகளேயாகும்.

நாம் யாவருமே, நம் ஜீவியத்தில் ஒன்றை நிறைவேற்றுவதற்கும், யாதொரு காரியமாயிருந்தாலும் அது ஜெயமாய் வாய்க்கப்பண்ணப் படுவதற்கும் விரும்புகிறோம். ஆனால் இவ்வாறு ஜெயமாய் நிறைவேறு வதற்குரிய வழிகளைச் சோதித்தறிந்து கண்டுபிடிக்க நம்முடைய ஜீவிய காலமோ மிகவும் குறுகியதாய் இருக்கிறதே! அதுவும் குறிப்பாக "ஆவிக்குரிய விஷயங்களுக்கு" இவ்வித பரிசோதனைகளைப் பரிசீலித்து கண்டுபிடிப்பதற்கோ நம் காலம் போதாது என்பது திண்ணம்! ஏதோ சில வழிமுறைகள் மூலமாய் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய முயற்சித்து, சுமார் 20 வருடங்களுக்குப் பிறகு அந்த வழிமுறைகள் தேவனுடைய வழிகள் அல்ல என கண்டறிவதில் என்ன பிரயோஜனம்? இவ்வித காலவிரயத்திலிருந்து நம்மை இரட்சித்துக் கொள்ள ஒரே வழி "தேவன் பேசவிரும்பும் வார்த்தைகளை உன்னித்துக் கேட்பதேயாகும்". இவ்வாறு செய்வது ஒன்றே எப்போதும்

*ஜெயத்தையும், நிறைவேறுதலையும் கொண்டுவந்து தரும்!*

*தேவன் சொல்வதை கவனித்துக் கேட்கும் மனிதன் யாரோ, அவன் சொல்லுவதைக் கேட்கவே நானும் விரும்புகிறேன்.*

**ஏனெனில், நீண்ட பட்டங்களைப் பெற்ற வேதவல்லுனர்கள் மணிக்கணக்கில் எனக்குப் போதிப்பதைவிட, தேவனை கவனித்துக் கேட்கும் ஒரு மனிதன் ஐந்து நிமிடங்களில் எனக்கு அதிகமாய் போதித்துவிட முடியும்!**

*எப்படியெனில், பேராசிரியர் கமாலியேலோ அல்லது யூத சங்க சபையின் பிரதான நபரோ போதிப்பதைவிட, யோவான்ஸ்நானகன்* **"தேவனைப்பற்றிய அறிவை"** *ஜனங்களுக்கு அதிகமாய் போதித்துவிட முடியுமே, அதுபோல!*

*நீங்கள் தேவனை உன்னித்து கவனிப்பவர்களாக இருந்தால்.... கிறிஸ்தவ புத்தகங்களையும், பத்திரிக்கைகளையும் படித்துவிட்டோ அல்லது கேசட்டுகளைக் கேட்டுவிட்டோ "பிரசங்கிப்பவர்களாய்" நீங்கள் இருக்கமாட்டீர்கள்! தேவனை கவனித்துக் கேட்பவன்* **"வெளிப்பாடு பெற்றவனாய்"** *பேசுவானேயல்லாமல், கற்ற அறிவைக் கொண்டு பேசிட ஒருபோதும் துணியமாட்டான். இத்தகைய மனிதன் தான் வாசித்தவைகள் எவைகளோ, அவைகளை முதலாவது அனுபவப் படுத்திவிட்டு.... பின்பு, அதைத் தன் ஜீவியத்திலிருந்து பேசுவான்!*

*உங்கள் "தலையின் அறிவிலிருந்து" நீங்கள் போதித்தால், அவைகள் ஜனங்களின் "தலைக்குத்தான்" செல்லும்! ஆனால் உங்கள் இருதயத்திலிருந்தோ அல்லது உங்கள் ஜீவிய அனுபவத்திலிருந்தோ பிரசங்கிப்பவைகள், ஜனங்களின் இருதயத்திற்கு நேரடியாகச் சென்று அவர்களின் ஜீவியத்தையும் நிச்சயமாய் மாற்றிவிடும்! இதற்காக நீங்கள் உங்கள் செய்திகளை ஆயத்தம் செய்யவோ அல்லது அதைப்பற்றிய குறிப்புகளை எழுதவோ வேண்டாம் என்று இங்கு நான் கூறவில்லை! நீங்கள் அவ்வாறு குறிப்புகளை எழுதி ஆயத்தம்செய்வது உங்கள் ஞாபக சக்தியின் திறனைப் பொறுத்ததேயல்லாமல்.... நீங்கள் எவ்வளவு ஆவிக்குரியவர்கள் என்பதைப் பொறுத்தல்ல! நான் இங்கே வலியுறுத்த விரும்புவதெல்லாம், நீங்கள் எதைப் பேசினாலும் அவைகளை* **உங்கள் ஜீவியத்திலிருந்தும், உங்கள் இருதயத்திலிருந்துமே பேச வேண்டும்** *என்பதுதான்!*

*இன்று நாம் வாழும் இக்கொடிய காலத்தில், "சுதந்திர" இறையியல் கல்லூரிகள் என்றும் "சுவிசேஷக" இறையியல் கல்லூரிகள் என்றும் தோன்றியிருப்பதை நாம் காண்கிறோம். ஆனால் இந்த இரண்டிற்கும் அப்படி என்ன வித்தியாசம் இருக்கிறது? முதல் பகுதியில், ஒரு மூளை அறிவிலிருந்து இன்னொருவர் மூளை அறிவிற்குச் செல்லும் செய்திகள் இறையியல் சாஸ்திரப்படி தவறாகவும்; அடுத்த பகுதியில் அவைகள்*

*இறையியல் சாஸ்திரப்படி சரியாகவும் இருக்கிறது, அவ்வளவுதான்! ஆனால், ஆவிக்குரிய ரீதியாகச் சொல்ல வேண்டுமென்றால், சுதந்திர இறையியல் கல்லூரியைக் காட்டிலும் சுவிசேஷக இறையியல் கல்லூரி ஒன்றும் மேலானது அல்ல! ஏனென்றால், இந்த இரண்டு வேதகலாச் சாலைகளிலும் உள்ள விரிவுரையாளர்களும், மாணவர்களும்* **தொடர்ந்து பண ஆசை கொண்டவர்களாயும், தங்கள் இச்சைகளுக்கு அடிமைகளாயும்** *இன்னமும் இருந்து கொண்டிருக்கிறார்கள்!*

*இயேசுவோ, தன் சீஷர்களுக்கு இவ்விதமாய் கற்றுத்தரவேயில்லை. நாம் வேதசாஸ்திரங்களை அதிகம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் நம்மிடம் வரவில்லை. மாறாக, நம்மை அவருடைய குணாதிசயத்திற்கு ஒப்பாக உருவாக்கும்படியே வந்தார்! ஆகவேதான், அவர் தம் சீஷர்களுக்கு வேதசாஸ்திரத்தைப் போதித்ததைவிட குணாதிசயத்திற்கு அடுத்தவைகளையே தன் சீஷர்களுக்கு அதிகமாய் போதித்தார். உங்களைக் குறித்து என்ன? அவ்விதமே நீங்களும் "மாம்சத்தின் இச்சைகளையும், கண்களின் இச்சைகளையும், ஜீவனத்தின் பெருமைகளையும் எவ்வாறு ஜெயித்திட வேண்டும்?" என்று உங்கள் மந்தைக்கு நீங்கள் போதிக்கிறீர்களா?*

*இன்று நம் சபைகளில் ஏராளமான ஜனங்கள் "***தேவன் தங்களுக்கு என்ன பேசுவார்***" என கேட்பதற்கு, நம்மை ஆர்வத்துடன் நோக்கிப் பார்க்கிறார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுகிழமைகளிலும் இவ்வித பசி கொண்ட ஜனங்களுக்குப் பிரசங்கிப்பது ஒரு மாபெரும் பரிசுத்தமான பொறுப்பாகும்! பிரசங்கிக்கும் உங்கள் ஸ்தானத்தில் நான் இருந்தால், நான் அதிகமாய் பயந்திருப்பேன்! ஏனென்றால் ஜனங்களுக்கு நாம் சொல்லுபவைகளைக் குறித்து தேவனுக்குக் கணக்கு காட்ட வேண்டியவர்களாய் அல்லவோ நாம் இருக்கின்றோம்!*

> **நாம் பிரசங்கித்த ஒவ்வொரு செய்தியிலும்: நாம் என்ன பேசினோம்? எதற்காக பேசினோம்? எப்படி பேசினோம்? என்பதைக் குறித்து தேவனுக்கு ஒருநாள் நாம் நிச்சயமாய் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்!**

*அந்த அளவிற்கு உங்கள் பொறுப்பை நீங்கள் மிகவும் சீரியஸாய் எடுக்கத் துவங்கிவிட்டால், உங்கள் ஊழியம் நிச்சயமாய் சரியான திசைக்குத் திரும்பிவிடும்!*

*கடந்த 35 - வருட என் சொந்த ஊழியத்தை, நான் ஆண்டவருடைய வெளிச்சத்திற்கு முன்பாய் நியாயம் தீர்த்து வாழ்ந்திருக்கிறேன். நான் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்த பிறகு, ஆண்டவரிடம் சென்று, நான் பேசியவைகளில் ஏதாகிலும் தேவையற்ற விஷயங்கள் இருந்தனவா? நான் ஜனங்களின் நேரத்தை வீணாக்கினேனா? நான் என் சொந்த கனத்தைத் தேடினேனா? என்றெல்லாம் அவரிடம் நான்*

கேட்பதுண்டு. இவ்வாறு தேவனுக்கு முன்பாய் என்னை நிறுத்தியதி னிமித்தமே, இதுபோன்ற தீமைகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் என்னைக் கழுவிக்கொண்டது மாத்திரம் அல்லாமல், ஜனங்களுக்கு ‘போர் அடிப்பதிலிருந்தும்’ (boring), அவர்களின் தலைக்குப் பிரசங்கிப் பதிலிருந்தும் விடுதலை பெற்று தேறி வருகின்றேன்!

இவ்வாறாக, நீங்கள் ஒரு செய்தியைப் பிரசங்கித்தவுடன் அதைக் குறித்து தேவன் என்ன சொல்லுகிறார் என்பதை நீங்கள் கவனித்துக் கேட்கிறீர்களா? நீங்கள் செய்ததை இன்னும் நேர்த்தியாய் செய்திருக்க முடியுமா? என ஆண்டவரிடம் நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? உங்கள் பிரசங்கம் நன்றாக இருந்தது என மற்றவர்கள் சொல்லுவதில் எந்த ஒரு மேன்மையும் இல்லை! அதைக்குறித்து தேவன் என்ன எண்ணுகிறார்? அதுவே, மிக முக்கியமான கேள்வியாகும்!

உங்களில் அநேகருடைய சபைகளில், ஒவ்வொரு ஞாயிற்று கிழமைகளிலும் ஏராளமான ஜனங்கள் நீங்கள் பேசுவதைக் கேட்கும்படி கூடுகிறார்கள்! அவர்களுடைய ஜீவியத்தை நித்தியத்திற்கு சார முடையதாய் நீங்கள் மாற்றியிருக்கிறீர்களா? அவர்கள் பூமிக்குரிய வைகளுக்கு கொடுக்கும் மதிப்பிலிருந்து விடுதலை பெற்று, பரலோகத்திற்குரியவைகளை மதிக்கும்படியாய் அவர்கள் சிந்தைகளை மாற்றியிருக்கிறீர்களா? இதுபோன்ற கேள்விகளை உங்களுக்கு நீங்களே அடிக்கடி கேட்டுப் பார்க்க வேண்டும்.

குறிப்பாக, நாம் சில மிக முக்கியமான தீர்மானத்தை எடுக்கும் சமயங்களில், அதிக கவனமாய் தேவனை உன்னித்து கேட்பவர்களாய் இருக்க வேண்டும்.

தேவன் நம்மிடம் பல வழிகளில் பேசுகிறார். பிரதானமாய்:

1) தன்னுடைய **வேதவசனத்தின் மூலமாகவே** அவர் பேசுகின்றார். ஒரு காரியம் தெளிவாய் தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்டி ருக்கும் பட்சத்தில், அது ஏற்கனவே வெளியரங்கமான விடையாய் இருக்கிறபடியால், தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ள பிரத்தியேகமாய் நாம் ஜெபிக்கத் தேவையில்லை!

2) நம்முடைய **சூழ்நிலைகள் மூலமாகவும்** தேவன் பேசுகிறார். எல்லா வாசல்களுக்கும் உரிய திறவுகோலை உடையவராகவே நம் ஆண்டவர் இருக்கிறார் (வெளி.1:18). ஒரு வாசலை அவர் திறந்தால், அதை ஒருவனும் மூடவே முடியாது! ஒரு வாசலை அவர் மூடினால், ஒருவனும் அதைத் திறக்கவும் முடியாது! (வெளி.3:8). ஆகவே நாம் ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்குள் பிரவேசித்திட தேவன் விரும்புகிறாரா இல்லையா என்பதற்கு, நம்முடைய சூழ்நிலைகள் அநேக சமயங்களில் **சமிக்ஞை – விளக்காய்** அமைகிறது. ஆகவே, தேவன் திறக்காத ஒரு

வாசலை நாம் மோதித் திறக்க அவசியமே இல்லை! ஒரு வாசல் மூடியிருப்பதைக் காணும்போது, நாம் அதற்காய் ஜெபிக்க வேண்டியது உண்மைதான். ஆனால் அவ்வாறு திரும்பத் திரும்ப ஜெபித்த பின்பும் ஒரு வாசல் தொடர்ந்து மூடியே இருக்குமென்றால்.... நாம் அந்த வாசல் வழியாய் பிரவேசித்திட தேவன் விரும்பவில்லை என்பதாய் இருக்கக்கூடும். அவ்வேளையில், அது மூடிய வாசல்தானா? அல்லது அந்த வாசல் திறக்கும்படி தொடர்ச்சியாய் ஜெபித்திட தேவன் விரும்பு கிறாரா? என்றும் நாம் தேவனிடம் கேட்க வேண்டும் (லூக்கா 11:5-9).

3) தேவபக்தியில் **முதிர்ச்சி பெற்ற சகோதரர்களின் புத்திமதிகளின் மூலமாகவும்** தேவன் பேசுகின்றார். இதுபோன்ற சகோதரர்கள் அநேக அனுபவங்களைக் கடந்து வந்திருக்கிறபடியால், நாம் அறியாத பாதாள குழிகளை நமக்கு அவர்கள் எச்சரித்திட முடியும். குருட்டுத்தனமாய் அவர்கள் சொல்லுவதையெல்லாம் கீழ்படிய அவசியம் இல்லைதான் .... ஆனால், தேவபக்தியான அவர்களுடைய ஆலோசனைகள் நமக்கு உதவி செய்திட முடியும் என்றே இங்கு நான் கூறுகிறேன்.

4) நாம் **மற்ற விசுவாசிகளோடு** ஐக்கியமாய் இருக்கும் வேளை களிலும் தேவன் நம்மோடு பேசுகின்றார். இதிலிருந்து, அவருடைய வார்த்தைகளில் பெறும் வெளிப்பாடுகூட கிறிஸ்துவின் சரீரமான அவயவங்களைச் சார்ந்திருப்பதின் மூலமாய் உண்டாகிறது என்பதை ஆண்டவர் நமக்குப் போதிக்கிறார்!

5) நாம் ஒரு **உபத்திரவத்திற்குள் பிரவேசிக்கும்போதும்,** அல்லது நாம் சுகவீனமாய் இருக்கும்போதும் தேவன் சில முக்கியமான காரியங்களை நம்மோடு பேசுகின்றார்.

6) **பிறருடைய தோல்விகள் மூலமாயும்** தேவன் நம்மை எச்சரித்துப் பேசுகிறார். உதாரணமாய், தேவனுடைய ஊழியர்களில் சிலர் பாவத்தில் விழுந்துவிட்டார்கள் என கேள்விப்படும்போது, "நாம் யாவருமே பெலவீனமானவர்கள்" என்பதை மனதில் கொண்ட வர்களாய், அவர்களின் தோல்வியிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்? என தேவனிடம் கேட்பதே மிகவும் நல்லது. மேலும் இதுபோன்ற தோல்விகளிலிருந்து நம்மை எவ்வாறு காத்துக் கொள்ள வேண்டுமென்றும் அவரிடம் நாம் கேட்க வேண்டும்!

7) எங்கோ சம்பவித்த தீமைகளை அல்லது விபத்துக்களை கேள்விப்படுவதின் மூலமும் தேவன் நம்மோடு பேசமுடியும். தன் காலத்திலிருந்த ஜனங்கள், "பிலாத்து சில யூதர்களைக் கொன்று போட்டான்" என்ற செய்தியையும் "சீலோவாம் கோபுரம் விழுந்து ஜனங்கள் மரித்தார்கள்" என்ற விபத்தையும் கேள்விப்பட்ட சமயம், **அவர்கள் "மனந்திரும்ப வேண்டும்"** என்றே இயேசு குறிப்பிட்டார்.

ஏனென்றால், இதுபோன்ற விபத்துகள், யாராயிருந்தாலும் அவர்களுக்கும் நேரிடமுடியும் என்றே எச்சரித்தார் (லூக்கா 13:1-4).

ஒரு சூழ்நிலையில் தேவன் என்ன பேசுகிறார்? என்பதை அறிவதற்காக, சும்மா வேதாகமத்தைத் திறந்து, கண்ணில்படும் முதல் வசனத்தை வாசிப்பது குறித்து “எச்சரிக்கை செய்திடவும்” நான் விரும்புகிறேன்.

ஒரு குறிப்பிட்ட பெண்ணை திருமணம் செய்ய ஆர்வம்கொண்டு, அதற்கு “**சம்மதம் தரும்படியான**” ஒரு வசனத்தைக் காண நீங்கள் வேதாகமத்தைத் திறந்து பார்க்கக்கூடும். நீங்கள் விரும்பித் தேடிய வசனம் கிடைக்காவிடில், அப்படியொரு வசனம் வரும்வரை நீங்கள் வேதாகமத்தைத் திறந்து பார்த்துக்கொண்டேயிருப்பீர்கள்! இவ்வாறாக, உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ள முடியும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்!

மேற்கண்ட ரீதியில் தேவசித்தம் கண்டுபிடிக்க முயற்சித்த ஒரு மனிதனைக் குறித்து நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன், சடாரென்று வேதத்தைத் திறந்து தன் கண்ணில்பட்ட முதல் வசனத்தை வாசித்தான், “அவன் புறப்பட்டுப்போய் நான்று கொண்டு செத்தான்!” என்பதே அந்த முதல் வசனம்!(மத்தேயு 27:5). அட ... சே, என அலுத்துக் கொண்டு மறுபடியும் வேதத்தை திறந்து வாசித்தான், “நீயும் போய் அந்தப்படியே செய்!” (லூக்கா 10:33) என கண்டதும், இதென்னடா ரோதனை என மூன்றாம் முறையாக வேதத்தை திறந்து வாசித்தான், “நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்” என வாசித்தான்! (யோவான் 13:27). அப்பப்பா.... அத்தோடு இவ்விதம் தேவசித்தம் அறியமுயன்ற செயலை அவன் நிரந்தரமாய் கைவிட்டுவிட்டான்!

சில நெருக்கமான சூழ்நிலைகளில், ஆண்டவர் நம்மைத் தைரியப் படுத்தும்படி, தற்செயலாய் வேதத்தை திறந்ததின் மூலம் பார்த்த சில வசனங்களால் நம்மை அவர் தேற்றிடக்கூடும்! அவ்வாறு நாம் “**தேற்றப்படும்படி**” வேதத்தைத் திறந்து சில வசனங்களை நாம் பெற்றிருந் தால், அது சரிதான். ஆனால் நாம் “**நடத்தப்படுவதற்கு**” (GUIDANCE) இவ்வாறு வேதத்தை திறந்து பார்ப்பது நிச்சயமாய் தவறானதேயாகும்!

அன்பார்ந்த சகோதரர்களே, **தேவனை உன்னித்துக் கேட்கும் பழக்கத்தில்** வளரும்படி உங்கள் யாவரையும் நான் உற்சாகப்படுத்து கிறேன். ஏனெனில், நீங்கள் வளர்ச்சியடைவதற்கு “இது ஒன்றே அதி முக்கியம் நிறைந்த சிறந்த பழக்கமாகும்!”.

# 5

## “கிறிஸ்துவின் சரீரத்தில் சமநிலை கற்றவன்”

ஒரு ஆவிக்குரிய தலைவன், தான் பெற்ற ஊழியம் சமநிலை அற்றதென்பதை உணர்ந்திருப்பான். ஆகவே, ஊழியத்தில் தன்னுடைய சமநிலையை கிறிஸ்துவின் சரீரமாகிய மற்ற அவயவங்களிடமிருந்து பெற்று அதை நிறைவு செய்வான்!

கிறிஸ்துவின் சரீரத்தை “ஒரு மருத்துவமனைக்கு” ஒப்பிட்டுக் கூறலாம். ஒரு மனிதன் வியாதிப்பட்டு மருத்துவமனைக்குச் செல்லும் போது, அவனுக்கு சேவை செய்வதற்கென பல மருத்துவத்துறைகள் செயல்படுகின்றன. ஊசி மருந்தோ அல்லது சரீர-அப்பியாசம் தரும் சிகிச்சையோ அல்லது அறுவை சிகிச்சையோ அவனுக்குத் தேவைப் படலாம். ஒருவேளை அவன் கண் மருத்துவரையோ அல்லது காது மருத்துவரையோ சந்திக்க வேண்டிய அவசியம் இருக்கலாம். இவ்வாறு, **மருத்துவமனையில் பல்வேறு துறைகள் சேர்ந்து செயல்படுகின்றன.** கண் மருத்துவர் தன்னுடைய எல்லா நேரமும் ஜனங்களுடைய கண்களையே கவனித்துக் கொண்டிருப்பாரேயல்லாமல் வேறு எதிலும் கவனம் செலுத்தமாட்டார்! அதற்குக் காரணம், சரீரத்தில் உள்ள மற்ற அவயவங்கள் அவ்வளவு முக்கியமானதல்ல என அவர் நினைக்கின்றார் என்றல்ல.... மாறாக, அவருடைய திறமை “கண் மருத்துவம்” மாத்திரமே என்பதுதான்!

இதைப்போலவே, கிறிஸ்துவின் சரீரத்திலும், ஒவ்வொரு விசுவாசிக்கும் வித்தியாசமான வரங்களும், அழைப்பும் இருக்கிறது. ஒவ்வொருவரும் தங்கள் பகுதியில் சமநிலையற்றவர்களாகவே இருக்கிறார்கள். இந்த பூமியில் முழு சமநிலை பெற்று நடந்த ஒரே ஒருவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மட்டுமே! அவரைத் தவிர “நம்மில் மிகச் சிறந்தவர்” என எண்ணப்படுபவர்கூட சமநிலையற்றவர் தான்! ஆகவே, மருத்துவமனையில் அந்தந்த துறையினரோடு சேர்ந்து செயல்படுவது போல.... ஆண்டவருடைய “மருத்துவமனையிலும்” மற்ற சகோதர சகோதரிகளோடு நாம் இணைந்து செயல்படும்போது தான், நம்மில் சமநிலையை காணமுடியும். **ஆகவே ஆண்டவருடைய இந்த**

**மருத்துவமனையில், “தனித்தன்மைக்கு” இடமேயில்லை.** ஓர் நல்ல மருத்துவமனையில், ஜனங்களின் பல்வேறு தேவைகளை சந்திப்பதற்கு பல துறைகளை (Departments) ஏற்படுத்தி வைத்திருப்பார்கள். அதுபோலவே ஜனங்களுக்கு ஊழியம் செய்யும்படி கிறிஸ்துவின் சரீரத்திலும் பல்வேறு ஊழியங்களும், பல்வேறு ஆவிக்குரிய வரங்களும் இருக்கின்றன. ஆவியின் வரங்கள் அனைத்தையும் பெற்ற ஒரு சபையும், ஒரு குழுவும் இல்லை! ஆனால், முழு கிறிஸ்துவின் சரீரத்தையும் தொகையிடும்போது, அனைத்து வரங்களும் அதில் இருப்பதை நாம் காணமுடியும்.

ஆகவே, **அவரது சரீரத்தில்** நமக்கென்று சொந்தமான விசேஷித்த அழைப்பு என்ன என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்!

இந்த உலகம் ஆவிக்குரிய வியாதி கொண்டவர்களால் நிறைந் திருக்கிறது. இருப்பினும், இவர்களில் ஒரு நபருடைய நிலைகூட “நம்பிக்கையற்றது” என நாம் கூறிட முடியாது. ஆம், ஒவ்வொருவரும் ஆண்டவரிடமிருந்து சம்பூர்ண சுகத்தைப் பெற்றுவிட முடியும்! இதுவே நாம் அறிவித்துவரும் சுவிசேஷத்தின் நற்செய்தியாகும்! மிக மோசமான பாவியும், அதிக மாறுபாடான ஜீவியமும் கொண்ட நபர்கூட, ஆண்டவருடைய மருத்துவமனையில் சுகம் பெற்றுவிட முடியும். ஓர் நல்ல மருத்துவமனை “சீரியஸான வியாதி” கொண்ட **ஒரு மனிதனைக் கூட** திருப்பி அனுப்பாது! தரம் குறைந்த மருத்துவமனையில் அப்படிச் செய்வார்கள்.... ஏனெனில், மோசமான கேஸ்களை கையாளுவதற்குப் போதுமான உபகரணங்கள் அவர்களிடம் இருப்பதில்லை. ஆனால், ஓர் நல்ல சபையானது,

> **இவ்வுலகில் மகா மோசமான பாவியைப் பார்த்துக்கூட அவனுடைய ‘கேஸிற்கு’ இனி நம்பிக்கையில்லை எனக் கூறாது. அவன் தனக்குரிய வைத்தியத்தை ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில், மிக மோசமான பாவியையும் ஓர் மாபெரும் பரிசுத்தவானாய் அந்த நல்ல சபை அவனை மாற்றிவிட முடியும்!**

சபையை “மானிட சரீரத்திற்கும்” ஒப்பிட்டுக் கூறலாம். மானிட சரீரத்தில், ஒவ்வொரு அவயவத்திற்கும் ஓர் வேலையுண்டு. அந்தந்த அவயவங்கள் தன் தன் வேலைகளை நிறைவேற்றி முடிப்பதற்கே கவனம் கொண்டிருக்கும். அதேசமயத்தில், வேறு வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் மற்ற அவயவங்களையும் இந்த அவயவம் மெச்சிக் கொள்ளும்! மதிப்பு தரும்! அதோடு சேர்ந்து ஒத்துழைக்கவும் செய்யும்! இதைப்போலவே, கிறிஸ்துவின் சரீரத்திலும், நாம் மற்ற ஊழியங் களோடு சேர்ந்து பணி செய்திட வேண்டும்!

ஆவியின் வரங்கள் கிறிஸ்துவின் சரீரங்களில் எவ்வாறு செயல்படு கின்றன என்பதை பரிசுத்த ஆவியானவர், கண்களையும், காதுகளையும்,

கரங்களையும், கால்களையும் மாதிரியாக வைத்து விளக்கியிருப்பதை 1 கொரிந்தியர் 12-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோமே!

என்னுடைய பிரசங்கத்தைக் கேட்கும் நீங்கள், வேதாகமத்தில் உள்ள சில குறிப்பிட்ட பகுதிகளை நான் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதைக் கேட்டிருக்க முடியும். ஏனென்றால் "அதுவே" கர்த்தர் எனக்குத் தந்த பாரமாகும். இவ்வாறு, கர்த்தர் எந்த ஊழியத்திற்காக என்னை அழைத்தாரோ அந்த ஊழியத்தை நான் ஜாக்கிரதையாய் பற்றிக் கொண்டிருக்கிறேன். ஏனெனில் இந்த ஊழியத்தில் மாத்திரமே நான் ஆண்டவருக்கு பிரயோஜனமுள்ளவனாய் இருந்திட முடியும் என்பதை நான் அறிந்திருக்கிறேன். இதைத் தவிர நான் வேறு எதையாகிலும் செய்ய முயன்றால், ஆண்டவர் எனக்கென்று வைத்திருக்கும் திட்டத்தை நான் நிச்சயமாய் சிதைத்துவிடுவேன்! இதனிமித்தம், நான் மற்ற ஊழியங்களுக்கு எதிராளி என்பது பொருளல்ல. மாறாக, நான் மற்ற ஊழியங்களுக்கு மிகுந்த மதிப்பையே தருகிறேன்!

**கைகள் செய்திடும் வேலைகளுக்கு நம் வயிறு அதிக மதிப்பைக் கொடுத்த போதிலும், கைகள் செய்யும் அதே வேலைகளை தானும் செய்திட ஒருபோதும் முயற்சிப்பதில்லையே!**

உதாரணமாக, தட்டில் உள்ள உணவுகளைத் தானாகவே எடுத்துப் புசிக்க வயிறு ஒருபோதும் முயற்சிப்பதில்லை. மாறாக, அந்த வேலையை கைகள் செய்யும்படி அனுமதித்துவிட்டு, கை அள்ளி அனுப்பிய உணவுகளை "ஜீரணிக்கும்" தன் சொந்த வேலையை மாத்திரமே செய்யத் தொடங்குகிறது! கிறிஸ்துவின் சரீரத்திலும், நாம் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஒத்துழைக்க வேண்டுமென்பதை இந்த உதாரணம் மிகவும் அருமையாகவே சித்தரிக்கிறது.

இவ்வாறு "சரீரத்தில் உள்ள" பல்வேறு ஊழியங்களைப்பற்றிய இந்த சத்தியத்தை அநேக விசுவாசிகள் இன்னமும் காணவேயில்லை! அவ்விதமே, நீங்களும் இந்த சத்தியத்தைத் தொடர்ந்து காணமுடியாத நிலையில் இருந்தால், தேவன் நிறைவேற்றி முடித்திட விரும்பிய அனைத்தையும் உங்களால் ஒருக்காலும் நிறைவேற்றி முடித்துவிடவே முடியாது!

**நம்மை தேவன் எதற்காக அழைத்திருக்கிறார்?** என்பதில் நம் எல்லோருடைய மனமும் தெளிவாய் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்! நம்முடைய இருதயங்களில் ஆண்டவர் தந்திருக்கும் பாரமே, அவருடைய சரீரத்தில் நாம் பெற்றிருக்கும் ஊழியத்திற்குரிய ஓர் அடையாளமாகும்!

என்னைப் பொறுத்தவரையில், "அவருடைய சரீரத்தில்" என்னுடைய ஊழியம் என்ன என்பதையும், அந்த ஊழியத்தில்

எவைகளை நான் வலியுறுத்த தேவன் விரும்புகிறார்? என்பதையும் தெள்ளத்தெளிவாய் பல ஆண்டுகளாய் அறிந்திருக்கிறேன்! இந்த ‘தெளிவு’ என் ஜீவியத்தில் மாபெரும் இளைப்பாறுதலையும், விடுதலையையும் தந்திருக்கிறது. யார் என்ன வேண்டுமானாலும் கூறி என்னை “சமநிலையற்றவன்” என புறக்கணித்தாலும், நான் பெற்ற ஊழியத்திலிருந்து ஒருவரும் என்னை அசைத்திடவே முடியாது!

பழைய ஏற்பாட்டில் ஒரு தீர்க்கதரிசிகூட தன் ஊழியத்தில் சமநிலை கொண்டோராய் இருந்ததில்லை. மனுஷர் மேன்மையை விரும்பும் நாசூக்கான பிரசங்கிகளே தாங்கள் “சமநிலை கொண்டவர்கள் போல்” காண்பித்திட முயற்சிக்கிறார்கள். ஆனால் உண்மையில், வேதாகமத்திலிருந்த தீர்க்கதரிசிகள் அனைவருமே சமநிலை அற்றவர்களாகத்தான் இருந்தனர். அவர்கள் **“ஒரே காரியத்தைத்”** திரும்பத் திரும்ப தங்கள் சார்பில் வலியுறுத்திக் கொண்டேயிருந்தார்கள். ஏனெனில் அவர்களுடைய சந்ததியில் இஸ்ரவேலின் அல்லது யூதாவின் தேவை ‘அதுவாகவே’ இருந்தது. மாத்திரமல்லாமல், அவைகளைத்தான் தேவனும் அவர்களின் இருதயங்களில் பாரமாய் வைத்தார்!

நம்முடைய வரமும், அழைப்பும் என்னவென்பதை கர்த்தருக்கு ஊழியம் செய்ய ஆரம்பித்த நாட்களிலேயே நாம் யாவரும் அறிந்து கொள்ள முடியும் என நான் இங்கு கூறவில்லை. நான் மறுபடியும் பிறந்த பிறகு, என்னுடைய ஊழியம் என்ன என்பதை தெளிவாய் அறிந்து கொள்ள 15 -ஆண்டுகள் எனக்குப் பிடித்தது. உங்களுக்கோ, இவ்வளவு நீண்ட ஆண்டுகள் அவசியம் இல்லாதிருக்கலாம். மிகக் குறைந்த வருடங்களில் கூட உங்கள் ஊழியம் என்ன என்பதை நீங்கள் கண்டறியக் கூடும்! இதற்குரிய கால இடைவெளி நிர்ணயத்தை தேவனிடம் ஒப்புக்கொடுத்துவிடுவதே நல்லது. ஆனால், கிறிஸ்துவின் சரீரத்தில், **உங்களுக்கென்று ஓர் தெளிவான விசேஷித்த ஊழியம்** இருக்கிறது என்பதையும் அதை வேறு ஒருவரும் நிறைவேற்றிட முடியாது என்பதையும் நாம் திட்டமாய் அறிந்திருப்போமாக! அதே சமயம், நீங்கள் பெறும் ஊழியம் ஒருக்காலும் சமநிலை கொண்டதாயும் இருக்காது! ஆம், நீங்கள் யாராயிருந்தாலும் அந்த ஊழியம் சமநிலை அற்றதாகவேயிருக்கும்!

**கிறிஸ்துவின் சரீரத்தில் வித்தியாசமான ஊழியங்களைப் பெற்றவர்களோடு ஐக்கியம் கொண்டு, சேர்ந்து ஊழியம் செய்யும்போதுதான் “உங்கள் சமநிலையை” நீங்கள் கண்டடைய முடியும்! இவ்வாறு மற்றவர்களைச் சார்ந்து கொள்ளும்படி செய்வதே....தேவன் நம்மை தாழ்மைப்படுத்துவதற்குரிய வழியாய் இருக்கிறது! கர்த்தருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக!**

நாம் எல்லோருமே, நம் ஜீவியத்தின் சில பகுதிகளில் வலிமை

கொண்டவர்களாயும் சில பகுதிகளில் பெலவீனமுடையவர்களாயும் இருக்கிறோம். எப்படியெனில், ஒரு மாணவன் ஆங்கிலத்தில் சிறந்தவனாய் விளங்கி, கணக்குப் பாடத்தில் பெலவீனமாய் இருப்பதைப் போல! ஆனால் நாம் எதில் பெலவீனமாய் இருக்கிறோம் என்பதை அறிந்தவர்களாய், அந்த பகுதியில் நம்மை ஸ்திரப்படுத்திக் கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும். உங்கள் சபை சுவிசேஷ ஊழியத்தை வலியுறுத்துவதில் பெலனுடையதாய் இருந்து கொண்டு, பரிசுத்தத்தை வலியுறுத்துவதில் பெலவீனமாய் இருந்தால், இவ்வித நிலையில் உங்கள் சபை எந்த ஊழியத்திற்குத் தன்னை அதிகமாய் ஒப்புக் கொடுக்க வேண்டும் என்பதை நீங்களே அறிந்துகொள்ள முடியும்!

உங்களுக்கு வரும் **பெயர் பிரஸ்தாபத்தை** வைத்து உங்கள் ஊழியத்தின் வெற்றியை அவசரப்பட்டு கணித்துவிடாதீர்கள். இவ்வாறு "எல்லாமனுஷரும் உங்களைக் குறித்து **புகழ்ச்சியாய்** பேசும்போது உங்களுக்கு ஐயோ" என்றல்லவா இயேசு கூறினார். இவ்வித பிரபல்யமே (Popularity) கள்ளத்தீர்க்கதரிசிகளைக் கண்டுகொள்வதற்குரிய அடையாளம் என்றும் இயேசு குறிப்பிட்டாரே! (லூக்கா **6:26**). ஆகவே "ஓர் பிரபல்யமான பிரசங்கியாய்" நீங்கள் இருப்பின், நீங்களேகூட ஓர் கள்ளத்தீர்க்கதரிசியாய் இருந்திடக்கூடும்!?

**இதற்கு நேர்மாறாகத் தன்னுடைய சீஷர்களுக்கு இயேசு கூறியபோது "உங்களை ஜனங்கள் எல்லாரும் தீமையாய் பேசும்போது சந்தோஷப்பட்டு களிகூருங்கள்" என்றே கூறினார். ஏனெனில், 'அதுவே' ஓர் உண்மையான தீர்க்கதரிசியை கண்டுகொள்ளும் அடையாளம் எனவும் இயேசு குறிப்பிட்டார் (லூக்கா 6:22,23).**

மேற்கண்ட வசனங்களில் இயேசு கூறியவைகளை நீங்கள் மெய்யாகவே விசுவாசிக்கிறீர்களா?

இஸ்ரவேலின் சரித்திரத்திலும், சபையின் சரித்திரத்திலும் ஒவ்வொரு உண்மையான தீர்க்கதரிசியும் "விசித்திர ரூபமாகவே" கருதப் பட்டு, அவர்களின் காலத்தில் வாழ்ந்த மார்க்கத் தலைவர்களால் துரத்தி வேட்டையாடப்பட்டு, வெறுக்கப்பட்டு, பொய்யாய் குற்றம் சாட்டப் பட்டார்கள் என்பதை நாம் இங்கு நினைவுகூறுவோமாக!

இந்த நிந்தையின் வரிசையில் - பழைய ஏற்பாட்டின் எலியா, எரேமியாவாக இருக்கட்டும் அல்லது முதலாம் நூற்றாண்டு யோவான்ஸ்நானகனாகவோ, பவுலாகவோ இருக்கட்டும் அல்லது இன்றைய நம்முடைய நாகரீக காலத்தில் வாழ்ந்த ஜான்வெஸ்லி, வாட்ச்மென் நீயாகவோ இருக்கட்டும் .... ஒருவர்கூட இந்த நிந்தையின் வரிசையில் விதிவிலக்காய் இருக்கவில்லை!

ஆகவேதான் நாம் **பூமியில்** பெறும் பிரபல்யத்தை வைத்து நம்

ஊழியத்தின் **‘நித்திய ஜெயத்தை’** அளந்து பார்த்திட ஒருபோதும் துணியாதிருக்கக்கடவோம்!

அதுபோலவே நம்முடைய ஊழியத்தின் வெற்றியை “நம் கூட்டங்களில் எத்தனை பேர் கரங்களை உயர்த்தி ஒப்புக்கொடுத்தார்கள் அல்லது எத்தனைபேருக்கு நாம் பிரசங்கித்தோம்” போன்ற எண்ணிக்கை கணக்கீட்டை வைத்தும் (Statistics) அளந்து பார்த்திட துணியாதிருப்போமாக!

இவ்வித எண்ணிக்கை அளவின்படி பார்த்தால், இயேசுவின் ஊழியம் “ஓர் படுதோல்வி” என்றே நாம் கூறவேண்டியதாயிருக்கும்! ஏனென்றால் அவருடைய ஊழியத்தின் முடிவில், தன் பிதாவினிடத்தில் சமர்ப்பிக்க 11-புருஷர்கள் மாத்திரமே அவருக்கு இருந்தார்கள்! (யோவான் 17). ஆனால் அவருடைய ஊழியத்தின் வெற்றி, அந்த 11 - **சீஷர்களின் ‘அபாரமான தரத்தில்தான்’** நாம் காணமுடிகிறது. இவர்களே, இன்றுள்ள “11-கோடி அரைகுறை இருதயமும், பண இச்சையும், ஒத்தவேஷமும், லௌகீக மயக்கமும் நிறைந்த விசுவாசிகளைக் காட்டிலும்” தேவனுக்கு அதிக மதிப்புடையவர்களாயும், மாபெரும் செயலை அவருக்கென சாதித்தவர்களாயும் விளங்கினர்!

என் முழு ஜீவியப்பிரயாசத்தினால், இந்த முதல் 11-அப்போஸ்தலர் களுக்கு ஒப்பான ஜனங்களை என்னால் உருவாக்க முடியுமென்றால், அதுவே என் ஊழியத்தின் நிறைவான வெற்றியாய் இருக்குமென்றே நான் கருதுகிறேன். ஆனால் உண்மை என்னவென்றால், அதுபோன்ற இரண்டு அல்லது மூன்று ஜனங்களை உருவாக்குவதுகூட கடினமாய் இருப்பதையே நான் கண்டுவருகிறேன்! “இயேசுவைத் தங்கள் முழு இருதயத்தோடும் நேசிக்காமல், அவரை விசுவாசிக்கிறோம்” எனக் கூறிக்கொண்டு உலகத்தோடு ஒத்துவாழும் ஒரு கூட்டத்தைக் கூட்டுவது மிக எளிதேயாகும்!

**கடந்த 20 நூற்றாண்டுகால கிறிஸ்தவத்தில், தேவன் துவக்கிய ஒவ்வொரு இயக்கமும் தன் இரண்டாவது சந்ததிக்குள் நுழைந்தவுடன் அந்த இயக்கத் திற்குள் “வீழ்ச்சியின் போக்கு” ஏற்படுவதையே நாம் கண்டிருக்கிறோம். அந்த இயக்கத்தை தோற்றுவிப்பதற்கு ஊன்றுகோலாய் இருந்தவர் காலத்திலிருந்த வைராக்கியமும், அனலும் தொடர்ந்து காணப்பட வில்லையே? அது ஏன்?!**

அதற்கு ஒரே காரணம், இந்த இரண்டாவது தலைமுறையினர் **“எண்ணிக்கையின் தொகையில்”** ஈர்க்கப்பட்டதேயாகும். ஜனங்க ளுடைய எண்ணிக்கை அதிகரித்துவிட்டால், அதுவே தேவன் தங்களை ஆசீர்வதித்ததின் நிரூபணம் என இவர்கள் எண்ணத் தொடங்கி விட்டார்கள்!! அவ்வளவுதான்.

*ஆனால் உண்மை யாதெனில், இன்றைய உலகில் அதிவேகமாய் எண்ணிக்கையில் வளர்ந்துவரும் குழுவினர்கள்* **'தனி குரு' வணக்கத்தை** *ஏற்படுத்தி வினோத கொள்கையைத் தோற்றுவிக்கும் புறமதஸ்தர் களேயாவர்! இவையாவும் எதை நிரூபிக்கிறது? "எண்ணிக்கையின் வளர்ச்சி" - தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு நிரூபணம் அல்ல என்பது தான்!*

**தேவன் நம்மை அழைத்திருப்பதெல்லாம், கிறிஸ்துவின் சரீரத்தில் அவர் நமக்குத் தந்த ஊழியத்தில் மிகுந்த கவனம் செலுத்துவதேயாகும்.**

*....அதே வேளையில், வித்தியாசமான ஊழியங்களைப் பெற்றிருக்கும் மற்றவர்களோடும் நாம் ஒத்துழைத்து ஊழியம் செய்யும்படிக்கே அழைத்திருக்கிறார். இவ்வாறு, கிறிஸ்துவின் சரீரமாகிய குழுவில் (Team) ஒரு பங்காய் மாத்திரமே நாம் இருக்கிறபடியால், நம்முடைய ஊழியத்தின் வளர்ச்சியை குறிப்பாய் கணக்கிட்டுக் கூறுவது முடியாததேயாகும்.*

*நாம் உறுதி செய்ய வேண்டியதெல்லாம்,* **நாம் நிறைவேற்றும்படி** *தேவன் நமக்குத் தந்த பணியில் உண்மையுள்ளவர்களாய் இருக்கி றோமா? என்பதுதான்!*

# 6

## “அடங்கியிருந்து நொறுங்கியவன்”

ஒரு ஆவிக்குரிய தலைவன், எக்காலத்தும் ஓர் நொறுங்குண்ட மனுஷனாகவேயிருப்பான்!

நம் ஜீவியத்தின் துவக்கத்திலிருந்தே, **நமக்குமேல் ஓர் அதிகாரத்தைத்** தேவன் நியமித்து, அந்த அதிகாரத்திற்கு அடங்கியிருப்பதன் மூலமாய் தேவன் நம்மை நொறுக்குகிறார்! இதுவே, நம்மை நொறுக்குவதற்கு தேவன் தெரிந்து கொண்ட வழியாகும். இயேசுவுக்கு ஓர் ஊழியத்தை தேவன் தருவதற்கு முன்பாக, இயேசுவும் கூட யோசேப்பு - மரியாளுடைய ஆளுகையின் கீழ் முப்பது வருடங்கள் அடங்கியிருக்க வேண்டியதாயிருந்தது!

இந்த “**அடங்கியிருக்கும் பிரமாணம்**” கிறிஸ்துவின் சரீரத்தில் ஓர் முக்கியமான பிரமாணமாகும். இந்தப் பிரமாணமும், ஒரு மானிட சரீரம் நடைமுறையில் செயலாற்றுவதற்கு ஒப்பானதேயாகும்!

உதாரணமாய், நம் வலது கை “வலது புயத்தின் குழுவில்” உள்ள ஒரு பகுதியேயாகும். ஆகவே இந்த வலது கை, வலது புயத்தின் “ஆளுகைக்கு” (தலைமைக்கு) அடங்கியே செயல்படுகிறது. இருப்பினும், இடது கையோ வலது புயத்திற்கல்ல... இடது புயத்திற்கே அடங்கி கீழ்ப்படிந்திருக்கிறது. கிறிஸ்துவின் சரீரத்திலும் இவ்வாறாகவே, ஒரு ஸ்தல சபையிலோ அல்லது ஒரு ஊழியக் குழுவிலோ தேவன் சில அவயவங்களை மற்ற அவயவங்களைக் காட்டிலும் ஒன்றுக்கொன்று அதிக நெருக்கமாய் இணைத்து வைக்கிறார்.

தேவன் நம்மை இரண்டு வழிகளில் நடத்துவதுண்டு. 1) தனியாக 2) இணைந்த குழுவாக.

வலது புயமும் சேர்ந்து அசையாமலே, **வலது கை மாத்திரம்** அசையும்படி, தலை கட்டளை பிறப்பிக்க முடியும்! இதுவே, தலையின் கீழ் நாம் “**தனித்து**” நடத்தப்படுதலாகும். நம் தனிப்பட்ட ஜீவியமாகிய திருமணம், வேலை, வாழும் இருப்பிடம்.... போன்றவைகளுக்குத் தலையாகிய கிறிஸ்துவிடமிருந்து நாம் **தனித்தே** நடத்தப்படல்

வேண்டும்! இருப்பினும், இக்காரியங்களில் சரீரத்தின் மற்ற அவயவங்களிலிருந்து நாம் 'ஆலோசனைகள்' பெறலாம். ஆனால், "**நடத்துதலையோ**" நாம் ஆண்டவரிடமிருந்தே 'நேரடியாய்' பெற்றிட வேண்டும்.

ஆனால், மேலே தூக்கும்படி வலதுபுயத்திற்குத் தலை சொல்லும் போது, **அந்த புயத்தோடு வலது கையும்,** தலையின் மூலம் எந்த நடத்துதலும் அல்லது கட்டளையும் இல்லாமலே மேலே தூக்குகிறது! இதுவே "**குழுவோடு இணைந்து**" நடத்தப்படுவதாகும். இச்சமயத்தில், வலது கை தன் நடத்துதலைத் தலையிலிருந்து பெறாததால், "நான் கையை உயர்த்திட மாட்டேன்" எனக் கூறிட முடியாது!

ஆகவே குழுவாய் இணைந்திருக்கும் விஷயங்களில், தனித்து நடத்தப்பட வேண்டிய அவசியம் அங்கு இல்லை.

> **நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு குறிப்பிட்ட தொகுதியோடு இணைந்திருந்தால், சில விஷயங்களில் உங்களுக்கு மேல் உள்ள தலைவர்களை தேவன் நடத்தும்போது, அதை அப்படியே நீங்களும் பின்பற்றித்தான் நடந்திட வேண்டும்!**

இங்கே நான் குறிப்பிடுவது, சரீரத்தின் ஓர் குறிப்பிட்ட தொகுதியில் நீங்கள் இணைக்கப்பட்டிருக்கும் "கூட்டு விஷயங்களுக்கு" மாத்திரமே பொருந்தும்! தனிப்பட்ட விஷயங்களுக்கு அல்ல! தேவன் உங்களை ஓர் குழுவில் இணையச் செய்திருக்கிறார் என்பதை உறுதி செய்து கொண்டால், நீங்கள் அந்த குழுவில் உள்ள உங்கள் தலைவர்கள் நடத்துகின்ற போக்கில்தான் செயல்பட வேண்டும்.

இதற்குரிய ஓர் நல்ல உதாரணத்தை அப்போஸ்தலர் 16:9-ல் நாம் காண்கிறோம். தேவன் இணைத்த "பவுலும் அவனோடு சேர்ந்த குழுவும்" துரோவா பட்டணத்திற்கு வந்தார்கள். அச்சமயம் பவுலுக்கு ஏற்பட்ட ஓர் தரிசனத்தில் "மக்கெதோனியா தேசத்திற்கு பவுல் வந்து உதவி செய்ய வேண்டும்" என ஒரு மனிதன் பவுலை வேண்டிக் கொண்டான். இவ்வாறு பவுல் மாத்திரமே இந்த தரிசனத்தைப் பார்த்திருந்த போதும், அவனுடைய குழுவினர் அனைவருமே மக்கெதோனியாவுக்குச் சென்று பிரசங்கிக்க வேண்டிய **அழைப்பை** நிச்சயித்துக் கொண்டார்கள் என 10-ம் வசனத்தில் நாம் காண்கிறோம். இவ்வாறு தேவனிடமிருந்து தனிப்பட்ட எந்த அழைப்பும் பெறாமலே எவ்வாறு இவ்விதம் நிச்சயித்துக் கொண்டார்கள்? ஏனெனில், அந்தக் குழுவின் தலைவனாகிய பவுலின் மீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையேயாகும். ஆகவே குழுவாய் செயல்பட வேண்டிய விஷயங்களில், அந்தக் குழுவில் உள்ள ஒவ்வொருவரையும் தேவன் தனியாய் நடத்த வேண்டியதில்லை! அவர், அக்குழுவின் தலைவனை மாத்திரமே நடத்துவார்!

*உங்கள் தலைவனிடத்தில் உங்களுக்கு* **நம்பிக்கை இல்லையென்றால்** *.... அந்தக் குழுவிலிருந்து அல்லது அந்த சபையிலிருந்து நீங்கள் உடனே விலகிவிட வேண்டும்! இதற்கு மாறாக, அந்த சபையில் அல்லது அந்த கிறிஸ்தவ ஸ்தாபனத்தில் நீங்கள்* **இருந்துகொண்டே முரட்டாட்டமோ அல்லது குழப்பமோ** *ஒருக்காலும் ஏற்படுத்தவே கூடாது! அவ்விதம் ஒரு குழுவில் இருந்து கொண்டே, (அக்குழுவின் தலைமை தவறாகவே இருந்தாலும்) அத்தலைமைக்கு விரோதமாய் முரட்டாட்டம் செய்தால், தேவன் உங்களை எக்காலத்தும் ஆசீர்வதித்திடவே மாட்டார். மாறாக, அந்தக் குழுவை விட்டுவிட்டு, வேறு குழுவோடு சேர்ந்துவிடுங்கள்! இதுவே நீங்கள் செய்திட வேண்டிய நன்மையான செயலாகும்!*

*இருப்பினும்,* **மனுஷர்களால் நியமிக்கப்பட்ட** *“மதகுரு அதிகாரங் களுக்கும்”* **தேவனால் நியமிக்கப்பட்ட** *“ஆவிக்குரிய அதிகாரங்களுக்கும்” இடையில் உள்ள வித்தியாசத்தையும் நாம் அறிந்திருக்க வேண்டும். இன்று அநேக கிறிஸ்தவர்கள் தலைமைப் பொறுப்பில் இருப்பதற்கு காரணம், அவர்களுடைய மெய்பக்தியின் அடிப்படையில் தேவனால் நியமிக்கப்பட்டதால் அல்ல! அல்லது, அப்போஸ்தலனாகிய பவுலைப் போன்று ஆவிக்குரிய பிள்ளைகளுக்கும், சபைகளுக்கும் தகப்பனாய் இருந்து பாடுபட்டதினிமித்தமும் அல்ல! ஆம்,* **“தேர்தல் அடிப்படையில்”** *மானிட அதிகாரங்களால் பெற்றதே இவர்களது நியமனம்! இந்த அடிப்படையில்தான், குறிப்பிட்ட குருசேகரங்களுக்கு* (Parish) *திருமண்டல பிஷப்புகளால் குருமார்கள் அனுப்பப்படுகின்றனர்! அதே போல், ஒரு குறிப்பிட்ட சபைக்கு தலைமை சூப்பிரண்டென்டால்* (General Superindent) *ஒரு பாஸ்டர் அனுப்பப்படுகிறார். இவர்கள் யாவரும் நிச்சயமாய் ஆவிக்குரிய அதிகாரங்கள் அல்ல.... மாறாக “மதகுரு அதிகாரங்களைக்” கொண்டவர்களேயாவர்.*

**ஆவிக்குரிய அதிகாரத்திற்குரியவர்களை தேவன்தான் நியமிக்கிறார்.** *தேவ நியமனம் பெற்ற இவர்கள், மதகுரு அதிகாரங்களைப் பெற்றவர்கள் பிறரிடம் தங்களைப் “புகுத்துவதைப்” போல் ஒருபோதும்* **தங்களைப் பிறரிடம் புகுத்தத் துணியவே மாட்டார்கள்.** *தாங்கள் தேவனிட மிருந்து பெற்ற அதிகாரத்தை, மற்றவர்கள் தாங்களாகவே மனமுவந்து ஏற்றுக்கொள்ளும்வரை இவர்கள் காத்திருப்பார்கள்! இவர்கள் மேல் ‘தேவனுடைய அபிஷேகம்’ தங்கியிருப்பதை விசுவாசிகள் காண்கின்ற படியால், அவர்களுக்கு மனமுவந்து அடங்கியிருப்பார்கள்! ஆம், ஓர் ஆவிக்குரிய தலைவன் பிறருடைய நம்பிக்கையை சம்பாதித்தவனாகவே திகழ்வான்!*

> **ஒரு தேவபக்தியான மனுஷனுக்கு அடங்கியிருப்பதால், அநேகம் மதியீனத்தி லிருந்து நாம் பாதுகாக்கப்படுவது மாத்திரமல்லாமல் அவரிடமிருந்து திரட்சியான ஞானத்தையும் கற்றுக்கொள்ள முடியும்!**

அவர், தன் ஜீவியத்தில் ஏராளமான அபாயங்களைச் சந்தித்திருக்கிறபடியால், நாம் ஜாக்கிரதையாய் இருக்கும்படி அது போன்ற அபாயங்களை 'முன்கூட்டியே' நமக்கு எச்சரிக்கக்கூடிய திராணி கொண்டவராயும் இருப்பார். ஆகவே, பிள்ளைகள் பெற்றோர் களுக்கு அடங்கியிருப்பதைப் போலவே, ஆவிக்குரிய அதிகாரத்திற்கு அடங்கியிருப்பதும் மிகுந்த பாதுகாப்பு நிறைந்ததாகும்!

"இளைஞர்கள் மூப்பருக்கு கீழ்ப்படிந்து இருக்கவேண்டுமென" கூறப்பட்டதற்கு காரணம், "பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நின்று, தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபையைத் தருகிறார்" என்பதினிமித்தமேயாகும் என 1பேதுரு 5:5-ல் வாசிக்கிறோம். தேவனிடமிருந்து ஆவிக்குரிய அதிகாரம் பெற்றுவிடுவதற்குரிய **மாபெரும் ரகசியம்** இந்த வசனத்தில் அடங்கியிருக்கிறது. எனக்குத் தெரிந்த அநேகம் அருமையான சகோதரர்களுக்கு தேவன் ஆவிக்குரிய அதிகாரத்தை ஒருபோதும் கொடுக்க முடியாதிருந்த நிலைக்கு ஒரே ஒரு காரணம்: இவர்கள் தங்கள் முழு ஜீவியத்திலும் ஒருவருக்குகூட அடங்கியிருக்கக் கற்றுக்கொள்ளாத பரிதாபமேயாகும்! ஆகவே இதனிமித்தமாய் **அவர்களுடைய வலிமையான சுயம்** எக்காலத்தும் உடைக்கப்படாமலே இருந்துவிட்டன!

"நொறுங்காத" மனிதனின் கைகளில் ஆளுகையின் அதிகாரம் இருப்பது பெருத்த அபாயமேயாகும். நீங்கள் முதலாவது நொறுங்காத பட்சத்தில், ஜனங்கள் மீது அதிகாரம் செலுத்த முயற்சித்தால், நீங்கள் அவர்களையும் .... நாளடைவில், உங்களையும் அழித்துக் கொள்வீர்கள்! தேவன் நம்மில் யாருக்காவது ஆவிக்குரிய அதிகாரத்தை நம்பி ஒப்படைக்க வேண்டுமென்றால், அவர் முதலாவது நம்முடைய பெருமையின் வலிமையை தகர்ப்பது மிகுந்த அவசியமாயிருக்கிறது.

ஒரு வீட்டில்கூட, நாம் தேவபக்தியின் வழியில் ஒரு கணவ னாகவோ அல்லது ஒரு தகப்பனாகவோ இருந்து அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு கூட, அவன் நொறுங்குண்டவனாகவே இருந்திட வேண்டும்!

**உங்கள் மனைவியும், பிள்ளைகளும் உங்களுக்கு அடங்கியிருக்க விரும்பினால், முதலாவது நீங்கள் ஆவிக்குரிய அதிகாரங்களுக்கு அடங்கி யிருக்க கற்றுக்கொண்டிருக்க வேண்டும்!**

அப்போது மாத்திரமே, நீங்கள் வீட்டில் செயல்படுத்தும் ஒவ்வொன்றிலும் தேவன் துணையாக நின்றிடுவார்!

இங்கே என்னுடைய சொந்த அனுபவத்தை சுருக்கமாய் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய 20 வயதிலிருந்து 30 வயது வரையுள்ள இடைப்பட்ட காலங்களில், என் ஊழியத்தின்மீது பொறாமை கொண்ட

மூப்பர்களால் கடைசி இடத்திற்கு தள்ளப்பட்டு, ஜனங்களுக்கு முன்பாக சிறுமைப்படுத்தப்பட்டிருக்கிறேன். இவ்வித சிறுமைப்படுத்தப்பட்ட அனுபவம் ஒரு சபையில் மாத்திரமல்லாமல், நான் சென்ற அடுத்த சபைகளிலும் நிகழ்ந்தது. ஆனால் இதுபோன்ற எல்லா சமயங்களிலும், ஆண்டவர் என்னிடம் “உன் வாயைத் திறவாமல், கேள்வி ஏதும் கேட்காமல், அந்த மூப்பர்களுக்கு அமைதியாக அடங்கியிரு!” என்றே கூறினார். நானும் அவ்விதமே செய்தேன்! அதுமாத்திரமல்ல, அவர்களுடைய சபைகளில் நான் இருந்தபோதும், அவர்களுடைய சபையைவிட்டு வெளியே வந்த பிறகும் கூட நான் ‘அவர்களோடு ஓர் இணக்கமான உறவைக்’ காத்துக் கொண்டேன். இந்த வருடங்களில், எதிர்காலத்திற்கு தேவன் எனக்கு என்ன ஊழியம் வைத்திருக்கிறார் என்பதைக்கூட நான் அறியாதிருந்தேன். ஆனால், தேவனோ இவ்வித இந்த நீண்ட வருடங்களில் என்னை நொறுக்கி.... ஆவிக்குரிய அதிகாரத்தை அப்பியாசப்படுத்தும் ஸ்தானத்திற்கே என்னை ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்! மீண்டும் மீண்டும் நொறுக்கப்படும் அனுபவத்திற்குள் நடத்தி, மற்றவர்கள் எனக்குச் செய்த எல்லா செயலுக்கும் பின்னால், அவரே முழு ஆளுகையும் கொண்டிருப்பதை எனக்கு அந்த வருடங்களில் போதித்தார். இதன் விளைவாய், பல வருடங்களுக்குப் பிறகு, ஜனங்கள் மீது அப்பியாசப்படுத்தும் **ஆவிக்குரிய அதிகாரத்தை** தேவன் தந்தபோது.... நானோ, அந்த அதிகாரத்தை ஒரு சர்வாதிகாரியைப்போல் ஒருபோதும் பயன்படுத்தாமல், மிகுந்த மன உருக்கத்தோடு பயன்படுத்தும் இடத்தைக் கண்டடைந்தேன்!

என்னை நொறுக்கும் பணியை தேவன் நிறைவேற்றி முடித்து விட்டார் என நான் கூறிட முடியாது! சமீப வருடங்களில்கூட, நான் இதுவரை அனுபவித்திராத புதிதும் நூதனமுமான நெருக்கங்களுக்குள் தேவன் என்னை நடத்திச் சென்றிருக்கிறார். ஆனால், இதுபோன்ற எல்லா நேரங்களிலும் தேவன் என் வாழ்க்கையில் கொண்டிருந்த நோக்கமோ மாறாததொன்றாகவே இருக்கிறது! அது என்னவெனில்: “தேவன் தன்னுடைய ஜீவனையும், தன்னுடைய அதிகாரத்தையும் எனக்கு அதிகமாய் தரும் பொருட்டே ‘இன்னமும் அதிகமாய்’ என்னை நொறுக்குகிறார்” என்பதே அவருடைய நோக்கமாகும்.

தேவன் நம் சுய வலிமையையும், பெருமையையும் உடைப்பதற்கு கையாளும் மற்றொரு வழி, நம் தலைவர்கள் மூலமாய் நம்மைக் கண்டித்துத் திருத்துவதேயாகும்!

**கிட்டத்தட்ட எல்லா விசுவாசிகளுமே, இவ்வித கண்டித்து திருத்தப்படுதலை ஏற்றுக்கொள்ள அதிக சிரமப்படுகிறார்கள்!**

இரண்டு வயது குழந்தைகூட, தான் கண்டிக்கப்படுவதை அதுவும்

குறிப்பாக மற்றவர்களுக்கு முன் வெளிப்படையாக கண்டிக்கப் படுவதை ‘ஏற்றுக்கொள்வதற்கு’ எளிதான காரியமாய் அவர்களுக்கு இருப்பதில்லை!

இவ்விதமாய் எல்லோருக்கும் முன் நீங்கள் வெளிப்படையாய் திருத்தப்பட்டதை எப்போது கடைசியாய் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டீர்கள்? குறைந்தபட்சம் உங்கள் வாழ்க்கையில் ஒரு தடவையாவது அவ்விதம் மகிழ்ச்சியாய் ஏற்றுக்கொண்டதுண்டா? அப்படியில்லையென்றால், உங்களிடம் ஆவிக்குரிய அதிகாரம் ஏன் காணப்படவில்லை என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை!

கர்த்தருக்குள், உங்களுக்கு மேலாயிருக்கும் யாரோ ஒருவர் உங்களைத் திருத்தியபோது, **மிகக் கடினமான முறையில்** அவ்வாறு செய்துவிட்டார் என்பதெல்லாம் ஒரு பொருட்டே அல்ல! அந்த வேளையிலும், உங்கள் தலைவர் இவ்வாறு உங்களைத் திருத்துவதற்கு அனுமதித்த தேவனுடைய பலத்த கரத்திற்குள் நீங்கள் இன்னமும் தாழ்த்தி அடங்கித்தான் இருக்கவேண்டும்!

**அது உங்கள் தவறேயில்லாமல், அந்த திருத்துதல் உங்களுக்குத் தேவை யற்றதாய் இருந்தாலும்கூட, நீங்கள் அதற்கு அடங்கியே இருக்கவேண்டும்!**

இதைப்போலவே, இயேசுவும்கூட பொது ஜனங்கள் மத்தியில் சிறுமைப்படுத்தப்பட்டு அவருடைய சத்துருக்களால் அநேக காரியங்களைக் குறித்து பொய்யாய் குற்றம் சாட்டப்பட்டார்! ஆனால் இயேசுவோ அதுகுறித்து எந்த குறையும் சொல்லாதவராகவே இருந்தார். இப்போது, இதே குணாதிசயத்தை நாமும் பின்பற்றும் படியான மாதிரியை நமக்கு வைத்துச் சென்றிருக்கிறார்.

இருப்பினும், உங்களை குறைகூறும்படி “ஒரு சத்துருவை” தேவன் இவ்வாறு அனுமதித்தபோதும் .... அவர் கூறிய குறைபாட்டில் ஏதேனும் உண்மை இருக்கிறதா? என உங்களை நீங்களே கேட்டுப்பாருங்கள். இதுவே நாம் செய்திட வேண்டிய சரியான செயலாகும். அந்த மனிதர் உங்களுக்கு இப்போது செய்ததெல்லாம் “ஓர் இலவச பரிசோதனையே” ஆகும்! இவ்வாறு செய்த பரிசோதனையில், அவர் எவ்விதத்தில் உங்களை “ஸ்கேன்” (Scan) செய்தார் என்பதைக் குறித்தோ அல்லது என்ன நோக்கத்திற்காக உங்களை ஸ்கேன் செய்தார் என்பதைக் குறித்தோ சற்றேனும்கூட மனக்கிலேசம் அடையாதீர்கள்.... இவை யாவும் ஒரு பொருட்டே அல்ல! உங்களைப் பார்த்து நீங்கள் கேட்டுப் பார்க்க வேண்டியதெல்லாம் “கிறிஸ்துவின் சுபாவத்திற்கு முரணான என் குணாதிசயத்தை இந்த ஸ்கேன் காட்டுகிறதா?” என கண்டறிவது மாத்திரமேயாகும்.

என்னுடைய ஊழியத்திலும், ஜனங்களிடமிருந்து ஏராளமான

குறை சொற்களை நான் பெற்றிருக்கிறேன். எந்த உண்மையான கர்த்தருடைய ஊழியர்களும் இவ்வாறே குறை சொல்லப்பட்டு தவறாய் குற்றம் சாட்டப்படுவார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவேதான் எந்த குறை சொல்லுதலைக் குறித்தும் நான் சலனம் அடைவதேயில்லை! இதுபோன்ற சமயங்களில் நான் ஆண்டவரிடம் கேட்பதெல்லாம் “அவர்கள் சொன்ன குறை சொல்லில், ஏதேனும் உண்மை இருக்கிறதா?” என்பது மாத்திரமே!

பொதுவாய் நம்முடைய நண்பர்களைவிட நம்முடைய சத்துருக்கள், நம்மைப் பற்றிய உண்மையை அதிகமாய் சொல்லி விடுவார்கள்! ஆகவேதான் எல்லா குறைசொற்களையும் தவறு என நாம் புறக்கணித்துவிடக்கூடாது!

என் முகத்தில், ஏதோ கருப்பு கறை ஒட்டியிருந்து அதை நான் பார்க்க முடியாத பட்சத்தில், ஒரு சத்துரு எனக்கு அதை சுட்டிக் காட்டினால்.... நான் அவனுக்கு நன்றியுள்ளவனாகவே இருக்க வேண்டும்! இப்போது நான் சென்று அந்தக் கறையை கழுவிக்கொள்ள முடியுமே. அதை அவன் தீமையான நோக்கத்தோடோ அல்லது ‘என்னை இழிவுபடுத்துவதற்காகவோ’ கூறியிருந்தாலும் அது எனக்குப் பொருட்டல்ல! எப்படியிருந்தாலும், என்னைக் கழுவிக்கொள்ளவே அவன் உதவி செய்திருக்கிறான்.

இதுவே பேதுருவுக்கும், யூதாஸ்காரியோத்திற்குமுள்ள மிகப் பெரிய வித்தியாசமாகும். பேதுரு மதியீனமாய் ஆண்டவரைப் பார்த்து “சிலுவை உமக்கு வேண்டாம்” எனக் கூறியபோது “எனக்குப் பின்னாக போ சாத்தானே” என ஆண்டவர் அவனைக் கடுமையாய் கடிந்து கொண்டார். இந்தப் பூமியில் எந்த மனிதனை கடிந்துகொண்டதைக் காட்டிலும் இதுவே இயேசுவின் மிகக் கடினமான கடிந்து கொள்ளுதலாய் இருந்தது. பரிசேயர்களைக்கூட “விரியன்பாம்புக்குட்டிகள்” என மாத்திரமே இயேசு அழைத்தார். ஆனால் பேதுருவையோ “**சாத்தான்**” என்றே கூறிவிட்டார்! இவ்வித கடினமான கடிந்துகொள்ளுதலை, தனக்கு மிக நெருக்கமானவர்களுக்கென்றே இயேசு வைத்து வைத்திருக்கிறார்! ஆம், தன்னை அதிகமாய் நேசிக்கிறவர்களையே, அவர் **அதிகமாய்** கடிந்துகொள்கிறார் (வெளி.3:19).

இதன் பிறகு அநேக சீஷர்கள் ஆண்டவருடைய போதகத்தால் மனம் புண்பட்டு, அவரை விட்டு விலகிச் சென்று கொண்டிருந்தபோது, ஆண்டவர் தன்னுடைய சீஷர்களைப் பார்த்து “நீங்களும் போக மனதாய் இருக்கிறீர்களோ?” எனக் கேட்டார். அப்போது பதிலளித்த ஒரே நபர் இந்த பேதுருதான்! அவன் கூறினான், “ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில்

உண்டே" என்றான் (யோவான் 6:60, 66-68). இங்கு பேதுரு கேட்ட நித்திய ஜீவ வசனங்கள் எவைகள்? "எனக்குப் பின்னாக போ சாத்தானே" என்ற இயேசுவின் கடிந்துகொள்ளுதலே அவனுக்கு நித்திய ஜீவ வசனங்களாய் இருந்தது!

**இவ்வாறு நம்மைத் திருத்தும் வார்த்தைகளை, நித்திய ஜீவனுக்குள் நடத்துகிற வார்த்தைகளாய் நாம் காண்கிறோமா? தன்னைத் திருத்திய வார்த்தைகளைப் பேதுரு அவ்விதமே கண்டான்.... அந்த வார்த்தைகள், அவனை தேவ மனுஷனாய் உருவாக்கியது!**

இன்னொரு சந்தர்ப்பத்தில் இதே பேதுரு, ஆண்டவருடைய திருத்துதலை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டதையும் நாம் காண்கிறோம். கடைசி இராப்போஜனத்தில் பேதுரு ஆண்டவரைப் பார்த்து "எல்லா சீஷர்களும் ஆண்டவரை மறுதலித்தாலும், நான் மறுதலிக்கமாட்டேன்" எனக் கூறினான். அதற்கு உடனே ஆண்டவர், "அடுத்த பன்னிரண்டு மணி நேரத்திற்குள் பேதுரு தன்னை மூன்று முறை மறுதலிப்பான்" என பதில் கூறினார். இவ்வித பதிலை கேட்ட பின்பும், பேதுருவோ சற்றேனும் **மனம் புண்படவில்லை!** இத்தகைய மனிதனைத் தான் ஆண்டவர் தெரிந்துகொண்டு முடிவில் தன்னுடைய **பிரதான அப்போஸ்தலனாகவும்,** பெந்தெகொஸ்தே நாளில் தன்னுடைய **ஸ்தானாதிபதியாகவும்** நிறுத்தினார்!

இவ்வாறு தான் திருத்தப்பட்டதற்கு பேதுரு தன்னைத்தானே தாழ்த்தியபடியால், தேவன் அவனை மனப்பூர்வமாய் உயர்த்தினார்! இவ்விதமாய் தன் சொந்த அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட பின்பே, பேதுரு இப்போது நம் யாவரையும் "நம்மை நாமே எக்காலத்தும் **தாழ்த்தும்படி**" புத்தி கூறுகிறார் (1பேதுரு 5:5,6).

**நம்மை நாமே தாழ்த்துகின்றபடியால் நாம் எதையும் இழந்து போவதேயில்லை.... மாறாக, ஒரு நாளில் தேவன் நம்மை உயர்த்துவார்!**

இவ்விதமாய் பேதுரு திருத்தப்பட்டபோது கொண்ட மனப்பாங்கிற்கும், யூதாஸ்காரியோத்து திருத்தப்பட்டபோது கொண்ட மனப்பாங்கிற்கும் உள்ள வித்தியாசத்தை இப்போது பாருங்கள். ஒரு ஸ்திரீ இயேசுவின் மீது விலையேறப்பெற்ற நளதத்தை ஊற்றியபோது, "இப்படி பணத்தை விரயம் செய்வதற்குப் பதிலாய் தரித்திரர்களுக்கு கொடுத்திருக்கலாம்" என யூதாஸ்காரியோத்து கூறினான் (யோவான் 12:5; 10-13). அதற்கு இயேசு யூதாஸ்காரியோத்தைப் பார்த்து "இந்த ஸ்திரீயை தொந்தரவு செய்ய வேண்டாம், அவள் எனக்கு நல்லதுதானே செய்திருக்கிறாள்" என மிக மிக மென்மையாகக் கடிந்து பேசினார். ஆனால் யூதாஸோ உடனே **மனம் புண்பட்டுவிட்டான்.** இதன் விளைவாய் அடுத்த 14-வது வசனத்தில் யூதாஸ்காரியோத்து "**உடனே** பிரதான

ஆசாரியரிடத்திற்கு போய் அவரைக் காட்டிக் கொடுப்பதற்கு சம்மதித்தான்” என வாசிக்கிறோம் (மத்தேயு 26:14). ஆம், யூதாஸ் மனம் புண்பட்டான்.... ஏனெனில், இயேசு அவனை எல்லோருக்கும் முன்பாக ‘மென்மையாய் கடிந்து திருத்தினார்!’ அவ்வளவுதான்.

இயேசு யூதாஸ்காரியோத்தை அப்படி என்ன திருத்திவிட்டார்? “அந்த ஸ்திரீயின் செயலை அவன் மதிப்பிட்டுச் சொன்னது தவறு” என மாத்திரமே திருத்தினார். ஆனால், அதுகூட அவனை மனம் புண்படச் செய்துவிட்டது. **நீங்கள் நொறுங்கியிராத பட்சத்தில், சிறுகாரியம்கூட உங்களை மனம் புண்படச் செய்துவிடும்!**

ஆனால், இவ்விதம் யூதாஸ் பிரதிபலித்ததின் நித்திய விளைவைப் பாருங்கள்! பேதுரு பிரதிபலித்ததின், **நித்திய விளைவையும்** பாருங்கள்! இந்த இருவருமே திருத்தப்படுவதின் மூலமாய் சோதிக்கப் பட்டார்கள்.... ஒருவன் தோற்றான்! வேறொருவன் தேறிவிட்டான்!! இன்று நாமும், இதே வழியில்தான் சோதிக்கப்படுகிறோம்.

ஜனங்களுக்கு முன்பாய் திருத்தப்படும் செயல் நம்மை மனம் புண்படச் செய்தால், நாம் “மனுஷர்களின் கனத்தைத் தேடுகிறோம்” என்பதையே அது நிரூபிக்கிறது. காரியம் அப்படியிருந்தால், நம்மிட முள்ள **சுய-கனத்தை** இப்போதே கண்டறிந்து நம்மைச் சுத்திகரித்துக் கொள்வது மிகவும் நல்லது! “நாம் எவ்வளவாய் மனுஷர்களுடைய அபிப்பிராயத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறோம்” என்பதை நமக்கு காட்டுவதற்கென்றே, தேவன் இவ்வித சூழ்நிலைகளை அனுமதித் திருப்பார். அதன் விளைவு? ‘இப்போது’ நம்மை அக்கொடிய சுபாவத்தி லிருந்து சுத்திகரித்துக் கொண்டு விடுதலை அடைந்திட முடியுமே!

ஆகவே ஆண்டவர் நம்மைத் தம்முடைய ஆவியின் மூலமாய் நேரடியாகவோ அல்லது வேறு யார் மூலமாகவோ கண்டித்து திருத்தினால், அதுபோன்ற எல்லா நேரங்களிலும் “**பேதுருவின் மனப்பாங்கையே**” நாம் கொண்டிருக்கக்கடவோம்! இதுவே நாம் எல்லோரும் நடந்து வரவேண்டிய நித்திய ஜீவபாதையாகும். நாம் மாத்திரம் “நம்மை நாமே தாழ்த்திவிட்டால்” தேவனிடத்திலிருந்து நாம் கிருபையைப் பெறுவது மாத்திரமல்லாமல்.... ஏற்றகாலத்தில் அவர் நம்மை உயர்த்தியும் விடுவார்!

> **நொறுங்காத ஜனங்கள் “தனித்து விடப்பட்ட” ஜனங்கள்! ஆம், தனித்து விடப்பட்ட தலைவர்கள்! தனித்து விடப்பட்ட விசுவாசிகள்! இவர்கள், ஒருவருக்குக்கூட ஒருக்காலும் அடங்கியிருக்க மாட்டார்கள்.**

இவர்கள் எங்கே செல்ல விரும்புகிறார்களோ அங்கே செல்வார்கள். இவர்கள் எதைச் செய்ய விரும்புகிறார்களோ அதைச் செய்வார்கள். இதுபோன்ற நொறுங்காத விசுவாசிகள், **தங்களுக்குக்**

*கீழ்ப்படிந்து....* **தாங்கள்** *சொல்லும் ஒவ்வொன்றையும் ஏற்றுக் கொள்வோரிடம் மாத்திரமே சேர்ந்து செயல்படுவார்கள்! இதுபோன்ற விசுவாசிகளே, இன்று ஏராளமாய் இருக்கிறார்கள். இவர்கள், ஒரு வண்ணத்துப்பூச்சி ஒரு பூவிலிருந்து மற்றொரு பூவிற்குச் செல்லுவதைப் போல்.... ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்கும், ஒரு ஸ்தாபனத்திலிருந்து மற்றொரு ஸ்தாபனத்திற்கும் தாவித் தாவி செல்லுவார்கள்! இவ்விதமாய் தங்கள் ஜீவியத்தை வீணாக்கி.... யாதொன்றையும் நிறைவேற்றிட மாட்டார்கள். எவ்வாறு காயீன், தன்னை தேவன் திருத்தியதை ஏற்றுக்கொள்ள மறுத்து "பூமியில் நிலையற்று அலைகிறவனாய்" மாறினானோ, அதைப்போலவே இவர்களும் இருப்பார்கள் (ஆதியாகமம் 4:12).*

இதுபோன்று *"தனிமையில் அலையும் நபர்களுக்கு தேவன் ஒருக்காலும் ஆவிக்குரிய அதிகாரத்தை ஒப்புக்கொடுப்பதேயில்லை!" ஏனெனில், இன்று அவர் தனித்தனியான விசுவாசிகளின் குழுவை அல்ல, "ஓர் சரீரத்தையே" அவர் கட்டிக் கொண்டிருக்கிறார்!*

# 7

## “பிறர்மீது பொறுப்பாயிருப்பவன்”

ஒரு ஆவிக்குரிய தலைவன், தன் மந்தையில் உள்ள ஒவ்வொரு வருக்காகவும் தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவனாக இருக்கிறபடியால், மந்தையிலுள்ள ஆத்துமாக்களை விழிப்புடன் கண்காணிப்பான் (எபி.13:17).

இந்தியாவில் எங்கள் சபையில் இருக்கும் உடன் ஊழியர்கள், என்னைத் தங்களுடைய மூத்த சகோதரனாய் ஏற்றுக்கொண்டதனி மித்தம் “நான் அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு பொறுப்பெடுத்துக் கொள்வேன்” என அவர்களிடம் கூறியிருக்கிறேன். ஆகவே என் பிள்ளைகளிடம் வீட்டில் எவ்வாறு நான் நடந்து கொள்வேனோ, அதேபோலவே அவர்களுக்கு எவைகள் நன்மையானவைகளோ, அவைகளைத் தயங்காமல் கூறுகிறேன். அது அவர்களுடைய மனதிற்கு கஷ்டமானதாயிருந்தாலும் என்னுடைய பொறுப்பை நான் தொடர்ந்து செவ்வையாய் செய்துகொண்டு வருகிறேன். இவ்வாறு, ஒவ்வொரு பாஸ்டரும், மூப்பரும் தங்கள் பொறுப்பிற்குக் கீழ் உள்ள ஜனங்களி னிமித்தம் தேவனுக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும்!

வீட்டில் உள்ள பிள்ளைகளுக்கு, பூமிக்குரிய தகப்பன்மார்களைத் தேவன் தருவதைப்போலவே, **தன்னுடைய பிள்ளைகளுக்கும்** ஆவிக்குரிய தலைவர்களைத் தேவன் தருகிறார்! நான் நான்கு புத்திரர்களுக்குத் தகப்பன். என் பிள்ளைகள் என்னோடு வீட்டில் இருந்த காலங்களில், எத்தனையோ விஷயங்களைக் குறித்த காரியங்களில் அவர்களை வழி நடத்தி, அவர்களுக்குப் புத்தியும் சொல்லியிருக்கிறேன்.

> **என் பிள்ளைகளும் எனக்கு அடங்கியிருந்து, எனக்குக் கீழ்ப்படிந்திருக்கி றார்கள். இந்த “அவர்களின் கீழ்ப்படிதலே” எத்தனையோ அபாயங்களி லிருந்து அவர்களைப் பாதுகாத்துக் கொண்டது!**

இப்போது அவர்கள் வளர்ந்து பெரியவர்களான பின்பும்கூட, நான் அவர்களுக்கு அவ்வப்போது புத்தி சொல்லத்தான் செய்கிறேன்... ஏனெனில், நான் அவர்களுடைய தகப்பன்! இதேபோலவே, தேவன் நம்

*இருதயங்களில் ஒப்புக்கொடுத்தவர்களுக்கு* **ஆவிக்குரிய தகப்பன் மார்களாய்** *நாம் இருந்திட வேண்டும்.*

*அவர்களுக்கு ஓர் தகப்பனாய் இருப்பதற்கு மனப்பூர்வமாய் நீங்கள் பொறுப்பேற்கும்போது மாத்திரமே, தேவன் தன்னுடைய தீர்க்கதரிசன வார்த்தைகளை உங்கள் மந்தையை போஷிக்கும்படி உங்களுக்குத் தந்தருளுவார்!*

**ஆம், உங்கள் மந்தைக்குத் தேவையான வார்த்தையை தேவன் தருவதற்கு முன்பாக, நீங்கள் அவர்களை முதலாவது 'உங்கள் இருதயத்தில்' தேவனுக்கு முன்பாக சுமந்திருக்க வேண்டும்!**

*இவ்விதமாய் பவுல் தன் இருதயத்தில் ஜனங்களைச் சுமந்து அவர்களுக்காக இடைவிடாமல் ஜெபித்ததினிமித்தமே, ஒவ்வொரு சபைக்கும் தேவையான வார்த்தையை தேவன் பவுலுக்குத் தந்தார்! (பிலி.1:7). உங்கள் மந்தையினிமித்தம், இதுபோன்ற கரிசனையும் பாரமும் உங்களுக்கு இல்லையென்றால், நீங்கள் வெறும் சம்பளத் திற்காக ஊழியம் செய்யும் உத்தியோக பாஸ்டராக மாத்திரமே இருந்திட முடியும்!*

*ஜனங்களுடைய ஆத்துமாக்களினிமித்தம் "கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" என்பதின் பொருள் யாது? 'கணக்கு ஒப்புவிப்பது' என்ற வார்த்தை நிதி சம்மந்தமான வார்த்தையேயாகும். ஒரு கணக்கு முடிக்கும் போது "ஐந்தொகை" (Balance Sheet) தயார் செய்வார்கள். அந்த ஐந்தொகையில், வரவுப் பகுதியில் மொத்தம் 5000 ரூபாய் என்றும் ... செலவுப் பகுதியில் 4999 ரூபாய் என்றும் இருந்தால் அந்த நிதி அறிக்கையில் ஏதோ தவறு நடந்திருக்கிறது என உறுதியாகக் கூறலாம். இந்த வித்தியாசம் வெறும் 1 ருபாயாக இருந்தாலும் அந்த நிதி அறிக்கை தவறுதான்! அந்த 1 ரூபாயையும் நீங்கள் கணக்கில் கொண்டு வந்திருக்க வேண்டும்.... ஏனெனில், கணக்கில்* **எண் தொகை** *அத்தனை துல்லிய மானதாகும். இதைப்போலவே, தேவனுக்கு முன்பாக கணக்கு ஒப்புவிக்கும்போதும், உங்கள் மந்தையில் உள்ள ஒவ்வொருவரின் ஆவிக்குரிய நிலைமையும் எவ்வாறு இருக்கிறது என்பதை நீங்கள் துல்லியமாய் அறிந்திருக்க வேண்டும்! இந்தப் பொறுப்பை நீங்கள் மிகுந்த சீரியஸாய் கையாள வேண்டும்.*

ஏனெனில், ஒரு மருத்துவமனையில் மிகச் சிக்கலான அறுவை சிகிச்சை செய்யும் பொறுப்பைக் காட்டிலும் "ஆவிக்குரிய தலைமைப் பொறுப்பு" அதிக பொறுப்புள்ளதாகும். ஏனெனில், இங்கோ ஜனங்களின் ஜீவியம் "நித்திய அபாயத்திற்குரியதாய்" இருப்பதே அதன் காரணமாகும்!

*ஆம், உங்கள் சபையிலுள்ள விசுவாசிகளுக்கு நீங்களே பொறுப்பாளி! அவர்களை ஆவிக்குரியவர்களாக 'உருவாக்கிட'*

‘உங்களால்’ முடியாது. இருப்பினும், அவர்களை ஆண்டவருடைய மெய்யான உறவுக்குள் கொண்டு வருவதற்கான “சகல பிரயாசத்தையும்” நீங்கள் எடுத்திருக்க வேண்டும். உங்களுடைய இலக்கு “அவர்கள் **ஒவ்வொருவரையும்** கிறிஸ்து இயேசுவுக்குள் **தேறினவர்களாக** நிறுத்த வேண்டும்” என்பதாகவே இருந்திட வேண்டும் (கொலோ.1:28). அவர்களுடைய பின்மாற்றத்தைத் தடுப்பதற்கு உங்களால் முடியாது என்பது உண்மையாக இருந்தாலும், நீங்களோ அவர்கள் பின்மாற்றம் அடைவதற்கு முன்பாக ‘ஏற்கனவே’ அவர்களை எச்சரித்தவர்களாய் இருக்க வேண்டும்!

ஒரு சமயம், எங்கள் சபையில் ஒரு வாலிப சகோதரன் பின்மாற்றம் அடைந்தபோது நான் மிகவும் துயரமடைந்தேன். நான் உடனே ஆண்டவரிடம் சென்று “ஏன் இவ்வாறு நடந்தது?” என்று கேட்டேன். ஒருவேளை **என் பகுதியில்** ஏதேனும் தோல்விகள் இருக்குமோ என்றும் ஆராய்ந்தேன். அந்த சகோதரனின் வாழ்க்கையில் என்ன சம்பவித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறியும் உணர்வில் நான் குறைவுபட்டேனோ? ஒருவேளை அந்த சகோதரனுக்கு ஒரு எச்சரிப்பின் வார்த்தையோ அல்லது ஏதேனும் உற்சாகப்படுத்தும் வார்த்தையோ கூறியிருந்திருக்கலாமோ?.... இவ்வாறு என்னை நானே சோதித்து நியாயம்தீர்த்துப் பார்த்தேன். ஏனெனில், அந்த இளைஞனின் வாழ்க்கைக்கு நான்தான் தேவனுக்குப் பதில் சொல்லியாக வேண்டும்!

**இவ்வாறு, நம்முடைய பொறுப்பில் உள்ளவர்கள் வீழ்ச்சி அடையும் போதெல்லாம் நம்மையே சோதித்து நியாயம்தீர்த்துப் பார்ப்பவர்களாய் இருக்க வேண்டும்.**

அதேசமயம் அவர்களின் வீழ்ச்சியைக் குறித்து நாம் மனச்சோர்வு அடைய அவசியமும் இல்லை! ஒருவேளை, இந்த வீழ்ச்சியின் மூலமாய் தேவன் என்னிடம் ஏதேனும் பேச விரும்புகிறாரா? என அவரிடம் கேட்டு அறிந்திட வேண்டும். இதைத் தவிர, சாத்தான் நம்மை “குற்ற உணர்வின் நீண்ட பயணத்திற்குள்” இழுத்துச் சென்றிட அனுமதிக்கவே கூடாது. அதற்கு மாறாக, நம்முடைய தவறுகளின் மூலமாய் எதிர்காலத்திற்கென பாடங்களைக் கற்றுக்கொள்ளுகிறவர்களாகவே இருந்திட வேண்டும்!

நம்முடைய மனுஷீக காரணங்கள் நமக்கு காண்பித்திட முடியாத சில காரியங்களை தேவன் நமக்கு காண்பித்திட முடியும். நாம் மாத்திரம் தேவனுடைய சத்தத்திற்கு உணர்வுள்ளவர்களாக இருந்தால், தவறி விழ இருக்கும் ஜனங்களுக்கு **முன்கூட்டியே உதவி செய்திட** தேவன் நம்மைத் தூண்டுவார். சில சமயங்களில், எந்த வெளிப்படையான காரணமும் இல்லாமல், யாரோ சிலரை நாம் சந்திக்கச் செல்லும்படியும் நம்மிடம்

கூறுவார்! இதுபோன்ற சில அனுபவங்களை நான் பெற்றிருக்கிறேன். இச்சமயங்களில், நான் ஏன் அந்த நபரை சந்திக்க வேண்டும் என்பதற்கு எந்த தடையமும் எனக்கு இருப்பதில்லை.... ஏனென்றால், அவர்களுடைய பாவங்களையோ, அவர்களுடைய பிரச்சனைகளையோ தேவன் எனக்கு வெளிப்படுத்துவதில்லை! இதற்காகவும் நான் தேவனுக்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன். ஏனெனில், ஜனங்களின் பாவங்களை அறிந்து அதன் மூலம் என் மனதை நான் மாசுபடுத்திட நான் என்றுமே விரும்பியதில்லை! ஆகவே, நான் சந்திக்கச் சென்ற சகோதரரிடம் எதைக் கூறவேண்டும் என்பதை ஆண்டவர்தான் எனக்குள் தூண்டுதல் செய்வார். இவ்வாறு அந்த சகோதரனின் பிரச்சனை என்னவென்று எனக்குத் தெரியாதிருக்கும்போதுதான், நான் கூறும் வார்த்தைகள் அவருக்கு ஏற்ற உதவியாய் இருந்திட முடியும். அநேக சமயங்களில், நான் எவ்வகையில் அவனுக்கு உதவி செய்தேன் என்பதைக்கூட நான் அறியாதவனாகவே இருந்திருக்கிறேன்!

நாம் தேவனிடம் கவனித்துக் கேட்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தால், நம்முடைய **சூழ்நிலைகளை அவரே ஒழுங்குசெய்து,** அதன் மூலம் தேவையுள்ள சில ஜனங்களை நாம் சந்திக்கும்படி செய்து, அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வார்த்தைகளை அச்சமயத்தில் பகிர்ந்து கொடுக்கும்படி தேவன் செய்துவிடுவார்!

தேவனின் இவ்வித நடத்துதலுக்கு உட்பட்டே இந்த பூமியில் இயேசுவும் ஜீவித்தார் என ஏசாயா 50:4 கூறுகிறது. இந்த வசனத்தின்படி, இளைப்படைந்தவர்களுக்கு 'அந்த சமயத்திற்கேற்ற வார்த்தையை' இயேசு சொல்லும்படி பிதா அவரிடம் ஒவ்வொரு நாளும் பேசினார்! இதுபோன்ற தலைவர்களாகவே நாம் யாவரும் உருவாகிட வேண்டும்!

நான் கப்பற்படையில் இருந்தபோது, கப்பலில் தவணை முறைப் படி பணியாற்றும் "விழித்திருக்கும் பணி" (Watches) என்றதோர் பணி உண்டு. இந்த பணி நான்கு மணி நேரங்கள் கொண்டதாகும். இந்தப் பணியில் இருக்கும் ஒரு அதிகாரி "விழிப்புடன் காவல் புரிவார்". ஏனெனில் கப்பலில் சம்பவிக்கும் யாதொரு காரியத்திற்கும் அவர்தான் பொறுப்பாளி! நான் இந்த விழித்திருக்கும் பணி நேரங்களில், நடு இரவிலிருந்து அதிகாலை நான்கு மணி வரை கப்பலின் மேற்தளத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு பாலத்தில், உதவிக்கு இரண்டு அல்லது மூன்று மாலுமிகளோடு நின்று கொண்டிருக்க வேண்டும். கப்பலில் உள்ள மற்ற அனைவரும் உறங்கிக் கொண்டிருப்பார்கள். இவ்வித கப்பற் பணியில், எங்கள் பாதையை கடந்து செல்லும் மற்ற கப்பல்களை நான் கண்காணித்து, எங்களுடைய கப்பல் சரியான திசையில்தான் சென்று கொண்டிருக்கிறது என்பதையும் நான் உறுதி செய்ய வேண்டும். மேலும், காற்றினாலும் அலைகளினாலும் ஏற்படும் திசை மாற்றத்தையும் நான்

சரிசெய்திட வேண்டும். இவ்வாறு இந்த 4 மணி நேரங்களிலும் 1)கப்பலின் **பாதுகாப்பு** 2) கப்பல் சென்று கொண்டிருக்கும் **திசை** ஆகிய முழுப்பொறுப்பும் என்னைச் சார்ந்ததேயாகும். இந்த விழித்திருக்கும் பணியில் ஒரு நிமிடம் கூட நான் தூங்குவது சாத்தியமிருக்காது!

ஆகவே வேதாகமம் குறிப்பிடும், பிறருக்கு நாம் “**விழித்திருக்கும் கண்காணிகளாய் இருப்பது**” ஓர் மிகப் பெரிய பணியாகும். ஜனங்களின் ஜீவியத்தை விழிப்புடன் கண்காணித்து அவர்கள் சிதறுண்டு போகாதபடியும் அல்லது திசைமாறிச் சென்றுவிடாதபடியும் அல்லது அவர்களை இழந்து போகாதபடியும் நடத்திட, ஓர் ஆவிக்குரிய தலைவனுக்கு மிகுந்த கவனம் தேவையாயிருக்கிறது.

எந்தவொரு நல்ல மருத்துவமனையிலும், ஒவ்வொரு அறைக்கும் டாக்டர்கள் சென்று நோயாளிகளின் நிலைமையை விசாரித்திடும் “தினசரி விசாரிப்பு” (Daily Rounds) என அழைக்கப்படும் கடமை உண்டு. அந்த கடமையைச் செய்திடும் மருத்துவர்கள், வார்டுகளுக்குச் சென்று ஏதோ பொதுவாய் விசாரித்துவிட்டு எல்லா நோயாளிகளும் நன்றாகவேயிருக்கிறார்கள் என கூறுவதல்ல, இந்தக் கடமை! மாறாக, **ஒவ்வொரு நோயாளியையும்** இந்த மருத்துவர்கள் தனித்தனியே பரிசோதித்து அறிந்து வருவார்கள்!

ஆனால் இன்று அநேக பாஸ்டர்மார்கள் செய்வதென்ன? ஒவ்வொரு ஞாயிறு காலையும் தங்கள் சபை விசுவாசிகளை மேலோட்டமாய் பார்த்துவிட்டு, எல்லோரும் ஆவிக்குரிய சௌக்கியத்தோடு இருப்பதாகத் தாங்களாகவே தீர்மானித்துக் கொள்ளுகிறார்கள்!

ஆனால், இன்று அநேகம் ஜனங்கள் வெளித்தோற்றத்தில் ஆரோக்கியமாய் காணப்பட்டு, ‘உட்புறத்திலோ’ மிகவும் வியாதிப் பட்டவர்களாகவே இருக்கிறார்கள். இந்த நிலைமை மருத்துவமனையில் மாத்திரமல்ல, சபைகளிலும் அவ்வாறாகவே காணப்படுகிறது. சிலர் வெளித்தோற்றத்தில் ஆரோக்கியமாய் காணப்பட்டாலும், அவர்களின் உள் உறுப்புகளையோ “**புற்றுநோய்**” தின்றுகொண்டிருக்கும். இதைப் போலவே உங்கள் சபையில் உள்ள சிலர் வெளித்தோற்றத்தில் மகிழ்ச்சியாய் கைதட்டி “அல்லேலூயா” என ஆர்ப்பரித்தாலும், அவர்களின் குடும்ப ஜீவியத்திலோ தீமையான பிரச்சனையுடையவர்களாய் இருந்திட முடியும். ஆகவேதான், ஒரு மருத்துவர் ஒவ்வொரு நோயாளியையும் தனித்தனியே விசாரிப்பதைப்போல, ஒரு ஆவிக்குரிய தலைவனும் ஒவ்வொரு ஆத்துமாக்களையும் தனித்தனியே “சோதித்துப் பார்த்து” கண்காணித்திட வேண்டும். இதைக்குறித்து வேதாகமம் குறிப்பிட்டுக் கூறுகையில், “**உன் ஆடுகளின் நிலைமைகளை நன்றாய் அறிந்துகொள்**” என்றே எல்லா மேய்ப்பர்களுக்கும் புத்தி சொல்லுகிறது (நீதி.27:23).

ஒரு சபையில் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, தன்னுடைய பொறுப்பில் உள்ள ஆத்துமாக்களை ஒரு தலைவன் தொடர்ந்து "கண்காணிப்பதற்கு" உள்ள ஒரே வழி, **தன்னைப்போன்ற பொறுப்பிற்கு** பயிற்சி பெற்ற 'உண்மையுள்ள சகோதரர்களுக்கு' அந்தப் பொறுப்பை பகிர்ந்து தருவதேயாகும்!

"ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு" மேலாக, ஜனங்கள்மீது தனிப்பட்ட கவனம் செலுத்துவது, எந்தவொரு தனிமனிதனுக்கும் கூடாத காரியமேயாகும். என்னைப் பொறுத்தவரையில் "அந்த எண்ணிக்கை" பன்னிரண்டு நபர்களாக மாத்திரமே இருந்திட முடியும் .... ஏனெனில், இத்தனை எண்ணிக்கை உடையவர்களை மாத்திரமே இயேசுவும் சீஷர்களாய் உருவாக்கினார்! ஒரு மருத்துவர் எவ்வளவு சிறந்தவராயிருந்தாலும், அநேக மருத்துவமனைகளை நிச்சயமாய் கண்காணித்திட முடியாது. நம் எல்லோருக்கும் நமக்கேற்றபடி "ஓர் சரீர வரையறை" இருப்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

அநேக சபைகள் மீது பொறுப்புடைய "ஓர் அப்போஸ்தல ஊழியத்தைப்" பெற்றவர்கள், அந்த எல்லா சபைகளிலும் உள்ள **மூப்பர்களின் நிலைமையை** நன்கு அறிந்திருக்க வேண்டும். ஏனெனில், மூப்பர்கள் ஆவிக்குரியவர்களாய் இருந்தால் மாத்திரமே, அவர்களின் சபைகளும் ஆவிக்குரியதாய் இருந்திடமுடியும்!

"வெளி-நோயாளிகளின் பிரிவில்" வரும் நோயாளிகளுக்கு, மருத்துவர்கள் மருந்துகளை மாத்திரம் எழுதிக்கொடுத்து அனுப்பி விடுவார்கள். அந்த நோயாளிகள் பிழைத்தார்களா அல்லது செத்து விட்டார்களா என்பதை அறியவோ அல்லது அக்கறை கொள்ளவோ மாட்டார்கள்! இன்று சபையிலும் 'இந்த' மருத்துவர்களைப்போன்ற பாஸ்டர்களும், மூப்பர்களும் இருப்பது துரதிருஷ்டமேயாகும்!

ஆனால் ஓர் மெய்யான ஆவிக்குரிய தலைவனோ, தன் பொறுப்பில் உள்ள ஆத்துமாக்களை வெகு சிரத்தையுடன் **உத்திரவாதம்** எடுத்துக் கொள்பவனாய் திகழ்வான்!

# 8

## “ஜீவியத்திலிருந்து ஊழியம் செய்பவன்”

*ஒரு ஆவிக்குரிய தலைவன், தன் ஜீவியத்திலிருந்து எடுத்து மற்றவர்களுக்கு ஊழியம் செய்வானேயல்லாமல், தன் புத்தியின் சாமர்த்தியத்தைச் சார்ந்து ஒருக்காலும் ஊழியம் செய்திடவே மாட்டான்!*

*பழைய உடன்படிக்கையின் கீழ், அவர்களின் தனிப்பட்ட ஜீவியம் கற்பு நெறி தவறியதாய் இருந்தாலும், அதுபோன்ற மனிதர்களையும் தேவன் உபயோகித்தார்.* **சிம்சோன்** *தொடர்ந்து பாவத்தில் ஜீவித்துக் கொண்டிருந்தபோதும், இஸ்ரவேல் ஜனங்களை பல ஆபத்துகளிலிருந்து அவனால் இரட்சிக்க முடிந்தது! அவன் வேசித்தனம் செய்தபோதுகூட தேவனுடைய ஆவி அவனைவிட்டு விலகாமலேதான் இருந்தது! அவன் என்று தன் முடியை இழந்து தேவனோடு செய்த உடன்படிக்கையை முறித்தானோ, அப்போதுதான் தேவனுடைய அபிஷேகம் அவனை விட்டு விலகியது! அதுபோலவே,* **தாவீதுக்கும்** *அனேக மனைவியர்கள் இருந்தார்கள் என காண்கிறோம். இருப்பினும் தேவனுடைய அபிஷேகம் அவனிடம் நிலைத்திருந்தது மாத்திரமல்லாமல் .... அவன் “தேவனுடைய வசனங்களையும்” எழுதினான்!*

*ஆனால் புதிய உடன்படிக்கையின் ஊழியமோ முற்றிலும் வித்தியாசமானதாகும். 2கொரிந்தியர் 3-ம் அதிகாரம், பழைய உடன்படிக்கையின் கீழான ஊழியத்திற்கும், புதிய உடன்படிக்கையின் கீழான ஊழியத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நேர்த்தியாய் எடுத்துரைக்கிறது. அந்த வித்தியாசத்தின் அடிப்படையான பகுதி இதுதான்: பழைய உடன்படிக்கையின் கீழ், ஆசாரியர்கள் பிரமாணங் களை கவனமாய் கற்று, அந்தப் பிரமாணங்களில் தேவன் என்ன கூறியிருக்கிறார் என்பதை ஜனங்களுக்குப் போதிப்பார்கள்.*

**ஆனால் புதிய உடன்படிக்கையிலோ, தன்னுடைய உள்ளான ஜீவியத்தி லிருந்தும், தன் பிதாவோடு இணைந்து வாழ்ந்த அனுபவத்திலிருந்தும் தேவனுடைய வார்த்தையைப் பேசிய “இயேசுவையே” நாம் பின்பற்றுகிறோம்!**

*நம் ஜீவியத்திலிருந்து பிரசங்கிப்பதற்கும், நம்முடைய அறிவிலிருந்து பிரசங்கிப்பதற்கும் இடையில் ஏராளமான வித்தியாசம் இருக்கிறது!*

*தங்கள் தலைவர்களின் ஜீவியம் ஆழமற்ற பொக்குத்தன்மை கொண்டதாய் இருப்பதினிமித்தமே, எண்ணற்ற விசுவாசிகளின் ஜீவியமும் ஆழமற்ற பொக்குத்தன்மை கொண்டதாயிருப்பதை நம் இந்திய தேசத்தில் இன்று நாம் காண்கிறோம். தலைவர்களின் சிந்தை வாழ்க்கையும், அவர்களின் மனைவி, பிள்ளைகள், உடன் ஊழியர் களோடு கொண்ட ஐக்கிய வாழ்க்கையும் மாம்சீகமாய் இருப்பதால் ... அதேபோல், ஜனங்களின் வாழ்க்கையும் மாம்சீகமாய் இருப்பதை நாம் காண்கிறோம்! இதுபோன்ற தலைவர்களின் ஊழியம் "செய்தி அறிக்கை வாசித்திடும்" ஊழியமாக மாத்திரமே இருந்திட முடியும். இவ்வாறிருப்பது பழைய உடன்படிக்கையின் ஊழிய தரமேயாகும்.*

**"செய்தி அறிக்கையை"** *மாத்திரமே ஜனங்களுக்கு அறிவித்திடும் ஓர் பிரசங்கி பழைய உடன்படிக்கையின் பிரசங்கியே ஆவார். அவர் கொண்டுவரும் தகவல் கூற்றுகள் அனைத்தும் பிழையற்றதும் துல்லியமாயும் இருக்கக்கூடும்! ஆனால், அவரோ "ஜீவனை" ஜனங்களுக்குத் தரவில்லையென்றால், அவர் நிச்சயமாய் புதிய உடன்படிக்கையின் ஊழியன் அல்லவே அல்ல! பழைய உடன்படிக்கை எழுத்தின்படியான உடன்படிக்கையாகும். ஆனால் புதிய உடன் படிக்கையோ ஜீவனின் அடிப்படையில் கொண்ட உடன்படிக்கை யாகும். எழுத்து கொல்லும் ... ஆவியோ, ஜீவனைத் தந்தருளும்!*

*பழைய உடன்படிக்கையில், இஸ்ரவேல் ஜனங்கள் கைக் கொள்ளும்படியாக தேவன் "பிரமாணங்களை" அவர்களுக்குத் தந்தார். ஆனால், புதிய உடன்படிக்கையில், "இயேசு என்ற நபரில்" தேவன் நமக்கு* **ஓர் மாதிரியைத்** *தந்திருக்கிறார். அவருடைய ஜீவியமே மனுஷருக்கு ஒளியாய் இருக்கிறது.*

**இன்று உலகத்திற்கு ஒளியாய் இருப்பது ஒரு உபதேசமோ அல்லது போதகமோ அல்ல! மாறாக, இயேசுவின் சொந்த வாழ்க்கை நம் மூலமாய் வெளிப்படுவதே உலகின் ஒளியாய் இருக்கிறது.**

*இதைத் தவிர வேறு எதுவும்... அது, சுவிசேஷ அடிப்படையிலான தெளிவான உபதேசங்களாய் இருந்தாலும் "அது இருள்தான்!" என்பதை நாம் உணர்ந்திடுவோமாக!*

*சங்கீதம் 119:105-ல் காண்பதுபோல் பழைய உடன்படிக்கையில் "எழுதப்பட்ட தேவனுடைய வசனமே" வெளிச்சமாய் இருக்கிறது. ஆனால், அந்த வசனம் மாம்சமாய் மாறி, இப்போது இயேசுவே உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறார் (யோவான் 8:12). அவருடைய*

“ஜீவியமே” மனுஷருக்கு ஒளியாய் பிரகாசிக்கிறது! (யோவான் 1:4). இதை இயேசு சீஷர்களுக்குத் தெளிவாய் போதித்தபோது “நான் உலகத்தில் இருக்கும் வரையில்தான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன்” என தெளிவுபடுத்தினார் (யோவான் 9:5).

**ஆனால் அவர் பரலோகத்திற்குச் சென்றுவிட்டபடியினால், இப்போதோ “நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருங்கள்” என்றே கூறிச் சென்றார் (மத்.5:14).**

ஆகவேதான், நம் ஜீவியத்தின் மூலமாக அந்த வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்வது நம்மேல் விழுந்த மாபெரும் பொறுப்பாய் இருக்கிறது!

ஆகவே, இப்போது சந்தேகத்திற்கு இடமில்லாமல், ஒரு சபை தன்னுடைய தலைவன் இருப்பதைப் போலவே மாறுகிறது! வெளிப்படுத்தின விசேஷம் 2, 3-ம் அதிகாரங்களில் ஆண்டவர் எந்த செய்தியை ஒரு சபையின் தூதுவனுக்குத் தந்தாரோ, அதே செய்தியைத் தான் அந்த சபைக்கும் தந்ததை ஏழு சபைகளிலும் காண்கிறோம். அவர் சபையின் தூதுவனுக்குப் பேசிய ஒவ்வொரு முடிவுரையிலும், ஆவியானவர் சபைக்கும் அதே செய்தியைத் தருவதாகவே கூறி முடித்தார்.

**ஏழு சபைகளில், ஐந்து சபைகளில் உள்ள தூதுவர்கள் (மூப்பர்கள்) மாம்சீகமாய் இருந்தபடியால், அந்த ஐந்து சபைகளும் மாம்சீகமாகவே இருந்தது! ஆனால், இரண்டு சபைகளில் உள்ள தூதுவர்கள் ஆவிக்குரிய வர்களாய் இருந்தபடியால், அந்த இரண்டு சபைகளும் ஆவிக்குரிய சபை களாய்தான் திகழ்ந்தன!**

லவோதிக்கேயா சபையின் தூதுவன் வெதுவெதுப்பாய் இருந்த படியால், அவனுடைய சபையும் வெதுவெதுப்பாகவே இருந்தது! ‘பிலதெல்பியா’ சபையின் தூதுவன் உண்மையுள்ளவனாய் இருந்த படியால், அவனுடைய சபையும் உண்மையுள்ள சபையாய் காணப்பட்டது!

ஆதியாகமம் 1-ம் அதிகாரத்தில், “தங்கள் தங்கள் ஜாதியின்படியே” என்ற வாக்கியம் திரும்பத்திரும்ப வருவதை நாம் காண்கிறோம். தங்கள் விதையையுடைய கனிகள் தங்கள் ஜாதியின்படியே கனிவிருட்சங் களைத் தரும்படியும், பூமியின் புல்லின் வகைகள் தங்கள் ஜாதியின் படியே பூண்டுகளைத் தரும்படியும், மீன்களும் பட்சிகளும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே ஜெநிப்பிக்கும்படியும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும், நாட்டு மிருகங்களும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே ஜெநிப்பிக்கும்படியும் அருளப்பட்டதை நாம் காண்கி றோம் (ஆதி.1:11,12,21,25). **இவ்வாறு சிருஷ்டிப்பில், ஒவ்வொன்றும் அதினதின் ஜாதியின்படி பலன் தந்ததையே** நாம் காண்கிறோம்.

தேவனும், ஆதாமை "தேவ சாயலாகவே" உண்டாக்கினார் (ஆதி.5:1). ஆனால் ஆதாமோ "தன் சாயலாக" ஒரு குமாரனைப் பெற்றான் என 3-ம் வசனத்தில் காண்கிறோம். அவனால், தேவனுடைய சாயலில் ஒரு குமாரனைப் பெற்றெடுக்க முடியவில்லை! அவனோ தன் ஜாதியின்படியேதான் பெற்றெடுக்க முடிந்தது!

ஆவிக்குரிய பிரகாரமாயும், நம்முடைய சாயலின்படியும் ரூபத்தின்படியுமே நாம் யாவரும் பிள்ளைகளைப் பெற்றெடுக்க முடியும். நாம் புத்திசாதுரியத்தைச் சார்ந்தவர்களாக இருந்தால், நம் ஊழியத்தின் மூலமாய் புத்திசாதுரியத்தைப் பெரிதாய் நம்பும் ஜனங்களை மாத்திரமே உருவாக்கிட முடியும்! நாம் உலோபிகளாய் இருந்தால் (கஞ்சர்களாய்) உலோபிகளைத்தான் உருவாக்கிட முடியும்! நாம் **அகந்தையும் பெருமையும் கொண்டவர்களாய் இருந்தால்,** நம் ஊழியத்தின் மூலம் அகந்தையும் பெருமையும் கொண்டவர்களைத் தான் உருவாக்கிட முடியும்! இதற்குப்பதிலாக, நாம் **ஒரு வேலைக் காரனின் ஆவியை உடையவர்களாக இருந்தால்,** நம்முடைய ஆவிக்குரிய பிள்ளைகளும் ஒரு வேலைக்காரனுடைய ஆவியைக் கொண்டவர்களாக நிச்சயமாய் விளங்குவார்கள்!

இருப்பினும், ஒரு தலைவன் இவ்வாறு வடிவமைக்கும் கூட்டி லிருந்து ஒரு சில சகோதரர்கள் மாத்திரமே அந்தக் கூட்டை உடைத் தெறிந்து 'தாங்களாகவே' தேவனைத் தேடி, தங்கள் தலைவனின் மாம்சீகத்தின்படி உருவாகிவிடாமல் ஆவிக்குரியவர்களாய் ஓங்கி வளருகிறார்கள்! ஆனால் இதுபோன்று நடக்கும் செயல் மிக மிக அபூர்வமேயாகும்! நாம் பொதுவாய் காண்பதெல்லாம், அதிக பட்சமான விசுவாசிகள் "ஆடுகளைப் போலவே" தங்கள் தலைவன் எங்குச்சென்றாலும், அவனை குருட்டுத்தனமாய் பின்பற்றுகிற வர்களாய் இருக்கிறார்கள்.

**அந்தப் பிரசங்கி எப்படியோ 'அப்படியேதான்' அந்த ஜனங்களும்! இவ்வாறு தலைவனும் ஆடுகளும் ஆகிய இருவரும் குருடாய் இருந்தால் என்ன....இந்த இருவருமே சேர்ந்துதான் குழிக்குள் விழுவார்கள்!**

இதுமாத்திரம் அல்ல, இப்போது உங்கள் சபையில் உள்ள விசுவாசிகள் புறப்பட்டுச் சென்று, தங்களைப் போலவேதான் மற்றவர் களையும் உருவாக்குவார்கள் என்பதையும் மனதில் கொள்ளுங்கள்! இவ்வாறு உங்களைப் போலவே "பேரப்பிள்ளைகளும்" உங்களுக்கு இப்போது உருவாகிவிட்டார்கள்! ஆகவே எந்தத் தரத்திலான பிள்ளைகளை நீங்கள் உருவாக்கப் போகிறீர்கள் என்பதைக் குறித்து நீங்கள் இப்போதே விழிப்பாய் இருப்பது நலம். அப்படி இல்லை யென்றால், 'மேற்கண்ட சோகமான சந்ததியின் சங்கிலித் தொடர்'

*இயேசு வரும்வரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்!*

*ஆகவே ஆரம்ப காலத்திலிருந்தே, உங்கள் சபையில் உள்ள ஜனங் களை வெறும் இரட்சிப்பிற்குள் மாத்திரமல்லாமல், அவர்களை* **சீஷர்க ளாயும் உருவாக்க வேண்டும்** *என்ற பாரத்தை நெஞ்சில் கொண்டிருக்கக் கடவோம். இவ்வாறு நாம் பணியாற்ற வேண்டிய பகுதி மிகவும் முக்கியமான பகுதியாகும். பிறரை சீஷர்களாக உருவாக்குவதற்கு, நீங்கள் ஓர் உத்தம சீஷனாய் இருந்திட வேண்டுமே! பிறருக்கு ஜீவனை வழங்கிட,* **முதலாவது உங்களுக்குள் ஜீவன்** *இருந்திட வேண்டுமே!*

*இரட்சிக்கப்பட்டவர்கள், இரட்சிக்கப்பட்டவர்களை மாத்திரமே உருவாக்கிட முடியும். பின்பு இவர்களும் புறப்பட்டுச் சென்று இரட்சிக்கப்பட்டவர்களையே உருவாக்குவார்கள்! இவ்வாறு இரட்சிக்கப்பட்டவர்கள் “இரட்சிப்பின் செய்தியை” நன்கு விளங்கியிருக்கக் கூடும்.... ஆனால், அவர்களுக்கோ கர்த்தரைப் பின்பற்றி வரவேண்டும் என்ற விருப்பம் ஒரு துளிகூட இருக்காது! இவர்களுக்கு ஆழமான அறிவு இருந்தாலும் “ஜீவனோ” ஒரு துளியும் இருக்காது! இதற்கு நேர்மாறாக, நீங்கள் சீஷர்களை உருவாக்கி யிருந்தால், இப்போது அவர்கள் புறப்பட்டுச் சென்று இன்னும் அதிகமான சீஷர்களை உருவாக்குவார்களே! ஆகவேதான், மற்றவர்களுக்கு ஜீவனைப் பகிர்ந்து வழங்குவது ஓர் அடிப்படையான அவசியமாய் இருக்கிறது.*

*பழைய ஏற்பாட்டின்* **ஆசரிப்புக்கூடாரம், சபையைக் குறித்த ஓர் சிறந்த மாதிரி** *எனக் கூறலாம். அந்த கூடாரத்தில் 1) வெளிப்பிரகாரம் 2) பரிசுத்த ஸ்தலம் 3) தேவன் வாசம்புரியும் மகா பரிசுத்த ஸ்தலம், என மூன்று பகுதிகள் உண்டு. வெளிப்பிரகாரத்தில் இருக்கும் ஜனங்கள், தங்கள் பாவங்கள் மாத்திரமே மன்னிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு ஒப்பாயிருக்கி றார்கள்.* **இவர்கள், தங்கள் ஸ்தல சபையில் எந்தப் பொறுப்பும் எடுத்துக் கொள்ளவே மாட்டார்கள்.** *கூட்டங்களுக்கு வருவார்கள், செய்திகளைக் கேட்பார்கள், காணிக்கைகளை செலுத்துவார்கள், அப்பம் பிட்டுக் கொள்ளுவார்கள், வீட்டுக்குச் சென்றுவிடுவார்கள்! பரிசுத்த ஸ்தலத்திலிருக்கும் ஜனங்களோ, சபையில் லேவியர்களைப் போல் விளக்குத்தண்டை ஏற்றி வைக்கவோ, பலிபீடத்தில் தூபமிடவோ போன்ற ‘ஏதாகிலும் சில வேலைகளைச்’ செய்வார்கள்! ஆனால், மகா பரிசுத்தஸ்தலம் வந்தடைந்தவர்களோ, புதிய உடன்படிக்கையில் பிரவேசித்தவர்களாய்,* **தேவனுடைய ஐக்கியத்தை** *நாடி, மற்ற சீஷர்களோடும் ஒரே சரீரமாய் இணைந்திருப்பார்கள். இவர்களே, தங்கள்* **“ஜீவனிலிருந்து” ஊழியம் செய்து,** *மெய்யான சபையின் மூல ஆதாரமாய் இருப்பார்கள்! இவர்களே சபையின் முக்கிய இயந்திரமாய் செயல்பட்டு, சாத்தானோடு நேரடியாய் யுத்தம் செய்து, கிறிஸ்துவின்*

*சரீரமான சபை கறையற்றதாய் இருக்கும்படி பாதுகாக்கிறவர்களாயும் இருப்பார்கள்! இருப்பினும், இன்றைய அநேக சபைகளில், இதுபோன்ற* **"கரு – மையத்திற்குரிய"** *ஜனங்கள் இன்னமும் காணப்படாமலேதான் இருக்கிறார்கள்!*

*சிறந்த சபையாய் இருந்தாலும் அல்லது மோசமான சபையாய் இருந்தாலும், எல்லா சபைகளின் வெளிப்பிரகாரத்திலும் முழு இருதயமற்ற உலக ஆசை கொண்டவர்களும், தங்களுக்கானதைத் தேடுகிறவர்களும், பணத்தை நேசிப்பவர்களும், சுகத்தையும் சொகுசையும் விரும்புகிறவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால் ஓர் சிறந்த சபையோ, பக்தியுள்ள தலைவர்களைத் தன் "கரு-மையமாய்" பெற்றிருக்கும்.*

> **பொதுவாய் இந்த "கரு-மையம்" இரண்டு சகோதரர்களுக்குள் துவங்கி, அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒன்றான ஐக்கியமாய் மாறுவார்கள். அவர்களோடு தேவன் வாசமாயிருந்து, அந்தக் கரு-மையம் அளவிலும், ஐக்கியத்திலும் வளரத் தொடங்கி விடும்.**

*இவ்வாறாகவேதான், ஒரு மானிட கருவும், "இரண்டு வேற்றுமை மூலம் ஒன்றாய் சேர்ந்து" ஒரு தாயின் கருப்பையில் வளரத் தொடங்குகிறது. அந்த கரு பெரியதாய் வளர்ந்தாலும், அதன் திசுக்கள் யாவும் இசைவுடன் இணைக்கப்பட்டேயிருக்கும். இருப்பினும், ஏதாவது ஒரு சமயத்தில் இந்த திசுக்கள் சிதறிவிட்டால்.... அதுவே, அந்த சிசுவின் அழிவாய் மாறிவிடும்! இதேபோலவேதான் ஒரு ஸ்தல சபை கட்டப்படுவதும் "கிறிஸ்துவின் சரீரத்தைப்" பிரதிபலிப்பதாய் இருக்கிறது. ஆம், "அந்த கரு-மையம்" சிதறிவிட்டால், உண்மையான சபை சிதறிவிட்டு .... வேண்டுமானால், வெளிப்பகுதியில் உள்ள கட்டமைப்புகள் மாத்திரமே ஓர் வெறும் ஸ்தாபனமாய் இயங்கிக் கொண்டிருக்க முடியும்!*

புதிய உடன்படிக்கைக்கும், பழைய உடன்படிக்கைக்கும் உள்ள வித்தியாசத்தை, **புதிய ஏற்பாட்டில்** தெளிவாக காட்டும் ஒரே புத்தகம் "எபிரெயர்" புத்தகமாகும். *ஆனால், துரதிருஷ்டவசமாக இந்தப் புத்தகம் அநேக கிறிஸ்தவர்களிடத்தில் இன்னமும் பிரபல்யமாகாமலே தான் இருக்கிறது. ரோமர், எபேசியர், பிலிப்பியர் புத்தகங்கள் பிரபல்யமாயிருக்கிறதேயல்லாமல், எபிரெயர் புத்தகமோ பிரபல்ய மாகவில்லை. அதுஏனென்றால், எபிரெயர் புத்தகம் வெறும் பாலாய் (Milk) இல்லாமல், அவை அனைத்தும் கடின இறைச்சி உணவாய் இருப்பதே காரணமாகும். அதை ருசித்து சுவைத்திட திரளான விசுவாசி களுக்கு பற்கள் முளைக்காமல் வளர்ச்சி குன்றிதான் இருக்கிறார்கள். ஆம், இன்னமும் குழந்தைகளாகவேதான் இருக்கிறார்கள்! எபிரெயர்*

*நிருபத்தின் முதல் வாக்கியமே “பூர்வகாலங்களில் தேவன் தீர்க்கதரிசிகள் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்” என்றே கூறுகிறது! பெரும்பாலான பழைய உடன்படிக்கையின் கற்பனைகள் முழுவதும் “இதைச் செய்வாயாக” “இதைச் செய்யாதிருப்பாயாக” என்று தேவனிடமிருந்து கட்டளை புறப்பட்டு வந்ததாய் இருந்தது. ஆனால் புதிய உடன்படிக்கையிலோ அவருடைய குமாரன் மூலமாய் தேவன்* “**ஜீவனை**” *நமக்குத் தந்தருளியிருக்கிறார்.*

*இதனிமித்தமே, பிதாவானவர் இந்த பூமிக்கு இயேசுவை ஓர் பாலகனாய் அனுப்பினார். இயேசுவை இந்த பூமிக்கு பூரண வளர்ச்சி பெற்ற ஓர் புருஷனாய் அனுப்பிட தேவனுக்கு எந்த சிரமமும் இல்லை. இருப்பினும், அவர் ஒரு பாலகனாய் வந்ததின் நோக்கம், தன் குழந்தைப் பிராயத்திலிருந்தே நம்மைப் போன்ற அனுபவங்களை அனுபவிக்கும் படியும், நாம் சந்திக்கும் சோதனைகளைச் சந்திக்கும்படியேயாகும்!*

*ஆனால் அநேக கிறிஸ்தவர்களோ, இயேசுவை அவரது கடைசி 3½ வருட ஊழியத்தையும், அவரது கல்வாரி மரணத்தையும் வைத்தே சிந்திக்கிறார்கள்!*

**அதாவது, 99% விசுவாசிகள், இயேசு நாசரேத் ஊரில் தன்னுடைய முதல் 30 ஆண்டு காலம் எவ்வாறு ஜீவித்தார்? என்பதை சற்றேனும் சிந்திக்கவில்லை எனக் கூறுவது சரியென்றே நான் எண்ணுகிறேன்!**

*ஆம், அவருடைய பிறப்பை தியானிக்கிறார்கள்.... அதைத்தான் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடவும் செய்கிறார்கள்! பின்பு, அவருடைய மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் தியானிக்கிறார்கள் ... அதையும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகிறார்கள்! இதோடு கொஞ்சம் சேர்த்து, அவர் செய்த அற்புதங்களையும் தியானிக் கிறார்கள்... அவ்வளவுதான்!*

*இவர்களில் ஒருவர்கூட* **இயேசுவின் வாழ்க்கையில் உள்ள பிரதான பகுதியை** *தியானிப்பதே இல்லை! அவர் இந்த பூமியில் வாழ்ந்த வாழ்க்கையில் அவரது ஊழியம் 10% மாத்திரமே! அதாவது 33½ வருடங்களில் 3½ வருடங்கள் மாத்திரமே! அவருடைய பிறப்பும், அவருடைய மரணமும் ‘ஒரேநாளில்’ நடந்த நிகழ்ச்சிகளேயாகும். மாறாக, அவர் தன் ஜீவியத்தின் பெரும் பகுதியை நாசரேத்தூரில் 30 ஆண்டு காலம் வாழ்ந்தே செலவழித்தார். இந்த 30 ஆண்டு கால ஜீவியத்தை ஆதாரமாகக் கொண்டே அவருடைய முழு ஊழியமும் இருந்தது!*

**தன் ஊழியத்தில் அவர் பிரசங்கித்த பிரசங்கங்களைத் தயாரிப்பதற்கு அவருக்கு 30 ஆண்டுகள் பிடித்தது!**

*தன்னுடைய “மலைப்பிரசங்கத்தை” இன்றைய பிரசங்கிகளைப்*

போல், புத்தகங்களையும், ஒத்தவாக்கியங்களையும் ஆராய்ந்து முக்கிய மூன்று குறிப்புகளை எடுத்துக்கொண்டு, பிரசங்கங்களை ஆயத்தப் படுத்தி, அகர வரிசைப்படி பிரசங்கிப்பதைப்போல் இயேசு பிரசங்கிக்க வில்லை..... இல்லவே இல்லை! அந்தப் பிரசங்கம், அவர் வாழ்க்கையிலிருந்தே புறப்பட்டு வந்தது. அதைத் தயார் செய்திட அவருக்கு 30 ஆண்டுகள் பிடித்தது. இதனிமித்தமே அவருடைய பிரசங்கம் வல்லமையாய் இருந்தது! "அதிகாரமுடையவராய்" அவர் போதித்ததை ஜனங்களும் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்! (மத்.7:28, 29).

பழைய உடன்படிக்கையில் எரேமியா தீர்க்கதரிசியிடம் தேவன் "**சில குறிப்பிட்ட நாட்களில்** அவ்வப்போது மாத்திரமே பேசினார்" என நாம் வாசிக்கிறோம். இவ்வாறு தேவன் தனக்குப் பேசியதை இந்த எரேமியா தன்னுடைய வேதபாரகன் பாரூக்கிடம் (Baruch) ஒப்பித்தான்! எரேமியா தனக்கு ஒப்பித்ததை பிழை ஏதும் இல்லாமல் பாரூக் கிரமமாய் எழுதிவைத்தான். இதுபோலவேதான், தேவன் எசேக்கியேல் தீர்க்கதரிசியிடமும் "சில குறிப்பிட்ட நாட்களில் மாத்திரமே" அவன் யூதா ஜனங்களுக்கு என்ன கூறவேண்டும் என்பதைப் பேசினார். அதை எசேக்கியேல், ஜனங்களிடத்தில் சென்று அப்படியே கூறிவிடுவார். அது நல்லதுதானே! இன்றும் இவ்விதமாகவே நாம் பிரசங்கித்துவிட்டால், '**அதுகூட மேன்மையானது** என்றே' நாம் கூறலாம்.

ஆனால் புதிய உடன்படிக்கையின் ஊழியமோ, **இதைக்காட்டிலும்** மேன்மையானதாகும்! பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளிடம் சில குறிப்பிட்ட நாட்களில் மாத்திரமே பேசியதைப்போல் அல்லாமல், தேவன் "**ஒவ்வொரு நாளும்** இயேசுவிடம் பேசினார்". இயேசுவும், "ஒவ்வொரு நாளும்" தன் ஜீவியத்திலிருந்து ஜனங்களுக்குப் பேசினார். அவருடைய ஜீவியத்திலிருந்தே அவருடைய ஊழியம் புரண்டோடி வந்தது. இதுவே "அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீர் உள்ள நதிகள் ஓடும்" என்ற வசனத்தின் பொருளாகும்!(யோவான் 7:38).

**இந்த வெளிச்சத்தின் அடிப்படையில்,** நீங்கள் மெய்யாகவே உங்கள் சபையில் புதியஉடன்படிக்கையின் சீஷர்களை உருவாக்குகிறீர்களா? அல்லது பழைய உடன்படிக்கையின்படி, மனந்திரும்பியவர்களை மாத்திரமே உருவாக்குகிறீர்களா? என்ற கேள்வியை நீங்களே கேட்டுப்பார்ப்பது நல்லது. நீங்கள் ஓர் புதியஉடன்படிக்கையின் ஊழியனா? அல்லது பழைய உடன்படிக்கையின் ஊழியனா? என்பதைப் பொறுத்தே, மேற்கண்ட கேள்விக்கு நீங்கள் **பதில்** காண முடியும்.

பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசி ஓர் தூதுவனாக மாத்திரமே இருந்தார். ஒரு தூதை அல்லது செய்தியைக் கொடுப்பதற்கு, அவருக்கு நல்ல ஞாபகசக்தி இருந்தால் மாத்திரமே போதும்.

**ஆனால் புதிய உடன்படிக்கையிலோ, பிறருக்கு கொடுக்கும்படி ஒரு தூதை நமக்குத் தராமல், “தன் ஜீவனையே” நமக்கு இப்போது இயேசு தருகிறார்.**

ஆகவே, இப்போது உங்களுக்குத் தேவையாய் இருப்பதெல்லாம், *வெறும் ஞாபகசக்தி அல்ல,* நல்ல திவ்வியமான இயேசுவின் வாழ்க்கையே உங்களுக்கு வேண்டும்!!

*இந்த வித்தியாசத்தை சற்று விளக்கமாக கூற விரும்புகிறேன்: ஒரு குழாயில் தண்ணீர் பிடித்து (தேவனிடமிருந்து ஒரு தூது பெற்று) அதைக் கொண்டுவந்து ஊற்றுவதுதான், பழைய உடன்படிக்கையின் ஊழியத்தைக் காட்டுவதாய் இருக்கிறது! இன்னும் தண்ணீர் வேண்டுமென்றால், நீங்கள்* **மீண்டும்** *குழாயடிக்குச் செல்ல வேண்டும் அதாவது, மற்றொரு செய்தியை அல்லது தூதுவைப் பெற்றுவர வேண்டும்!*

ஆனால் புதிய உடன்படிக்கையிலோ, தேவன் நமக்கு **இயேசுவின் ஜீவியமாகிய ஓர் ஜீவ ஊற்றை** நமக்குள் தந்திருக்கிறார். *அந்த ஊற்றோ நமக்குள்ளிருந்து தொடர்ச்சியாய் பாய்ந்தோடிக் கொண்டேயிருக்கும்!* ஆகவே, இப்போது ஓர் செய்தியை அல்லது ஒரு தூதுவைப் பெறுவதற்கென்று, ஒவ்வொரு சமயமும் நாம் தேவனிடம் செல்லத் தேவையில்லை! **ஆம், அவர் நம்மையே ஓர் செய்தியாக மாற்றுகின்றார்!** *நம் ஜீவியமே ஓர் செய்தியாக இருக்கிறபடியால், அந்த ஜீவியத்திலிருந்தே இப்போது நாம் பேசுகிறோம்!*

இன்று அநேக ஜனங்கள் “மொண்டு வந்து ஊற்றும்” ஊழியமே பெற்றிருக்கிறார்கள். இவ்வாறு ஊற்றுபவர்களில், சிலரிடம் ஒன்றும் இருப்பதில்லை.... சிலரோ ஊற்றுவதற்கு ஏதாகிலும் பெற்றிருப்பார்கள்!

**எப்படியிருந்தாலும் இந்த இருவருமே “மொண்டு ஊற்றும் ஊழியத்தை” மாத்திரமே பெற்றிருக்கிறபடியால், இவர்கள் இருவரின் பாத்திரமும் சீக்கிரத்தில் உலர்ந்துவிடுகிறது!**

*ஆனால், சமாரியா ஸ்திரீயிடம் இயேசு கூறியபோதோ, “நித்திய ஜீவனின் ஊற்றுக்கண்ணை” அவளுக்குள் வைப்பதாகவும், அதிலிருந்து* **ஜீவநதி தொடர்ச்சியாக புரண்டோடும்** என்றும் இயேசு கூறினார். *நித்திய ஜீவன் என்பதின் மெய்யான அர்த்தம், தேவனுடைய சொந்த ஜீவியமேயாகும்!*

*இந்த ஜீவியமே, நமக்குள்ளிருந்தும் பாய்ந்து செல்ல ஆண்டவர் விரும்புகிறார்..... ஆம், வெறும் செய்தி மாத்திரமல்ல! இதுவே புதிய உடன்படிக்கையின் ஒப்பற்ற ஊழியமாகும்!*

# 9

## “தேவ வல்லமையினால் ஊழியம் செய்பவன்”

ஒரு ஆவிக்குரிய தலைவன், தன்னுடைய சகல பணிகளையும் தேவசித்தத்தின் மையத்தில், தேவ வல்லமையைக் கொண்டு, தேவனுடைய மகிமைக்காக மாத்திரமே செய்வான்! இதனிமித்தமே, அவனுடைய பணிகளை கடைசி நாளின் அக்கினி சோதிக்கும்போது, அது பொன்னாகவும், வெள்ளியாகவும், விலையேறப்பெற்ற கற்களாகவும் விளங்கிடும் (1கொரி.3:12-15).

தேவன் நம்மை ஆயத்தப்படுத்தி, தகுதியுள்ளவர்களாய் மாற்றினாலன்றி நாமாகவே ஒருக்காலும் புதிய உடன்படிக்கையின் ஊழியர்களாய் மாறிட முடியாதென 2 கொரிந்தியர் 3:5,6 வசனங்களில் பவுல் கூறினார். இவ்வாறு, ஓர் ஆவிக்குரிய தலைவன் தேவன் தனக்குத் தந்த தகுதியின்படி ஊழியம் செய்கிறபடியால், தன்னுடைய பிரயாசங்களுக்காகத் தனக்கென எந்த கீர்த்தியையும் அவன் எடுத்துக் கொள்ளத் துணிந்திடவும் மாட்டான்!

நம் மூலமாய், பிறருக்குப் பாய்ந்து சென்று, பிறரை ஆசீர்வதிப்பது மெய்யாகவே ‘தேவனுடைய ஜீவனாகவே’ இருக்கும்பட்சத்தில், ஏதேனும் கீர்த்தியை நமக்கென எவ்வாறு எடுத்துக்கொள்ள முடியும்? நாம் ஒருபோதும் உற்பத்தி செய்யாத ஒன்றிற்கு எந்த கீர்த்தியும் எடுத்துக்கொள்ள ஒருக்காலும் முடியாததேயாகும்!

உதாரணமாய், யாரோ ஒருவர் சுட்டுக் கொடுத்த ‘கேக்கை’ உங்கள் யாவருக்கும் நான் பகிர்ந்து கொடுக்கிறேன். அதை ருசித்த நீங்கள் யாவரும் “சகோதரன் சகரியா பூணனே, மெய்யாகவே இந்த கேக் அற்புத ருசியாய் இருக்கிறது” என புகழ்ந்து மெச்சிக்கொள்ளுகிறீர்கள். இவ்வேளையில், நான் பெருமையினால் பூரித்துவிடும்படி நான் சோதிக்கப்படக்கூட மாட்டேன்!! ஏனெனில், அந்த கேக்கை நான் தயார் செய்யவில்லை, அவ்வளவுதான்!! யாரோ ஒருவர் சுட்டுவைத்த கேக்கை நான் பரிமாற மாத்திரமே செய்தேன். ஒருவேளை அந்த கேக்கை நான் சுட்டிருந்தால், அதை ருசியாகத் தயாரித்ததினிமித்தம் நான் பெருமை கொள்ள வாய்ப்புண்டு! ஆனால், வேறு யாரோ

தயாரித்த ஒன்றிற்காக, நான் எவ்வாறு கீர்த்தியை எடுத்துக்கொள்ள முடியும்?

இந்த உதாரணத்தை ஒப்பிட்டுப் பார்த்து, நாம் பிறருக்கு வழங்கியது **தேவன்** நமக்குள் உற்பத்தி செய்தவைகளா? அல்லது அவைகளை **நாமே** உற்பத்தி செய்தோமா? என்ற கேள்விகளைக் கேட்டு நாம் தெளிவடைந்திட முடியும். நம்முடைய ஊழியத்தை (கேக்) குறித்து நாம் பெருமை கொண்டிருக்கிறோமா? அப்படியானால், அந்த ஊழியத்தை (அந்த கேக்கை) நாமே உற்பத்தி செய்திருக்க வேண்டும்! அப்படியானால், அதற்கும் தேவனுக்கும் சம்மந்தமேயில்லை!! ஆனால், அதைத் தேவன் உற்பத்தி செய்திருந்தால், அதைக் குறித்து நாம் ஒருக்காலும் பெருமை அடைந்திடவே முடியாது!

திரளான ஜனங்களுக்கு அப்பங்களையும், மீன்களையும் பரிமாறிய இயேசுவின் சீஷர்கள், தங்களுக்கென யாதேனும் கீர்த்தியை எடுத்திருப்பார்கள் என உங்களால் சிந்திக்க முடிகிறதா? இல்லையே! இதைவிட, தன்னுடைய மதிய உணவுப் பார்சலை இயேசுவிடம் தந்த ‘அந்த சிறுவன்கூட’ தன் செயலுக்காக எந்தக் கீர்த்தியும் எடுத்திருக்க மாட்டான்! **இயேசு உற்பத்தி செய்ததை சீஷர்கள் பரிமாறினார்கள்... அவ்வளவுதான்!**

இவ்வாறு நாம் “உற்பத்தித்துறையில்” இல்லாமல் “விநியோகத் துறையில்” மாத்திரமே இருப்பதற்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம்! இதனிமித்தமே எல்லா நேரங்களிலும் நாம் பூரண இளைப்பாறுதலில் இருந்திடமுடியும்! நாம் விநியோகிப்பதனால் அல்ல .... நாமே உற்பத்தி செய்ய வேண்டியிருந்தால் மாத்திரமே நமக்கு மிகுந்த பிரயாசமா யிருக்கும். நாம் விநியோகப் பணியில் ஈடுபடும்போது களைப்படை வோம் என்பது உண்மையாயிருக்கலாம். ஆனால், அதுவோ ஓர் கடும் பிரயாசமாய் ஒருக்காலும் இருக்காது! நம்முடைய தேவையின் நிறைவு **தேவனாலேயே** உண்டாயிருக்கிறது. நாமாகவே எதையும் உருப்படியாக உருவாக்கிட முடியாது என்பது நமக்குத் தெரியும்! ஆகவேதான் அதைக் குறித்து நாம் முயற்சிகூட எடுப்பதில்லை!

**பரிசுத்தாவியின் ஒத்தாசை இல்லாமல் நாம் சாதித்திடும் எதுவும் மனுஷீக மானதும், நித்திய மதிப்பற்றதாகவுமே இருக்கும் என்பதை மனதில் கொள்ளக் கடவோம்!**

நீங்கள் ஜெபிக்காமலே, தேவனுடைய உதவியைத் தேடாமலே, பரிசுத்த ஆவியின் வல்லமை இல்லாமலே... நீங்கள் பிரசங்கித்து எண்ணற்ற காரியங்களைச் சாதிப்பதற்கு சாத்தியமுண்டு! நீங்கள் மிகப் பெரிய மனுஷீக திறமை கொண்டவர்களாயும், அதைக்கொண்டு பெரிய பல காரியங்களைச் செய்தவர்களாயும் இருக்கக்கூடும். ஆனால்

**தேவனுடைய பார்வையில்** *அவைகள் யாவும் மரமும், வைக்கோலும், புல்லுமாயிருப்பதை ஒரு நாளில் நீங்களே காண்பீர்கள்!!*

*நீங்கள் ஜனங்களின் மன எழுச்சியை இலகுவில் தூண்டக் கூடியவராய் இருந்தால், உங்களை மாபெரும் மக்கள் தொடர்பாளர் திலகமாய் நீங்களாகவே எண்ணிக்கொள்ள முடியும். ஆனால் "ராக்-மியூசிக்" நட்சத்திரக் கவர்ச்சியாளர்களும், ஜனங்களின் எழுச்சியை எவ்வாறு தூண்டுகிறார்கள் என்பதைச் சற்று கவனித்துப் பாருங்கள். எந்தப் பிரசங்கியும் செய்ய முடிவதைவிட 'இவர்களே' ஜனங்களை இலகுவில் எழுச்சிப் பிரவாகத்திற்குள் கொண்டுவருவதை நாம் காண்கிறோமே! இருப்பினும்... அவை யாவும் வெறுமையும், பொருளற்றதுமான உணர்ச்சிப் பெருக்கங்களேயாகும்!!*

*இதற்கொப்பாக, நீங்கள் ஓர் மாபெரும் 'புத்தி சாதுரியம்' கொண்டவராய் இருந்தால், ஜனங்களின் மூளை அறிவுக்கு விருந்தளித்து, நேரம் போவதே தெரியாமல் உங்கள் பேச்சைக் கேட்கும்படி ஜனங்களைக் கவர்ந்து கொள்ளவும் முடியும்! இதுவும் மனுஷீகமான "ஆத்தும-வல்லமையே" ஆகும். ஏனெனில், இத்தனைக்குப் பிறகும் "***திவ்விய வாழ்க்கையை***" சிறிதேனும்கூட பெற்றுக்கொள்ளாமலே ஜனங்கள் சென்றுவிட முடியும்!*

*பரிசுத்தாவியின் ஒத்தாசை இல்லாமல், உங்கள் ஊழியத்தில் நீங்கள் எதைச் சாதித்திருந்தாலும் ... அது, இந்த உலகத்தோடு அழிந்துவிடும்! இதில் எந்த சந்தேகமும் இல்லை. இவ்வாறு நான் கூறுவதை நீங்கள் நம்புகிறீர்களா? என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நான் சொல்வது உண்மை என்பதை நீங்கள் விசுவாசிப்பவராக இருந்தால், இனியும் எந்த மானிட ஏதுகரத்தைக் கொண்டும் ஊழியம் செய்து உங்கள் நேரத்தை வீணடிக்காதிருக்க நீங்கள் தீர்மானம் எடுத்துவிடுவீர்கள்!*

> **நானோ, "நித்தியத்தில் அழிந்துபோகிற" எதையாகிலும் ஒன்றைக் கட்டி, என் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை! தேவன் வழங்கும் வல்லமையைச் சார்ந்தே நான் ஊழியம் செய்திட விரும்புகிறேன். ஆம், இவ்வாறு நம்முடைய தகுதி தேவனால் மாத்திரமே உண்டாயிருக்க வேண்டும்.**

*இயேசுவின் நாட்களில், பரிசேயர்கள் மாபெரும் வேத அறிஞர்களாய் இருந்தார்கள். இவர்கள், தன்னிச்சையான சதுசேயர் களைப் போல் அல்லாமல், தங்கள் உபதேசங்களின் கோட்பாடுகளை வரையறுத்துப் பின்பற்றினார்கள். இதை நாமும் அறிந்திருக்கிறோம். எப்படியெனில், அவர்களுடைய உபதேசத்தின் பிழையற்ற தன்மையை இயேசுவே சீஷர்களுக்கு சுட்டிக்காட்டி, அவர்கள் போதித்த யாவையும் கைக்கொள்ளலாம் என்றும், அவர் அங்கீகாரம் தந்ததை மத்.23:3-ம் வசனத்தில் காண்கிறோம். அந்நாட்களிலிருந்த வேத கலாச்சாலைகளில்,*

*இந்த பரிசேயர்கள் சிறந்த பேராசிரியர்களாகப் பணியாற்றினார்கள். இந்த வேதகலாசாலைக்கு* **கமாலியேல்** *முதல்வராய் பணியாற்றி வந்தார். தர்சு பட்டணத்து சவுல், எருசலேமிலிருந்த இந்த கலாச்சாலைக்கு வந்தே பயிற்சி பெற்றார். மாத்திரமல்லாமல், அநேக பரிசேயர்கள் மிஷனெரி தலைவர்களாகவும் இருந்தார்கள். அதை இயேசு கூறுகையில், “ஒருவனை மார்க்கத்தானாக்கும்படி கடல் கடந்து பூமியெங்கும் சுற்றி வருகிறீர்கள்” என்று குறிப்பிட்டார் (மத்.23:15). இவ்வாறெல்லாம் செல்வதற்கு மிகுந்த தியாகமும், அர்ப்பணமும் வேண்டுமே!*

*இவ்வாறெல்லாம் இருந்தும், இயேசு தம்முடைய ஊழியத்தின் பெரும் பகுதியை, இந்த கோட்பாடுகள் நிறைந்த வேதகலாச்சாலைப் பேராசிரியர்களையும், அவர்களின் மிஷனெரிகளையும் எதிர்த்து நிற்பதற்கு செலவழித்தாரென்றே நாம் காண்கிறோம். அது ஏன்? என்பதை நாம் கண்டறிய வேண்டியது அவசியம்! ஏனெனில், அவ்விதம் காணத் தவறிவிட்டால், நாமும் அவர்களைப் போலவே கதியடைய வேண்டியதாயிருக்கும்... ஆண்டவர் நம்மையும் தொடர்ச்சியாய் எதிர்த்துக் கொண்டுதான் இருப்பார்!*

*இந்த மார்க்கத் தலைவர்கள் இயேசுவிடம் வரும்போதெல்லாம், அவரும், அவருடைய சீஷர்களும் “இதை ஏன் செய்தார்கள்?” அல்லது “இதை ஏன் செய்யவில்லை?” என்ற கேள்விகளை எப்போதும் கேட்டவண்ணமாய் இருந்தார்கள்! தாங்கள் கற்ற பாரம்பரியங்களை இயேசுவுக்கு சுட்டிக்காட்டி, அவரும் அவருடைய சீஷர்களும் அந்தப் பாரம்பரியங்களை எந்தெந்தப் பகுதியில் மீறினார்கள்? எனவும் சதா கோடிட்டு சொல்லிக் கொண்டேயிருந்தார்கள்!!*

*என்னுடைய ஊழியத்திலும் இதுபோன்று குறைசொல்லி விமர்சிக்கும் மனப்பான்மையைக் கொண்ட “விசுவாசிகளை” ஏராளமாய் நான் கண்டிருக்கிறேன். நான் ஏதாகிலும் சில இடங்களில் குறிப்பிட்ட சில வார்த்தைகளையோ அல்லது உதாரணங்களையோ சுட்டிக்காட்டி என்னிடம் இவர்கள் கேள்வி கேட்பதுண்டு. இதுபோன்றவர்கள் “*__வசனங்களைக் குறித்த தர்க்கங்களில்__*” பிரியமா யிருக்கிறார்கள் என்றும், இவ்வித தர்க்கங்களை விட்டு தீமோத்தேயு விலக வேண்டுமென்றும் பவுல் அறிவுரை கூறினார் (1தீமோ.6:4). இதுபோன்றவர்கள், தங்கள் சொந்த பக்தி வாழ்க்கையில் கொண்ட சரிவைக் குறித்து அக்கறை இல்லாதவர்கள் போலவே காணப்படுகி றார்கள்! இவர்களைக் காணும்போது, செத்த மனிதனுடைய கைகளில் பத்து விரல்களும் இருக்கிறதா என எண்ணிப்பார்க்கும் ஜனங்களையே எனக்கு ஞாபகப்படுத்துகிறது! செத்தவனுடைய கையில் ஒரு விரல் காணவில்லை என்றால், அதைக் குறித்து மாபெரும் தர்க்கத்தையும், கூக்குரலையும் இவர்கள் எழுப்புவார்கள்!!*

*விரல்கள் எல்லாம் சரியாக இருந்து நகங்களும் கெட்டியாய் இருக்கக்கூடிய ஓர் மரித்த மனிதனை விட, ஐந்து விரல்களை இழந்த ஓர் உயிர் உள்ள மனிதனைப் பெற்றிருக்கவே நான் விரும்புகிறேன்! இன்று ஏராளமான வேத அறிஞர்கள் செத்தநிலையில் வாழ்ந்துகொண்டு சரியான உபதேசங்களைப் பேசுகிறார்கள்!! ஆம், "இவர்கள் செத்தவர்கள், ஆனால் சரியானவர்கள்".*

**இதைவிட, முழுக்கு ஞானஸ்நான உபதேசத்தில் தவறாய் இருந்துகொண்டு "பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கும்" ஒரு சகோதரனோடு ஊழியம் செய்ய நான் விரும்புவேனேயல்லாமல், சரியான உபதேசத்தின்படி ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டு, சுவற்றில் அறைந்த ஓர் ஆணியைப் போல் செத்தநிலையில் இருக்கும் ஒருவரோடு சேர்ந்து ஊழியம் செய்ய, நான் ஒருக்காலும் விரும்பவே மாட்டேன்!**

*இங்கே நான் சொல்லுவதை தவறாகப் புரிந்துகொள்ள மாட்டீர்கள் என்றே நம்புகிறேன். என் கிறிஸ்தவ ஜீவியத்தில், உபதேச ரீதியில் நான் எப்போதும் வலிமையோடுதான் இருந்துவருகிறேன். தேவனுடைய முழு ஆலோசனைகளையும் பிரசங்கிக்காததினிமித்தம், நான் பல கிறிஸ்தவ குழுக்களை விட்டு வெளியேறி வந்திருக்கிறேன். ஆகவே, இங்கு நான் உபதேசத்தைக் குறைவாய் மதிப்பிட்டு கூறவில்லை. நான் இங்கு கூற முயற்சிப்பதெல்லாம், ஜீவியமும், ஆவிக்குரிய தன்மையுமே அதிக முக்கியம் வாய்ந்தது என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான்!*

ஒருசமயம் பரிசேயர்களை இயேசு கடிந்துகொண்டு திருத்திய போது, அவருடைய சீஷர்கள் அவரிடம் வந்து "பரிசேயர்கள் உம்முடைய வார்த்தைகளைக் கேட்டு இடறல் அடைந்தார்கள் என்பதை அறிவீரா?" என்றனர். அதற்கு இயேசு பதில் கூறும்போது, அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராய் இருக்கிறபடியால் அவர்களை விட்டுத் தள்ளுங்கள் எனக் கூறி, "என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்" என்றும் கூறினார் (மத்தேயு **15:12,13**). இங்கு இயேசு குறிப்பிட்ட கடைசி வாக்கியத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் பிரசங்கிக்கும்போதெல்லாம், ஓர் விதையை நீங்கள் விதைக்கிறீர்கள். அவ்வாறு நீங்கள் விதைப்பது **தேவனிடமிருந்து வராதிருந்தால்,** அது ஒருநாள் பிடுங்கப்பட்டுப் போகும் என்ற உண்மையைத்தான் இயேசு இங்கு வெளிப்படுத்திக் கூறினார்.

ஆகவே, பரிசுத்த ஆவி மூலம் பெற்ற பெலத்தின்படி நாம் ஊழியம் செய்தால் மாத்திரமே அந்த ஊழியமானது நித்திய காலமும் நிலைத்திருக்கும்! இதற்கு மாறாக, நாம் தேவனுக்குச் செய்யும் ஊழியத்தை ஜெபமில்லாமலும், 'உதவியற்ற நிலையில்' தேவனையே

சார்ந்து கொள்ளாமலும், அவருடைய ஆவியின் அனுக்கிரகம் இல்லாமலும் செய்து வந்தால், ஒரு நாளில் அந்த ஊழியம் நிச்சயமாய் வேரோடு பிடுங்கப்பட்டுவிடும்!!

கிறிஸ்தவ ஊழியத்தில் வேறு பல பகுதிகள் உண்டு! அவைகளுக்கு பரிசுத்தாவியின் பெலன் நமக்குத் தேவையில்லை!! அவைகளுக்குத் தேவையாய் இருப்பதெல்லாம் ஏராளமான பணமும், திறமைமிக்க நிர்வாகமுமேயாகும்!!

உதாரணமாய், ஒரு கிறிஸ்தவ கான்பரன்ஸ் கூட்டத்தை நீங்கள் ஒழுங்கு செய்ய வேண்டுமென்றால், அதற்கென ஏராளமான பணிகள் செய்யப்பட வேண்டும். கூட்டத்திற்கென ஓர் பெரிய ஹால் வாடகைக்கு எடுக்கப்படவும், கூட்டத்திற்கு அழைப்பு அனுப்பப் படவும், தங்குமிடமும் உணவு வசதியும் ஏற்பாடு செய்யப்படவும் வேண்டும்! ஆனால் ஓர் கிறிஸ்தவனாய் இல்லாமலே, நிர்வாகத்திறமை கொண்ட ஒருவன்கூட இவை யாவற்றையும் செய்து முடித்திட முடியுமே!! கிறிஸ்தவ கான்பரன்ஸ் கூட்டங்களை விட, உலகத்தார் நடத்தும் கான்பரன்ஸ் கூட்டங்கள் நேர்த்தியாய் ஒழுங்கு செய்யப் படுவதை நாம் காண்கிறோமே!

**ஆனால் கிறிஸ்தவ கான்பரன்ஸ் கூட்டங்களில் நித்தியகாலமாய் நிலைத் திருக்கப்போவதெல்லாம் “கர்த்தருடைய வார்த்தையின் ஊழியமேயாகும்”.... இந்த ஊழியமோ, ஆவியின் அபிஷேகத்தின் நிறைவினால் நிறைந்தே செய்யப்பட வேண்டும்!**

நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியதின் அவசியத்தை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஒரு கான்பரன்ஸை சீராய் நடத்துவதற்கு அவைகள் அனைத்தும் தேவைதான்! ஆனால் பரிசுத்தாவியின் பெலத்தினால் செய்யப்படுபவைகள் மாத்திரமே நித்தியமானவைகள் என்பதை நாம் எப்போதும் ஞாபகத்தில் கொள்ளக்கடவோம்.

இவை யாவற்றையும், நம் சொந்த ஊழியத்திற்கு ஒப்பிட்டுப் பார்க்கக்கடவோம். “நம் ஊழியத்தின் ஏதாவது ஒரு பகுதி மனுஷீக முயற்சியினாலும், சாதுரியத்தினாலும், செய்யப்பட்டதென தள்ளப் படக்கூடுமோ?” என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுப் பார்க்கக் கடவோம். நாம் நேர்மையுள்ளவர்களாயிருந்தால், மேற்கண்ட கேள்விக்கு நாம் பெறும் பதில் நம்மை ஆச்சரியப்படச் செய்யக்கூடும் என்றே கருதுகிறேன்!

இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார்! எந்த ஜீவனுமில்லாமல், பரிசுத்தாவியின் அபிஷேகம் ஏதுமில்லாமல் வெறும் தகவல்களைக் கொண்டுவந்து தரும் அறிவு

பெருத்த வேதகலாச்சாலை பேராசிரியர்களையும், மிஷனெரி தலைவர்களையும் **அன்றுபோலவே இன்றும்** இயேசு எதிர்த்தே நிற்கிறார்! அப்போஸ்தலர்களும் தங்களுடைய நாட்களில், இதுபோன்றவர்களிடம் போராட்டம் உடையவர்களாயிருந்தார்கள்! இயேசுவின் அடிச்சுவடுகளை நாம் பின்பற்றுகிறவர்களாய் இருந்தால், **இன்று நம்முடைய நாட்களிலும்** இதுபோன்ற ஜனங்களிடம் போராட்டம் உடையவர்களாகவே இருப்போம்!

'அபிஷேகம் இல்லாமல் ஊழியம் செய்யும்' ஜனங்களைப் பிரியப்படுத்த முயற்சித்து... ஆண்டவருக்குப் பிரியமில்லாமல் போவதைவிட, இவர்களுக்கு எதிராய் கொண்ட போராட்டத்தில் நின்று கர்த்தரோடு இசைந்து நடக்கவே நான் விரும்புகிறேன்! நான் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு, இந்த முழு உலகத்திற்கும் நேர் விரோதமாய் நிற்பதுதான் 'விலைக்கிரயமாய் இருக்குமென்றால்' அவ்விதமே எதிர்த்து நின்றிட நான் மிகுந்த ஆயத்தத்துடன் இருக்கிறேன்! ஏனெனில், நாம் மனுஷர்களைப் பிரியப்படுத்துகிறவர்களாய் இருந்தால், நாம் ஒருக்காலும் **கிறிஸ்துவின் ஊழியர்களாய்** இருந்திடவே முடியாது (கலாத்தியர்.1:10).

ஆகவே, நம்முடைய ஊழியத்தில் யாதொரு சகாயமும் இல்லாத நிர்ப்பந்த நிலையில் **தேவனையே சார்ந்து நடந்து, நம்மீது ஆவியின் அபிஷேகம் எப்போதும் தங்கியிருப்பதற்கு** தீராத வாஞ்சை கொண்டவர்களாய் இருந்திடக்கடவோம்!

# 10

## “ஆவிக்குரிய அதிகாரத்தை பிரயோகிப்பவன்”

ஒரு ஆவிக்குரிய தலைவன், ஆவிக்குரிய அதிகாரத்தோடு ஊழியம் செய்திடுவான்!

இயேசுவுடைய பிரசங்கத்தைக் கேட்டு திரளான ஜனங்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். ஏனெனில், பரிசேயர்கள் தங்களுக்குப் பல வருடங்களாய் போதித்த முறைக்கும், இயேசு போதித்த முறைக்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்டதினாலேயே அவ்வாறு ஆச்சரியம் அடைந்தார்கள்! பரிசேயர்களுக்கு, ஏராளமான அறிவுத்திறன் இருந்தது. இயேசுவும்கூட, அவர்களைக் காட்டிலும் அறிவுத்திறன் கொண்டவராகவே இருந்தார். ஆனால், **அவர்** பேசியதைக் கேட்ட ஜனங்களைக் கவர்ந்ததெல்லாம் “அவருடைய அறிவுத்திறன் அல்ல... மாறாக, **அவரிடமிருந்த அதிகாரமேயாகும்!**” (மத்தேயு 7:29).

நம்முடைய ஊழியத்தில் நாம் அறிவைப் பெற்றிருந்தும் “ஆவிக்குரிய அதிகாரம்” காணப்படவில்லையென்றால், நாமும் பரிசேயர்களாகவே முற்றுப்பெறுவோம். இயேசு பேசிய வார்த்தைகள் அனைத்தையும் ‘தேவன் பின்னின்று’ ஆதரித்தார்! இதுவே, ஆவிக்குரிய அதிகாரத்தோடு பேசுவதின் பொருளாகும்!!

யோவான் 15:26,27 வசனங்களில் தன் சீஷர்களிடம் இயேசு கூறிய போது, “அவர்களோடு சேர்ந்து பரிசுத்தாவியானவர் சாட்சி கொடுப்பார்” எனக் கூறினார். அதாவது, அவர்கள் எப்போதெல்லாம் பிரசங்கித்தார்களோ, “அவர்கள் பேசியதை” பரிசுத்தாவியானவர் ஆதரித்தார்! என்பதே அதன் பொருளாகும். இவ்விதமே என்னுடைய ஊழியம் எக்காலத்தும் இருந்திட நான் விரும்புகிறேன். நான் இயேசுவைக் குறித்து சாட்சி பகரும்போது, பரிசுத்தாவியானவரும் “நான் பேசிய வார்த்தைகளுக்கு” சாட்சி பகர்ந்திட வேண்டும்.

என்னுடைய வார்த்தைகளை கவனித்துக் கேட்பவர்களிடம் பரிசுத்தாவியானவர் வந்து, “இந்த வார்த்தைகளை கவனித்துக் கேள்! மெய்யாகவே இவை அனைத்தும் தேவனிடமிருந்து வருபவைகள்!” என அவர்களிடம் கூறவேண்டும். அப்போதுதான் நான் திவ்விய

அதிகாரத்தோடு பேசிட முடியும். ஆனால் நான் "இயேசுவைப் பற்றிய" (About Jesus) துல்லியமான சாட்சிகளை மாத்திரமே பேசிக் கொண்டிருந்தால், நான் பேசுவதை பரிசுத்தாவியானவர் ஒருக்காலும் ஆதரிக்கவேமாட்டார். அதனிமித்தம், நான் "துர்உபதேசம் கொண்டவன்" என அழைக்கப்படப்போவதுமில்லை. ஏனெனில், "அவரைப்பற்றி பேசிய" உபதேசங்கள் அனைத்தும் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் சுவிசேஷ அடிப்படை கொண்டவைகளேயாகும். ஆனால், நானோ ஜீவனை அல்ல.... 'மரணத்தையே' இன்னமும் ஜனங்களுக்கு ஊழியம் செய்கிறவனாய் இருந்து கொண்டிருப்பேன்.

நாம் எத்தனையோ வழிகளில் ஜனங்கள்மீது அதிகாரத்தைப் பிரயோகித்திட முடியும். 1) மனுஷீக வழிகள் 2) மார்க்க ரீதியான வழிகள் 3) ஆவிக்குரிய வழிகள். இந்த மூன்றிற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உண்டு. இயேசு கொண்டிருந்த அதிகாரம் மனுஷீகமாகவோ அல்லது மார்க்க ரீதியாகவோ இருக்கவில்லை. இப்பூமிக்குரிய ஒரு ராஜாவைப் போலவோ அல்லது இஸ்ரவேலின் மார்க்கத் தலைவர்களைப் போலவோ அவர் ஒருபோதும் பேசியதோ அல்லது கிரியை நடப்பித்ததோ இல்லை! அவர் கொண்டிருந்த அதிகாரம் பரத்திற்குரிய திவ்வியமானதாகவும், ஆவிக்குரியதாகவுமே எப்போதும் இருந்தது!

மனுஷீக அதிகாரத்திற்கு ஓர் நல்ல உதாரணம், இன்று சினிமா நட்சத்திரங்களும், நவீன இசைக்குழுவினரும் அப்பியாசிக்கும் அதிகாரத்தைக் கூறலாம். இவர்களை, இன்று ஜனங்கள் ஆராதிக்கும் விதத்தையும், அவர்கள் நிமித்தம் பித்தாய் திரிவதையும் சற்று கவனித்துப் பாருங்கள். இவர்களைக் காண்பதற்காக வெயில் என்றும் பாராமல், மழை என்றும் பாராமல், மணிக்கணக்கில் ஜனங்கள் காத்துக் கிடக்கிறார்களே! அந்த அளவிற்கு ஜனங்கள்மீது சொல்லொண்ணா அதிகாரத்தை இவர்கள் பெற்றிருக்கிறார்கள். தங்கள் மனுஷீக கவர்ச்சியையும் திறமைகளையும் கொண்டு ஜனங்களின் மனதையும், உணர்வு எழுச்சிகளையும் ஆளுகை செய்து.... அதன்மூலமாய், தங்களுக்கு ஜனங்கள் பணத்தை வாரித் தரும்படியும்கூட செய்து விடுகிறார்கள்! இதுபோன்ற அதிகாரமே இன்றைய கிறிஸ்தவத்திலும், அநேக பிரசங்கிகளிடமும் பெரும்பாலுமாய் காணப்படுகிறது. இவை அனைத்தும் **மனுஷீக–ஆத்தும வல்லமையேயல்லாமல்,** பரிசுத்தாவியின் வல்லமை அல்லவே அல்ல!

மனுஷீக அதிகாரத்தை அப்பியாசப்படுத்துவதற்கு "**பணம்**" மற்றொரு ஏதுகரமாயிருக்கிறது. இன்றைய உலகமானது ஆயுதங்களைப் பெற்றிருப்பவர்களால் ஆளுகை செய்யப்படாமல் "பணத்தை"

*பெற்றிருப்பவர்களாலேயே ஆளப்பட்டு வருகிறது! யுத்தங்களுக்கு இன்று பணமே முக்கிய தேவை! அரசியல் தேவைகளுக்கும் பணமே இன்று முக்கிய தேவை! இன்று ஒவ்வொரு தேசத்திலுமுள்ள வியாபார சமுதாயத்தினர் தாங்கள் செழித்திருப்பதற்கு அரசியல் தலைவர்களைப் பிரியப்படுத்தும் நிலையில் இருக்கிறார்கள். அரசியல் தலைவர்களும், “தங்களுடைய பங்காக” இந்த வியாபார சமுதாயத்தினரை பணம் பெறுவதற்காகப் பிரியப்படுத்தி... அதன்மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுகிறார்கள்! ஆகவே, இன்றைய உலகில் பணம் சொல்லி முடியா வல்லமை பெற்றிருக்கிறது. இன்றைய கிறிஸ்தவத்திலும் இதே வல்லமைதான் இப்போது பயன்படுத்தப்படுகிறது. ஏராளமான நன்மைகளைப் பணத்தினால் சாதித்திட முடியும் என்பது உண்மைதான்! ஆனால், பணம் வலிமை கொண்டதாயிருக்கிறபடியால் .... ஏராளமான சேதங்களையும் உண்டாக்குகிறதே!*

> **எந்த கிறிஸ்தவ ஊழியம் பொருளாதார வலிமையினால் ஆளுகை செய்யப்படுகிறதோ, அந்த ஊழியம் ஒருபோதும் ஆவிக்குரிய ஊழியமாய் இருந்திடவே முடியாது! தேவனுக்கு நேர்விரோதமான எதிரியாகவே “பணத்தை” இயேசு குறிப்பிட்டார்.**

*மனிதர்களைத் தன்னண்டை ஈர்ப்பதற்கு தேவனும், உலகப் பொருளுமாகிய (ஐசுவரியம்) இரண்டு எஜமான்களே ஒருவருக்கொருவர் எதிரும் புதிருமாய் போட்டிக்களத்தில் நிற்பதாக இயேசு குறிப்பிட்டார் (லூக்கா 16:13).*

*பிறருக்கு பணத்தைக் கொடுத்து, அதன்மூலம் ஒரு கிறிஸ்தவ தலைவன் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் நிச்சயமாய் ஆவிக்குரிய அதிகாரம் அல்ல. இன்று இந்த உலகத்திலும், கிறிஸ்தவத்திலும் யார் அதிக பணவலிமை கொண்டிருக்கிறார்களோ, அவர்களே ஆட்டிப் படைக்கிறார்கள்! இந்த ஜனங்களும், யாரிடத்தில் பணம் இருக்கிறதோ ... ‘அது யாராயிருந்தாலும்’ அவர்களுக்குத் தலைவணங்குகிறார்கள்! நீங்கள் பணம் கொடுத்துவிட்டால் போதும், நீங்கள் என்ன சொன்னாலும் அதை ஆமோதிப்பார்கள்! நீங்கள் என்ன சொன்னாலும், அதைச் செய்வார்கள்! இதுவே இன்றைய வியாபார கம்பெனிகளில் உண்மையாயிருக்கிறது... துரதிருஷ்டவசமாய், இதுவே கிறிஸ்தவ ஸ்தாபனங்களிலும் உண்மையாயிருக்கிறது!?*

*அநேகமாக ஒவ்வொரு பாஸ்டரும் தன்னுடைய சபையின் “நிர்வாக அங்கத்தினர்களாலேயே” ஆளப்பட்டு வருகிறார்கள். ஏனெனில், இந்த நிர்வாகக் குழுவே இவரின் “சம்பளத்தை” நிர்ணயம் செய்கிறது! இதுபோன்ற நிலையிலிருக்கும் ஒரு பாஸ்டர், அந்த நிர்வாகக் குழுவினர்கள் பாதிக்கப்படும்படியாய் யாதொன்றையும்*

பேசிவிட துணிவு கொண்டிருக்கமாட்டார்! பொதுவாய் எல்லா சபைகளிலும், தங்களிடமுள்ள 'ஐசுவரியவான்களையே' நிர்வாகக் குழுவில் வைத்திருக்கிறார்கள்.

**உண்மை என்னவென்றால், வேறு யாரைக் காட்டிலும் இந்த ஐசுவரிய வான்கள்தான் அதிகமாய் கடிந்து கொள்ளப்பட வேண்டியவர்களாயிருக்கி றார்கள்! ஆனால் தங்கள் வாய் நிறைய பணத்தைத் திணித்துக் கொண்ட ஒரு பாஸ்டர் இவர்களை எப்படி கடிந்து கொள்ள முடியும்! ஆம், அவரால் அது முடியாது!**

இதற்குப் பதிலாய், அந்தப் பணக்காரர்கள் "எதை" விரும்புகிறார் களோ "அதை" மாத்திரமே பேசி, அவர்களின் காதுகளுக்கு கிளுகிளுப் பூட்டுகிறார்கள்! அப்படிச் செய்யாமல், அவர்களுக்குப் பிரிய மில்லாமல் அவர் நடந்து கொண்டால் அவ்வளவுதான், அவருக்குத் தரவேண்டிய வருடாந்திர பண உயர்வை அவருக்குத் தரமாட்டார்கள் .... பின் என்ன, அவரைத் தங்கள் வழிக்குக் கொண்டுவர இது ஒன்றே அவர்களுக்குப் போதும்!? ஆம், அவர் பணத்தட்டுப்பாட்டினால் தன் ஏழைக்குடும்பம் அடையப்போகும் இன்னல்களை உடனடியாக சிந்திக்கத் தொடங்கி விடுவார். தன்னுடைய வசதியான பாஸ்டர் குடியிருப்பை விட்டு வெளியேற வேண்டியதாயிருக்கும்! நல்ல பள்ளியிலிருந்து தன்னுடைய பிள்ளைகளை மாற்ற வேண்டியதா யிருக்கும்.... இவ்வித சிந்தைகள் அவரை அச்சுறுத்தி, நிர்வாகக் குழுவிடம் பணியச் செய்து.... நிர்வாகக் குழுவின் வழிக்கு அமைதியாய் வந்து அவரை நின்றுவிடச் செய்யும்! இன்று இந்தியாவில் தீர்க்கதரிசிகள் இல்லாது போனதற்கு இதுவே முக்கிய காரணமாகும்!

**'கிட்டத்தட்ட எல்லா பிரசங்கிகளுமே' பணத்தின் கண்ணிக்கு இரையாகி விட்டார்கள். இந்நிலைக்கு வந்துவிட்ட பிரசங்கிகள் எங்ஙனம் ஆவிக்குரிய அதிகாரத்தை அப்பியாசப்படுத்த முடியும்?**

ஒரு குழுவின்மீது அதிகார பொறுப்புடைய சகோதரர்களுக்கு, நான் தயவாய் சொல்ல விரும்புவது யாதெனில் "அவர்களில் யார் மீதாவது பணத்தின் மூலம் நீங்கள் ஆளுகை செய்தால்" நீங்கள் அப்பியாசப்படுத்தும் அந்த ஆளுகை, ஒருக்காலும் ஆவிக்குரிய அதிகாரமாய் இருந்திடவே முடியாது!

ஒருவரைக்கூட, பணத்தின் மூலமாய் இயேசு ஆளுகை செய்ததேயில்லை. அவருடைய சீஷர்களில் ஒருவர்கூட பணத்திற்காக அவரைப் பின்பற்றவுமில்லை! அவ்விதம் கொடுப்பதற்குமே, எந்தச் சொத்தும் அவரிடம் இல்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும்! அவர்களுக்கு அவர் தருவதாகக் கூறியதெல்லாம், உபத்திரவங்களும், துன்பங்களும் மாத்திரமே... ஊழியம் செய்வதற்காக 'ஓய்வுகால

சலுகைகளைக்கூட’ அவர்களுக்கு அவர் வாக்குத்தரவில்லை. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடும் படியே போதித்தார். இவ்வாறு தேவனால் அவர்களின் “குறைந்தபட்ச தேவைகளான” உணவும், உடையும் போன்றவைகளை **அவர்களின் பரம பிதா நிச்சயம் தருவார்** என மாத்திரமே கூறினார்.

இந்த உலகத்தில் சுவிசேஷ ஊழியம் செய்யும்படி தன் அப்போஸ் தலர்களை இயேசு அனுப்பியபோது, எந்தப் பணமும் அவர்களிடத்தில் தராமலேதான் அனுப்பினார். அப்போது மாத்திரமே அந்த அப்போஸ் தலர்கள் ஒருவரையும் “**பணத்தின் மூலமாய்**” தங்கள் பட்சம் ஒருக்காலும் ஈர்த்திட முடியாதவர்களாயிருப்பார்கள்! இந்த நிலையில் அவர்கள் இருந்தபோதும், இன்று நம்மிடமுள்ள எல்லா பணத்தையும், எலக்ட்ரானிக் சாதனங்களையும் கொண்டு, மற்றும் அநேக மாநாட்டுக் கூட்டங்களையும் வைத்து செய்திடும் ஊழியத்தைக் காட்டிலும் **மேலான சுவிசேஷப் பணியை** அன்று அவர்கள் செய்து முடித்தார்கள்!

பொருளாதார வலிமையை தேவனுடைய ஊழியத்தில் பயன்படுத்துவதில் நாம் மிகுந்த ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இல்லையென்றால், அது நம்மிடமுள்ள ஆவிக்குரிய அதிகாரத்தைப் பறித்துச் சென்றுவிட முடியும்!

நாம் மிகுந்த ஜாக்கிரதையாய் இருக்கவேண்டிய மற்றொரு மனுஷீக வலிமை “**இசையின் வலிமை**” ஆகும்! இன்றைய “ராக்-மியூசிக்” ஜனங்களை ஈர்த்திடும் இழுவையானது... அவர்களை ‘வெறி கொள்ளச் செய்து’ தற்கொலை செய்யத் தூண்டும் இடத்திற்கே தள்ளிவிட முடியும். இவ்வாறு, இன்றைய உலகில் “வல்லமை” என்ற ரூபத்தில் ஏராளமானவைகள் தாண்டவமாடுவதை நாம் காண்கிறோம். இதுபோன்றவைகளையெல்லாம் “ஆவிக்குரிய வல்லமைகள்” என நாம் தவறாய் எடுத்துக்கொள்ளாதிருக்க கவனம் கொண்டிருக்கக்கடவோம்.

**ஆவிக்குரிய வல்லமைக்கும், மனுஷீக ஆத்தும வல்லமைக்கும் உள்ள வித்தியாசத்தை நம்மால் காண முடியாதவர்களாயிருந்தால், “ஊழியத்தின் வெற்றியைக்” குறித்த தவறான கணிப்பில் நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்ள முடியும்!**

நம்மில் சிலர், பணத்தின் வலிமையையோ அல்லது இசையின் வலிமையையோ பயன்படுத்தாதிருந்தாலும், “**புத்திக்கூர்மையின் வல்லமையை**” பயன்படுத்துகிறவர்களாய் இருந்திட முடியும். இதுவும், வெறும் ஆத்தும வல்லமைக்குரியதேயாகும். ஆவிக்குரிய அதிகாரத் திற்கு முன்பாக இந்த ஆத்தும வல்லமைக்கு கடுகளவும் மதிப்பில்லை! நம் கல்வியின் புத்திக்கூர்மை அடிப்படையில், ஜனங்களைக் கவர்ச்சித்து நாம் கூறுவதை அவர்கள் கேட்கும்படி செய்துவிடலாம்! நீங்கள் பெற்ற

"வேத வல்லுநர்" தகுதியைக் கொண்டு, பேதுரு தன் நிருபங்களில் எழுதியவைகளுக்கான மூல கிரேக்க பாஷையின் அர்த்தத்தை விளக்கிக் கூறிடவும் முடியும். நீங்கள் கூறும் விளக்கத்தை அந்தப் பேதுருவே கேட்டாலும், உங்கள் சாதுர்ய விளக்கம் அவருக்கே புரியாது!

ஆனால் ஆவிக்குரிய மனிதனோ, வேதாகமத்தை முற்றிலும் வித்தியாசமான வழியில் போதிப்பவனாக இருப்பான். அதன்மூலமாய் கிட்டும் பலனும், வேறெதைக் காட்டிலும் அபூர்வ வித்தியாசம் கொண்டதாய் இருக்கும். ஒரே வேதாகமத்தை மனுஷீக புத்திக் கூர்மையின் வல்லமையால் போதிக்கவும் முடியும் ... பரிசுத்தாவியின் வல்லமையால் போதித்திடவும் முடியும். இந்த இரண்டு போதக முறைகளுக்கும் இடையில் ஏராளமான வித்தியாசம் இருக்கிறது! அதேபோல், அவைகள் கொண்டுவரும் பலன்களிலும் ஏராளமான வித்தியாசங்கள் இருக்கிறது!

தலைமையில் உள்ளவர்கள் தங்கள் ஊழியத்தை "ஆவிக்குரிய அதிகாரத்தோடு" செயல்படுத்திக் காட்டவேண்டியதே, இன்றைய சபையின் பிரதான தேவைகளில் ஒன்றாய் இருக்கிறது!

**ஆவிக்குரிய அதிகாரம், மார்க்க ரீதியான அதிகாரத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். இன்றைய கிறிஸ்தவ உலகில், நாம் பெரும்பாலும் காண்பது மார்க்க ரீதியான அதிகாரமேயாகும்! அந்த வலிமையைக் கொண்டுதான், இந்தத் தலைவர்கள் தங்கள் மந்தையை அடக்கி ஆளுகிறார்கள்!**

ஒரு ஸ்தல சபை, தன்னுடைய தலைவரைத் தெரிந்து கொள்ள ஒவ்வொருவருக்கும் ஓட்டுரிமை வழங்கும். "**ஜனநாயக** (DEMOCRACY) **அடிப்படையில்**" நடத்தப்பட தேவன் விரும்புவதில்லை. அதைப் போலவே, ஏழை விசுவாசிகளை தனக்குப் பணிந்து கீழ்ப்படியச் செய்யும் ஓர் வலிய **சர்வாதிகார தலைவனால்** (DICTATORSHIP) நடத்தப் படுவதையும் தேவன் விரும்புவதில்லை!

நாம் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதினால், ஜனங்கள் மீது ஒரு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வது மிக எளிதேயாகும்! நம் ஊழியம் அவர்களுக்குப் பேருதவியாய் இருக்கிறபடியால், ஜனங்கள் அந்த ஊழியத்தை வெகுவாய் மெச்சிக்கொள்வார்கள். நம்மைப் புகழும் இவ்வித ரசிகர்களுக்கு "குட்டி தேவர்களாய்" மாறுவதும் இச்சமயத்தில் நமக்கு மிக இலகுவாய் இருக்கும்! இந்த அபாயம் நமக்கு ஏற்பட்டு விடாதபடிக்கு, நாம் எப்போதும் பயந்து ஜீவிக்கக்கடவோம். நாம் பிறருக்கு வழங்கும் பரிசுகள் மூலமாய், அவர்கள்மீது 'அதிகாரம் செலுத்த சாதகமாய்' பயன்படுத்திக் கொள்ளவும் ஒருபோதும் முயற்சிக்கக்கூடாது. ஜனங்களின் வாழ்க்கையை நம்முடைய பிடியில் வைத்து நடத்துவதற்கு நாம் ஒருக்காலும் முயற்சிக்கக்கூடாது.

**ஒருவேளை, அவர்களாகவே நம்மைப் பற்றிக் கொள்வதை நாம் கண்டால், அவர்களின் சொந்த நன்மையையும், அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சி யையும் மனதில் கொண்டு.... அவர்களை இதமாக கர்த்தரிடத்தில் தள்ளிவிட வேண்டும்!**

*நம்முடைய அழைப்போ, கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதே யல்லாமல், நம்முடைய சொந்த குட்டி சாம்ராஜ்ஜியங்களையல்ல! “இவைகளே” நாம் மெய்யான ஆவிக்குரிய அதிகாரத்தைப் பெறுவதற்கான வழியாய் இருக்கிறது!*

*தேவன் தந்த ஆவிக்குரிய அதிகாரத்தைப் பவுல் அவ்வளவாய் பெற்றிருந்தபடியால், கொரிந்திய சபையிலிருந்த ஒரு மனுஷனை அவனுடைய* **ஆத்துமா இரட்சிக்கப்படும்படியாக,** *அவனுடைய* **மாம்சத் தையோ அழிவுக்காக** *சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தார்! எனக் காண்கிறோம் (1கொரி.5:5).* **இதனிமித்தமாய்,** *அந்த மனுஷன் பின்பு இரட்சிக்கப்பட்டு மனந்திரும்பி சபைக்கு மீண்டும் வர ஆரம்பித்தான். அந்த சபையைத் தோற்றுவித்த தகப்பனாய், பவுல் இருந்தபடியால்தான், வேறு யாரும் அப்பியாசப்படுத்த முடியாத ஆவிக்குரிய அதிகாரத்தைக் கொண்டவராய் இருந்தார்!* **ஜனங்களை ஊன்றக்கட்டும்படியாகவே,** *இந்த அப்போஸ்தலர்களுக்குப் பரத்தின் திவ்விய அதிகாரம் ஆண்டவரால் அருளப்பட்டிருந்தது! இவ்வித* **அன்பின் அடிப்படையில் கொண்ட அதிகாரமே** *நமக்கும் தேவையாயிருக்கிறது! இந்த “ஆவிக்குரிய அதிகாரம்” அப்போஸ்தலனாகிய பவுலின் ஜீவியத்தில் பலமுறை வெளிப்படுவதைக் காண்பது, நமக்கு மிகுந்த சவாலாய் இருக்கிறது!*

*இயேசுவை 3½ ஆண்டுகள் மிக நெருக்கமாய் கவனித்துப் பார்த்த சீஷர்கள், தங்களுடைய ஆலயங்களிலிருந்த தலைவர்களி லிருந்தும், பிரசங்கிகளிலிருந்தும், இவரோ முற்றிலும் வேறுபட்ட வராய் இருந்ததைக் கண்ணாரக் கண்டார்கள்!*

**அவரைப்போல் ஜீவித்த அல்லது அவரைப் போல் பேசிய ஒருவரைக்கூட தங்கள் வாழ்வில் அவர்கள் சந்திக்கவேயில்லை! அவருடைய ஜீவியத்திலும், அவருடைய ஊழியத்திலும் அவர் அவ்வளவாய் அதிகாரம் கொண்டவராய் இருந்தார்!**

*இயேசுவை சந்திக்கும்வரை, ஆலயத்திலிருந்த தங்கள் ஆசாரியர் களிடத்திலும், பிஷப்புகளிடத்திலும் தாங்கள் கண்டவைகளையே “ஆவிக்குரிய ஊழியம்” என எண்ணிக் கொண்டிருந்தார்கள்! ஒருவேளை, அவர்கள் இயேசுவை ஒருபோதும் சந்திக்க முடியாது போயிருந்தால், அந்த ஆசாரியர்களையும் பிஷப்புகளையுமே தங்கள் ‘முன் மாதிரியாய்’ வைத்திருப்பார்கள்! ஆனால் இப்போதோ, தாங்கள்* **பின்பற்றக்கூடிய ஓர் நல்ல புதிய மாதிரியைப்** *பெற்றுவிட்டார்கள்!*

*இன்று நம் இளைய தலைமுறைக்குத் தேவையாயிருப்பதெல்லாம், அவர்கள் பின்பற்றுவதற்கு ஏதுவான நல்ல மாதிரிகளேயாகும்! அந்த நல்ல மாதிரிகளாய்....* **ஆவிக்குரிய அதிகாரம் நிறைந்த** *புருஷர்களாய் திகழ வேண்டிய பொறுப்பு நம்மையே சார்ந்திருக்கிறது!*

# 11

## “சகல பயத்திலிருந்தும் விடுதலை பெற்றவன்”

ஒரு ஆவிக்குரிய தலைவன், மனுஷர்களுக்குப் பயந்தோ அல்லது சூழ்நிலைகளுக்குப் பயந்தோ எந்தத் தீர்மானங்களையும் எடுத்திட மாட்டான்!

என்னுடைய வீட்டில், “நீங்கள் தேவனுக்குப் பயந்திருந்தால், வேறு எதற்குமே நீங்கள் பயந்திருக்கத் தேவையில்லை” என்ற வசனத்தைப் பெரிதாக எழுதித் தொங்கவிட்டிருக்கிறேன். இந்த வசனம் ஏசா.8:12,13 வசனங்களின் ஆதாரப்படியான Living Bible மொழிபெயர்ப்பாகும். கடந்த 25 ஆண்டுகளாய், இந்த வசனம் எனக்குப் பேருதவியாய் இருந்து வருகிறது.

“பயம்” என்ற விஷயத்தில், நான் ஆண்டவரிடமிருந்து கற்றுக் கொண்ட சத்தியங்களையே இங்கு நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

எல்லாவற்றிற்கும் முதலாவதாய், நான் கற்றுக்கொண்ட சத்தியம் யாதெனில் **சாத்தானுடைய ஆயுத சாலையில் ‘பயமே’ பிரதான ஆயுதமாய்** இருக்கிறது என்பதுதான்!

இரண்டாவதாக, நான் கற்றுக்கொண்ட சத்தியம் யாதெனில், எப்போதெல்லாம் எனக்கு பயத்தின் உணர்வு வருகிறதோ அதைக் குறித்து நான் **மனச்சோர்வு அடையத் தேவையில்லை...** ஏனெனில், நான் இன்னமும் ‘மாம்சத்தில்தான் இருக்கிறேன்’ என்பதே அதற்குக் காரணமாகும். நாம் இதைக் குறித்து நடைமுறையில் உண்மையுள்ளவர்களாயும், நேர்மையாகவுமே இருந்திட வேண்டும். சில சமயங்களில் “தனக்குள்ளே பயங்கள் இருந்தன” என அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதற்கு நேர்மையுள்ளவராயிருந்தாரே!

மூன்றாவதாய், நான் கற்றுக்கொண்டது யாதெனில் எனக்குள் பயமே வந்துவிட்டாலும், அந்த **பயத்தின் அடிப்படையில்** நான் எந்த தீர்மானமும் எடுத்துவிடக் கூடாது என்பதேயாகும். இந்தப் பகுதியே, நான் கற்றுக்கொண்ட பாடத்தில் மிக முக்கியமானதென நான் கூறிட முடியும். பயத்திற்கு எதிரிடையாக உள்ள “தேவன் மீது

*கொண்ட* **விசுவாசத்தின்**” *அடிப்படையில் மாத்திரமே என்னுடைய தீர்மானங்கள் எப்போதும் இருக்க வேண்டும். இவ்விதமாகவே நான் பல ஆண்டுகளாய் வாழ்ந்து வருகிறேன். அதனிமித்தமாய், தேவன் உண்மையுள்ளவராயிருந்து தன்னுடைய உதவியையும், உற்சாகத்தையும் எனக்குத் தந்துவருகிறார்.*

*எதற்காக “பயப்படாதிருங்கள், பயப்படாதிருங்கள், பயப்படாதிருங்கள்” என இயேசு திரும்பத் திரும்ப கூறினார்? என்ற காரணத்தை இப்போது நான் அறிந்திருக்கிறேன். இந்த வலியுறுத்துதல் புதிய ஏற்பாட்டில் “பாவம் செய்யாதிருங்கள், பாவம் செய்யாதிருங்கள், பாவம் செய்யாதிருங்கள்” என்ற வலியுறுத்தலுக்கு இணையான முக்கியத்துவமாகவே இருக்கிறது!*

*இயேசு எப்போதுமே “பாவத்தை” எதிர்த்து நிற்கிறார்! அதே போல், “பயத்தையும்” சதா எதிர்த்தே நிற்கிறார்! தேவன் ஒருவரைத் தவிர வேறு எதற்கும் பயப்பட வேண்டாம் என மத்தேயு.10:28-ம் வசனத்தில் இயேசு கூறினார். இந்தப் பாடம் நாம் யாவரும்* **கற்றிருக்க வேண்டிய** *மிக முக்கியமான பாடமாகும். ஏனெனில், ஒரு ஆவிக்குரிய தலைவன் எந்தத் தீர்மானத்தையும் பயத்தின் அடிப்படையில் எடுக்கவே கூடாது!*

*என்னுடைய அறையில் நான் பல ஆண்டுகளாய் தொங்க விட்டிருக்கும் மற்றொரு வசனம், “நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாய் இருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரன் அல்லவே” (கலாத்தியர் 1:10).*

*நீங்கள் மனுஷரைப் பிரியப்படுத்த நாடினால், ஆண்டவருடைய ஊழியனாய் ஒருபோதும் இருந்திடவே முடியாது! மனுஷரை பிரியப்படுத்துவதிலிருந்து விடுதலையாவது அவ்வளவு எளிதான காரியமல்ல என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவிலிருந்து மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்பப்படும் “ஊழிய அறிக்கைகளின்” நோக்கம், அங்குள்ள ஜனங்களைக் கவர்ச்சித்து அதன் மூலம் அவர்களுடைய பொருளாதார உதவியை தங்கள் ஊழியத்திற்கு பெறும்படிக்கேயாகும். உங்கள் ஊழியத்தைப் பற்றிய ஓர் அறிக்கையை எழுதும்போது, உங்கள் “***உள்ளான நோக்கம்***” என்ன என்பதைக் குறித்து நீங்கள் வெகு கவனமாயிருக்க வேண்டும்!*

*இதைப்போலவே இன்று ஏராளமான பிரசங்கங்கள்கூட ஜனங்களைக் கவர்ச்சிக்கும்படியும், அவர்களைப் பிரியப்படுத்தும் படியும் கொண்ட நோக்கத்திற்காகவே தயார் செய்யப்படுகிறது! இதுபோன்ற நோக்கங்களுக்காக பிரசங்கிப்பவர்கள் ஒருக்காலும் கிறிஸ்துவின் ஊழியர்களாய் இருக்கவே முடியாது. “உங்களை ஒரு*

*தேவமனுஷனைப் போல்” சபையில் உள்ள பகுத்தறியத் தெரியாத ... வளர்ச்சி இல்லாத உங்கள் விசுவாசிகளை எண்ண வைப்பது மிக எளிதேயாகும். ஆனால், அதேவிதமாய் நீங்கள் தேவனையோ அல்லது பிசாசையோகூட ஒருக்காலும் ஏமாற்றிவிட முடியாது! நீங்கள் எப்படிப்பட்ட நபர் என்பதை தேவனும், பிசாசும் துல்லியமாய் அறிந்து வைத்திருக்கிறார்கள்!?*

*யாரோ சிலரை நீங்கள் பிரியப்படுத்தாததினிமித்தம், ஏதாகிலும் ஒருவகையில் உங்களுக்கு அவர்கள் தீங்கு செய்துவிடுவார்கள் என்ற பயம் உங்கள் இருதயத்தில் இருந்தால்... அவரை எப்படியெல்லாம் பிரியப்படுத்தலாம் என இப்போதிருந்தே முயற்சி செய்ய ஆரம்பித்து விடுவீர்கள். இதுதான் உங்கள் நிலையென்றால் நீங்கள் தேவனுடைய ஊழியக்காரனாய் ஒருக்காலும் இருந்திடவே முடியாது! பயத்தின் அடிப்படையில் நீங்கள் ஏதாவது கிரியை நடப்பித்திருந்தால், அவ்வாறு உங்களை நடத்தியது “பிசாசுதானேயல்லாமல்” தேவன் அல்லவேயல்ல!*

*நம் கடந்தகால ஜீவியத்தைத் திரும்பிப் பார்த்தால், பயத்தின் அடிப்படையில்தான் நாம் அநேக தீர்மானங்களை எடுத்திருப்பதைக் காண முடியும். இந்த எல்லா தீர்மானங்களிலும், நாம் தேவனால் நடத்தப்படவேயில்லை!*

**‘*பயத்தை முன்வைத்த*’ தீர்மானங்களினால் ஏற்பட்ட விளைவுகளில் பெரும் பாலானவைகள் எந்த பாதிப்பையும் உண்டாக்கவில்லை என்பது உண்மையாய் இருக்கலாம்! ஆனால், நாமோ தேவன் நமக்கென்று வைத்திருந்த மிகச் சிறந்ததை இழந்துவிட்டோம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! இனிமேல், எதிர்காலத்திலாவது நாம் கவனமாய் நடந்து கொள்ளக்கடவோம்.**

*நாம் மானிடராயிருக்கிறபடியால், பய உணர்வு நமக்குள் வருவது இயல்பானதேயாகும். உதாரணமாய், நீங்கள் இப்போது உட்கார்ந் திருக்கும் இடத்திற்கருகில் ஒரு* **‘கருநாகம்’** *உங்களை நோக்கி வருவதைக் கண்டால் இயல்பாகவே அதிர்ச்சியடைந்து குதித்து ஓடுவீர்கள். பய உணர்வை வெளிப்படுத்தும் “அட்ரனலின் சுரப்பி”* (Adrenalin) *தானாகவே சுரந்து உங்கள் இரத்த ஓட்டத்தில் கலந்து கொள்ளும்! இது நம்முடைய இயற்கையான சுபாவம். ஆனால், நீங்கள் எங்கெல்லாம் உட்காருகிறீர்களோ அங்கெல்லாம் ஒரு கருநாகம் வந்துவிடும்! என்ற அச்சத்தோடு இருக்கமாட்டீர்களே! அதைப் போலவே, நாமும்* **யாரைக் குறித்தும் ஒருக்காலும் பயந்திடவே கூடாது!**

*எனவே மனுஷர் நிமித்தமோ அல்லது சாத்தான் நிமித்தமோ கொண்ட பயத்தின் அடிப்படையில் நாம் எந்தத் தீர்மானமும் எடுக்கவே கூடாது!*

**நம்முடைய ஒவ்வொரு தீர்மானமும் தேவனுக்குப் பயந்திருக்கும் அடிப்படையிலும், நம் பரமபிதாவின்மீது கொண்ட முழு விசுவாசத்தின் ஆதாரத்திலும் மாத்திரமே இருந்திட வேண்டும். அப்போதுதான், நாம் பரிசுத்தாவியினால் நடத்தப்படுகிறோம் என்ற நிச்சயத்தை நாம் பெற்றிருக்க முடியும்!**

*கர்த்தருக்கு ஊழியம் செய்யும் நம் யாவருக்கும் எபிரெயர் 13:6 ஓர் மிக முக்கியமான வசனமாகும். அந்த வசனம்: "நாம் தைரியம் கொண்டு, கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்? என்று சொல்லலாமே!" எனக் கூறுவதைக் கவனித்தீர்களா?*

*இருப்பினும், 1) நாம் எச்சரிக்கையாயிருப்பதற்கும் 2) நாம் பயந்திருப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்தவர்களாயும் இருக்க வேண்டும். 'இந்த உலகில்' ஒரு* **சர்ப்பத்தைப்** *போல நாம் ஞானமுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஆனால், நாமோ எந்த மனுஷனுக்கோ அல்லது எந்த மனுஷிக்கோ அல்லது 'சாத்தானே வந்தாலும்' அவனுக்கும்கூட நாம் பயந்திடத் தேவையே இல்லை!*

*'இவ்வுலகில்' இயேசு எப்போதும் 'எச்சரிக்கையோடுதான்' வாழ்ந்தார். யூதேயாவில் தன்னைக் கொலை செய்ய ஜனங்கள் வகை தேடுவதை அவர் அறிந்தவுடன், அங்கு அவர் செல்லவில்லை! (யோவான்.7:1).* **இதுவே ஓர் தெளிந்த புத்திக்குரிய செயலாகும்! இதுதான் ஞானம்!** *ஆனால் இயேசுவோ 'யாரைக்குறித்தும்' 'ஒருபோதும்' பயந்ததேயில்லை!*

*இரவுநேரத்தில் ஓர் அடர்ந்த காட்டிற்குள் நீங்கள் செல்ல வேண்டியிருந்தால், ஒரு டார்ச் லைட்டை எடுத்துச் செல்வீர்கள். இது ஓர் முன்னெச்சரிக்கையாய் இருப்பதேயல்லாமல், பயம் அல்ல! ஏதேனும் ஒரு இடத்தில் உங்களை ஜனங்கள் கொலை செய்யத் திட்டமிட்டிருந்தால், அந்த இடத்திற்கு நீங்கள் செல்லும்படி "தேவனே" நேரடியாய் கூறாத பட்சத்தில், நீங்கள் ஒருபோதும் அங்கு சென்றுவிடக்கூடாது. இயேசுவும்கூட தன் கடைசி நிகழ்ச்சியில் எருசலேமுக்குச் செல்லும்படி "பரிசுத்தாவியானவர்" நடத்தியபோது அங்கு செல்லத்தான் செய்தார்... அங்கே கொலையும் செய்யப்பட்டார்! ஆனால் அந்த சம்பவம், தேவனுடைய பரிபூரண சித்தத்திலும் அவருடைய சரியான நேரத்திலும் சம்பவித்த செயலாயிருந்ததே!*

*நாம் எந்த மனுஷனுக்கும் பயப்படுவதில்லை! நாம் தேவனுடைய சித்தம் செய்து "சர்வவல்லவருடைய நிழலில்" (சங்.91:1) வசித்திடும் போது நமக்கு எந்த மனுஷன் யாதொரு தீங்கு செய்திட முடியும்? இதைக்குறித்து வேதப்புத்தகம் "உங்களுக்குத் தீமை செய்கிறவன் யார்?" என்றே கேட்கிறது (1பேதுரு 3:13).*

**அப்படியே நமக்கு ஜனங்கள் விரோதம் செய்தாலும், அவர்களுடைய எல்லா விரோத செயல்களையும் “நம்முடைய நன்மைக்கேதுவாகவே கிரியை செய்திட” தேவன் வல்லவராயிருக்கிறார் (ரோமர் 8:28).**

*உண்மையில் காரியம் இவ்வாறு இருக்கிறபடியால் நாம் எதற்காகப் பயந்திட வேண்டும்?*

*மேற்கண்ட சத்தியங்களையெல்லாம் நாம்* **மெய்யாகவே விசுவாசித்தால்,** *அந்த விசுவாசம் நம் ஜீவியத்தில் சொல்லிமுடியா அதிகாரத்தைக் கொண்டுவருவதை நாம் காணலாம். இதற்கு மாறாக, நாம் மனுஷருக்குப் பயந்து அல்லது அவர்களைப் பிரியப்படுத்த நாடி அல்லது அவர்களை கவர்ச்சிக்க விரும்பி அல்லது அவர்கள் முன் நம்மை நியாயப்படுத்த முயற்சித்து ஜீவிப்பவர்களாயிருந்தால்... நம்மிடம் இருக்கவேண்டிய ஆவிக்குரிய அதிகாரத்தின் பெரும்பகுதியை சாத்தான் நிச்சயமாய் அபகரித்துவிடுவான்!* **இத்தனை பெரிய இழப்பைக் கொண்டுவரும் பய உணர்வை** *நம்மைவிட்டு முற்றிலுமாய் அகற்றிடக்கடவோம்!*

*இவ்வாறு அகற்றுவது அவ்வளவு எளிதல்ல என்பதும் உண்மை தான்! இதற்கு ஓர் தொடர்ச்சியான போராட்டம் தேவை! ஒரு குழுவில் உள்ள A, B, C, ஆகிய மூன்று நபரை நீங்கள் பிரியப்படுத்த முயற்சிப்பதை நிறுத்திவிட நீங்கள் தீர்மானித்து ... அவ்வாறே, ஓர் முற்றுப்புள்ளிக்கும் வந்துவிட்டதாக நீங்கள் எண்ணியிருக்கலாம். ஆனால், வெகுசீக்கிரத்தில் வேறொரு குழுவில் உள்ள D, E, F, ஆகிய மூன்று நபரை இப்போது பிரியப்படுத்துவதற்கு நீங்கள் முயற்சிப்பதைக் காண்பீர்கள்!*

*இவ்வாறு, இந்த அகரவரிசை முடிவே இல்லாமல் சென்று கொண்டேதானிருக்கும். நாம் மெய்யாகவே “***எல்லா** *மனுஷரையும் பிரியப்படுத்துவதிலிருந்து விடுபட விரும்புபவர்களாயிருந்தால்” இந்த யுத்தத்தைக் கடைசிவரை போராடத்தான் வேண்டியிருக்கும். அப்படியானால், நாம் எந்த மனுஷனுடைய அங்கீகாரத்தையும் எதிர்பாராதவர்களாய் இருந்தால் மாத்திரமே, இந்தப் பாவத்தை விழிப்புடன் எதிர்த்துநின்று போரிட முடியும்!*

*சில விசுவாசிகள், “எந்த மனுஷனுடைய அபிப்பிராயத்தைக் குறித்தும் எனக்கு கவலை இல்லை!” எனப் பெருமிதத்தோடு சொல்வதுண்டு. இதுபோன்ற ஜனங்கள் ஆவிக்குரியவர்கள் அல்லவே அல்ல! மாறாக, அவர்கள் அகந்தையுள்ளவர்கள்! ஓர் பக்தியுள்ள மூத்த சகோதரனின் அபிப்பிராயம் வெகுமதிப்புடையதாய் இருந்திட முடியுமே! நாம் காணமுடியாத சில விஷயங்களை அவர் கண்டு, அதை நமக்குக் கூறிடவும் முடியும். இதுபோன்றதோர் முதிர்ச்சி பெற்ற மனுஷருக்கு மரியாதை செலுத்தி, கனப்படுத்தி, அவருடைய அதிகாரத்திற்கு அடங்கியிருப்பது, நமக்கு ஏராளமான உதவியை*

நிச்சயமாய் கொண்டுவந்து தருமென்பது முற்றிலும் உண்மை! இருப்பினும், "அந்த தேவமனுஷனுக்கு நாம் அடிமையாகிவிடாமல், எவ்வாறு அடங்கியிருக்க வேண்டும்" என நாம் கற்றுக்கொள்வதும் மிக முக்கியமாகும்.

நம் சபையிலுள்ள அங்கத்தினர்கள், மனுஷர் பயத்திலிருந்தும், பிசாசின் பயத்திலிருந்தும் விடுதலையாகி தேவனுக்கு மாத்திரமே பயந்திருக்க நாம் விரும்பினால்... முதலாவது, **நாம்தான்** அந்தத் தகுதியில் இருக்கவேண்டும்.

இந்த பூமியில் உள்ள சகலத்தையும் "தேவனே ஆளுகை செய்கின்றார்" என்பதினிமித்தமே, நாம் யாருக்கும் அல்லது எதற்கும் அஞ்சுவதில்லை!

ஒரு சமயம், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முற்றிலும் தடை செய்யப்பட்ட ஓர் தேசத்திற்கு நான் போக யோசித்துக் கொண்டிருந்த போது, மத்தேயு 28:18,19 வசனங்களை ஆண்டவர் எனக்கு நினைவுப் படுத்தினார். நம் ஆண்டவருக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் கொடுக்கப்பட்டதினிமித்தமே, நம்மை சகல தேசத்திற்கும் புறப்பட்டுச் சென்று அவர்களை சீஷர்களாக்கும்படி கட்டளை கொடுத்தார் என்பதை அன்று நான் கண்டேன். இவ்வாறு **ஆண்டவருடைய சகல அதிகாரத்தையும் விசுவாசித்துச்** சென்றிடாத பட்சத்தில், நாம் எங்கு சென்றாலும் பிரச்சனைகளைத்தான் சந்திப்போம். இந்த வசனங்களில் "**ஆகையால் ...** " என்ற வார்த்தை மிக முக்கியமான வார்த்தையாகும். இன்று அநேக பிரசங்கிகள் இந்த வசனத்திலுள்ள "**போங்கள்**" என்ற வார்த்தையைத்தான் வலியுறுத்து கிறார்கள்! அது நல்லதுதான். ஆனால் நாம் எதைச் சார்ந்து போக வேண்டும்? நம் ஆண்டவருக்குப் பூமியிலுள்ள சகல ஜனங்கள்மீதும், சகல பிசாசுகள்மீதும் முழு அதிகாரம் இருக்கிறது என்ற விசுவாச அடிப்படையில் மாத்திரமே நாம் சென்றிட வேண்டும்! இதை மெய்யாகவே நீங்கள் விசுவாசியாத பட்சத்தில், நீங்கள் எந்த இடத்திற்கும் **போகாமல் இருப்பதே நல்லது!**

சுவிசேஷத்திற்கு கடினமான தேசத்திற்குள் சென்றிட நான் தயங்கிய அந்த வேளையில்தான், மத்தேயு 28-ம் அதிகாரத்தின் மேற்கண்ட வசனங்கள் ஓர் புதிய வெளிப்பாடாய் எனக்கு வந்தது! பின்பு, நான் அந்த தேசத்திற்குள் பிரவேசித்த பின்பும்கூட, இயற்கையாகவே எனக்குள் பயம் இருந்ததைக் கண்டேன்! ஆனால், நானோ என் தீர்மானத்தை இந்த பயத்தின் அடிப்படையில் எடுக்கவில்லையே!

இந்த சர்வலோகத்தில், ஏதேனும் சில தேசத்தில் ஆண்டவர் இயேசுவுக்கு முழுஅதிகாரமும் கொடுக்கப்படவில்லை என நீங்கள் எண்ணினால் .... அந்த தேசத்திற்கு நீங்கள் போகவேண்டாம் என்றே

*நான் ஆலோசனை கூறுவேன்! அதுபோன்ற இடத்திற்கு நானேகூட செல்லமாட்டேன்! மெய்யாகவே, எனக்கும் மனதில் பீதி ஏற்படத்தான் செய்யும். ஆனால், இந்த பூமியில் “ஆண்டவருடைய ஆளுகை இல்லை!” எனக் கூறும்படியான ஒரு இடம்கூட இல்லை என்பதற்காய் நான் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்! ஆம், இந்த பூமியின் ஒவ்வொரு மூலை முடுக்குகளும்கூட நம் ஆண்டவருடைய அதிகாரத்திற்குக் கீழ்பட்டுதான் இருக்கிறது!*

*இதுபோலவே, ஏதோ ஒரு ஸ்தலத்தில் யாரோ சிலர் மீது (அவர்கள் பயங்கர வலிமை கொண்டவர்களாயும் இருக்கக்கூடும்!) ஆண்டவருக்கு அதிகாரம் இல்லை என நீங்கள் எண்ணினாலும், அந்த சிலரைக் குறித்து நீங்கள் எப்போதும் பயந்தே வாழவேண்டியதாயிருக்கும்! ஆனால், அவருடைய ஆளுகைக்கு உட்படாத ஒரு மனிதன்கூட இந்த பூமியில் எந்த இடத்திலும் இல்லை என்பதற்காய் நான் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்! “ஒவ்வொரு மானிடன் மீதும்” ஆண்டவர் அதிகாரமுடையவராகவே இருக்கிறார். இந்த உண்மையை, நேபுகாத்நேச்சார் ராஜாகூட அறிந்திருந்தான் (தானியேல் 4:35).*

*நம் ஆண்டவரால் கல்வாரி சிலுவையில் தோற்கடிக்கப்படாமல் எப்படியோ ‘ஒரு பிசாசு’ மாத்திரம் தப்பிச்சென்று அது எங்கேயாவது ஒளிந்திருக்குமென்றால், அந்தப் பிசாசைக் குறித்து நாம் எப்போதும் பயந்திருக்கத்தான் வேண்டும். ஆனால், அவ்வாறு* **சிலுவையில் தோற்கடிக்கப்படாமல் ஒரு பிசாசுகூட இல்லவேயில்லை!** *சகல பிசாசுகளின் தலைவனாகிய சாத்தான்கூட சிலுவையில் நிரந்தரமாய் தோற்கடிக்கப் பட்டுவிட்டான்! இதுவே, சாத்தானையும் அவனுடைய பிசாசுகளையும் குறித்த எல்லா பயத்திலிருந்தும் நம்மை விடுதலையாக்கி, நம் ஊழியத்தில் சொல்லிமுடியா தைரியத்தையும் தந்திருக்கிறது.*

*“ஆகவேதான்” தேவன் அழைக்கும் எந்த ஊழியத்திற்கும் நாம் புறப்பட்டுச் செல்லுகின்றோம்! சில இடங்களில் ஆபத்தான சூழ்நிலைகள் கூட இருக்கலாம். ஆனால் அந்த இடத்திற்கு ஆண்டவர் நம்மை நடத்துகிறார் என்ற முழு நிச்சயத்தை உடையவர்களாய் இருந்தால், அந்த இடத்திற்குச் செல்ல நாம் சிறிதும் பயந்திடத் தேவையேயில்லை!*

**ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்தில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுகிறார்களா? அல்லது இல்லையா? என்பது நமக்கு ஒரு கேள்வியல்ல. நமக்கிருக்கும் ஒரே கேள்வியெல்லாம், அந்த இடத்திற்குச் செல்லும்படி ஆண்டவர் நம்மிடம் கூறினாரா? அல்லது இல்லையா? என்பது மாத்திரமே!**

*அவ்வாறு அவர் கூறியிருந்தால், “அவருடைய அதிகாரம்” நம்மைச் சூழ்ந்து நின்று தாங்கிக்கொள்ளும் என்பதில் துளியேனும் சந்தேகம்*

தேவையேயில்லை! நாம் பயந்திடவும் தேவையில்லை! ஆனால், ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லும்படி தேவன் அழைத்திருக்காவிட்டால் நாம் அங்கு செல்லவே கூடாது. அந்த ஸ்தலத்தில் உள்ள ஜனங்கள் எவ்வளவு தான் முயற்சித்து அங்கு வரும்படி நம்மைக் கட்டாயப்படுத்தினாலும் அல்லது எவ்வளவுதான் நம்மிடத்தில் உள்ள "வீரமுள்ள ஆவி" அங்கு போகும்படி தூண்டினாலும் ... நாம் செல்லவே கூடாது!

மேலும், நாம் எதற்காக ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போகிறோம் என்ற கேள்வியையும் நமக்கு நாமே கேட்டுப்பார்க்க வேண்டும். **அங்கு சென்று "சீஷர்களை உருவாக்க வேண்டும்"** என்ற ஒரே நோக்கம் மாத்திரமே அன்றி, வேறு எந்த நோக்கமும் நம்மிடம் இல்லாத பட்சத்தில், ஆண்டவர் வாக்குத்தத்தம் செய்தபடி "உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் அவர் நம்மோடுகூட இருப்பார்" என்பதில் பூரண நிச்சமுடையவர்களாய் இருக்கலாம்! இதைத் தவிர **வேறு நோக்கங்கள்** நம்மிடம் இருந்தால், "இருதயத்தை சோதித்தறியும் ஆண்டவர்" அவைகளைக் கண்டறிவார் என்பதை தெய்வ பயத்துடன் அறிந்திருக்கக்கடவோம் (எரேமியா 12:3).

தன்னை ஒரு **விசுவாசி** என அழைத்துக் கொள்பவர்களுக் கெல்லாம், ஆண்டவர் ஒருபோதும் இணங்கி ஒப்புக்கொடுப்பதே யில்லை (யோவான்.2:24). ஆனால் நீங்கள் நேர்மையான இருதயத்துடன் ஆண்டவரைப் பார்த்து, "ஆண்டவரே நான் அந்த இடத்திற்குச் செல்ல நீர் என்னை அழைத்ததை உணர்ந்ததினிமித்தமே செல்லுகின்றேன். அங்குள்ளவர்களை **சீஷர்களாக மாற்றி,** பிதா, குமாரன், பரிசுத்த ஆவி நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து, நீர் கட்டளையிட்ட யாவற்றையும் அவர்கள் கைக்கொள்ளும்படி போதிப்பதற்காக மாத்திரமே அங்கு நான் செல்லுகிறேன். இதைத்தவிர, அங்கு சென்று பணம் சம்பாதிக்கவோ அல்லது எனக்கென்று புகழைத் தேடுவதற்கோ அல்லது வேறு **எந்த தனிப்பட்ட இலாபத்திற்காகவோ நான் செல்லவில்லை"** என நீங்கள் உண்மையாய் கூறமுடியுமென்றால் உங்களைத் தாங்குவதற்குப் போதுமான ஆண்டவருடைய வல்லமையை நீங்கள் எப்போதும் பெற்றிருப்பீர்கள்!

இவ்வாறு அவர் உங்களைத் தாங்கியிருக்கும்போது, உங்கள் மனைவிக்கு என்ன சம்பவிக்கும்? உங்கள் பிள்ளைகளுக்கு என்ன சம்பவிக்கும்? உங்கள் பொருளாதார தேவைகள் எங்ஙனம் பூர்த்தியாகும்? என்ற பயத்தில் நீங்கள் ஜீவிக்கவேண்டிய அவசியமே யில்லை! இந்த ஆச்சரியமான இடத்தை அடைவற்குத் தேவையான ஒரே கேள்வியாய் இருப்பதெல்லாம் "**தேவன் உங்களை அழைத்தாரா?** அல்லது இல்லையா" என்பது மாத்திரமேயாகும். அந்த ஸ்தலத்திற்கு

*தேவன் அனுப்பினாரா? அல்லது யாரோ சில மனிதர்கள் அனுப்பினார்களா? அல்லது "ஒன்றை சாதிக்க வேண்டும்" என்ற ஆவியினால் உந்தப்பட்டீர்களா?!*

**தேவன் விரும்பும் செயல்திட்டம்** *இல்லாமல், உங்களுக்கென்று* **சொந்தத் திட்டம் உடையவர்களாயிருந்தால்** *உங்களை உற்சாகப் படுத்தும் படியான ஒரு வாக்குத்தத்தத்தைக் கூட என்னால் உங்களுக்குக் காட்டிட முடியாது! அதற்கு மாறாக, தேவனுடைய செயல் திட்டமாகிய... சீஷர்களாக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து, இயேசு கட்டளையிட்ட யாவையும் போதிப்பதுமே உங்களுடைய செயல்திட்டமாயுமிருந்தால்....*

**நான் இப்போது உங்களுக்கு மிகுந்த ஆணித்தரமாய் "நீங்கள் எந்த மனுஷனுக்கும் அல்லது எந்தப் பிசாசுக்கும் பயந்திடத் தேவையில்லை!" எனக் கூறிடமுடியும்!**

*தேவனுடைய ஒவ்வொரு ஊழியனும், பிசாசு பிடித்தவர்களை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மீதுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை எவ்விதம் விடுவிக்க வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும். பிசாசுகள் உங்களுக்கோ அல்லது எனக்கோ அஞ்சுவதே இல்லை! தங்களை சிலுவையில் தோற்கடித்த ஆண்டவருக்கு மாத்திரமே பிசாசுகள் அஞ்சுகின்றன! இயேசுகிறிஸ்து, சாத்தானுடைய சகல அதிகாரங்களையும் சிலுவையில் உரிந்து போட்டார் என்ற உண்மையை நாம் அறிந்திருக்கவேண்டியது மிக முக்கியமாகும் (கொலோ.2:14,15). சுவிசேஷத்தின் இந்த மாபெரும் நற்செய்தியை, நாம் முதலாவது அனுபவித்திருக்க வேண்டும்... பின்பு, அதை சகல மனிதர்களுக்கும் அறிவித்திட வேண்டும். நாம் இந்த உண்மையை விசுவாசித்திருந்தால்,* **மற்றவர்களையும்** *சாத்தானின் அதிகாரத்திலிருந்து நிச்சயமாய் விடுவித்திட முடியும்.*

*சாத்தான் என்ன செய்துவிடுவானோ? என்று நாம் ஒருபோதும் அஞ்சவே கூடாது! ஏனெனில், தேவனுடைய அனுமதியில்லாமல், நம் தலையிலுள்ள ஒரு முடியைக்கூட சாத்தான் தொடமுடியாது!! ஆனால், இந்தியா விலுள்ள அநேக விசுவாசிகள், சாத்தான் தங்களுக்கு எந்த பில்லி சூனியம் செய்துவிடுவானோ? என்று பயப்படுகிறவர்களாகவே இருக்கிறார்கள்.*

**ஏன் இவ்வாறு பயப்படுகிறார்கள்? ஏனெனில், சாத்தான் சிலுவையில் தோற் கடிக்கப்பட்டதை இவர்கள் இன்னமும் அறியவில்லை, அவ்வளவுதான்!**

*நீண்டநாட்களாய் 'வியாதிப்பட்டிருந்த பாஸ்டரை' நான் ஒரு சமயம் சந்தித்தேன். அவரோ, அந்த வியாதியைத் தனக்கு விரோத மானவர்கள்* **"செய்வினை மூலமாய்"** *தன்மீது ஏவிவிட்டதாகக் கூறினார். இது எப்படி சம்பவிக்க முடியும்? நம் ஆண்டவர் என்ன, மந்திரவாதத்தை*

விட வல்லமை குறைந்தவரா? பில்லிசூனியத்தின் வல்லமையைக் காட்டிலும் குறைவான வல்லமையைக் கொண்டவரா? ஒருக்காலும் இல்லை! பின் எப்படி அந்த பாஸ்டர் அவ்விதமாய் கூறினார்? ஆம், முழுக்க முழுக்க **அந்த பாஸ்டரின் அவிசுவாசமே** அதற்குக் காரணமாகும்.

பிசாசுகள் கிரியை நடப்பிக்கும் பூமியானாலும் அல்லது வானமண்டலங்களானாலும் (எபே.6:12), நம் ஆண்டவருடைய வல்லமைக்கும் அதிகாரத்திற்கும் விரோதமாய் எந்தப் பிசாசின் வல்லமையும் நின்றிட முடியவே முடியாது! இதை உங்களால் விசுவாசிக்க முடியவில்லையென்றால், நீங்கள் ஆண்டவருக்கு ஊழியம் செய்வதை நிறுத்திவிட்டு, எங்காவது சென்று, வேறு எதையாவது செய்யும்படிக்கே நான் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். ஆம், ஒரு பிரசங்கியாய் இருப்பதை நிறுத்திவிடுங்கள்! இல்லையென்றால், உங்களிடமுள்ள பயத்தையும் அவிசுவாசத்தையுமே நீங்கள் மற்றவர்களுக்கும் பரவிடச் செய்வீர்கள்!

**பயம், சாத்தானின் ஓர் வல்ல ஆயுதம்... அதை அவன் உங்கள்மீது பயன்படுத்த ஒருக்காலும் விட்டு விடாதீர்கள்!**

யோபுவுக்கு நடந்தது போலவே, ஒரு விசுவாசிக்கும் பிசாசுகள் துன்பம் விளைவித்திட தேவன் சில சமயங்களில் **அனுமதித்து** சம்பவிக்கலாம். அப்போஸ்தலனாகிய பவுலைக்கூட "சாத்தானுடைய ஒரு தூதன்" துன்புறுத்தும்படி தேவன் அனுமதித்திருந்தார் (2கொரி.12:7). அந்த துன்பம், அவருடைய சரீரத்தில் ஓர் முள் குத்தியதைப் போன்ற கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அது ஒருவேளை, ஒரு வியாதியாகவோ அல்லது பவுல் எங்கு சென்றாலும் தொந்தரவு செய்த ஒரு நபராகவோ இருந்திருக்கலாம். நம்முடைய சரீரத்திலும் ஓர் முள் குத்தி அதை நாமாகப் பிடுங்கமுடியாத பட்சத்தில், தேவன் அதைப் பிடுங்கும்படி கேட்பது சரிதான். ஆனால் தேவன் பவுலுக்கு கூறியது போலவே, சில சமயங்களில் அந்த முள்ளைப் பிடுங்கி எறிய "இல்லை" என மறுத்துவிடுவார். அதுஏனென்றால், நம்மைத் **தாழ்மையில்** தொடர்ச்சியாய் பாதுகாத்திருக்க அந்த முள் மேலான கிரியை செய்கிறது என்பதை தேவன் கண்டதினிமித்தமேயாகும். ஒரு சமயம், ஊழியத்திற்காக தெசலோனிக்கேயா பட்டணத்திற்கு பவுல் செல்ல வேண்டியிருந்ததைக் கூட சாத்தான் தடை செய்தான். ஆனால் அவனுக்குப் பதிலாக, அந்த இடத்திற்கு தீமோத்தேயு சென்று தேவனுடைய நோக்கம் நிறைவேறி முடிந்ததைப் பாருங்கள்! (1தெச.2:18; 3:2).

இந்த சத்தியத்தை நான் இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்பு கிறேன்! மறுபடியும் பிறந்த ஒரு கிறிஸ்தவன் பிசாசினால் பிடிக்கப்பட ஒருபோதும் முடியவே முடியாது! ஆனால் துரதிருஷ்டவசமாய், அநேக

பிரசங்கிகள் வேதவசனத்தில் இல்லாத உபதேசங்களை இந்நாட்களில் பிரசங்கிக்கிறார்கள். அதன் விளைவாய் **“விசுவாசிகளையும் பிசாசு ஆட்கொள்ளும்” எனப் பிரசங்கித்து,** அநேக விசுவாசிகளைப் பயத்திற்கும், குற்ற உணர்வுக்கும் கொண்டு வருகின்றார்கள்!

இதுபோன்ற பிரசங்கிகள், தங்கள் போதகத்திற்கு ஆதாரமாய் வேதத்திலிருந்து ஒரு வசனத்தைக்கூட காட்டிட முடியாது! ஆனால் அதற்குப் பதிலாக தங்கள் அனுபவத்தில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததாகக் கூறுவார்கள். இவ்விதமாய், இவர்கள் தங்கள் அனுபவத்தை தேவனுடைய வார்த்தைக்கு மேலாய் உயர்த்துகிறார்கள்! தங்கள் அனுபவத்தை ஆதாரமாகக் காட்டும் இந்தச் செயலே, அவர்கள் செய்வது தவறு என்பதை நிரூபித்துக்காட்டுகிறது!

கிறிஸ்துவும் அவரோடு ஒரு பிசாசும் “ஒரே இருதயத்தில்” சேர்ந்து தங்கியிருக்க ஒருக்காலும் முடியாது. ஒளியும் இருளும் ஒரே ஸ்தலத்தில் சேர்ந்திருப்பதில்லையே! இயேசு பிரசங்கித்த ஆலயத்திலிருந்த யூதர்களில் சிலரோ பிசாசு பிடித்தவர்களாயிருந்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்திற்குப் பின், “மறுபடியும் பிறந்த விசுவாசிகளில்” ஒருவராவது பிசாசு பிடித்தவர்களாய் இருந்ததாக நாம் காணவே முடியாது.

ஒரு கிறிஸ்தவன், ‘வெளிப்புறத்திலிருந்து’ பிசாசுகளினால் துன்புறுத்தப்படலாம். பவுலுக்கும், யோபுவுக்கும் இவ்வாறே சம்பவித்தது. அதுவும்கூட தேவனுடைய அனுமதியில்தான் நடந்தது!

> **இவ்வாறு தேவன் அனுமதிக்கும் ஓர் துன்பமாய் இருந்தால் யோபுவுக்கும், பவுலுக்கும் நடந்ததைப்போல அத்துன்பங்கள் உங்கள் ஆவிக்குரிய நன்மைக்காகவே கிரியை நடப்பிக்கும் என்பதில் பூரண நிச்சயமுள்ளவர்களாக இருக்கலாம்!**

சிலரைக் குறித்து, அவர்கள் பிசாசினால் பிடிக்கப்பட்டிருக்கிறார்களா? அல்லது இல்லையா? என்கிற சந்தேகம் உங்களுக்கு எழும்புமானால், அவர்கள் தங்கள் மனப்பூர்வமாய் கீழ்காணும் மூன்று அறிக்கைகளைச் சொல்லும்படி கேளுங்கள் :

1) இயேசுகிறிஸ்துவே என் ஆண்டவர்!

2) இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வந்து பாவத்தை ஜெயித்தார்!

3) சாத்தானே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் நீ சிலுவையில் தோற்கடிக்கப்பட்டாய்! இனியும் நான் உன்னைச் சார்ந்தவன் அல்ல!

இந்த மூன்று அறிக்கைகளையும் பிசாசு பிடித்த ஜனங்கள் தங்கள் ஆவியில் அறிக்கை செய்திட அவர்களால் ஒருக்காலும் முடியாது!

நாம் எப்போதெல்லாம் வியாதிப்படுகிறோமோ, அப்போதெல்லாம் நாம் சுகமடையும்படி ஜெபிக்கவேண்டும். ஆனால் அதேசமயம் நாம் ஆண்டவரைப் பார்த்து "ஆண்டவரே இந்த வியாதியின் மூலமாய் சிறந்த ஆவிக்குரிய நன்மைகளைத் தந்திட நீர் திட்டமிட்டு அதன்மூலம் உம்முடைய நாமத்தை நீர் மகிமைப்படுத்தத் தீர்மானித்திருந்தால், இந்த வியாதியை நான் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிறேன்" என்றும் கூறிட நாம் தயங்கிடக்கூடாது.

பழைய உடன்படிக்கையின் கீழ், யாரெல்லாம் தங்கள் பெற்றோர்களைக் கனம் செய்து வாழ்ந்தார்களோ அவர்களுக்கு ஆரோக்கியமான நீடிய ஆயுளைத் தருவதாக தேவன் வாக்குதத்தம் செய்திருந்தார். இந்த வாக்குதத்தத்தில் அடங்கியுள்ள மேன்மை என்னவென்றால், பெற்றோருக்கு கனம் செய்யும் பிள்ளைகள் "வளர்ந்து வரும்போது" தேவன் அவர்களை கவனித்துக் கண்காணிப்பார்! அவர்களுக்கு எந்த மரணத்திற்கேதுவான விபத்தோ அல்லது வியாதியோ வராமலும் பாதுகாப்பார்! இவ்வாறு தங்கள் பெற்றோர்களைக் கனம் செய்யும் பிள்ளைகளைத் தேவன் "விசேஷமாய் கண்காணித்து" காக்கிறாரா? ஆம் .... அது உண்மைதான்!

**தன் பெற்றோர்களைக் கனம் செய்து வாழும் பிள்ளைகளுக்கு சம்பவிக்கும் எல்லா சூழ்நிலைகளையும் தேவனே ஆளுகை செய்து, அவர்களை இப்பூமியில் நீடிய ஆயுசுடன் வாழச்செய்து, தன் வாக்குத்தத்தத்தை இன்றும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்!**

'இதேபோலவே' நம்முடைய வாழ்வின் சூழ்நிலைகளையும் தேவன் ஆளுகை செய்து, நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்பே மரிக்காதிருக்கும்படி செய்கிறார்! இவ்வாறு நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவது இயேசுவைப்போல் 33வது வயதோ அல்லது 90வது வயதோ இருக்கலாம். ஆனால், அதற்கு முன்பு நாம் ஒருக்காலும் மரித்திட மாட்டோம்!

இருப்பினும், புதிய உடன்படிக்கையின் கீழோ "நீடிய ஆயுசு" ஒரு விசேஷித்த காரியம் இல்லை என்பதையும், தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்காக செலவிடப்பட்ட வாழ்க்கையே மேலானது என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். அந்த வாழ்க்கை குறைந்த ஆயுசா? அல்லது நீண்ட ஆயுசா? என்பது ஒரு பொருட்டல்ல! இயேசுவேகூட 33 வயது வரை மாத்திரமே ஜீவித்தார்.... **ஆனால், அந்த வயதில் தன் பிதா தந்த பணியை அவர் செய்து முடித்துவிட்டார்!**

டேவிட் ப்ரெய்னார்டு என்ற பக்தன் 29 வயது வரைதான் வாழ்ந்தார். ஆனால் வாட்ச்மேன் நீ என்ற பக்தனோ 70 வயது வரை வாழ்ந்தார்! நாம் அறிந்திருக்கிறபடி, இவர்கள் இருவருடைய வாழ்க்கை

*யிலும் சம்பவித்த முக்கியமான காரியம் யாதெனில், இந்த பூமியை விட்டு இவர்கள் போவதற்கு முன்பாகத்* **தேவன் அவர்களுக்கென்று தந்த பணிகளைச் செய்து முடித்தார்கள்!** *அவர்களுடைய பணி இந்த பூமியில் செய்யப்படும்வரை, எந்த வியாதியும் அல்லது விபத்தும் அந்த குறிப்பிட்ட ஆயுசை குறைத்து விடாதபடி, அவர்களின் சகல சூழ்நிலைகளையும் தேவன் தன் சர்வ வல்லமையினால் ஆண்டு நடத்தினார்!!*

*இந்த பூமியில் நம்முடைய சரீரத்தைத் தாக்கும்படியான ஏராளமான கிருமிகளும், பாக்டீரியாக்களும் இருக்கின்றன. சில கிருமிகள், நம்மைக் கொல்லும் அளவிற்கு அசூர வலிமை கொண்டதாயும் இருக்கின்றன. அவைகள் நம்மைக் கொன்றுவிடாதபடி* “**அந்தக் கிருமிகளை ஆளுகை செய்வதற்கும்**” *தேவன் போதுமான வல்லமை கொண்டவராகவே இருக்கிறார்!*

*சாலைகளில் நாம் செல்லும்போது, லாரிகளோ அல்லது எந்த வாகனங்களோ நம்மீது ஏறி நசுக்கிக் கொன்றுவிடாதபடி, அதை ஓட்டி வந்த* “**குடிகார டிரைவர்களையும் ஆளுகை செய்திட**” *தேவன் போதுமான வல்லமை கொண்டவராகவேயிருக்கிறார்!!*

*ஆம், ஒவ்வொரு இமைப்பொழுதும் தேவன் நம்மைப் பாதுகாக்கிறார்! அவ்வித பாதுகாப்பில் அவர் தூங்குவதுமில்லை, கண் அயர்வதுமில்லை! இதை நாம்* **மெய்யாகவே விசுவாசிப்போமென்றால்,** *சூழ்நிலைகளின் பயத்திலிருந்தும், வியாதிகளின் பயத்திலிருந்தும், விபத்துக்களின் பயத்திலிருந்தும் அல்லது இதுபோன்ற வேறு பல பயத்திலிருந்தும் நாம் முற்றிலும் விடுதலையாகியிருப்போம்!*

*நீங்கள் தேவனுக்குப் பயந்திருந்தால், மெய்யாகவே வேறு எதற்கும் நீங்கள் பயந்திடத் தேவையே இல்லை!*

# 12

## “பிறரை பயத்திலிருந்து விடுவிப்பவன்”

ஒரு ஆவிக்குரிய தலைவன், ஜனங்கள் தனக்கு அடங்கியிருக்கும்படி “பயத்தை” ஓர் ஏதுகரமாய் ஒருக்காலும் பயன்படுத்த மாட்டான்! அதற்கு மாறாக, ஜனங்களைப் பயத்திலிருந்து விடுதலை செய்வதற்கே எப்போதும் நாடுவான்!

சாத்தானின் ஆயுதசாலையில் மாத்திரமே இந்த “**பயத்தின் ஆயுதம்**” இருக்கிறது! மானிடர்களைப் பயத்திலிருந்தும் விடுதலை செய்வதற்காக இயேசு வந்தார். இயேசுவின் இந்தப் பணியானது, ஒவ்வொரு ஆவிக்குரிய தலைவனுக்கும் இருக்கிறது!

எபிரெயர் 2:14-ல் “ஜீவகாலமெல்லாம் **மரணபயத்தினாலே** அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும் படிக்கே இயேசு மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்” என வாசிக்கிறோம்.

மேலும் ரோமர் 8:15 “திரும்பவும் பயப்படுவதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்” என்றும் கூறுவதைப் பாருங்கள்.

**பரிசுத்தாவியானவர்** நம்மை தேவனுடைய புத்திரர்களாய் மாறும் படி நடத்துகிறார் என்றும், **அடிமைத்தனத்தின் ஆவியோ,** நம்மைப் பயத்திற்குள் நடத்துவதையும் இங்கு பவுல் வேறுபடுத்திக் கூறுவதைப் பாருங்கள். ஆம், “பயம்” நம்மை எப்போதும் **அடிமைத்தனத்திற்கே** கொண்டுவருகிறது. இந்த உலகத்திலுள்ள ஜனங்கள் யாவரும் ‘பயத்தில்தான்’ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்! துரதிருஷ்டவசமாய், விசுவாசிகள்கூட இன்னமும் பயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே!

ஒரு மனிதன் உங்களைப் பயப்படச் செய்துவிட்டால், நீங்கள் நிச்சயமாய் அவனுக்கு அடிமையாய் மாறிவிடுகிறீர்கள். இந்த அடிப்படையில்தான் “மார்க்க - கண்மூடி குழுவினர்கள்” (Cults) செயலாற்றுகிறார்கள். மனுஷீகமான ஆத்தும - வலிமையில் இயங்கும்

இந்தக் குழுவில் உள்ள தலைவர்கள், தங்களிடமுள்ள குழுவினரிடம் “இந்தக் குழுவைவிட்டு வெளியேறிவிட்டால் பயங்கர விளைவுகள் அவர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் நேரிடும்” என்ற **அச்சத்தை** அவர்கள் மனதில் ஏற்படுத்திவிடுகிறார்கள்! இவ்வாறெல்லாம் ஜனங்களை அச்சுறுத்துவது எவ்வளவு பெரிய மதிகேடான செயல் என்பதைப் பாருங்கள்! ஆனால், இவ்வித அச்சுறுத்தலை ஜனங்கள் திரும்பத் திரும்ப கேட்டதினிமித்தம் அதை விசுவாசிக்கத் தொடங்கி... முடிவில், அவ்வித “மார்க்க-கண்மூடி குழுக்களை” விட்டுப் பிரிந்து வரவும் அஞ்சுகிறார்கள்! அந்தக் குழுவில் சம்பவிக்கும் அனைத்தும் தவறு என்று நன்றாய் அறிந்திருந்தாலுமேகூட, பயத்தினிமித்தம் அங்கேயே இருந்து விடுகிறார்கள்! அங்குள்ள ‘தலைவன்’ விபச்சாரத்தில் கூட வாழ்ந்து கொண்டிருப்பான் ... ஆனால், அந்த கண்மூடித்தனமான அங்கத்தினர்களோ “**பயத்தினிமித்தம்**” தங்கள் குழுக்களைப்பற்றி பேச துணிவற்றிருக்கிறார்கள். இவ்வித பரிதபிக்கும் அடிமைத்தனத்தின் கட்டிற்குள் இவர்களைக் கொண்டுவந்தது “இந்த பயமே” ஆகும்!

எப்போதெல்லாம் ஒரு கிறிஸ்தவ தலைவன் “இந்த பயத்தின் ஆயுதத்தைப் பயன்படுத்தி” விசுவாசிகள் தன் அதிகாரத்திற்கு கீழ்ப்படியும்படியோ அல்லது தசமபாகம் செலுத்தும்படியோ அல்லது வேறு ஏதாவது செய்யும்படியோ அச்சுறுத்துகிறவனாய் இருந்தால், அந்தக் கிறிஸ்தவத் தலைவன் “**சாத்தானுடைய ஆயுதத்தையே**” பயன் படுத்துகிறான் என திட்டமாய் கூறலாம்!

நாம் விரும்பும் ஒன்றைச் செயலாற்றும்படி ஜனங்களிடத்தில் “பயத்தின் ஆயுதத்தை” நாம் ஒருபோதும் பயன்படுத்தவே கூடாது. இந்த ஆயுதத்தைப் பயன்படுத்தும் யாராயிருந்தாலும் அவர்கள் கட்டியெழுப்பும் ஒரு குழு “கண்மூடித்தன மார்க்கத்தாராகவே” (Cults) இருப்பார்கள்!

மெய்யான தேவனுடைய சபையிலுள்ள ஒவ்வொரு சகோதரனும் சகோதரியும், தாங்கள் விரும்பியதைச் சொந்தமாய் தெரிந்து கொள்ளும்படி **முழு சுதந்திரம்** பெற்றிருக்க வேண்டும்.

**ஜனங்கள் பாவத்தில் ஜீவிக்கும்போது அவர்களை நாம் கடிந்து சிட்சிக்க வேண்டியது மிக அவசியமேயாகும். ஆனால், நாம் ஜனங்களிடத்தில் ‘சாபங்களையும் ஆக்கினைத்தீர்ப்புகளையும் கூறி’ ஒருபோதும் அச்சுறுத்தவே கூடாது!**

தங்கள் சபையிலுள்ள ஜனங்களைப் பார்த்து, “நீங்கள் சபைக்கு தசமபாகத்தைத் தராவிட்டால், அந்தப் பணத்தை டாக்டருக்கும், ஆஸ்பத்திரிக்கும் செலவழிக்க வேண்டிய அபாயம் ஏற்பட்டுவிடும்” எனக் கூறும் பாஸ்டர்கள்கூட இருக்கிறார்கள்! இதையெல்லாம் மதி

*கேட்டின் உச்சக்கட்டம் என்றே நாம் கூறலாம். இதுபோன்ற பயத்தில் சிக்கிக்கொண்டவர்களை விடுதலை செய்வதற்கே நாம் அழைக்கப் பட்டிருக்கிறோம். ஜனங்கள் தேவனுக்குத் தரவிரும்பும் பணத்தை* **மிகுந்த மகிழ்ச்சியோடுதான்** *தரவேண்டுமேயல்லாமல், தண்டனைக்கும், ஆக்கினைத்தீர்ப்புக்கும் பயந்து தருவதாய் ஒருபோதும் இருக்கக்கூடாது. இப்படியெல்லாம் ஜனங்களிடம் பணத்தைக் "கறந்து" வாங்குவதை தேவன் ஒருக்காலும் விரும்புவதேயில்லை. பணத்தைத் தரும்படி ஜனங்களைக் கட்டாயப்படுத்தும் பாஸ்டர்கள் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெகுசீக்கிரத்திலோ அல்லது தாமதமாயோ* **நிச்சயமாய்** *வந்துசேரும்!*

*பழைய உடன்படிக்கையின் கீழ், தேவன்மீது கொண்ட அச்சத்தினாலேயே ஜனங்கள் அவரை சேவித்தார்கள்! ஜனங்கள் தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாவிட்டால், தரித்திரத்தி னாலும் வியாதியினாலும் புத்திசுயாதீனத்தினாலும் இன்னும் பல தீமைகளினாலும் தண்டிக்கப்படுவார்கள் என இஸ்ரவேலர்கள் உபாகமம் 28-ம் அதிகாரத்தில் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அச்சத்தினாலேயே ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார்கள். அதேபோல் "நீங்கள் தசமபாகத்தைத் தராவிட்டால் தேவன் உங்களை சபிப்பார்" எனவும் இஸ்ரவேலர்களுக்கு மல்கியா தீர்க்கதரிசி கூறினார் (மல்.3:10). ஆனால், இவை அனைத்தும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ் உட்பட்டவைகளேயாகும்.*

*இதுபோன்ற சட்டதிட்ட கீழ்ப்படிதலுக்கு உட்பட்ட நம்மை விடுவிக்கவே இயேசு வந்தார்! யோவான்ஸ்நானகனின் தகப்பனாகிய சகரியா, புதிய உடன்படிக்கையின் காலத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் கூறியபோது "நாம் இனிமேல் தேவனை அச்சமின்றி சேவித்திட முடியும்" என்றே கூறினார் (லூக்கா 1:74* Living Bible *மொழிபெயர்ப்பு).*

> **நீங்கள் ஏதாவது ஒரு செயலை 'பயத்தினிமித்தம்' செய்து கொண்டிருக்கி றீர்களா? ஒவ்வொரு நாள் காலையிலும் வேதாகமத்தை வாசிக்கிறீர்களே, அது ஏன்?... அவ்வாறு வாசிக்காவிட்டால் அன்று ஏதாவது அசம்பாவிதம் நடந்து விடும் என்ற அச்சமா? இவ்வாறெல்லாம் எண்ணுவது மதியீனமான மூடநம்பிக்கையேயாகும்!**

*இவ்வித மூடநம்பிக்கையோடு நீங்கள் வேதம் வாசிக்க தேவன் நிச்சயமாய் விரும்பவில்லை! அவர் உங்கள் மீது கொண்ட ஆழமான அன்பை நீங்கள் அறிந்துகொண்டு, எல்லா பயத்திலிருந்தும் விடுதலையாகவே தேவன் விரும்புகிறார். நம்மை இயேசுவின் இரத்தத்தினால் கழுவி நீதிமான்களாய் மாற்றிய நோக்கமே, சாத்தானுடைய குற்றப்படுத்தும் ஆக்கினையினால் நாம் ஒருபோதும்*

பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான்! ஜனங்களைப் பயத்தின் ஆக்கினைக்குள் கொண்டுவரும் எந்த ஊழியமும், தேவனிடமிருந்து வந்த ஊழியமாய் ஒருக்காலும் இருக்கவே முடியாது. ஜனங்களை “விடுதலை செய்ய” நம் ஆண்டவர் வந்தாரேயல்லாமல், அவர்களை இன்னும் அதிகமான கட்டிற்குள் கொண்டுவருவதற்கல்ல!

“பல்வேறு பிரச்சனைகளால்” ஏராளமான விசுவாசிகள் ஏற்கனவே பல துன்பங்கள் அடைந்து வருகிறார்கள்! அப்படியிருக்க, சபை கூட்டங்களுக்கு வரும் அவர்களுக்கு இன்னும் அதிகமான பிரச்சனைகளைப் “ பயத்தின் ஆக்கினை” மூலமாய் நாம் தந்துவிடவே கூடாது! விடுதலையடைந்து உதவி பெறுவதற்கே ஜனங்கள் சபைக்கு வருகிறார்கள்... வசை வாங்கி, ஆக்கினைக்குள்ளாகி, மனமடிந்து வீடு திரும்புவதற்காக அல்ல!

“ஆண்டவர், தம் ஜனத்தில் ஆரவாரத்தோடு களிகூருகிறார்” என்றே நாம் வாசிக்கிறோம்! இந்த மகிழ்ச்சியின் ஆரவாரத்தையே நாமும் அவருடைய ஜனத்திற்குத் தெரிவித்திட வேண்டும்!

சபைக்கூட்டங்களில், நாம் ஆண்டவரைத் துதித்து ஆராதிப்பதின் முழு நோக்கமும் : ‘அவர்’ நம்மீது கொண்ட அன்பை பரவசமாய் கொண்டாடி, நம்மில் மகிழ்ந்து களிகூரும் ஆண்டவரில் ‘நாமும்’ களிகூருவதற்கேயாகும். ஆம், நாம் நல்லவர்கள் என்பதற்காக அல்ல ... நம்மை அன்புகூர்ந்ததனிமித்தமே அவர் நம்மை மன்னித்திருக்கிறார்! நமக்குள் யாதொரு நன்மையும் இல்லாதிருந்தபோதே நம்மை கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொண்டார்! அப்படியிருக்க, இப்போது மனந்திரும்பிவிட்ட நம்மை, இன்னும் எவ்வளவு அதிகமாய் தேவன் அன்புகூர்ந்திட மாட்டார்?!

இவ்வாறெல்லாம் இருந்தும், சாத்தானின் வசத்திலிருக்கும் அவனுடைய பிள்ளைகளைவிட ‘தேவனுடைய பிள்ளைகள்’ மத்தியில்தான் அதிகமான ஆக்கினையின் உணர்வை உண்டாக்கி, அதில் சாத்தான் வெற்றியும் பெற்றிருக்கிறான்! ஆனால் உண்மை என்னவென்றால், நாம் அல்ல... சாத்தானுடைய பிள்ளைகளே அதிக ஆக்கினையின் உணர்வினால் பீடிக்கப்பட்டிருக்க வேண்டும்! ஆனால் அவர்களோ, இந்த உலகில் மகிழ்ச்சியோடு வாழ்வது போல் “வஞ்சகத்தில்” காணப்படுகிறார்கள்.

**ஆனால், இந்த உலகில் யாரைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியாயிருக்க வேண்டிய அநேக தேவனுடைய பிள்ளைகளோ இன்னமும் ஆக்கினையின் உணர்வுக்கு அடிமைப்பட்டே வாழ்கிறார்கள்.**

இவ்வித ஆக்கினையின் உணர்வுகளால் “குன்றிப் போய்” இருப்பதை, சிலர் “தாழ்மை” என்றுகூட எண்ணுகிறார்கள். அல்லவே

அல்ல.... மாறாக, அவ்வாறிருப்பது அவிசுவாசமேயாகும்!

பரிசுத்தாவியினால் நிறைந்திருக்கிறோம் எனக்கூறும் அநேக விசுவாசிகள் இன்னமும் பயத்திற்கே அடிமையாய் இருக்கிறார்கள்! ஒருவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்த பின்பு, தொடர்ந்து பயத்திற்கு அடிமையாய் இருப்பது எங்ஙனம்? யாரோ சில கள்ளத்தீர்க்கதரிசிகள் "...சில மோசமான சம்பவங்கள் உங்கள் வாழ்வில் நிகழும்!" எனக் கூறியவுடன்... உடனடியாக பயத்தினால் ஆட்கொள்ளப்படுகிறார்களே! இவர்கள் பீதியடைந்ததைக் கண்ட கள்ளத்தீர்க்கதரிசியோ "கவலைப் படாதிருங்கள், உங்கள் குடும்பத்தில் நடைபெறப்போகும் துயர சம்பவத்திலிருந்து தேவன் உங்களைப் பாதுகாத்திட நான் உங்களுக்காக ஜெபம் செய்யப்போகிறேன்!" எனக்கூறி, ஏராளமான பணத்தை "காணிக்கை" என்ற பெயரில் அவர்களிடமிருந்து வாங்கிக்கொண்டு, அடுத்த குடும்பத்தைச் சந்திக்க தன் நடையைக் கட்டுகிறார்! இதுபோன்ற கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்து நாம் மிகுந்த எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

**இன்று உலகமெங்கும் இதுபோன்ற கள்ளத்தீர்க்கதரிசிகள் உலாவி, ஜனங்களின் மனதில் பயத்தை விதைத்துச் செல்லுகிறார்கள்!**

பத்தாயிரம் கள்ளத்தீர்க்கதரிசிகள்கூட கைகோர்த்துக் கொண்டு நமக்கு விரோதமாய் தீமையைக் கூறட்டும்! ஆனால், **ஒரு தீமையும்** நம்மைத் 'தொடக்கூட' முடியாது! அவர்கள் அறிவித்த தீமைகள் அனைத்தும் அவர்களுக்கே திரும்பச் சென்றுவிடும். ஆனால், நமக்குள் யாதொரு பயமிருந்தாலும், நாம் தேவனிடத்தில் நம்பிக்கையாய் இருக்கவோ அல்லது சாத்தானை எதிர்த்து தைரியமாயிருக்கவோ ஒருக்காலும் முடியாது.

**நாம் தேவனுக்குப் பயந்திருந்தால், வேறு எதற்கும் பயந்திடத் தேவையில்லையே! பயம் சாத்தானின் வலிய ஆயுதம்! ஆகவே தங்கள் ஊழியத்தில் "பயத்தை" உபயோகிப்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் சாத்தானோடு தான் ஐக்கியமாயிருக்கிறார்கள்!**

இயேசு, நரகத்தைக் குறித்து ஜனங்களை எச்சரிக்க மாத்திரமே செய்தார். ஆனால், நரகத்தில் நடைபெறும் கொடூரக் காட்சிகளை விவரித்து, அவர்களை அவர் ஒருபோதும் அச்சுறுத்தவேயில்லை! அதேபோல், தன்னைவிட்டு விலகிச் சென்ற சீஷர்களுக்கு "கொடிய விளைவுகள் ஏற்படும்!" எனக்கூறி, அவர்களையும் ஒருபோதும் அச்சுறுத்தவேயில்லை. ஆம், எஜமான்கள் தங்கள் வேலைக்காரர்களை அச்சுறுத்தக் கூடாது என்றே வேதாகமம் கட்டளையிடுகிறது! (எபே.6:9).

**பயம், சாத்தானுடைய ஆயுதமாயிருக்கும்போது தேவனுடைய ஊழியர்களாய் இருக்கும் நாம் "அந்த ஆயுதத்தை" எப்படி பயன்படுத்த முடியும்?**

**இருப்பினும் இன்றைய திரளான கிறிஸ்தவத் தலைவர்கள் தங்கள் மந்தையை அடக்கி ஆள “பயத்தை” தாராளமாய் பயன்படுத்துகிறார்கள்!!**

ஜனங்கள் நமக்கு இழிவான பெயர் சூட்டி அழைக்கும்போது, அவர்கள் மீது தேவ கோபாக்கினை வரும் என்ற அச்சுறுத்தலையோ அல்லது ஆக்கினைதீர்க்கும் வார்த்தைகளையோ நாம் ஒருக்காலும் கூறவே கூடாது. பரிசேயர்கள் இயேசுவை “சாத்தானுடைய தலைவன்” என்றே அழைத்தார்கள். ஆனால், அதற்கு இயேசு பதிலளித்தபோது, அவர்களைப் ‘பயமுறுத்தாமல் மன்னித்துவிட்டார்’ என்றே வாசிக்கிறோம் (மத்தேயு 12:32). அவருடைய நல்ல மாதிரியையே நாமும் பின்பற்றக்கடவோம்!

நாம் ஜனங்களிடத்தில் பேசும்போது, நம்முடைய வார்த்தைகளோடு “ஆவியையும்” சேர்த்தே தருகிறோம்! இதை நாம் அறியாதவர்களாயிருந்தாலும், காரியம் இவ்வாறுதான் சம்பவிக்கிறது. நம் வாயில் துர்நாற்றம் இருந்தால், எப்போதெல்லாம் நாம் வாயைத் திறக்கிறோமோ அப்போதெல்லாம் ஜனங்கள் “அந்த நாற்றத்தை” எளிதில் உணர்ந்து விடுவார்கள்... ஆனால் ‘நாமோ’ அதைக்குறித்து அறியாதவர்களாயிருக்க முடியும். இதைப் போலவேதான் நம்முடைய **ஆவியிலிருந்தும் “நாற்றங்கள்”** வெளிவருகின்றன!

நாம் பரிசுத்தத்தைப் பிரசங்கித்திட முடியும், ஆனால் நம்மிடமிருந்து புறப்பட்டுச் செல்லும் ஆவியோ ‘பரிசுத்தமற்றதாய்’ இருந்திடவும் முடியும்!

அதேபோல், நாம் தாழ்மையை குறித்தும் பேசிட முடியும், ஆனால் நம்மிடமிருந்து புறப்பட்டுச் செல்லும் **ஆவியோ தாழ்மையற்றதாய்** இருந்திட முடியும்! இரண்டு சகோதரர்கள் தாழ்மையைக் குறித்த ஒரே பிரசங்கத்தைப் பிரசங்கித்திருப்பார்கள். ஆனால், ஒருவரோ தாழ்மையின் ஆவியைப் பெற்றிருந்து, அந்த ஆவியைத் தன் செய்தியைக் கேட்டவர்களுக்கு வழங்கியிருப்பார். அந்த மற்றொருவர் தாழ்மையைக் குறித்தே பேசியிருந்தாலும், அவரிடம் ‘மேட்டிமையின் ஆவி’ இருந்தபடியால், **அந்த ஆவியைத்தான்** தன் செய்தியைக் கேட்ட வர்களுக்கு வழங்கியிருப்பார்! இப்போது, இந்த இரு பிரசங்கிகளுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதைப் பாருங்கள். ஆகவே, அவர்களின் ஆவியை நாம்தான் பகுத்தறிய வேண்டும்!

அதேபோல், நமக்குள் பயம் இருந்தால், மற்றவர்களுக்கும் அந்த பயத்தின் ஆவியைத்தான் நாம் பரப்பிடுவோம்! மேலும், நாம் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கிற “விதத்தின் மூலமாயும்” விசுவாசிகளை ‘ஆக்கினையின்’ பயத்திற்குள் கொண்டு வந்துவிட முடியும்! நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கக்கூடும், ஆனால்

நம்மிடமிருந்து புறப்பட்டுச் செல்லும் ஆவியோ ஜனங்களை அடிமைத்தனத்திற்குள் நடத்தும் ஆவியாய் இருந்துவிட முடியும்!

நம் செய்தியின் வலிமையானது, நம் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும் ஆவியைச் சார்ந்ததேயல்லாமல், நம் புத்தியிலிருந்து புரண்டுவரும் அறிவைச் சார்ந்ததல்ல. நாம் மற்றவர்களுக்கு 'ஜீவனையே' தொடர்பு ஏற்படுத்துகிறோம்! வெறும் செய்தியை மாத்திரமல்ல!

பயம், அது எந்த ரூபமாய் இருந்தாலும், அதற்கு நீங்கள் அடிமையாயிருந்தால், உங்கள் மூலம் "பயத்தின் ஆவியே" புறப்பட்டுச் சென்று, செய்தியைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களையும் மாசு படுத்திவிடும்! இப்போது, உங்களிடமிருந்த அதே பயத்தின் ஆவியால் அவர்களும் பீடிக்கப்படுவார்கள்! இது, நம் சரீரத்தில் நடக்கும் செயலுக்கு ஒப்பானதேயாகும். உங்கள் இரத்த ஓட்டத்தில் வியாதி இருக்குமென்றால், "அதே வியாதியை" பிள்ளைகளுக்கும் பரப்புவதைப் போன்றதே இந்த சத்தியமாகும்!

**ஆகவேதான், நம் ஜீவியத்திலிருந்து ஒவ்வொரு பயத்தையும் அகற்ற வேண்டியது மிக முக்கியமாகும்! மனுஷர் பயமோ, பிசாசின் பயமோ, வியாதியின் பயமோ, மரணபயமோ ஒருக்காலும் இருந்திடக்கூடாது!**

அதுபோலவே, தீமை நிறைந்த சூழ்நிலையைக் குறித்த பயமோ, சாலை விபத்துக்களைக் குறித்த பயமோ, நம்போன்ற ஏழை நாடுகளில் வாட்டி வதைக்கும் தரித்திரத்தின் பயமோ, பிள்ளைகளின் படிப்பைக் குறித்து அல்லது வேலையைக் குறித்து கொண்ட பயமோ... ஆகிய ஒவ்வொரு பயத்தையும் நாம் தீவிரமாய் புறம்பே அகற்றிவிட வேண்டும்!

நம்மிடமிருக்கும் இதுபோன்ற பயங்களைத் துரத்தி விரட்டிட ஒரே வழி: தேவனுக்குப் பயந்திருப்பதும், அவர்மீது விசுவாசமாய் இருப்பதுமே யாகும்! நாம் மாத்திரம் தேவனுக்குப் பயந்திருந்தால், எதைக்குறித்தும் அல்லது யாரைக்குறித்தும் நாம் பயந்திடவே மாட்டோம்!!

நாம் தேவனிடத்தில் நம்பிக்கை உள்ளவர்களாயிருந்தால், அவரை ஊக்கமாய் தேடுகிறவர்களுக்கு தேவன் பலனளிப்பார் என்பதையும்; தன்னை கனப்படுத்தும் யாவரையும் கனப்படுத்துவார் என்பதையும் அறிந்திருப்போம். நம் இருதயத்தில் **விசுவாசம்** குடியிருந்தால், பயம் ஏற்படுவது போன்ற நிகழ்ச்சிகள் நம்மைத் தாக்கினாலும்... பயமோ, ஒருபோதும் நம் இருதயத்தில் குடிகொண்டு தங்கிவிட முடியவே முடியாது!

ஆகவே, இப்போது நமக்குள்ள முக்கியமான கேள்வி யாதெனில், **நம் சிந்தையை** ஆட்கொண்டிருப்பது பயமா? அல்லது விசுவாசமா? என்பதேயாகும்.

நாம் மற்றொரு கேள்வியையும் நமக்குள் கேட்டுப் பார்க்க வேண்டும், “பயத்தை ஆயுதமாய் பயன்படுத்தி **மற்றவர்களை ஆளுகை செய்திட** எப்போதாவது முயற்சித்திருக்கிறோமா?” என்ற கேள்வியேயாகும்!

# 13

## "தன்னைத்தானே தாழ்த்துபவன்"

ஒரு ஆவிக்குரிய தலைவனாய் உருமாற்றம் அடைபவன், தன்னைத்தானே தாழ்த்துவதற்கு எப்போதும் ஆயத்தமாய் இருப்பான்!

பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நின்று, தாழ்மையுள்ளவர்களுக்கே கிருபையைத் தருகிறார்! இவ்வாறு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருந்தால், ஏற்ற காலத்தில் தேவன் நம்மை நிச்சயம் உயர்த்துவார் என வேதம் எத்தனை ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது!(1பேதுரு 5:5,6).

இவ்வாறு நாம் உயர்த்தப்படுவது இந்த உலகத்திலோ அல்லது கிறிஸ்தவ உலகத்திலோ, மனுஷருடைய கனத்தைப் பெறும்படியான "உயர்ந்த மனுஷராய்" மாறுவதை வேதம் இங்கு குறிப்பிடவேயில்லை. மாறாக, ஆவிக்குரிய உயர்வையே அது குறிப்பிடுகிறது!

> **ஒருவன் தன் ஜீவியத்திலும், ஊழியத்திலும் தேவனுடைய சம்பூரண சித்தத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆவிக்குரிய அதிகாரத்தை தேவன் அவனுக்கு அருளிச்செய்வதே இந்த "உயர்த்தப்படுதல்" ஆகும்! ஒருவன் தன்னைத்தானே தாழ்த்துவதைப் பொறுத்தே இந்த உயர்த்தப் படுதலும் சார்ந்திருக்கிறது.**

ஆனால், மனுஷர்களுடைய கண்களுக்கு முன்பாய் நாளுக்கு நாள் பெரியவர்களாக விரும்பும் ஜனங்களாலேயே இவ்வுலகம் நிறைந்திருக் கிறது என்பதை நாம் யாவருமே அறிந்திருக்கிறோம். ஒவ்வொரு அரசியல்வாதியும், ஒவ்வொரு வியாபாரியும் இவ்விதம் பெரிய வர்களாய் மாறவே விரும்புகிறார்கள்.

துரதிருஷ்டவசமாய், தங்களைக் கிறிஸ்துவின் ஊழியர்களாக அழைத்துக் கொள்பவர்களும் இவர்களைப்போலவே நாளுக்கு நாள் பெரியவர்களாய் மாறிடவே விரும்புகிறார்கள். "அருள்திரு டாக்டர் - Reverend Doctor" போன்ற மதிப்பிற்குரிய பட்டம் பெறுவதற்கும், தங்கள் ஸ்தாபனங்களில் "சேர்மன்" பதவியைப் பெறுவதற்கும் இவர்கள் ஆவலாய் தவிக்கிறார்கள்! இவ்வாறு, இன்றைய கிறிஸ்தவம் இவ்

வுலகத்திலுள்ள மாயையின் ஒத்தவேஷத்தில் கைகோர்த்து வீழ்ந்து கிடப்பது கொடிய துயரமேயாகும்!

தங்கள் தலைவர்கள், Focus ஒளி வெள்ளத்தில் சினிமா நட்சத்திரங்கள்போல் ஜொலித்து நிற்பதையும், பொதுக்கூட்டங்களில் ஆடம்பரமான சிங்காசனங்களில் அமர்ந்திருப்பதையும், ஸ்டார் ஓட்டலில் தங்கியிருப்பதையும், மாளிகை வீட்டில் வசிப்பதையும், விலையுயர்ந்த லேட்டஸ்ட் காரை ஓட்டிவருவதையும் இன்றைய இளம் விசுவாசிகள் மெய்சிலிர்க்கப் பார்க்கிறார்கள்! இந்த இளைஞர்கள் தேவனுடைய வழியை சரியாய் புரிந்து கொள்ளாதபடியால்....

**இதுபோன்ற தங்கள் தலைவர்களைப் புகழ்வது மாத்திரமல்லாமல்... தாங்களும் இவர்களைப்போல் உயர விரும்பும் அந்த நாட்களுக்காய் ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள்!**

தேவனிடமிருந்து “இத்தனை செல்வமான உயர்வை” அடைவதற்கு இந்தப் பிரசங்கிகள் பல வருடங்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் ஜீவித்திருப்பார்கள் என்றும் **இந்த இளம் விசுவாசிகள் ‘தவறாய்’ எண்ணிக்கொள்கிறார்கள்!** அதைப்போலவே தாங்களும் உண்மையுள்ளவர்களாயிருந்து, என்றாவது ஒருநாள் இதுபோன்ற டாம்பீக மேடையில் Focus ஒளி வெள்ளத்தில் நிற்கப்போகும் நாளை, இப்போதே கற்பனை செய்தும் பார்க்கிறார்கள்!

இவ்வாறு அமெரிக்காவிலிருந்தும், வளைகுடா நாடுகளிலிருந்தும் ஏராளமான காணிக்கைகளைத் திரட்டி பணம் சம்பாதிக்கும் இவ்வித பிரசங்கிகளை இளைஞர்கள் காணும்போது, அவர்களைப் போலவே தாங்களும் ஐசுவரியவான்களாய் மாறிடும் நாளுக்காய் ஏக்கத்துடன் காத்துக் கிடக்கிறார்கள்! ஆம், இந்த இளைஞர்களின் **மாதிரித் திலகம்** இயேசு கிறிஸ்துவல்ல... ஐசுவரியத்தில் உழலும் சினிமா நட்சத்திரங்களுக்கு ஒப்பான ‘இந்தப் பிரசங்கிகளே’ இவர்களின் மாதிரித் திலகமாய் இருக்கிறார்கள்! இதுவே இன்றைய கிறிஸ்தவத்தின் துயரம் மிகுந்த அவலநிலையாகும்!

**இவ்வித சீர்கேட்டைத் தழுவியிருக்கும் இந்த வாலிப இளைஞர்களுக்கு, நம் ஜீவியத்தின் மூலமாய் செயல்படுத்திக் காட்ட வேண்டியதெல்லாம் “ஆண்டவரை நாம் முழு இருதயமாய் பின்பற்றினால், பொன்னும் புகழும் உடையவர்களாய் அல்ல.... ஒப்பற்ற தேவ பக்தியுடையவர்களாக மாறுவோம்” என்பதேயாகும்!**

அதுமாத்திரமல்ல, இந்த சீரிய மாற்றம் நிகழும்போது, நாம் தவறாய் புரிந்து கொள்ளப்படுவோம்! தள்ளப்படுவோம்! துன்புறுத்தவும்படுவோம்! ஆனால், அதேசமயம் நம்மைப் பகைப்பவர்களை நேசிக்கவும், நம்மை சபிப்பவர்களை ஆசீர்வதிக்கவும் நம்மால்

முடியும்! இந்த ஒப்பற்ற வாழ்க்கையைத்தான், நம் அடுத்த சந்ததிக்கு நாம் செயல்படுத்திக் காட்டவேண்டியது அவசியமாயிருக்கிறது. இதைச் செய்ய நாம் தவறிவிட்டால், வருங்கால சந்ததியினர் இன்றைய லௌகீகமான பிரசங்கிகளிடம் தாங்கள் கண்ட மாயைக் கவர்ச்சியை மனதில் வைத்து **"வேறொரு இயேசுவையே" பின்பற்றுவார்கள்!**

தேவனுடைய பலத்த கரத்துக்குள் அடங்கியிருப்பதன் பொருள், அவர் நம் ஜீவியத்தில் அனுப்பும் எல்லாச் சூழ்நிலைகளையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வதேயாகும். இந்தச் சூழ்நிலைகள் நம்மைத் தாழ்த்துவதற்கு இடங்கொடுத்தால் மாத்திரமே, நாம் சிறியவர்களாய் மாறி, தேவன் பெரியவராய் நமக்கு மாறுவார்!

**இவ்வாறு ஜனங்களின் கண்களுக்கு முன்பாய் நாம் சிறியவர்களாய் மாறிவிட்டால், இப்போது அவர்கள் நம்மைச் சார்ந்து ஜீவிக்காமல் பெரியவரான ஆண்டவரையே சார்ந்து ஜீவிக்கக் கற்றுக்கொள்வார்கள்!**

கர்த்தருடைய ஊழியனாய் இருக்கும் நான், என்னைக் குறைகூறு பவர்களைவிட எனக்கு அதிகம் மரியாதை செலுத்துபவர்களைக் குறித்தே அதிகமாய் பயப்படுகிறேன். சில ஜனங்கள், எனக்கு அளவு கடந்த மரியாதை செலுத்தி, அதன் விளைவாய் நான் அவர்கள் வாழ்க்கைக்குரிய தேவ சித்தத்தை வெளிப்படுத்த வேண்டும் என எதிர் பார்ப்பதையும் கண்டேன். இதுபோன்று எதிர்பார்ப்பவர்களிடம் "அவ்வாறு நான் செய்ய இயலாது!" என சட்டென்று பதில் சொல்லி விடுவதுண்டு. பழைய உடன்படிக்கையின் கீழ்தான், தங்கள் ஜீவியத்திற்குரிய தேவ சித்தத்தை அறிந்து கொள்ள, ஜனங்கள் 'தீர்க்கதரிசிகளிடம்' செல்வது வழக்கம் என அவர்களிடம் நான் கூறிவிடுவேன். இப்போது, புதிய உடன்படிக்கையின் கீழ் "இளையவன்" முதற்கொண்டு தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைகளும் அவரிடம் நேரிடையாய் சென்று அவருடைய சித்தத்தை தனிப்பட்ட விதத்தில் அறிந்து கொள்ள முடியும்!

புதிய உடன்படிக்கையில், இந்தப் பகுதியானது ஓர் விலையேறப் பெற்ற சிலாக்கியமாக எபிரெயர் 8:11-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. **இப்போது, நாம் யாவருமே பரிசுத்த ஆவியைப் பெற முடிவதால், அவரே நமக்கு வழிகாட்டியாகவும் திகழ்கிறார்!** ஆகவே என்னுடைய சகோதரர்களுக்கு நான் கூறுவதெல்லாம் "நான் உங்களுக்குப் புத்திமதி கூறமுடியும் ....ஆனால், உங்களுக்கான தேவ சித்தத்தை நான் ஒருபோதும் அறிந்து சொல்வதற்கு முயற்சிக்கமாட்டேன்" எனக்கூறியே ஒதுங்கிவிடுகிறேன். இப்பகுதியை, என் ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தே வலியுறுத்திக் கூறி வந்திருக்கிறேன். இதன் விளைவாய், இன்று எங்கள் சபையிலுள்ள ஜனங்கள் தாங்களாகவே கர்த்தரை அறிந்துகொண்டு என்னை அவர்கள்

சார்ந்து கொள்வதேயில்லை! ஆம், அவர்களின் **தலையாகிய கிறிஸ்துவோடு** அவர்கள் நேரிடையாகவே இணைக்கப்பட்டிருக்கிறார்கள்! இவ்வாறுதான், கடந்த பல ஆண்டுகளில் கிறிஸ்துவின் சரீரம் எங்கள் ஸ்தலங்களில் கட்டப்பட்டு வருகிறது!

ஆகவே, கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்குரிய அடிப்படையான முதற்பகுதி “ஜனங்களைத் தலையோடு இணைத்துவிட்டு... எவ்வளவு முடியுமோ அவ்வளவு துரிதமாய் அவர்கள் நம்மைச்சார்ந்து கொள்ளாமல் சுதந்திரமாய் இருக்கச் செய்திட வேண்டும்” என்பதேயாகும்!

கடந்த காலத்தில் இவ்வாறு செய்திடத் தவறிய நம் தோல்விக்காய் நம்மை நாமே தாழ்த்தி ஆழமாய் மனந்திரும்பக்கடவோம். கிறிஸ்து நமக்குள் பெருகி, ஊழியர்களாகிய நாமோ சிறியவர்களாய் மாறிடவே எப்போதும் வாஞ்சை கொண்டிருக்க வேண்டும். **இவ்வாறு நம்மைக் குறைத்து சிறியவர்களாக்கும்படியான அநேக சூழ்நிலைகளுக்குள் தேவனே நம்மை நடத்துகிறார்.** நம்மை சிறியவர்களாக்கும் கிரியை நமக்குள் நடந்து விட்டால், கிறிஸ்து தானாகவே நமக்குள் பெருகி விடுவார்! இவ்வாறு தேவன் நடத்தும் சூழ்நிலைகளில் நம்மை நாமே தாழ்த்திவிட்டால் **தேவனுடைய நோக்கம்** நமக்குள் நிச்சயம் சம்பூரணமாய் நிறைவேறி விடும்!

நாம் தவறு செய்த யாவரிடமும் சென்று மன்னிப்பு கேட்பதிலும், நம்மை நாமே தாழ்த்தும் பகுதி அடங்கியிருக்கிறது. கர்த்தருடைய வேலைக்காரர்களாய் (ஊழியர்களாய்) இருப்பவர்கள் **எல்லா ஜனங்களுக்கும்** வேலைக்காரர்களாய் இருந்திட வேண்டும்! ஆகவே, ஜனங்களை ஆசீர்வதிக்கும்படி, ஒரு வேலைக்காரனாய், அவர்களுக்குக் கீழாய் நம்மைத் தாழ்த்திடவே விருப்பம் கொண்டிருக்க வேண்டும். நாம் தவறு செய்யும்போது, அதை உடனடியாக ஒத்துக்கொள்ளவும் தேவையான இடங்களில் மன்னிப்பு கேட்கவும் வேண்டும்! தவறே செய்யாத ஒரே ஒரு நபர் தேவன் மாத்திரமேயாவார்!

நான் ஒரு சமயம் ஆண்டவரிடம், “ஆண்டவரே, இந்த சூரியனுக்குக் கீழ் வாழும் சிறுபிள்ளைகளோ, வேலைக்காரர்களோ அல்லது பிச்சைக்காரர்களோ அல்லது யாராக இருந்தாலும் அவர்களிடம் மன்னிப்புக் கேட்க நான் ஆயத்தமாயிருக்கிறேன்! இவ் விஷயத்தில் என் மதிப்பையும், கௌரவத்தையும் நான் ஒருக்காலும் தேடமாட்டேன்” எனக் கூறி ஜெபித்தேன். நான் ஆண்டவரிடம் சொன்னது போலவே செயல்படுத்தியும் வாழ்கிறேன். தேவனும் என்னை ஆசீர்வதிக்கிறார்!

உங்கள் மந்தைக்கு முன்பாக நீங்கள் ஒருபோதும் ஒரு மாயமான மதிப்பிலும், கௌரவத்திலும் நின்றிடவே வேண்டாம். நீங்கள் ஏதாவது

தவறு செய்திருந்தால் ஜனங்களுக்கு முன்னின்று "நான் செய்தது தவறு, அதற்காக நான் வருந்துகிறேன்" என்று அவர்களிடம் மன்னிப்புக் கேளுங்கள். நீங்கள் உண்மையாகவே அவ்வாறு செய்தால், ஜனங்கள் உங்கள்மீது கொண்ட மதிப்பு குறையும் என்று எண்ணுகிறீர்களா? ... இல்லை, இன்னும் சற்று அதிகம் உயரத்தான் செய்யும்! ஆகவே நீங்கள் ஒரு தவறும் செய்யாதவரைப்போல் ஏன் பாசாங்கு செய்ய வேண்டும்?

ஒரு சமயம், ஒரு கல்லூரி மாணவன் தன் பேராசிரியரிடம் ஒரு மிகக் கடினமான கேள்வியைக் கேட்டான். அதற்கு அந்தப் பேராசிரியர், இந்தக் கேள்விக்கு இரண்டு வார்த்தைகளில் நான் பதில் கூற முடியும் எனக் கூறி, "**எனக்குத் தெரியாது!**" என பதில் உரைத்தார். மாணவர்கள் அந்தப் பேராசிரியர் மீது வைத்திருந்த மதிப்பு அந்த நாளிலிருந்து உயர ஆரம்பித்தது! ஏன் தெரியுமா? இந்த மாணவர்கள் தங்கள் பேராசிரியரின் தாழ்மையைக் கண்டதற்காக மாத்திரமல்ல... அவர் தனக்குத் தெரியாததைச் சொல்லிக் கொடுக்க முயலமாட்டார் என்ற அவருடைய நேர்மையைக் கண்டதே பிரதான காரணமாகும்!

என் சபையில், ஜனங்களுக்கு முன்பாகப் பகிரங்கமாகவே, "என் ஜீவியத்தின் கடைசிநாள் வரை நான் தவறு செய்துகொண்டுதான் இருப்பேன்! அதற்கு ஒரே காரணம், நான் தேவன் அல்ல என்ற உண்மைதான்!" என அறிக்கை செய்திருக்கிறேன். இந்த பூமியில் எவ்வளவு காலம் நான் வாழ்வேனோ, அதுவரை நான் தவறுகள் செய்து கொண்டுதானிருப்பேன்... இதில் நம்பிக்கையான காரியம் என்ன வென்றால், நான் சுமார் 10 அல்லது 20 - வருடங்களுக்கு முன்பாக செய்த தவறுகள் போல் இப்போது செய்த தவறுகள் அவ்வளவு மதியீனமாக இல்லை என்பதுதான்!

**ஏனென்றால் நான் ஏற்கனவே செய்த சில தவறுகளில் சில பாடங்களைக் கற்றுக்கொண்டேன். என் தவறுகள் மூலமாக கொஞ்சம் ஞானத்தையும் பெற்றுக் கொண்டேன். ....இருப்பினும் நான் இன்னும் பூரணமானவன் அல்ல!**

உங்களில் அநேகர் திருமணம் ஆனவர்கள்தான்! நீங்கள் அறியாமலே கூட, தற்செயலாய் உங்கள் மனைவியை மனம் புண்படச் செய்வது எவ்வளவு எளிதில் சம்பவிக்கிறது என்பதை அறிவீர்கள். ஒரு விஷயத்தை நல்ல நோக்கத்தோடு சொல்லியிருப்பீர்கள். ஆனால் அதை உங்கள் மனைவி விளங்கிக்கொள்ளாமல் உங்களைத் தவறாய் புரிந்து கொள்ள முடியும். அதைப்போலவே, நீங்களும்கூட, உங்கள் மனைவி கூறியதைத் தவறாய்ப் புரிந்துகொள்ளவும் முடியும்! இதுபோன்ற சமயங்களில் **நீங்கள்** என்ன செய்ய வேண்டும்? உங்களுக்கு நான் கூறும் விடை இதுதான்: "உங்கள் நல்ல நோக்கத்தை விளக்குவதற்காக நீங்கள் எடுத்துக்கொள்ளும் பிரயாசங்களைக் காட்டிலும் அல்லது இந்த தவறு

யாருடையது என அலசி ஆராய்வதைக் காட்டிலும் **ஒரே ஒரு மன்னிப்பு கேட்டுவிட்டால்** உங்கள் வீட்டில் சமாதானம் நொடிப்பொழுதில் திரும்ப வந்து சேரும்!”.

இப்போது, ஏதோ ஒரு சூழ்நிலையில் உங்களோடு வேலை செய்பவர்கள் உங்களைத் தவறாய் புரிந்துகொண்டதாக வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் என்னதான் விளக்கம் கூறினாலும், அவைகளைக் கேட்பதற்கு அவர்கள் ஆர்வம் காட்டமாட்டார்கள். இவ்வாறு, முற்றிலும் குற்றமற்ற இந்த சூழ்நிலையில் நீங்கள் செய்ய வேண்டிய தென்ன? இந்த நிலைக்காக நீங்களே நொந்து மடிந்து கொள்வதா? தேவையேயில்லை! தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக உங்கள் மனசாட்சி தூய்மையாய் இருக்கிறதா என்பதை மாத்திரம் உறுதி செய்யுங்கள்... பின்பு, இந்த விஷயத்தை உங்கள் **தேவனிடமே விட்டு விடுங்கள்!** நீங்கள் செய்யக்கூடியதெல்லாம், இது ஒன்றுதான்! இந்த வழிமுறையைத்தான் நான் பல ஆண்டுகளாய் பின்பற்றி வருகிறேன். அதினிமித்தம் நான் மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்டும் இருக்கிறேன். ஆகவேதான், இதே வழிமுறையை நீங்களும் பின்பற்றும்படி உங்களுக்கும் ஆலோசனை கூறுகிறேன்.

கர்த்தருக்கு ஊழியம் செய்யும் ஒவ்வொருவரும் சாத்தானின் தாக்கு தலுக்கு **இலக்காக** இருக்கிறார்கள். நாம் எந்த அளவிற்கு தேவனுக்குப் பயனுள்ளவர்களாய் இருக்கிறோமோ அந்த அளவுக்கு சத்துருவால் நாம் தாக்கப்படுவோம். இத்தாக்குதலைத் தவிர்த்திட நம்மால் முடியாது. சாத்தான் நிச்சயமாய் **அவதூறுகள், பொய்யான குற்றச்சாட்டுகள், திரித்துக் கூறப்பட்ட கதைகள்** போன்றவைகள் மூலமாய் நம்மைத் தாக்கிடவே செய்வான்! அதுமாத்திரமல்ல, அவன் நம்முடைய மனைவியையும், பிள்ளைகளையும்கூட தாக்குவான்!

இயேசுவின் ஜீவகாலத்தில் ஜனங்கள் அவரைப்பற்றிக் கூறிய தீமையானவைகளைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். “அதே வார்த்தை களைத்தான்” இன்றும், அவரை உண்மையாய் பின்பற்றும் சீடர்களைத் தாக்குவதற்கு ஜனங்கள் பயன்படுத்துகிறார்கள். ஜனங்கள் இயேசுவை “போஜனப்பிரியன், மதுபானப்பிரியன்” என்றும் (லூக்கா 7:34), “மதிமயங்கிய பைத்தியக்காரன்” என்றும் (மாற்கு 3:21), “பிசாசு பிடித்தவன்” என்றும் (யோவான் 8:48), “பிசாசுகளின் தலைவன்” என்றும் (மத்.12:24)... இன்னும் இதுபோன்ற பொல்லாத பெயர்களை வைத்து இயேசுவைத் தாக்கினார்கள். மேலும், வேதமும் மோசேயும் கற்பித்த உபதேசங்களுக்கு விரோதமாய் **இயேசு “கள்ள உபதேசம்” பிரசங்கிக்கிறார்** என்றும் ஜனங்கள் கூறினார்கள் (யோவான்.9:29). இவ்வாறுதான், ஆண்டவரிடம் வந்து ஜனங்கள் சத்தியத்தைக் கேட்க விடாதபடி அவரிடமிருந்து அவர்களை விரட்டிவிட்டார்கள். ஆனால்

*இயேசுவோ, இதுபோன்ற ஜனங்களின் தாக்குதல் வாசகங்களுக்குப் பதில் சொல்ல வேண்டுமென சிறிதேனும் சிந்திக்கக்கூட இல்லை!*

**ஆம், தனிப்பட்ட விதத்தில் தன்மீது தாக்கிய எந்தக் குற்றச்சாட்டுகளுக்கும் அவர் ஒருபோதும் பதில் பேசவே இல்லை. அவர்போலவே நாமும் அவ்விதமே இருந்திடக்கடவோம்!**

*மாறாக, உபதேசரீதியான கேள்விகளுக்கு மாத்திரமே இயேசு பதில் கூறினார்! நாம் வாழும் இக்காலத்திலும், ஜனங்கள் இயேசுவை "அவர் ஒரு விபசாரக்காரன்" என்றுகூடப் பழி சாட்டுவதைப் பார்க்கிறோம். ஆனால் அவர்களை நியாயந்தீர்த்திட தேவன் வானத்திலிருந்து இறங்கி வரவில்லையே!*

*அப்போஸ்தலனாகிய பவுலையும் "வஞ்சகன்" "கள்ளத்தீர்க்கதரிசி" "ஜனங்கள் பொல்லாததாய் கருதிய ஒரு குழுவைச் சார்ந்தவன்" என்று அவன் சென்றவிடமெல்லாம் அழைத்தார்கள் (அப்.24:14; 28:22). இவ்வாறாக, பவுலின் பிரசங்கங்களை ஜனங்கள் கேட்கவிடாதபடி முயற்சித்தார்கள். இதே கதிதான் சபையின் சரித்திரத்தில் வந்த வலிமையான தேவ மனிதர்களாகிய மார்ட்டின் லூத்தருக்கும், ஜான் வெஸ்லிக்கும், சார்லஸ் பின்னிக்கும், வாட்ச்மேன்-நீக்கும் இன்னும் பல உண்மையான தேவனுடைய தீர்க்கதரிசிகளுக்கும் ஏற்பட்டது.*

*நாம் தாக்கப்படும்போதோ அல்லது தவறாய் குற்றம் சாட்டப் படும்போதோ உள்ள சமயங்களில், அவருடைய பலத்த கரத்திற்குக் கீழாக நம்மைத் தாழ்த்தும்படியே தேவன் விரும்புகிறார்.*

**இவ்வாறு நம்மைத் தாழ்த்த வழிநடத்தும் கரம் மனிதனுடையதல்ல ... "அது தேவனுடைய கரம்" என்பதை நம் கண்கள் கண்டுவிட்டால் நம்மை நாம் தாழ்த்துவது நமக்கு மிக இலகுவாயிருக்கும்!**

*கடந்த வருடங்களில் "விசுவாசிகள்" என்னைப்பற்றியும், என் போதகங்களைப்பற்றியும் பல்வேறு வகையான தீமைகளைச் சொல்லியிருக்கிறார்கள்! நான் மாத்திரமல்லாமல், என் குடும்பத்தையும் சேர்த்து பொய் குற்றச்சாட்டுகளைக் கூறி ... அவைகளை விமர்சித்து சிறு கைப்பிரதிகளையும் "புத்தகங்களையும்கூட" எனக்கு விரோதமாய் வெளியிட்டிருக்கிறார்கள். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், "அவர் களுக்கு எந்தப் பதிலும் எழுதவேண்டாம்" என்றே ஆண்டவர் எப்போதும் எனக்குச் சொல்வதுண்டு. ஆகவே நானும் அவைகளைக் குறித்து அமைதியாய் இருந்துவிடுவேன். இதன் விளைவாய் ஆண்டவர் என்னிலும், என் குடும்பத்தாரிடத்திலும் மாபெரும் "*__பரிசுத்தமாகுதலின் சுத்திகரிப்பின் கிரியைகளைச்__*" செய்திருக்கிறார். ஆம், இவ்வாறாகவே தீமையும் நமக்கு நன்மையை கிரியைச் செய்யும்படியாய் தேவன் செய்துவிடுகிறார்!*

*"கர்த்தருக்கே சொந்தமான நாளில், அவர் இந்த கார்மேகங் களையெல்லாம் அகலச் செய்து, பிரகாசிக்கும் சூரிய ஒளியை உதிக்கச் செய்வார்" என்பதை நான் நன்கு அறிந்திருக்கிறேன். ஆகிலும், அந்த காலத்தைத் தீர்மானிப்பது அவரேயல்லாமல், நானல்ல! (அப்:1:7). அதுவரை நான் செய்யவேண்டியதெல்லாம், அவருடைய பலத்த கரத்திற்குள் என்னை நானே தாழ்த்தி அடங்கியிருப்பதுதான்!*

**யாருக்கு முன்பாகவும் நின்று என்னை நியாயப்படுத்துவது என்னுடைய வேலையேயல்ல! அந்த வேலையை நான் செய்யத் தொடங்கிவிட்டால், வேறு எந்த வேலையும் செய்வதற்கு எனக்கு நேரமேயிருக்காது!**

*கன்னானாகிய(CopperSmith-தாமிரக்கொல்லன்)அலெக்சந்தரைப் பற்றி பவுல் கூறியதுபோலவே, நம் எதிரிகளுக்கு, அவர்களுடைய கிரியை களுக்குத்தக்கதாக "கர்த்தரே" பலனளிப்பார்! (2தீமோ.4:14). ஆகவே, இதுபோன்ற பழிவாங்குவதற்குரிய விஷயங்களை கர்த்தரிடம் ஒப்புக் கொடுத்துவிடுவதே நமக்கு மிகுந்த பாதுகாப்பானதாகும் (ரோமர்.12:19).*

*ஆம், எந்த விஷயங்களையும் தேவனிடம் ஒப்புக்கொடுப்பதே மேன்மையான வாழ்க்கையாகும். ஏனெனில், அவர் என்ன செய்து கொண்டிருக்கிறாரோ, அதை அவர் நன்கு அறிவார்! "சகலமும்" அவருடைய அதிகாரத்திற்கே உட்பட்டிருக்கிறது!* **நல்லதொரு சிற்பியாய், நம்மில் இயேசுவை வடிவமைப்பதற்காக** *அவரே பாறையை நேர்த்தியாய் செதுக்கிக் கொண்டிருக்கிறார். பாறையின் "சில பகுதிகள்" கடினமானதாய் இருக்கிறபடியால், அவைகளைச் செதுக்குவதற்கு, இதுபோன்ற பொய்யான குற்றச்சாட்டுகளையும், எதிர்ப்புகளையும் அவர் உபயோகிக்க வேண்டியதாய் இருக்கிறது! இவ்வாறு அவருடைய செதுக்குதலுக்கு நாம் அடங்கியிருந்தால்... முடிவில், கிறிஸ்துவுக்கு ஒப்பான மனிதர்களாய் நாம் வடிவம்பெற்று, ஆவிக்குரிய அதிகாரத்தையும் பெற்றிட முடியும்!*

*தான் நடத்தப்பட்ட ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் இயேசு தன் பிதாவின் கரத்தைத் தெளிவாய் கண்டபடியால், தன்னைக் காட்டிக் கொடுத்த யூதாஸையும் "சிநேகிதனே!" என அவரால் அழைக்க முடிந்தது! இவ்வாறு நம் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுடைய சர்வ வல்லமையுள்ள ஆளுகையை நாமும் காணமுடிந்தால், அச்சூழ்நிலை களில்* **நம்மை நாமே தாழ்த்துவது** *நமக்கும் எளிதாய் மாறிவிடுமே! இதனிமித்தம், ஏற்ற சமயத்தில்* **நம்மை உயர்த்துவதும்** *தேவனுக்கு மிக எளிதாய் இருக்கும்! ஆம், நம் தோளின்மீது விழுந்த அழுத்தங்களை 'எப்போது' அகற்றி, அதே தோளின்மீது தன் அதிகாரத்தை 'எப்போது' தரவேண்டும் என்ற "ஏற்றவேளையை" தேவனே அறிந்திருக்கிறார். எனவேதான் நாம் அவருக்காகவே காத்திருக்க வேண்டும்! இவ்வாறு*

*'கர்த்தருக்காக காத்திருக்கிற' ஒருவர்கூட ஏமாற்றம் அடைந்ததோ அல்லது வெட்கம் அடைந்ததோ இல்லவே இல்லை! (ஏசாயா 49:23).*

உயர்த்தப்படுவது என்பது, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் தேவன் நமக்கு 'இந்த உலகத்தின் உயர்வைத் தருவார்' என்பது பொருள் அல்ல! மார்க்கரீதியாகவும், நம்மை உயர்த்தி ஒரு பெரிய கிறிஸ்தவ ஸ்தாபனத்தின் தலைவராகவும் நம்மை அவர் மாற்றிட மாட்டார்! பெரிய ஸ்தாபனங்களை விட்டு விடுங்கள், எந்த ஒரு சிறிய ஸ்தாபனத்துக்குக்கூட ஒரு தலைவராய் இருப்பதற்கு நான் ஒருபோதும் விரும்பியது இல்லை. **நான் கர்த்தருக்கும் அவருடைய ஜனத்திற்கும் ஒரு வேலைக்காரனாய்** (ஊழியக்காரனாய்) இருக்கவே விரும்புகிறேன், அவ்வளவுதான்! இவ்வாறு வேலைக்காரனாய் இருந்து....

> **நான் என்ன செய்யவேண்டும் என்று ஆண்டவர் சொல்லுகிறாரோ அதை மாத்திரமே செய்து, அவர் என்னிடம் ஒப்படைத்த நபர்கள்மீது மாத்திரமே நான் பொறுப்புள்ளவனாய் இருந்திடவும் விரும்புகிறேன்.**

இவ்வாறு அவர் என்னிடம் ஒப்படைக்கும் நபர்கள் 10 பேராய் இருந்தாலும் அல்லது பதினாயிரம் பேராய் இருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல! ஏனென்றால், எத்தனை பேர் என்பதை முடிவு செய்யவேண்டியது தேவனேயல்லாமல், நானல்ல! மேலும், கிறிஸ்தவ உலகம் வழங்கும் எந்த ஒரு பட்டத்தையும் அல்லது ஸ்தானத்தையும் நான் துளிகூட விரும்பியதில்லை! அதேபோல், ஜனங்களின்மீதோ அல்லது பணத்தின்மீதோ அல்லது எந்த சொத்துக்களின்மீதோ "கண்ட்ரோல் செய்யும்" எவ்வித அதிகாரத்தின் மீதும் எனக்கு நாட்டம் இல்லவே இல்லை! தேவை நிறைந்த இந்த உலகத்தில், "தேவனுடைய வார்த்தையை பறைசாற்றி, ஜனங்களுக்கு **ஊழியம்** செய்யும்" இந்த ஒரே விருப்பத்தோடு மாத்திரமே நான் தொடர்ந்து ஒட்டி இணைந்திருக்க விரும்புகிறேன்!

ஊழியர்களாகிய நாம் இயேசுவின் அடிச்சுவடுகளையே பின்பற்றக்கடவோம்! நம்மைப்பற்றி ஜனங்கள் "என்ன" தீமை பேச விரும்பினாலும் அதை அவர்கள் பேசட்டும்! நாம் மாத்திரம் தொடர்ந்து தேவனைக் கனப்படுத்தி வாழ்ந்தால், ஒருநாளில் அவரும் நம்மை நிச்சயமாய் கனப்படுத்துவார்! நாம் தீவிரம் கொண்டு, கர்த்தரைப் பின்பற்றுவோமானால், தேவன் நம்மை அநேக துன்பமான சூழ்நிலைகளுக்குள் நடத்துவதை நாம் காணமுடியும்! அவ்வாறு, அவர் நடத்தும் எல்லா சூழ்நிலைகளிலும் கொண்டிருக்கும் அவருடைய நோக்கமெல்லாம், மனுஷருடைய அபிப்பிராயங்களிலிருந்து நம்மை விடுவிப்பதும்; இப்பூமியோடு நம்மைக் கட்டியிருக்கும் சங்கிலிகளைத் தகர்த்தெறிந்து "கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து நம்மை

*உயர எழும்பச்” செய்வதுமேயாகும்! (ஏசாயா 40:31).*

*இவ்வாறு, நம்முடைய சூழ்நிலைகளைத் தேவனே ஒழுங்கு செய்து, நம்மை அவ்வளவாய் மனுஷர்களுக்கு முன்பாய் தாழ்த்தும்படிச் செய்வார்!... அதின் விளைவாய், முடிவில் நாம்* **அவருடைய அபிப்பிராயங்களுக்கு மாத்திரமே** *அக்கறை கொள்ளும் உயர்ந்த ஸ்தானத்தைக் கண்டடைவோம்!* **இத்தருணத்தில்** *நாம் பெற்றிடும் ஆவிக்குரிய அதிகாரம் மெய்யாகவே வல்லமை கொண்டதாய் விளங்கிடும்! இந்த ஒப்பற்ற பங்கு, ஊழியர்களாகிய நாம் யாவருக்கும் உரித்தாவதாக!*

# 14

## “மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் பெற்றவன்”

ஒரு ஆவிக்குரிய தலைவன், தனக்கு முன்சென்ற தன் எஜமானைப் போலவே, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியனாய் இருப்பான் (எபி.6:20; 7:7).

மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம், லேவிய ஆசாரியத் துவத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும் (எபி.7 வாசித்துப் பாருங்கள்). லேவிய ஆசாரியத்துவத்தில் ஏராளமான சடங்குகளும் வெளியரங்க மான காரியங்களும் இருந்தன. உதாரணமாய், ஆரோனின் புத்திரர்கள் தேவனுக்கு முன்பாக ஊழியம் செய்ய வரும்போது “எவ்விதமான உள்ளாடை” உடுத்தவேண்டும் என்பதுகூட கட்டளையிடப்பட்டிருந் தார்கள் (லேவி.6:10; 16:4). ஆனால் மெல்கிசேதேக்கின் ஆசாரியத் துவத்திலோ, உடுத்தவேண்டிய ஆடைகளைக் குறித்தோ அல்லது சடங்குகளைக் குறித்தோ யாதொன்றும் சொல்லப்படவேயில்லை!

முழு வேதாகமத்திலும், “மெல்கிசேதேக்” மூன்று வசனங்களில் மாத்திரமே தோன்றுவதைக் காண்கிறோம். அப்படியிருந்தும், நம் ஆண்டவரோ **மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர்** என்றே அழைக்கப்படுகிறார் (ஆதி.16:18-20). அப்படி என்ன அதிசயமான செயலை இந்த மெல்கிசேதேக் செய்துவிட்டார்?

போர்களத்தில், 14 ராஜாக்களையும் அவர்களுடைய சேனை களையும் ஆபிரகாம் தோற்கடித்து, அந்த ராஜாக்கள் பிடித்து வைத்திருந்த தன்னுடைய மருமகன் லோத்துவையும் அவனது குடும்பத்தையும் மீட்டு, திரும்பி வந்து கொண்டிருந்தான். துளியும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஆபிரகாம் “**மிகுந்த கவலையுடன்**” திரும்பிக் கொண்டிருந்தான் என்பது மாத்திரமல்லாமல்... தன்னிடம் இருந்த சாதாரண 318 வேலைக்காரர்களைக் கொண்டு (அவர்களில் ஒருவர்கூட போர்வீரர்கள் அல்ல!) போர்க்களத்தில் கண்ட வெற்றியி னிமித்தம் ஆபிரகாம் “**பெருமையும்**” அடைந்திருந்தான்! அதுமாத்திர மல்லாமல், அந்த இராஜ்ஜியங்களின் திரளான செல்வங்களையும் ஆபிரகாம் கைப்பற்றியிருந்தான். அக்கால வழக்கத்தின்படி, போரில்

*வெற்றி பெற்றவர்களே அந்த செல்வங்களைப் பங்கிட்டுக் கொள்வார்கள். ஆபிரகாமோடு இருந்த 318 வேலைக்காரர்களும், தாங்கள் விரைவில் ஐசுவரியவான்களாகப் போவதை ஆர்வத்துடன் காத்திருந்தார்கள்!*

*யுத்தத்தின் வெம்மையில், இந்த ஆபிரகாம் சரீரப்பிரகாரமாய் மிகுந்த களைப்புடையவனாயும்...* **பெருமை, பொருளாசை** *ஆகிய இரு பெரும் அபாயங்களைச் சந்திக்கிறவனாயும் நின்று கொண்டிருந்தான்! ஆனால் இந்த அபாயங்களைக் குறித்து எச்சரிப்பதற்கோ ஒருவர்கூட அப்போது அங்கு இல்லை! அவனோடு 318 வேலைக்காரர்கள் மாத்திரமே நின்று கொண்டிருந்தார்கள். ஆபிரகாம் ஒரு மாபெரும் தேவமனிதன் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அவனோ அச்சூழ்நிலையில் ஓர் தனி மனிதனாகவே நின்று கொண்டிருந்தான். ஸ்தாபன தலைமையின் "பிரமிட் சிகரத்தில்" அமர்ந்துகொண்டு, தங்களைச் சூழ வெறும் "ஆமாம் - புருஷர்களை" (Yes-men) மாத்திரமே வைத்துக்கொண்டு, தங்களைத் திருத்துவதற்கோ அல்லது தட்டிக் கேட்பதற்கோ ஒருவருமில்லாத இன்றைய திரளான ஸ்தாபன தலைவர்களைப் போலவே... இந்த ஆபிரகாமும்,* **தனிமையில் நின்று கொண்டிருந்தான்!** *இதுபோன்ற நிலையிலிருக்கும் ஊழியர்களே சாத்தானுடைய குறிக்கு இலகுவில் இரையாகிவிடுகிறார்கள்!*

*ஆனால் தேவனோ, ஆபிரகாமின் மீது கவலை கொண்டு, தன்னுடைய மற்றொரு ஊழியக்காரனிடம் பேசி, அவனுக்கு* **உதவி செய்யும்படி** *அனுப்பிவைத்தார். அந்த வேலைக்காரன்தான் இந்த மெல்கிசேதேக்!*

> **மெல்கிசேதேக் ஆபிரகாமை சந்தித்து, அவனுடைய தேவைகள் என்னவென்று கூட தெரியாமலே அவைகளைப் பூர்த்தி செய்து விட்டார்! அது எப்படியெனில், எதைச் செய்யும்படி தேவன் சொன்னாரோ அதை இந்த மெல்கிசேதேக் செய்தார், அவ்வளவுதான்!**

*இந்த மெல்கிசேதேக் செய்த முதல் உதவி என்ன தெரியுமா? ஆம்,* **"கொஞ்சம் உணவைத்தான்"** *இவர் ஆபிரகாமுக்கு கொண்டு சென்றார். இந்த மெல்கிசேதேக் அத்தனை 'உணர்வுள்ளவராய்' இருந்தார்! ஆவிக்குரியவர்களாய் இருந்தால், துறவிகளைப்போல்தான் இருக்க வேண்டும், "சாப்பாடு என்ன வேண்டியிருக்கிறது!" என்று எண்ணும் இன்றைய "வரையறை மீறிய - ஆவிக்குரியவர்களைப்போல்" மெல்கிசேதேக் நடந்து கொள்ளவில்லை. அவர் ஆபிரகாமைப் பார்த்து "உபவாசித்து ஜெபியும்!" எனக்கூறாமல் ஓர் நல்ல உணவையே கொண்டுவந்து கொடுத்தார்!*

*பல வருடங்களுக்குப் பின்பு ஒரு சமயம் எலியா களைத்துப்போய்*

*மனம் சோர்ந்திருந்தபோதும், இதே செயலைத்தான் அன்றும் தேவன் செய்தார். அவனிடம் ஒரு தூதனை அனுப்பினார் ... "ஓர் புத்திமதி பிரசங்கத்தைச் சொல்வதற்கல்ல"*.....**தெம்பூட்டும் உணவைத் தருவதற்கே** *அனுப்பினார்! (1 இராஜா.19:5-8).*

*இது ஓர், நாம் யாவருமே பின்பற்றக்கூடிய நல்ல உதாரணமாய் இருக்கிறதல்லவா.... ஆம், களைத்து சோர்வுடன் இருக்கும் சகோதரன் அல்லது சகோதரர்களுக்கு, உணவு எடுத்துச்செல்லும் நல்ல செயல்! ஒரு விசுவாசி மனசோர்வும், அதைரியமும் அடைந்திருக்கும் வேளையில், அவனுக்கு இப்போது உடனடி தேவை "ஓர் புத்திமதி" அல்ல. புத்துணர்ச்சியூட்டும் ஒரு நல்ல உணவே தேவையாய் இருக்கக்கூடும்! ஏனெனில் அந்த சகோதரன் அல்லது சகோதரியின், ஆவியும் ஆத்துமாவையும் மாத்திரமல்ல... ஒரு சரீரத்தையும் உடையவர்களாய் இருக்கிறார்கள்! இதை நாம் மறந்துவிடவே கூடாது.*

*மெல்கிசேதேக் அவனுக்கு உணவு கொடுத்தபிறகு, 'ஆவிக்குரிய பிரகாரமாயும்' ஆபிரகாமுக்கு உதவி செய்தார். அதுகூட, ஒரு பிரசங்கத்தின் மூலமாய் அல்ல... ஆபிரகாம் அடைந்த ஜெயத்திற்காக, "வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம், ஆபிரகாமுக்கு உண்டாவதாக! உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம்!" (ஆதி.14:19,20) என இரண்டே வாக்கியங்களில்* **தேவனைத் துதித்த துதியில்,** *ஆபிரகாம் தனக்குத் தேவையான ஆவிக்குரிய உதவியைப் பெற்றுவிட்டார்!*

*ஆபிரகாமுக்கும் அவனுடைய ஊழியர்களுக்கும் உணவளித்துப் பரிமாற மெல்கிசேதேக் சுமார் 2-மணிநேரங்கள் செலவழித்திருக்கக் கூடும் .... ஆனால், அவர் தேவனைத் துதிப்பதற்கோ 15 - வினாடிகள் மாத்திரமே எடுத்துக்கொண்டார்! இருப்பினும்,* **மெல்கிசேதேக் வெளிப்படுத்திய சுருக்கமான தேவஸ்துதி,** *இரண்டு முக்கிய காரியங்களை ஆபிரகாம் உணரும்படி செய்துவிட்டது!*

*ஆபிரகாம் உணர்வடைந்த முதல் பகுதி யாதெனில், வானத்தையும் பூமியையும் உடையவராகிய* **உன்னதமான தேவனுக்கே தான் சொந்தம்!** *என்பதுதான். இந்த உணர்வே, அப்போதுதான் ஆபிரகாம் கைப்பற்றி வந்த சோதோமிய ராஜாவின் பொக்கிஷங்களை "இச்சிப்பதிலிருந்து" அவனை விடுதலையாக்கிற்று! சோதோம் ஓர் ஐசுவர்யமுள்ள நகரமாயும், அதன் பொக்கிஷங்கள் விலையேறப் பெற்றதாயும் இருந்த போதிலும், அவைகளைத் தேவன் சொந்தமாகக் கொண்டுள்ள வானத்திற்கும் பூமிக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது.... அவையாவும், மதிப்பேதுமில்லாத குப்பையாகவே ஆபிரகாமுக்கு, இப்போது*

தோன்றியது! இந்த ஆபிரகாம் யாருக்குச் சொந்தமானவன்? என்பதை அவன் தெளிவாய் காண்பதற்கு இந்த மெல்கிசேதேக் பேருதவி செய்துவிட்டார்!

இங்கு, மெல்கிசேதேக்கின் "ஞானத்தை" சற்று கவனியுங்கள். அவர், ஆபிரகாமைப் பார்த்து "ஆபிரகாமே, நீ பொருளாசை வலையில் விழப்போகிறாய் என்பதை தேவன் எனக்குச் சொல்லிவிட்டார்! இதோ, உன்னை நான் எச்சரிக்கும்படி அவரிடமிருந்து வந்திருக்கிறேன்!" என்று கூறவேயில்லை. ஆனால் இன்றோ, தங்களைத் தாங்களே "தீர்க்கதரிசிகளாய்" நியமனம் செய்துகொண்டு, தங்கள் வாயிலிருந்து புறப்படும் சொந்த வார்த்தைகளை "இதோ, கர்த்தர் சொல்லுகிறார்!" எனத் துணிந்து கூறுகிறார்களே?! இதுபோன்ற தீர்க்கதரிசிகள்தான், கள்ளத்தீர்க்கதரிசிகள்! தன் முன் குவிக்கப்பட்டிருந்த செல்வத்தின்மீது ஆபிரகாம் வைத்திருந்த கவனத்தை, இந்த மெல்கிசேதேக் திசை திருப்பி தேவனைப் பார்க்கும்படி செய்துவிட்டாரே! ஆம், இப்போது ஆபிரகாமுடைய கண்களுக்குப் "பூமியின் ஜொலிப்புகள், சாம்பல் போன்ற மங்கலாய் மாறிவிட்டது!" இதுவே, நாம் ஜனங்களுக்குச் செய்திட வேண்டிய ஆவிக்குரிய உதவியாகும்.

**இவ்வாறு ஆபிரகாம் சந்தித்த மிகப்பெரிய ஆவிக்குரிய அபாயத்திலிருந்து விடுவித்த மெல்கிசேதேக்கின் மென்மையான அணுகுமுறை, மறைமுகமாய் உணர்த்துவித்த தன்மை, ஆகியவற்றிலிருந்து நாம் ஏராளமான பாடங்களைக் கற்றுக்கொள்ள முடிகிறது!**

இனி, ஆபிரகாம் உணர்வடைந்த இரண்டாவது பகுதி யாதெனில், அந்த ராஜாக்களைத் தானும், தன்னிடமிருந்த 318 வேலைக்காரர்களும் அல்ல... **தேவனே** அவர்களைத் தோற்கடித்தார் என்பதை ஆபிரகாமால் இப்போது தெளிவாகக் காணமுடிந்தது. ஆபிரகாம் பெற்ற இந்த வெளிப்பாடு "ஆபிரகாமின் பெருமையிலிருந்து" அவனை இரட்சித்தது! "தன்னுடைய ஜெயம்" என்ற ஈர்ப்பில் ஆழ்ந்திருந்த ஆபிரகாமின் கண்ணோட்டத்தைத் தேவனிடத்தில் திரும்பச் செய்வதிலும் இந்த மெல்கிசேதேக் வெற்றி பெற்றார்!

இன்று யாரை நாம் முதல்தரமான பிரசங்கியாய் குறிப்பிடலாம்? நம்மைக் குறித்தும், நம்முடைய கிரியைகளைக் குறித்தும் கொண்ட ஈர்ப்பிலிருந்து நம்மை விடுவித்து, தேவனிடத்தில் திரும்பும்படி திசைதிருப்புகிறார்களோ, அவர்களே **முதல்தரமான பிரசங்கி** என நாம் கூறலாம்.

தன் நண்பன் யோபுவுக்கு, தங்கள் **சுய-நீதியில் பிரசங்கித்த எலிப்பாசு, பில்தாது, சோப்பாகு** ஆகிய இவர்களுக்கும்**....** மெல்கிசேதேக்கிற்கும், ஒளிக்கும் இருளுக்கும் போன்ற வித்தியாசங்கள் உண்டு! இந்த மூவரும்

பரிசேயர்களின் மூதாதையர்கள்! என்றே சொல்லலாம். இன்றைய கிறிஸ்தவ உலகிலும், இந்தப் பரிசேயர்களின் வம்ச-வழி வந்தவர்கள் ஏராளமாயிருக்கிறார்களே! இன்றோ, நம்முடைய அவசரத் தேவையா யிருப்பது **"அநேகம் மெல்கிசேதேக்குகள்தான்" நமக்கு வேண்டும்!**

இந்த மெல்கிசேதேக்கின் ஊழியத்தில், நம் மனதைக் கொள்ளை கொள்ளும் காட்சியைத் தொடர்ந்து நாம் பார்க்கிறோம். ஆம், ஆபிரகாமை இந்த மெல்கிசேதேக் ஆசீர்வதித்துவிட்டு**... மறைந்து விட்டார்!** அவரைக் குறித்து, நாம் மீண்டும் வேதாகமத்தில் எங்குமே காணமுடியவில்லை. பின்பாக அவருடைய பெயர், கிறிஸ்துவை குறிப்பிடும் ஓர் மாதிரியாக மாத்திரமே கூறப்படுவதை காண்கிறோம்.

'அந்த நாள்' காலையில், மெல்கிசேதேக் தன் கூடாரத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, தேவன் அவரை சந்தித்து... அன்றைய நாளில் அவர் என்ன செய்ய வேண்டுமென்பதைக் கூறியிருப்பார். அவருக்கோ, ஆபிரகாம் யாரென்று தெரியாது... ஆனால் அவரோ, தேவனை அறிந்திருந்தார்! அது ஒன்றே அவருக்குப் போதுமானதா யிருந்தது! அவர் என்ன செய்யவேண்டும் என்பதை மாத்திரம் தேவன் அவருக்குக்கூறி, அநேகருக்கு அவரைத் தேவன் ஆசீர்வாதமாய் மாற்றிவிட்டார்.

இவ்வாறு, மெல்கிசேதேக் முறைமையின்படி ஆசாரியர்களாய் அழைக்கப்பட்டிருக்கும் நம்முடைய ஊழியத்தின் மகத்துவத்தைப் பாருங்கள்! ஆம், நாம் ஜனங்களை ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீரப் பிரகாரமாகவும் ஆசீர்வதித்திட வேண்டும்.... பின்பு அந்த ஆசீர்வாதத்தைப் பெற்ற ஜனங்கள் நமக்கு நன்றி கூற வருவதற்கு முன்பாகவே **மறைந்துவிட வேண்டும்!**

"அடடே, எத்தனை மகத்துவமான தேவமனிதன்!" என ஜனங்கள் உங்களைக் குறித்து எண்ண விரும்புகிறீர்களோ? அல்லது, "ஆ, இந்த ஊழியனின் தேவன் மெய்யாகவே மகத்துவமானவர்!" என்று ஜனங்கள் எண்ணிட விரும்புகிறீர்களோ? இங்குதான் மார்க்க ரீதியான ஊழியத்திற்கும், ஆவிக்குரிய ரீதியான ஊழியத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் காண்கிறோம்! இங்குதான், ஆரோனின் ஆசாரியத்துவத்திற்கும், மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்திற்கும் உள்ள வித்தியாசம் பொதிந்து கிடக்கிறது! **இந்த ஆரோன், தன் ஆசாரித்துவ உடையில் ஜனங்களுக்கு முன்பாக அடிக்கடி தோன்றி,** அவர்களின் 'கனத்தைப்' பெற்றுக்கொண்டவன்! ஆனால், இந்த மெல்கிசேதேக்கோ ஜனங்களுக்கு ஊழியம் செய்துவிட்டு**...** மறைந்துவிட்டார்!

இந்த மெல்கிசேதேக்கின் மாதிரியின்படியே, இயேசுவும் இந்த பூமியில் ஊழியம் செய்தார். வாழ்க்கையின் போராட்டத்தில் தடுமாறிய

*ஜனங்களின் ஆவிக்குரிய தேவைகளையும், சரீரப்பிரகாரமான தேவைகளையும் சந்திக்கிறவராகவே இயேசுவும் சுற்றித்திரிந்தார்! தான் சுகமாக்கும் நிகழ்ச்சியை யாரும் விளம்பரப்படுத்த அவர் ஒருபோதும் விரும்பியதில்லை! தன்னை “சுகமளிக்கும் ஊழியன்” என பகிரங்கப் படுத்த நாடியதுமில்லை! ஒரு ராஜாவாய் மாறிட விரும்பியதுமில்லை! பிறருக்காகவே ஊழியம் செய்ய வந்து.... பிறருக்காகவே தன் ஜீவனைக் கொடுத்துவிட்டார்! புகழின் உச்சாணிக்கு ஏறிட அவர் விரும்பியதே யில்லை! தான் உயிர்த்தெழுந்தவுடன், ஏரோதிற்கோ அல்லது பிலாத்துவுக்கோ அல்லது அன்னாவுக்கோ அல்லது காய்பாவிற்கோ முன்பாகத் தோன்றி “இப்போதாவது, நான் தேவனுடைய குமாரன் என்பதை அறிந்துகொள்ளுங்கள்!” என நிரூபிக்க அவர் விரும்பியது மில்லை! பரிசேயர்கள், சதுசேயர்களில் ஒருவருக்காவது “தன் உயிர்த்தெழுந்த கோலத்தை” காண்பிக்கவுமில்லை.... ஏனெனில் தன்னை மனுஷர்களுக்கு முன்பாக நியாயப்படுத்திட அவர் கடுகளவும் விரும்பவேயில்லை!*

**மனுஷர்களின் அபிப்பிராயம் அனைத்தும் “குப்பைத்தொட்டிக்கு சமம்” என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்! ஆ.... அந்தோ! இன்றைய கிறிஸ்தவ உலகில் இத்தகைய பிரசங்கிகளையும், தலைவர்களையும் நாம் எங்கு காணப்போகிறோம் என்பது தெரியவில்லையே!**

*இந்த மெல்கிசேதேக்கைப் போல், ஒவ்வொரு நாளும் நாம் என்ன செய்யவேண்டும் என்பதை தேவனிடமிருந்து அறிந்துகொள்ள, தேவனைக் கவனித்துக் கேட்பவர்களாய் நாம் வாழத் தொடங்கி விட்டால்.... அது, எத்தனை பரவசமானது! என்பதை சற்றே எண்ணிப் பாருங்கள். இந்த வழியே, இந்த பூமியில் நாம் வாழ்வதற்குரிய பயனுள்ள வழியாகும்!*

*சங்கீதக்காரன் கூறும்போது, “என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்!” என்றல்லவா கூறினார்! (சங்.23:6). இதுவன்றோ நாம் வாழ்ந்திட வேண்டிய ஒப்பற்ற வழி! எங்கெல்லாம் நாம் சென்றோமோ... அங்கெல்லாம் நற்கிரியை களையும் அல்லது மன்னிக்கும் மனப்பான்மையையும், மாசற்ற நன்மை களையும் வழங்கிச் செல்லும் ஓர் உன்னத வாழ்க்கை!*

*அதிபதி கொர்நேலியுவுக்கு முன்பாக, இயேசுவின் வாழ்க்கையையும் அவரது ஊழியத்தையும் விவரித்த பேதுரு “நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்தாவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணி, தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே, அவர்* **நன்மை செய்கிறவராயும்** *பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்!” (அப்.10:38) என்றல்லவா*

*ரத்தினச் சுருக்கமாய் தொகையிட்டுக் கூறி, பூரித்தார்!! பார்த்தீர்களா, நாம் "மெய்யாகவே" பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தால், இயேசுவுக்கு சம்பவித்த இக்கிரியைகள், நமக்கும் சம்பவிக்கும்! அதாவது, 1) தேவன் நம்மோடுகூட இருப்பார் 2) நாம் சுற்றித்திரிந்து, ஜனங்களை ஆசீர்வதித்து, அவர்களை விடுவிக்கிறவர்களாய் இருப்போம்!*

*இப்பூமியில் இயேசு வாழ்ந்த நாட்களில், நீங்கள் அவரைச் சந்தித்திருந்தால், உங்களை ஆசீர்வதிக்கும் ஏதாவதொரு நன்மையை அவரிடமிருந்து நீங்கள் பெறாமல் சென்றிருக்கவே மாட்டீர்கள்! அந்த ஆசீர்வாதம் பூரணமான, ஆவிக்குரியதும் - சரீரப்பிரகாரமானதும் ஆகிய இரண்டு ஆசீர்வாதங்களையும் கொண்டதாகவே இருக்கும்! தன் சரீரத்தில் இரத்தப்போக்கினால் 12- வருடங்களாய் அவதிப்பட்ட அந்த ஸ்திரீ, இந்த ஆசீர்வாதங்களை இயேசுவின் வஸ்திரங்களைத் தொட்டு பெற்றுவிட்டாளே!*

*நம்முடன் தொடர்புகொள்பவர்களும், இப்படியே சரீரப் பிரகாரமாயும், ஆவிக்குரியபிரகாரமாயும் ஆசீர்வதிக்கப்படும்படி* **இயேசுவின் அதே வாழ்க்கையை வாழும்படி** *நாமும் அழைக்கப்பட்டிருக்கி றோமல்லவா?*

*ஆம், நாம் அனைவரும் "மெல்கிசேதேக்கின்" ஆசாரித்துவ முறைமையின்படியான ஆசாரியர்களாய் இருப்பதற்கே அழைக்கப் பட்டிருக்கிறோம்!*

# 15

## “மாதிரியாய் திகழ்பவன்”

ஒரு ஆவிக்குரிய தலைவன், “**நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போல** நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள்” எனக்கூறுமளவிற்கு ஓர் சிறந்த மாதிரியாய் விளங்கிடுவான்! மேலும், கிறிஸ்துவே அவர்களின் தலையாய் இருக்கும்பொருட்டு, அவர்களை நடத்தி **கிறிஸ்துவோடு** இணைப்பதற்கே நாடுவான்!

இன்றைய அநேக கிறிஸ்தவத் தலைவர்களோ இதற்கு நேர்மாறாக, விசுவாசிகளை **தங்களோடு** இணைத்துக் கொள்ளவே விரும்புகிறார்கள். வேறு எந்த தலைவர்களைக் காட்டிலும் அந்த விசுவாசிகள் தங்களிடம் அதிகமாய் ஒட்டிக்கொண்டால், அதனிமித்தம் மகிழ்ச்சியும் அடைகிறார்கள்! இதுபோன்ற தலைவர்களே, தங்கள் மந்தைக்கு “குட்டி - தேவர்களாய்” படிப்படியாய் மாறிவிடுகிறார்கள். அதன் பின்பு, “மூப்பர்களுக்கு அடங்கியிருக்கும்” வேதாகமப் போதகத்தை தங்கள் சொந்த லாபத்திற்காக தவறாகவும் கையாளுகிறார்கள்!

இதை வேதாகமம் குறிப்பிடும்போது, அந்திக்கிறிஸ்து “தேவனுடைய ஆலயத்தில்” தேவன்போல் உட்கார்ந்து கொண்டு **தன்னைத்தான் தேவனென்று** காண்பிக்கிறவனாயும் இருப்பான் எனக்கூறுகிறது (2தெச.2:4). சபைதான் இன்று தேவனுடைய ஆலயம்! ஆகவே, சபைகளில் அந்திக்கிறிஸ்துவின் ஆவியைக் கொண்ட ஜனங்கள் ‘தன்னுடைய நாட்களிலும்’ இருந்ததாக யோவான் அப்போஸ்தலன் கூறினார்! (1யோவான் 2:18,19). இன்று நம்முடைய நாட்களிலோ, அதுபோன்ற அந்திக்கிறிஸ்துக்கள் ஏராளமாயிருக்கிறார்கள்!

சிருஷ்டிக்கப்பட்ட ஒருவன் தன்னைத்தானே உயர்த்த விரும்பி அதனிமித்தம் “**பெரியவனாக**” **தன்னைக் காட்டி,** யாவருடைய கண்களும் தன்னைக் காணும்படி செய்து.... இவ்வாறுதான் படிப்படியாய் “தேவனாய்” மாறுகிறான்! இவ்வழி நடந்தே லூசிபர், சாத்தானாக மாறினான். இதை நாம் ஒருபோதும் மறந்துவிடவே கூடாது. இது போன்ற ஆவி நமக்குள் வருவதை நாம் எப்போதெல்லாம் காண்கிறோமோ, அதை உடனடியாக இன்னஆவியெனக் கண்டுகொள்ள நாம்

*அறிந்திருக்க வேண்டும்... ஏனெனில், இதுவே சாத்தானுடைய ஆவியாய் இருக்கிறது!*

*இதற்கு நேர்மாறாக, தேவகுமாரனோ* **தன்னைத்தானே தாழ்த்தி,** *எவ்வளவு முடியுமோ அவ்வளவாய் மனுஷர் பார்வைக்குத் தன்னை மறைத்துக் கொண்டதனிமித்தமே, இவ்வுலகில் இரட்சிப்பு உண்டானது! இதையும் நாம் மறந்துவிடவே கூடாது!*

*ஆம், லூசிபரின் பெருமையினால் பாவம் பிறந்தது! இயேசுவின் தாழ்மையினால் இரட்சிப்பு மலர்ந்தது!*

**இன்றைய கிறிஸ்தவத் தலைவர்கள், தங்களைப் பொதுக்கூட்ட மேடைகளிலும் தங்கள் பத்திரிக்கைகளிலும் விளம்பர பிரஸ்தாபப்படுத்துவதை ஜனங்கள் காணும்போது, தன்னை மறைத்து வாழ்ந்த தாழ்மையுள்ள இயேசுவின் மெய்யான தோற்றத்தை 'அங்கு' கண்டிருப்பார்கள் என்று எண்ணுகிறீர்களா? இல்லை, இல்லவேயில்லை!**

*இன்றைய இளம் விசுவாசிகள் காணத்தகுந்த நல்ல மாதிரிகள் யாராயிருக்கக்கூடும்? தாழ்மையும், தங்களை ஒளித்து மறைந்துகொள்ள நாடுகிறவர்களும், அறியப்படாதவர்களாய் இருக்க விரும்புகிறவர்களும், தங்களைக்குறித்து பிரஸ்தாபமாய் பேசப்பட விரும்பாதவர்களும்.... மாறாக,* **தங்கள் ஊழியத்தை அமைதியாய் செய்துவிட்டு மறைந்துவிடும்** *மாதிரிகளைக் காணவே, இந்த இளம் விசுவாசிகள் காத்திருக்கிறார்கள். இதுபோன்ற ஊழியத்தையே நாம் யாவரும் வாஞ்சித்து நாடுவோமாக!*

*உதாரணமாய், நீங்கள் கர்த்தருக்காய் செய்து முடித்த ஓர் ஊழியத்தை "நீங்கள்தான் செய்தீர்கள்" என ஒருவருக்கும் தெரியாதிருந்தால், அதுவே உங்களுக்கு பரவசத்தைத் தருவதாயிருக்க வேண்டும்! இதற்கு ஒருபடி மேலாக, நீங்கள் செய்து முடித்த ஊழியத்திற்கு யாரோ ஒருவர் "புகழ்மாலையை" பெற்றுச் சென்றால்... அச்செயல் உங்களை இன்னமும் அதிக பரவசத்திற்குள் நடத்துவதாயிருக்க வேண்டும்! நீங்கள் இவ்வித தன்மை கொண்டவர்களாய் இருப்பீர்களானால், நீங்கள் மெய்யாகவே மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஓர் ஆசாரியனாயிருப்பீர்கள்!*

*நான் ஒரு கிறிஸ்தவ* **இளைஞனாய்** *இருந்த நாட்களில், நான் சென்ற எல்லா சபைகளிலுமிருந்த கிறிஸ்தவத் தலைவர்களையும், மூப்பர்களையும் நான் தாகத்துடன் நோக்கிப் பார்த்தேன்! ஆனால், "அவர்களில் ஒருவரிடத்தில் கூட இயேசுவின் ஆவியை நான் பார்க்கவில்லை!" எனக் கூறுவதற்கு நான் மிகவும் வருந்துகிறேன். நான் அவர்களை நியாயம்தீர்க்கவில்லை, ஏனெனில் நான் ஒன்றும் அவர்களுக்கு நீதிபதி அல்ல! ஆனால், இங்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம் "நான்*

பின்பற்றத் தகுந்த தெய்வபக்தியுள்ள மாதிரிகளென அவர்களை என்னால் மதித்திட முடியவில்லை” என்பதுதான்.

நாம் யாரையும் நியாயந்தீர்த்திடத் தேவையில்லை. ஆனால், நாமோ ஜனங்களைப் பகுத்தறியக் கூடியவர்களாய் இருந்திட வேண்டுமே! “பிறரை நியாயந்தீர்க்கக்கூடாது” என இயேசு கூறி முடித்ததும்.... உடனேதானே, பன்றிகள் யார்? நாய்கள் யார்? **கள்ளத் தீர்க்கதரிசிகள் யார்? எனப் பகுத்தறிய கவனமாயிருக்கும்படியும்** தன் சீஷர்களுக்கு இயேசு எச்சரித்துக் கூறினார் (மத்தேயு.7:1-ம் வசனத்தை 6, 15-ம் வசனங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள்). இவ்வித பகுத்தறியும் விழிப்பு நமக்கு இல்லையென்றால், நாய்களாலும், கள்ளத்தீர்க்கதரிசிகளாலும் நாம் நிச்சயமாய் வழி தவறிப்போவோம் என்பதில் சந்தேகமேயில்லை (பிலிப்பியர் 3:2).

ஆகவே, இங்கு நான், என்னுடைய மூப்பர்களை நிச்சயமாய் நியாயம்தீர்க்கத் துணியவில்லை! ஆனால், நான் பின்பற்றத் தகுதியான ‘நல்ல மாதிரிகளாய்’ அவர்களை நான் பார்க்க முடியவில்லை. ஏனென்றால், இயேசுவிடம் இருந்ததைப்போன்ற “ஒரு வேலைக் காரனின் ஆவி” அவர்களிடத்தில் இல்லை என்பதுதான்! அவர்கள், **பரிசுத்தவான்களின் பாதங்களைக் கழுவ விரும்பும்** ஜனங்களாய் இல்லை! இந்த நிலையில்தான், ஒரு நல்ல மாதிரியான ஒரு கிறிஸ்தவத் தலைவனை நான் காணும்வரை.... இயேசுவை மாத்திரமே காண்பதற்கு நான் தீர்மானம் செய்தேன்!

**“கிறிஸ்துவைப் போன்ற மெய்யான தன்மை” என்ன என்பதை, நம்மைத் தொடுத்து வரும் இளைய சமுதாயத்திற்குச் செயல்படுத்திக் காட்டவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது!**

நாம் வாழும் விதத்தை, பிரசங்கிக்கும் விதத்தை, ஊழியம் செய்யும் விதத்தை ஜனங்கள் நோக்கும்போது, “ஓர் மெய்யான கர்த்தருடைய ஊழியனுக்குரிய” அம்சங்களை நம்மில் அவர்கள் காணும்படியாய் இருக்க வேண்டும். இவ்விதமான கர்த்தருடைய ஊழியன் இன்றைய 21-ம் நூற்றாண்டு “சினிமா நட்சத்திரங்களுக்கு ஒப்பான சுவிசேஷகர் களின்” பாணியைப் பற்றிக்கொள்ளாமல், ஆதியிலிருந்த அப்போஸ்தலர் களின் பாணியையும், ஆதி தீர்க்கதரிசிகளின் பாணியையும் கொண்டவர் களாகவே இருந்திட வேண்டும்!

**நாம் உணர்கிறோமோ அல்லது உணரவில்லையோ..... நாம் எங்கு சென்றாலும், நமக்குப் பின்பாக “ஓர் சாயலை” விட்டுச் செல்கிறோம் என்பது ஆணித்தரமான உண்மை!**

நாம் அந்த இடத்தை விட்டுச் சென்று பல காலமாய் இருந்தாலும், நாம் அவர்களுக்குப் பிரசங்கித்த செய்திகளை அவர்கள் மறந்து பல

*காலமாய் இருந்தாலும்...* **ஜனங்களின் மனதில் "அந்த சாயல்!"** *நிரந்தர மாய் தங்கியிருக்கும்!*

*எபேசு சபை மூப்பர்களிடமிருந்து பவுல் விடைபெற்றுச் சென்ற போது, அவர்களிடத்தில் பவுல் கூறிய வார்த்தைகளைக் கவனித்துப் பாருங்கள் (அப்.20:17-35). அவர்களிடத்தில் மூன்று வருடங்களாய் இரவும் பகலும் பிரசங்கித்ததை பவுல் நினைவுப்படுத்தினார் (வச.31). அந்த 3 - வருடங்கள் 1000 நாளுக்குமேல் அதிகமானதாகும். ஆகவே, இங்கு பவுல் குறிப்பிடுகிறபடி ஒருநாளில் அவர் இரண்டு பிரசங்கங்கள் செய்திருந்தால் (1.இரவு, 2.பகல்), சுமார் 2000 பிரசங்களுக்கு மேல் பிரசங்கித்திருப்பார்!*

*இந்த எபேசுவில்தான், மாபெரும் எழுப்புதலை ஜனங்கள் ஆரம்ப நாட்களில் கண்டிருந்தார்கள். அச்சமயத்தில், மறுபடியும் பிறந்துவிட்ட கிறிஸ்தவர்கள் தங்களிடமிருந்த கோடிக்கணக்கில் மதிப்புடைய மந்திரவாத - பில்லிசூனியப் புத்தகங்களைக் குவித்துவைத்து எரித்துப் போட்டார்கள்! மேலும் பவுலின் சரீரத்திலிருந்து எடுத்த உறுமால் களையும் கச்சைகளையும் (கைக்குட்டைகள்!) கொண்டுவந்து, அவைகள் மூலம் வியாதியஸ்தர்களையும், பிசாசுபிடித்தவர்களையும் சுகப்படுத்த பயன்படுத்தினார்கள்! இவ்வாறு, வேறு எந்த இடத்திலும் காணமுடியாத அளவிற்கு பிரமிக்கத்தக்க அற்புதங்களைப் பவுலின் மூலமாய் தேவன் எபேசுவில் செய்தார் (அப்.19:11,12,19).*

*இவ்வாறெல்லாம் மாபெரும் செயல் நடைபெற்றிருந்தும், அங்கிருந்த மூப்பர்களுக்கு பவுல்* **எதை நினைப்பூட்டினார்?** *தன்னுடைய பிரசங்கங்களையும், அற்புதங்களையுமா பவுல் நினைவுப்படுத்தினார்? இல்லவேயில்லை!*

**மாறாக, பவுல் அவர்களிடத்தில் வந்த முதல்நாள் தொடங்கி கடைசி நாள் வரை "தான் இன்னவிதமாய்" வாழ்ந்த தாழ்மையின் ஜீவியத்தையே நினைவு கூரும்படி கூறினார்! (அப்.20:18).**

*பவுலின் பிரசங்கத்தை அவர்கள் மறந்திருந்தாலுமேகூட, அவர்க ளிடத்தில் 'அவர் வாழ்ந்த விதத்தை' அவர்களால் ஒருபோதும் மறக்கவே முடியாது! அவ்வளவாய் அவருடைய ஜீவியம் அவர்களை நிரந்தரமாய் கவர்ந்துவிட்டது! ஆம், அவரின் மென்மையான மனதுருக்கம், அவரின் எளிய வாழ்க்கை... ஆகியவற்றை அவர்களால் எப்படி மறந்திடமுடியும்? அதுமாத்திரமல்ல, தங்களில் ஒருவருக்குக்கூட பாரமாயில்லாதபடி தன்னையும் தன் உடன் ஊழியர்களையும் போஷிக்கும்படித் தன் சொந்த கைகளால் 'கடினமான கூடாரத்தொழில்' செய்ததையும்... அதன்மூலம் 'அநேக கிறிஸ்தவ ஊழியர்களுக்கு அவர் மாதிரியாய்' விளங்கியதையும் அவர்கள் நினைவுகூர்ந்தார்கள் (அப்.20:34,35). மேலும், அவர்*

தங்களோடு இருந்த 3 வருடங்களில், பணத்தையோ; வெகுமதி களையோ; குறைந்த பட்சம் புதிய வஸ்திரங்களையோகூட... அவர் யாரிடத்திலுமிருந்தும் இச்சித்து எதிர்பார்க்கவில்லை என்பதையும் (வச.33) அவர்களால் மறந்திடவே முடியாது!

மேலும் பவுல், தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் அவர்களுக்கு மறைத்து வைக்காமல், அவைகளை எவ்வாறு ஒத்தவேஷக் கலப்பில்லாமல் அறிவித்தார் என்பதையும் நினைவுப்படுத்தினார் (அப்.20:26). தனக்கென்று பிரபல்யத்தைத் தேடி, மனுஷரைப் பிரியப்படுத்துகிறவராய் அவர் ஒருபோதும் இருக்கவில்லை! அவரோ, “மனந்திரும்புவதைக் குறித்தும்” இன்னும் இதுபோன்ற பிரபல்யமற்ற சத்தியங்களையே.... அது, ஜனங்களில் சிலரை இடறச்செய்யும் என அறிந்திருந்தபோதும் “தன்னைக் கேட்பவர்களின் பிரயோஜனத்தை மனதிற்கொண்டு” கருத்தாய் பிரசங்கித்தார் (அப்.20:20,21).

பார்த்தீர்களா, ‘இதுபோன்றவைகளைத்தான்’ இந்த பவுல் அவர்களுக்கு சுட்டிக்காண்பித்து நினைவுப்படுத்தினார்!

பவுல் எபேசுவில் இருந்ததைப்போலவே, நீங்களும் ஒரு சபையில் மூன்று வருடங்கள் மேய்ப்பனாக ஊழியம் செய்து, இப்போது அவர்களை விட்டுச் செல்வதாக இருந்தால்... உங்களைக் குறித்து உங்கள் மந்தையினர் எதை நினைவுகூருவார்கள்? ஓர் கவர்ச்சியுள்ள பிரசங்கியாய் உங்களை நினைவுகூருவார்களா? அல்லது “தன் ஜீவியத்தின் மூலமாய்” இயேசுவைக் காண்பித்த ஓர் தாழ்மையுள்ள தேவனுடைய மனுஷனாய் உங்களை நினைவுகூருவார்களா?

**தேவனை நெருங்கிக் கிட்டிச்சேர நடத்தியவர்! இயேசுவைப்போல் வாழும் வாழ்க்கைக்கு சவாலிட்டு அழைத்தவர்! என்று உங்களை நினைவு கூருவார்களா?**

அல்லது, “கைப்பிரதிகளை விநியோகிப்பது எப்படி என்பதை கற்றுக்கொடுத்தவர்” என்று மாத்திரமே உங்களை நினைவுகூருவார்களா?

நம் **வரம்** என்னவாக இருந்தாலும், அல்லது **ஊழியம்** என்னவாக இருந்தாலும் அவையனைத்தும், கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கையின் ஊற்றுக்கண்ணிலிருந்தே பாய்ந்தோடிச் செல்ல வேண்டும்!

ஒருவனுக்கு “சுகமளிக்கும் வரமிருந்தால்,” அதை அவன் கிறிஸ்து அப்பியாசித்ததைப் போலவே அப்பியாசித்திட வேண்டும்! இயேசுவோ, ஓர் தாழ்மையுள்ள மனிதனாய் எளிய வாழ்க்கை வாழ்ந்தார்! எல்லா ஜனங்களோடும் தாராளமாய் பழகினார்! வியாதிப்பட்டவர்களைக் கண்டு சொல்லிமுடியா மனதுருக்கம் கொண்டார்! அவர்களை சுகப்படுத்துவதற்கு முன்பாக அவர்களிடம் அவர் பணம் வாங்கவில்லை! அவர்களை சுகப்படுத்திய பின்பும்

அவர்களிடம் அவர் பணம் வாங்கவில்லை!... இப்படித்தான் அவர் ஜனங்களை சுகப்படுத்தினார். முற்றிலும் இலவசமாய் சுகப்படுத்தினார்!

ஆனால், என்னுடைய முழு ஜீவியத்திலும் இயேசுவைப்போன்ற பண்பு கொண்ட "சுகமளிக்கும் ஒருவரைக்கூட" நான் இன்னமும் சந்திக்கவில்லை. ஒருவேளை அவரைப்போன்ற ஒருவரை நீங்கள் சந்தித்திருந்தால் தயவுசெய்து என் விலாசத்திற்கு தெரியப்படுத்துங்கள். அதுபோன்ற சுகமளிக்கும் ஊழியனை நான் ஓடோடிச் சென்று சந்திக்க பேராவல் கொண்டிருக்கிறேன்!

இதற்கெல்லாம் நேர்மாறாக, தனக்கு சுகமளிக்கும் வரம் இருப்பதாக பாவனை செய்து, தங்களுடைய **மனோ-வசீகத் தந்திரங்களால்** ஜனங்களை ஏமாற்றும், பணஆசை கொண்ட பிரசங்கிகளையே நான் ஏராளமாய் சந்தித்திருக்கிறேன்.

இவை எல்லாவற்றிற்கும் சிகரமான துக்கம் யாதெனில், "இந்த ஏமாற்றுக்காரர்களைப்" பகுத்தறியத் தெரியாத வாலிபர்கள் பின்பற்றி.... அவர்களைப் போன்ற ஊழியத்தையே தாங்களும் பெறவேண்டும் என நாடிடும் கொடுமைதான்! இவ்வாறு நமக்கு அடுத்த சந்ததியும் சிதறுண்டு வழிதவறிப் போகிறார்களே! இதுவே என் மனதைப் பாதித்த மிகப் பெரிய வேதனையாகும்.

நாம் ஒரு அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருந்தால், அல்லது நாம் ஒரு தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருந்தால், அல்லது நாம் ஒரு சுவிசேஷ ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருந்தால், அல்லது நாம் ஒரு மேய்ப்பனின் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருந் தால், அல்லது நாம் ஒரு போதக ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருந் தால்....இவ்வாறு எந்த ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருந்தாலும், **அதை கிறிஸ்துவின் சாயலில் மாத்திரமே செய்திடுவோமாக!** எந்த ஒரு அழைப் பிலும், கிறிஸ்துவின் ஆவியே நம்மை உந்தித்தள்ள வேண்டும்!

ஒரு சபைக்கு மேய்ப்பனாய் இருப்பதற்கு தேவன் உங்களை அழைத்திருப்பதாக நீங்கள் திட்டமாய் அறிந்திருந்தால், அந்த ஊழியத்தை இயேசு செய்ததைப் போலவே செய்திட நாடுங்கள்.

**உங்கள் மந்தைக்கு "கிறிஸ்துவின் மகிமையை எங்கள் மத்தியில் பிரகாசித்த மனுஷன்!" என்ற முத்திரையை இட்டுச் செல்பவர்களாகவே நீங்கள் இருந்திட வேண்டும்.**

கடைசியாய், நம்முடைய கடந்தகால தோல்விகளைக் குறித்தும் ஒரு சில வார்த்தைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள நான் விரும்புகிறேன்!

கடந்த காலத்தை நம்மால் மாற்றியமைக்க முடியாது! நம் ஜீவியத்தின் ஒரு பகுதி போய்விட்டது! நாம் எல்லோருமே

தோல்வியடைந்திருக்கிறோம்.... நாம் செய்யக்கூடியதெல்லாம், நம் தோல்விகளுக்காய் மனந்திரும்பி; அவைகளை அறிக்கை செய்து; நம் பாவங்களை ஆண்டவர் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கழுவும்படி கெஞ்சி ஜெபிப்பதேயாகும்!

**நானும் என் ஜீவியத்தில் அநேக தவறுகள் செய்திருக்கிறேன். ஆனால், என் தவறுகளிலிருந்து அநேக பாடங்களையும் கற்றுக் கொண்டேன். ஆகவே “என்னுடைய எல்லா தோல்விகளும்” எனக்கு வீணாகப் போய்விடவில்லை!**

மேலும், “பிறருடைய தவறுகளைக்” கவனித்து சிந்தித்ததினிமித்தமும், அநேக முக்கிய பாடங்களை, நான் கற்றுக் கொண்டேன். இதனிமித்தமாய் அவர்கள் இழைத்த அதே தவறுகளை நானும் செய்யாதிருக்க என்னைக் காத்துக் கொள்ள முடிவதையும் நான் காண்கிறேன்!

கடந்த காலத்தில் நாம் செய்த அநேக காரியங்களைக் குறித்து நாம் இப்போது வெட்கம் அடைந்திடக்கூடும். ஆனால், நாம் மாத்திரம் அவைகளிலிருந்து மனந்திரும்பி, தேவையான பகுதிகளில் ஒப்புரவாகி விட்டால்.... நம் கடந்தகால தோல்விகளிலிருந்து நல்ல பாடங்களை கற்றுக்கொள்வது மாத்திரமல்லாமல், நம் கடந்தகாலத்தை நிரந்தரமாய் நமக்குப் பின்னாகத் தள்ளிவிட முடியும்!

ஆம், நம் கடந்த கால தோல்விகளைப் பயன்படுத்தி சாத்தான் நம்மை “குற்றப்பயணத்திற்குள்” அல்லது “ஆக்கினைப்பயணத்திற்குள்” நம்மை இழுத்துச் சென்றுவிட நாம் ஒருபோதும் அனுமதிக்கவே கூடாது. “கிறிஸ்துவுக்குள் வந்துவிட்ட” எந்த மனுஷனுக்கும், ஒரு போதும் ஆக்கினை இல்லவேயில்லை!

தேவன் நம்மை “கிறிஸ்துவின் இரத்தத்தினால்” நீதிமானாக்கின பின்பு நம் முழு ஜீவியத்திலும் நாம் ஒரு பாவம்கூட செய்யாதவர்களைப் போலவே தேவன் நம்மைக் காண்பார்! (ரோமர் 5:9). இவ்வாறு தேவன் நம்மைக் காண்பது போலவே, நாமும் நம்மைக் கண்டிட வேண்டும்!

ஆகவே, கடந்த காலத்தில் நீங்கள் தோல்வியடைந்ததினிமித்தம் “நீங்கள் பிரயோஜனமற்றவர்கள்” என சாத்தானோ அல்லது எந்த மனுஷனோ சொல்லுவதற்கு இடம் கொடுத்துவிடாதீர்கள்! நீங்கள் **மனந்திரும்பிவிட்டபடியால்,** நீங்கள் இப்போது தேவனுடைய கரத்தில் விலையேறப்பெற்ற பாத்திரமாயிருக்கிறீர்கள்! இனி, எஞ்சியுள்ள உங்கள் வாழ்க்கையை தேவனுடைய மகிமைக்காகவே வாழ்ந்து நீங்கள் பிரகாசித்திட முடியுமே!

இளம் சந்ததியினரை சீஷர்களாக உருவாக்கும் பணி, மூப்பர்களாகிய எங்களுக்குக் கிடைத்த மாபெரும் சிலாக்கியமாகும்! ஏனெனில், **அவர்கள் முழு ஜீவியத்தையும்** தங்கள் முன் வைத்து வீறுநடை கொண்டு

ஏகிச்சென்றிட முடியுமே! இவ்வாறு, நம் சபைகளிலிருக்கும் ஒவ்வொரு இளைஞனுக்குள்ளும் பொதிந்து கிடக்கும் மகத்தான வலிமையை சற்று எண்ணிப்பாருங்கள். அவர்களைத் தாவிப் பற்றிக்கொள்ள சாத்தான் முன்னேறுவதை மறந்துவிடாதீர்கள். அவன் அவர்களைப் பெறுவதற்கு முன்பாக.... நாமே அவர்களைத் தேவனுக்காகவும் தேவனுடைய ராஜ்ஜியத்திற்காகவும் பெற்றிட வேண்டும்!

**அந்த இளைஞர்களின் இருதயத்திற்குள் கடும் போராட்டமல்லவா நடந்து கொண்டிருக்கிறது! அவர்களை இரட்சிக்கப்படாமல் வைப்பதற்கு சாத்தானால் முடியவில்லையென்றால், குறைந்தபட்சம் அவர்களை உலகத்தோடு ஒத்துப் போகச் செய்துவிடவே விரும்புகிறான்!**

ஆனால், அவர்கள் ஒத்தவேஷம் தரிப்பவர்களாய் மாறிவிடாமல், ஆண்டவருடைய ஆணித்தரமான சீஷர்களாய் மாறும்படிக்கே தேவன் **உங்களை** அவர்களுக்கு மேய்ப்பனாய் தந்திருக்கிறார்! ஆகவே, உங்கள் அழைப்பின் உச்சித மேன்மையை உணர்ந்து செயல்பட உங்களை நான் துரிதப்படுத்துகிறேன்!

நமக்கு அடுத்த விசுவாச சந்ததிக்கு நாம் இதுவரை நல்ல மாதிரிகளாய் இல்லாததினிமித்தம், **நாம் அனைவரும்** முகங்குப்புற விழுந்து மனந்திரும்ப ஆண்டவர் உதவிசெய்வாராக! கடந்த காலத்தில் அவருடைய நாமத்திற்கு நாம் கொண்டுவந்த கனவீனத்தை எண்ணி அவரிடம் மன்னிப்பு கேட்போமாக!

நாம் தாழ்மையுள்ளவர்களாய் மாறி, இனிவரும் நாட்களில் 'அவருடைய ஜனங்களுக்கு' தேவபக்தி நிறைந்த மெய்யான ஆவிக்குரிய தலைவர்களாய் ஓங்கி நின்றிட தேவன் நமக்கு உதவிசெய்வாராக!

கேட்பதற்கு காதுள்ளவன், கேட்கக்கடவன்!